KAYITE AJAM BABA:
VALVIL CILA NINAIVUKAL
Pt. I.

## காயிதே ஆஜம்

# பாபா

## (வாழ்வில் சில நினைவுகள்)

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAR 57
MADRAS

by

முதல் பாகம்

ஆசிரியர்:

"ஹிந்த்லால்"

HINDLAL.

வெளியிடுவோர்:

**மறுமலர்ச்சி**

பிரிண்டர்ஸ் - பப்ளிஷர்ஸ் & புக் செல்லர்ஸ்

பாலக்கரை - திருச்சி.

முதற்பதிப்பு: ஜனவரி 1955

'மறுமலர்ச்சி' வெளியீடு: 2

பிரசுர உரிமை

இப்புத்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்களுக்கும் அவற்றை பிரசுரிப்பதற்கும் உரிமையாளர்கள் 'மறுமலர்ச்சி' வாரப்பத்திரிகை வெளியிடுவோர். அவர்களின் அனுமதியின்றி இப்புத்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்களில் பெரும் பகுதியோ சிறு பகுதியோ எம்மொழியிலும் எடுத்து இதர பத்திரிகைகளிலோ, வெளியீடுகளிலோ உபயோகப் படுத்தக்கூடாது.

62415

V4407;1y7M76 3J5

விலை ரூபாய் 1—8—0

அச்சிட்டோர்:

"மறுமலர்ச்சி"

பிரிண்டர்ஸ் - பப்ளிஷர்ஸ் & புக்செல்லர்ஸ்

பாலக்கரை - திருச்சி.

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAR 1957
MADRAS

# பதிப்புரை

காயிதே ஆஜம் முஹம்மதலி ஜின்னா அவர்களின் புற வாழ்க்கையைப்பற்றி உலகம் முழுவதும் அறிந்திருக்கிறது; ஆனால் அவர்களின் அகவாழ்வுபற்றி கோடியில் ஒருவர்கூட அறிந்துகொள்ள முடியாத நிலையிலேயே இன்றுவரை உலகம் இருந்துவருகிறது. அதை இயன்றவரை சேகரித்து "மறுமலர்ச்சி"யில் வெளியிடவேண்டும் என்று விரும்பி அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய தோழர் 'ஹிந்த்லால்' அவர்களை சந்திக்க 'மறுமலர்ச்சி' ஊழியர்களில் ஒருவரை அனுப்பினோம். அவ்விதம் "ஹிந்த்லால்" அவர்களை சந்தித்துக் கேட்டுக்கொண்டபோது, "இது மாபெரும் காரியமாயிற்றே! பாக்கிஸ்தான் சர்க்காரே லட்சக்கணக்கான ரூபாய்களை செலவழித்தும் இந்த முயற்சியில் வெற்றியடையத் திணறிக்கொண்டிருக்கிறதே! வெகு சாதாரணமாக என்னிடம் இவ்வளவு மாபெரும் பொறுப்பை சுமத்துகிறீர்களே!" என்று தட்டிக்கழிப்பதுபோல் பேசினார்கள். நீண்ட நேரப் பேச்சுவார்த்தைகளுக்குப்பிறகு என்னால் பூர்த்தியாக இந்த வேலையைசெய்து முடிக்க முடியாது. ஆனால் நீங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இயன்றவரையில் கொஞ்சங் கொஞ்சமாகத் திரட்டி அனுப்புகிறேன். நல்ல மொழிபெயர்ப்பாளரைக் கொண்டு அதைத் தமிழில் வெளியிடுங்கள். எனக்கு நீங்களே ஒரு புனைப்பெயரை வைத்துக்கொள்ளுங்கள்.' என்று இறுதியாக ஆதரவான பதிலளித்தார்கள்.

இந்த வேலைக்கு தோழர் 'ஹிந்த்லால்' அவர்களை நாங்கள் தேர்ந்தெடுத்துக் கேட்டுக்கொண்டதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. காயிதே ஆஜம் முஹம்மதலி ஜின்னாவின் அரசியல் வாழ்வோடு தொடர்பு கொண்டிருந்தவர்களிலே தோழர், 'ஹிந்த்லால்' மிகவும் முக்கியமான இடம் பெற்றிருந்தார்கள். இன்னும் சொல்லப்போனால் காயிதேஆஜமின் அன்புக்கும் பாத்திரமானவர்களெனலாம். தற்போது அரசியல் வாழ்வைவிட்டுப் பூரணமாக விலகி, ஓய்வோடும் இருந்தார்கள். ஆதலால் அவர்கள் மனம் வைத்தால் நிச்சயமாக வெற்றிகிடைக்கும் என நம்பினோம்; முயற்சித்தோம். எங்களைப் பொறுத்தவரையிலே முயற்சி வெற்றிகண்டது.

'ஹிந்த்லால்' என்பது அவர்களின் சொந்தப் பெயரல்ல. அவர்களே வைத்துக்கொண்ட புனைப்பெயருமல்ல. இந்தப் பெயரில் அவர்கள் எதிலும் எழுதியதுமில்லை. 'நீங்களே ஒரு புனைப்பெயரை வைத்துக்கொள்ளுங்கள்' என அவர்கள் கூறியபோது, பல புனைப்பெயர்களை தயாரித்து இவற்றில் எதை வைக்கலாம் என நாங்கள் கேட்டபோது 'ஹிந்த்லால்' என்ற பெயரைப்பற்றி அவர்கள் திருப்தி அடைந்ததாக எங்களுக்குத் தெரிந்தது. நாங்களே அப் பெயரை நிரந்தரமாக ஏற்படுத்திக்கொண்டோம்.

நாங்கள் கேட்டுக்கொண்டபடி தோழர் 'ஹிந்த்லால்' அவர்கள் தொடர்ந்து வாரந்தோறும் 'மறுமலர்ச்சி'க்கு அனுப்பிவைத்த கட்டுரைகளைத்தொகுத்துத்தான் இம்முதல் பாகத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். ஏராளமான விஷயங்கள் இன்னும் தேங்கி இருப்பதால் கூடிய சீக்கிரம் இரண்டாம் பாகமும் வெளியிட உத்தேசித்திருக்கிறோம்.

'மறுமலர்ச்சி'யின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து, இவ்வளவு மகத்தான ஒத்துழைப்பை அளித்துவரும் 'ஹிந்த்லால்' அவர்களுக்கு எங்கள் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாசகர்களுடைய ஆதரவு இந்நூலுக்கு அதிகம் கிடைக்குமானல், அடுத்தடுத்த பாகங்களையும் தொடர்ந்து வெளியிட்டு காயிதேஆஜம் பாபா அவர்களின் அகவாழ்வில் உள்ள ருசிகரமான விஷயங்களில் பெரும்பாலானவற்றை தமிழகத்துக்கு அளிக்க முயல்கிறோம்.

— **பதிப்பாசிரியர்.**

---

இந்நூலின் ஆசிரியர் "ஹிந்த்லால்" அவர்கள், இந்நூலைப்பற்றிக் கூறும் கருத்துரை "என் உரை" என்ற தலைப்பில் இப்புத்தகத்தின் இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

31 MAR 1957

மனிதர்களே உங்கள் இறைவனிடமிருந்து (போதுமான) அத்தாட்சி நிச்சயமாக உங்களிடம் வந்துவிட்டது. தெளிவான பிரகாசத்தையே நாம் உங்களுக்கு அருட் செய்திருக்கிறோம். அல்குர்ஆன் 4:174.

# காயிதே ஆஜம் பாபா

## (வாழ்வில் சில நினைவுகள்)

கராச்சி நகரிலே பெரும் பெரும் தலைவர்களை விடவெல்லாம் முக்கியத்துவம் அடைந்துவிட்டான் இன்று முஹம்மது ஹனீப் ஆஜாத். பாக்கிஸ்தான் பத்திரிகைகளெல்லாம் அவனுடைய படத்தை பிரசுரித்துக் கொண்டிருந்தன. அவனுடைய சிறுவீட்டைச் சுற்றி பத்திரிகை நிருபர்கள் வட்டமிட்டுக்கொண்டிருந்தனர். அவன் என்ன சாதித்துவிட்டான் அப்படி? கராச்சி நகரத்திலே எவர் செய்யாத புதுமையை அவன் செய்துவிட்டான்? அவனை வட்டமிட பத்திரிகை நிருபர்களும், அவன் சொல்லுவதைப் பிரமாதப்படுத்தி பத்திரிகைகளில் பிரசுரிக்க பத்திரிகாசிரியர்களும், அவைகளைப் படிக்க மக்களும் துடிப்பதேன்?

ஹனீப் ஆஜாத் காயிதே ஆஜம் அவர்களிடம் வெகு நாட்கள், ஏன்? இறுதிகாலம் வரையிலே ட்ரைவராக இருந்தவன். காயிதே ஆஜம் அவர்களின் மாளிகையிலே வசித்தவன். அவரோடு பழகியவன்.

அவனிடமிருந்து காயிதே ஆஜம் அவர்களைப்பற்றிய தகவல்களை திரட்ட, கேட்க மக்களும் மற்றவர்களும் துடித்தார்கள். நானும் அதைப்பற்றியறிய முயற்சித்தேன்.

முன்பு காயிதே ஆஜம் பாபாவிடம் நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்றவனாக நான் இருந்திருந்தாலும், அவருடைய வெளித் தொடர்பு வாழ்வோடு தான் நான் சம்பந்தப்பட்டிருந்தேனேயன்றி, அவர் சுயவாழ்வுபற்றி நான் அறிந்திருந்ததில்லை. அவ்வழியில் எனக்கு வாய்ப்பும் கிடைத்ததில்லை. ஆதலால்தான் பாபா அவர்கள் இறைவனடி சேர்ந்தவுடன், அவர் சுயவாழ்வின் தன்மைகளைத் தெரிந்துகொள்ளும் ஆர்வம் எனக்கு மேலிட்டது.

என் இவ்வார்வத்தைப் பூர்த்தி செய்ய ஹனீப் ஆஜாத் ஒருவன் மிகவும் பயன்படுவான் என்பதை நான் அறிவேன். ஆதலால் நாமும் அவனை சந்திப்போம் என்ற முடிவுக்கு வந்தேன். ஆஸாத் எனக்கு ஓரளவு முகப்பழக்கம் உடையவன்தான் என்றாலும், மறவாத அளவுக்கு பழக்கமானவனல்ல. அவனுக்கும் எனக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இருந்ததில்லை.

வெகு கஷ்டப்பட்டு அவனுடைய முகவரியை தெரிந்து எப்பொழுது காணலாம் என்று ஒரு கடிதம் எழுதினேன். அவன் தற்பெருமை கொண்டவனல்ல என்பதை அவன் எழுதிய பதிலிலிருந்து நான் அறிந்து கொண்டேன். ஜும் ஆ தொழுகைககுப்பின் தன்னை சந்திக்கும்படி பதில் எழுதினான். ஒரு புனிதமான தலைவனைப்பற்றி ஒரு புனித தொழுகைக்குப்பின் தான் சொல்லவேண்டுமென்று அவன் முடிவு செய்திருப்பானோ என்னவோ!

**அந்த ஜும் ஆ நாள் இன்னும் இரண்டு தினங்களில் வந்து விடுகிறதே என்று சந்தோஷமாக இருந்தேன் நான். ஏனென்றால் அவனுடையபதில் எனக்கு செவ்வாய்க்**

கிழமைதான் கிடைத்தது. நான் வெள்ளிக்கிழமையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் அந்த வெள்ளிக்கிழமை வருவதற்கு ஒரு வருடத்தைக் கடக்கும் அமைதியின்மையைப் போலிருக்கும் என்று நான் நினைக்கவில்லை அந்தப் பாழும் இரு நாட்கள் இரு வாரங்களாக, மாதங்களாக எனக்கு தோன்றிற்று. நான் அவனைப் பார்க்கவேண்டும், காயிதே ஆஜமுடைய வாழ்க்கையைப்பற்றி துறுவித் துறுவி கேட்கவேண்டு மென்றெல்லாம் நான் திட்டமிட்டேன். எழுந்தால் காயிதே ஆஜம், நின்றால் காயிதே ஆஜம், சாப்பிட்டால் காயிதே ஆஜம், எங்கு போனாலும் காயிதே ஆஜம், எந்த வேலையில் ஈடுபட்டாலும் காயிதே ஆஜம் ஞாபகமே எனக்கு தோன்றியது. மனித சுபாவம் அவ்வளவு மோசமாக இருக்கும் என்பதற்கு நானே உதாரணமாக விளங்கினேன்.

ஆனால் அந்த வெள்ளிக்கிழமைக்குள் பாபாவைப் பற்றிய எவ்வளவோ விஷயங்கள் என்னைத்தேடிவரும் என்றோ, எனக்குத் தெரிந்தவைகளைப் பிறருக்குச்சொல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்குமென்றோ, நானே நினைத்து நினைத்துப் பெருமிதங்கொள்ள மீண்டும் அவைகள் என் சிந்தனைக்கு வருமென்றோ நான் நினைக்கவில்லை. அந்த இரு தினங்களுக்குள்தான் எவ்வளவு விஷயங்கள் வெளிவர சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது! ஹனீப் ஆஸாதை சந்திப்பதற்கு முன்பாகவே எனக்குக் கிடைத்த தகவல்கள்தான் என்ன சாதாரணமானவைகளா ?

அன்று இரவு ஹோட்டலின் வராந்தாவிலே சற்று உட்காரலாம் என்று வெளியே வந்தேன். அங்கு உட்கார ஒரு நாற்காலியுமில்லை. காலிங்பெல் சுவிட்சை அழுத்தினேன். ஹோட்டல் பையன் ஓடிவந்து மிக மரியாதையாக நின்றான். அவனை நான் அழைத்தேன். ஆனால் எதற்காக அழைத்தேன் என்பதை நான் அதற்குள்ளாக மறந்துவிட்டேன். அவன் 'ஜியா சாப்' என்றான் மரியாதையாக. நான் என்னை அறியாமல் 'காயிதே ஆஜம்' என்று சொல்லிவிட்டேன். சொல்லி முடிவதற்குள் என் தவறை உணர்ந்துக்கொண்டேன். என் மனநிலையை நானே சற்று கடிந்துக்கொண்டேன். என்றாலும் காயிதே ஆஜம் ஞாபகம் மட்டும் என் மனதைவிட்டு அகலவில்லை. நானும் எவ்வளவு பெரிய பைத்தியக்காரன்? நான் மறக்க முயன்றாலும் என் இதயம்

எப்படி மறக்கும்? நான் நன்றி கெட்டவனுக இருக்கலாம்! ஆனால் என் இதயம் நன்றி கெட்ட இதயமாக இருக்காது என்று ஏன் என்னுல் புரிந்துகொள்ள முடியவில்லை!

அன்று மட்டுமல்ல, கராச்சி விமான நிலையத்தில் கால்அடி எடுத்து வைத்ததுமே அந்த ஒல்லிய உருவம், நம் காயிதே ஆஜம், பாக்கிஸ்தானின் பாபா என் கண் முன்னே தோன்றினர். அவரால் ஸ்தாபிக்கப் பட்ட ஒரு இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் தலைநகரிலே காலடி எடுத்துவைக்கும் எந்த ஒரு மனிதன் அவரைப்பற்றி நினைக்காமலிருக்க முடியும்? அவரை மறந்து தன் சொந்த அலுவலை யார் கவனிக்க முடியும்? நாம் தான் முயலுகிறேம் என்றுதான் வைத்துக்கொள்வோம். கராச்சியின் ஒவ்வொரு கடையிலும், அவருடைய அழகான படம் தொங்குகிறதே அதைப் பார்க்காமல்தான் எப்படி இருக்க முடியும்! அதையும் பார்க்கா மல் கண்களை மூடிக்கொண்டு போய்விட்டாலும், சாதாரண பாக்கிஸ்தானி 'பாபா கி கஸம்' (அதாவது காயிதே ஆஜம் ஆணையாக) என்று உறுதியாகக் கூறும் ஒலி என் காதுகளில் கேட்கும்போது எப்படி அவரை நினைக்காமல் இருக்க முடியும்? ஆம்! என்னுல் முடியும், மற்றவர் களாலும் முடியும், ஒருவேளை நாம் கற்களால் படைக்கப்பட்டிருந்தால்.

கராச்சி நகரில் மட்டுமல்ல, பாக்கிஸ்தானின் எந்தகோடிக்கு சென்ருலும் காயிதே ஆஜம் பாபாவைப்பற்றியே பேசிக்கொள்வதை நாம் பார்க் கலாம். காயிதே ஆஜம் ஊர்வலத்திலே போனபோது பார்த்தவர்கள், அவர் பொதுக்கூட்டங்களிலே பேசியபோது பார்த்தவர்கள், அவர் காரிலே போகும்போது எதிர்பாராதவிதமாக பார்த்தவர்கள், அவரவர் அனுபவத்தை கூறிக்கொண்டிருப்பதையும் பல இளைஞர்கள் கூடிநின்று அமைதியாக கேட்பதையும் நாம் காணலாம். நான் மட்டும் அவரைப் பற்றித் தெரிந்துக்கொள்ள துடிப்பதில் என்ன தவறு? இன்னும் நான் மனம்திறந்து சொல்லவேண்டுமானல், நீங்கள் எப்படி நினைத்தாலும் சரி, நான் அவரைப்பற்றி அறிந்து கொள்வது என் கடமை என்றே நினைத் தேன். என்னைப் போலவே பலரும் நினைப்பார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்கள் வெளியில் சொல்வதில்லை, நான் சொல்லுகிறேன்; அவ்வளவுதான் வித்தியாசம்.

நான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்து இரு முறை **ஹுசேன் இமாம் சாஹிப்** என்னைப் பார்த்து பேசிவிட்டுப் போனர். ஒரு முறை **சுஹ்ரவர்த்தி சாஹிப்** வந்து பார்த்து பேசி சென்ருர். அவர்கள் என்னிடம் பேசிக்கொண்டிருந்த நேரத்தின் பெரும்பாகம் காயிதே ஆஜம் பற்றியே பேசினர் கள். அவர்கள் **'காயிதே ஆஜம் இன்னும் சிறிது காலம் உயிரோடு இருந்திருந்தால்.......'** என்று கூறியபோது அவர் களின் கண்கள் கலங்கியதை நான் பார்த்திருக்கிறேன். அவர் இறந்துவிட்ட துக்கம் பாக்கிஸ்தான் மக்களை விட்டு

மட்டுமல்ல, தலைவர்களைவிட்டும் மாறவில்லை. அவரைப் பற்றி நினைத்து இன்றுகூட கண்ணீர்வடிக்கும் மக்களையும் நாம் அங்கு பார்க்க முடியும்.

கராச்சி நகரத்தின் சில பெரும் தலைவர்கள் என்னை வந்து ஹோட்டலில் கண்டு பேசி போனது எனக்கு தர்ம சங்கடமாகப் போய்விட்டது நான் அந்த ஹோட்டல் ஊழியர்களிடம் சர்வ சகஜமாக பழகிக் கொண்டிருந்தேன். அவர்களிடம் நான் அந்நாட்டு நிலைமையைக் கேட்டுத் தெரிந்துகொண்டிருந்தேன். கீழ்த்தர, நடுத்தர மக்களிடம் இருந்து தெரிந்துக்கொள்ளும் விஷயங்களிலிருந்துதான் நாட்டின் உண்மை நிலையை உணர முடியும் என்பது என் எண்ணம். அதற்கு ஹோட்டல் ஊழியர்கள் நன்கு உதவியாக இருந்தார்கள். ஆனல் தலைவர்களில் சிலர் என்னை வந்து பார்த்து சென்றதைக் கண்ட அவர்கள் என் அருகில் கூட நெருங்குவதில்லை. அழைத்தால்கூட மிக மரியாதையாகவே சொல்லுவதைக் கேட்டுவிட்டுப் போவார்களே தவிர முன்போல சௌஜன்யமாக என்னிடம் பழகவில்லை. இது எனக்கு ஏதோ மிக கஷ்டமாகத்தானிருந்தது. ஏனென்றல் என் எண்ணம் ஈடேற முடியாமல் போய்விட்டதல்லவா?

அப்படி இப்படி என்று புதன்கிழமையை கழித்துவிட்டேன். வியாழக்கிழமை வந்துவிட்டது. அன்றைய பகலையும் இரவையும் கழித்து விட்டால் நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்த வெள்ளிக்கிழமை வந்து விடும். ஜும்ஆ தொழுகையை முடித்துக்கொண்டால் முஹம்மத் ஹனீப் ஆஜாதைக் காணலாம். காயிதே ஆஜம் அவர்களைப்பற்றிய பல இரகசியங்களை நாம் அறியலாம். இந்த எண்ணம் மட்டும் ஒரு விநாடி கூட என் மனதிலிருந்து அகலவில்லை. வாழ்விலேயே ஒரு புதுமையை காணப் போகின்றேம் என்பது போன்ற உணர்ச்சி என் உடம்பின் சாதாரண உஷ்ணத்தை அதிகரித்துக் கொண்டிருந்தது. எப்படியோ இன்றைய தினத்தை நான் கழித்தே ஆகவேண்டும். காயிதே ஆஜம் அடக்கமாகியிருக்கும் இடத்திற்கு நான் பன்முறை போயிருக்கிறேன். அன்று என்னவோ மீண்டும் ஒரு முறை பார்த்து வரலாம் என்ற ஆசை எனக்குத் தோன்றியது. ஒரு டாக்ஸியை அழைத்துவர ஹோட்டல் பையனை நான் அனுப்பினேன். அவன் போன சிறிது நேரத்திற்கெல்லாம் 'டாக்ஸி ஆகயீ சாப்' என்று வந்து சொன்னன். நான் உடைகளைக் கூட எடுத்து மாட்டவில்லை. அவசர அவசரமாக பெட்டியைத் திறந்து துணிகளை எடுத்தேன். கோட்டை எடுத்தபோது அது டபுள் பிரஸ்ட் கோட்டாக இருந்தது. என்னை அறியாமலேயே அந்த அறையிலே மாட்டப்பட்டிருந்த காயிதே ஆஜம் படத்தை என் கண்கள் நோக்கின. அந்த படத்திலும் அவர் 'டபுள் பிரஸ்ட்' கோட்டைதான் அணிந்

திருந்தார். என் மனம் ஏற்கனவேயே அமைதியை இழந்திருந்தது. இந்த சம்பவத்தால் என் இதயம் வேக வேகமாக துடித்தது. என் உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. என் கரங்கள் என்னை அறியாமலேயே அந்த 'கோட்டை' ஸ்டாண்டிலே மாட்டிவிட்டன. ஏன்? உண்மையை சொல்லவேண்டுமானல் அதற்கு காரணம் எனக்கே புரியவில்லை. அந்த கோட்டை நான் ஏன் அன்று அணிந்து கொள்ளாமல் அப்படியே தொங்கவைத்து விட்டேன் என்று இதுவரை என்னை நானே பன்முறை கேட்டுக்கொண்டதுண்டு. ஒரு பதிலும் எனக்கு கிடைக்கவில்லை. ஏதோ அன்று என் மனம் அப்படி செய்யச் சொன்னது; நான் செய்து விட்டேன். இதைத் தவிர நான் வேறு என்ன சொல்ல?

அவசர அவசரமாக காரில் ஏறி உட்கார்ந்தேன். ட்ரைவரும் வண்டியை 'ஸ்டார்ட்' செய்தான். அவனுடைய முகம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் அவன் இருக்கிருன் என்பதை காட்டிக்கொண்டிருந்தது. அவன் அதிக தூரம்கூட வண்டியை ஓட்டிச் செல்லவில்லை. வண்டியின் வேகத்தை குறைத்தவண்ணமே 'பாபா மஸார்' என்று கேட்டான். ஆமாம் என்று நான் பதிலளித்தேன். ஆண்டவன் இந்த டாக்ஸி டிரைவர்களுக்கு தனி மூளையை சிருஷ்டித்திருக்கிருனே என்னவோ நான் அறியேன். இந்த ஆசாமி கராச்சி ஆசாமி, இந்த ஆசாமி வெளியூர் ஆசாமி என்று உடனேயே தெரிந்துக்கொள்ளுகிருர்கள். வெளியூர் ஆசாமி என்ருல் அவர்கள் அன்று நரி முகத்தில் விழித்தவர்கள் போல்தான். அவர்கள் கேட்கும் பணத்தை இவர்கள் கொடுத்துவிடுவார்கள். அத்தோடுவிட்டுவிட மாட்டார்கள். "சாப் ஏதேக்ன சாஹியே. வோஅய்ஸீ ஜகாஹயெ கெ உஸேதேகே பகைர் கராச்சிஹிகூ நஹிங் தேகா." இதை பார்த்துத்தானகவேண்டும். அந்த இடத்தை பார்க்காதவன் காராச்சியையே பார்க்கவில்லை என்றெல்லாம்கூறி நம் ஆசைகளைக்கிளறிவிடுவார்கள். நமக்கு பார்க்கவேண்டுமென்ற ஆசை இருக்கிறதோ இல்லையோ அவர்கள் சொல்லும்போது நாம் பார்த்துத்தானகவேண்டும் என்ற முடிவுக்குவந்து விடுவோம். அவ்வளவு திறமையாக அவர்கள் பேசக்கூடியவர்கள். அவர்கள் கார் வாடகையை கருதி சொல்லுகிருர்கள் என்ருலும் அவர்கள்கூறும் இடங்களையெல்லாம் நாம் பார்க்கவேண்டியதுதான்.

நான் ஏறியிருந்த கார் ட்ரைவர் ஒரு **சீக்கியன்,** அவன் என்னை வெளியூர் ஆசாமி என்று அறிந்துகொண்டான். நான் காயிதே ஆஜம் அவர்கள் அடக்கமாயிருக்கும் இடத்தை பார்த்தாகவேண்டும் என்று முடிவு செய்து

விட்டான்போலும். இல்லையென்றால் "காயிதே ஆஜம் மிஸார்" என்று அவன் கேட்க வேண்டியதில்லையல்லவா; வெளியூர் வாசிகள் நிச்சயமாக அங்கு விஜயம் செய்வார்கள், அது இன்று கராச்சியிலேயே மிக முக்கியத்துவமடைந்திருக்கிறது. இதை நான் சொல்லி தெரிந்துக்கொள்ளவேண்டிய விஷயமல்ல. கார் போய்கொண்டிருந்தது. டிரைவர் தானகவே பேசலானன். அவன் என்னிடம் பேசியதாக எனக்கு தோன்றவில்லை. தன்னைத்தானே பேசிக்கொண்டதாகவே எனக்கு பட்டது. தானகவே "உலகத்திலே நாம் எல்லாம் ஏன் வாழ்கிரேம்!" என்றுன். இதைக்கேட்ட ஒன்றையும் கேட்காததுபோல பாவனை செய்துகொண்டேன். அவன் தன் வறுமையைப்பற்றி பேச முன்னுரையாக ஆரம்பிக்கிருன் போலிருக்கிறது என்று நான் கருதினேன். ஏனென்ருல் இது எல்லா ஊர்களிலும் சகஜம். கார் ட்ரைவர் தன் வறுமையையும் குடும்ப வரலாறுகளையும், காரை கண் காணித்து, சர்க்காருக்கு "குவார்ட்டர்" கட்டி மீதமாகாத பணத்தில்தான் காலம் கடத்துவதாக சொல்லுவது வழக்கம் ஆண்டவன் நல்லநிலையில் வைத்திருந்தாலும் அவர்கள் பஞ்சகோலம் போடுவார்கள். காரணம் அவர்கள் தங்கள் வண்டியில் சவாரி செய்பவர்களிடமிருந்து கொஞ்சம் அதிகமான 'பக்ஷிஷு'க்கு விண்ணப்பம் போடுவதற்காகவே அப்படி பேச ஆரம்பிப்பார்கள். கார் ட்ரைவர்கள் மட்டுமல்ல, குதிரை வண்டி, மாட்டு வண்டிக்காரர்களும் ரிக்ஷா இழுப்பவர்களும் இப்படியே பேசுவார்கள். இவர்களிடமெல்லாம் பழக எனக்கு சந்தர்ப்பமில்லாவிட்டாலும் நானகவே இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்வதுண்டு. அதனல் இவைகளெல்லாம் எனக்கு தெரிந்திருக்கவேண்டிய அளவுக்கு தெரிந்துவைத்திருக்கிறேன். எனவே நான் பிரயாணம் செய்துகொண்டிருந்த காரை ஓட்டிச்சென்ற அந்த சிக்கியன் சொன்னதை நான் பொருட்படுத்தாதவனைப்போல இருந்துவிட்டேன். ஆனல் அவன் விடவில்லை. மீண்டும் சொல்ல ஆரம்பித்தான். பாவம், அவன்தான் என்ன செய்வான்! அவன் என்னை கொண்டு செல்லும் இடம் அப்பேர்ப்பட்ட இடமல்லவா? அவன் உணர்ச்சிக்கு இலக்காகிவிட்டான் அவன் மீண்டும் சொல்லி முடித்த பிறகே இவன் 'பக்ஷிஷு'க்காக இப்படி சொல்லவில்லை என்பதை என்னல் புரிந்துகொள்ள முடிந்தது. 'நாம் எல்லாம் இறந்து பாபா உயிரோடிருக்கக் கூடாதா?' இதைத்தான் அவன் சொன்னன். அவன் ஒரே ஒரு வாக்கியத்தில் இதனை சொல்லிவிட்டான். அவன் சொன்ன சொற்களின் விளக்கம் அவனுக்கே தெரியுமோ என்னவோ! இன்றுகூட அது என்னை ஆராய்ச்சி செய்ய

தூண்டிக்கொண்டிருக்கிறது. ஆம்! அவன் சொன்னது இதைத்தான். "நாம் எல்லாம் இறந்து பாபா உயிரோடு இருக்கக் கூடாதா?" இதனை எல்லோரும் சொல்லிவிட முடியாது. "நாம் எல்லாம் இறந்து" என்று அவன் சொன்னானே அது அவன் இதயத்தில் காயிதே ஆஜம் பாபா எவ்வளவு தூரம் ஆழமாக பதிந்துவிட்டார் என்பதையே காட்டுகிறது அவருக்கு முன்னால் அவன் ஒரு தூசிக்கு சமமாக தன்னைத்தானே மதிப்பிட்டுக்கொண்டான். அவருக்காக எல்லாவற்றையும் தியாகம் புரியக்கூடிய துணிவை அவன் பெற்றிருக்கிறான். இல்லையானால் அவன், ஆம்! அந்த சிக்கியன் இந்த வார்த்தைகளை சொல்லி இருக்க மாட்டான்.

கார் ட்ரைவர் சொன்ன சொற்கள் என் உணர்ச்சியை மிகவும் தூண்டிவிட்டது. ஒரு சீக்கியனை இருந்துங்கூட அவன் பாபா மீது அவ்வளவு அன்பும் பற்றுதலும் கொண்டிருக்கிறான்! அவர்களெல்லாம் கௌரவிக்குமளவிற்கு, தனக்காக உயிர்களையும் பலியிடுமளவிற்கு பாபா, காயிதே ஆஜம் பாபா, தர்மத்தையும் நேர்மையையும் கடைபிடித்திருக்கிறார். அவன் இந்த வார்த்தைகளை சொன்னதுமே எனக்கு காயிதே ஆஜமின் கார் ட்ரைவர் முஹம்மத் ஹனீப் ஆஜாதின் ஞாபகம் வந்துவிட்டது. அவனுடைய ஞாபகம் வர வர ஒவ்வொரு மணியும் ஒரு யுகமாக எனக்கு தோன்றியது. அந்த சீக்கியன் வெகு வேகமாக காரை செலுத்தியும் சில அடிகள்கூட கடக்கவில்லைபோல எனக்குத் தோன்றியது.

ஏற்கனவேயே நான் மன அமைதியை இழந்திருந்தேன். ஒவ்வொரு வினாடியும் என் மனதில் காயிதே ஆஜம் எண்ணம், அவருடைய கார் ட்ரைவர் முஹம்மத் ஹனீப் ஆஜாத் ஞாபகம் உதித்துக்கொண்டிருந்தது. அதற்கேற்றாற்போல ஒவ்வொரு சம்பவமும் எதிர்ப்பாராத முறையில் என் எண்ணங்களை புதுப்பிப்பதாகவே அமைந்திருந்தது. நான் பிரயாணம் செய்யும் கார் ட்ரைவரோ இம்மையையும் மறுமையையும் இணைத்து ஆராய தூண்டிவிட்டு விட்டான். நான் காரிலதான் சவாரி செய்துகொண்டிருந்தேன். ஆனால் என் எண்ணமெல்லாம் பழங்காலத்தை நோக்கி விரைந்தோடிக்கொண்டிருந்தது: பம்பாய், புதுடெல்லி, சென்னை ஆகிய இடங்களில் நடந்த பெரும்பாலான முஸ்லிம் லீக் நடவடிக்கைகளில் நான் கலந்திருக்கிறேன். காயிதே ஆஜம் பாபாவை பன்முறை பார்த்திருக்கிறேன். அவருடைய புனித திருக்கரங்களைப்பற்றி நான் புனிதமடைய முயற்சித்திருக்கிறேன். அவருடைய புன்முறுவல் பூத்த முகத்தை நான் பன்முறை நேரிடையே பார்த்திருக்கிறேன். அவருடன் பல மணி நேரமில்லாவிட்டாலும் சில நிமிஷங்கள் பேசியிருக்கிறேன். இவ்வளவு நெருங்கிப் பழகிய என் இதயம் அவருடைய திரு உருவப் படங்

களைப்பார்த்துக் கலங்கியது. அவரை தரிசித்த கண்கள் அவரின் உருவப் படங்களை பார்த்து கலங்குகின்றன. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி நான் ஏக்கத்தில் ஆழ்ந்திருந்தேன்; நான் சுயஉணர்வை இழந் திருந்தேன்.

வெகு வேகமாக சென்ற கார் திடீரென்று மெது வாகப் போகத் தொடங்கியது. மெதுவாகப் போன கார், ட்ரைவரால் நிறுத்தப்பட்டதை நான் பொருட் படுத்தவில்லை. கார் ட்ரைவர் சாவதானமாக தலை யணியை எடுத்து பக்கத்தில் வைத்துக்கொண்டான். சோகமே உருவாக என் பக்கம் திரும்பினான். நான் அவனையே நோக்கினேன். அவன் பேச ஆரம்பித்தான். அவன் இடையிடையே மரியாதைச் சொல்லாக 'சாப்' என்று சேர்த்துக்கொண்டான். தனது வலது கரத்தை நீட்டி பிரமமாண்டமான ஒரு கட்டிடத்தைக் காட்டினான். நான் பார்த்ததற்கு அடையாளமாகத் தலையை அசைத் தேன். அவன் பேசலானான்.

'காயிதே ஆஜம் மரண ஊர்வலம் சென்றபோது இந்த மாளிகையில் இரு பிணங்கள் கிடந்தன.' இதை சொல்லும்போதே அவன் கண்கள் கண்ணீரை பொங் கின. என் மனம்கூட சற்று தளர்ந்துவிட்டது. துக்கம் அவனுடைய தொண்டையை அடைத்துக்கொண்டது. கம்மிய குரலில் அவன் பேசினான்.

காயிதே ஆஜம் சடலத்தை இராணுவ பீரங்கி வண்டி யில் வைத்து இராணுவ அதிகாரிகள் இழுத்துச் சென்றனர். கூட்டம் என்றால் விவரித்துச் சொல்ல முடியாது. ஊசி போட்டால் பூமியில் படாது. அவ்வளவு நெருக்கடி, மக் களில் பலர் கதறி கதறி அழுதனர். வாலிபர்கள் பைத்தியம் பிடித்தவர்களைப் போல 'பாபா! பாபா!' என்று தொண்டை கிழிய கத்தினார்கள்.

பெண்கள் தங்கள் கோஷாவைக் கூட மறந்துவிட்டார் கள். அவர்கள் தலைகளில் அடித்துக்கொண்டு கதறியதை என்னால் மறக்க முடியவில்லை. கிழவர்களின் தாடிகள் கண் ணீரால் நனைந்துவிட்டன. அதிலும் இந்த இடத்தில் கூட்டம் கட்டுக்கடங்காமல் போய்விட்டது. மௌலானா ஷப்பீர்

அஹமத் உஸ்மானியால் கூட கூட்டத்தை அடக்க முடியவில்லை. அவர் லியாகத் அலிகானை எழுந்து கூட்டத்தை அடக்கும்படி கேட்டுக்கொண்டார். பாவம்! அவர் கல்லாய் அமர்ந்திருந்தார். அவரால் எழுந்திருக்கவும் முடியவில்லை. அவரால் பேசக்கூட முடியவில்லை. அவர் பிணம்போல அமர்ந்திருந்தார். கூட்டத்தின் ஆரவாரம் அதிகரிக்க-அதிகரிக்க அவர்களை அடக்கவேண்டிய தலைவர்களும் கோவென அலற ஆரம்பித்துவிட்டார்கள். சர்தார் அப்துர் ரப் நிஷ்தர் இரு கரங்களையும் உயரே தூக்கிய வண்ணம் 'யா அல்லாஹ்! யா அல்லாஹ்' என்று ஓயாமல் கதற ஆரம்பித்துவிட்டார். கூட்டத்திலிருந்த சிலர் மௌலானா ஷப்பீர் அஹமத் உஸ்மானியை அப்படியே தூக்கி பின்னால் சென்று கொண்டிருந்த இராணுவ லாரியின் மேல் ஏற்றிவிட்டார்கள். அந்த லாரியில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டிருந்தது. மௌலானா பேச ஆரம்பித்ததும் கூட்டத்தில் இரைச்சல் சற்று குறைந்தது, அவர் பேசலானார்.

"என் அருமை சகோதரர்களே! நம் அரும் பெரும் தலைவர் காலமான வருத்தம் பாக்கிஸ்தானி ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் ஒரு காயத்தை உண்டு பண்ணிவிட்டது. நாம் இன்று கதறுகிறோம். ஆனால் என்ன பயன்? இங்கே கூடியிருக்கும் இலட்சக்கணக்கான மக்களும் தம் உயிர்களை பலி கொடுத்து விட்டாலும் அவர் மீண்டும் உயிர் பெறப் போவதில்லை. அல்லாஹ் அவரை பிரித்துவிட்டான். நாம் பொறுமையாயிருந்து அவரின் இலட்சியத்தை நிறைவேற்றுவோம். வீணே மதத்தில் அனுமதிக்கப்படாத முறையில் துக்கத்தை கொண்டாடாதீர்கள்."

இவ்வாறு சொல்லிய வண்ணமே தன் கண்களை துடைத்துக்கொண்டார். ஆனால் அவர் கோரிய அமைதி நிலவவில்லை. கூட்டத்தினரின் துக்கம் ஒரு எல்லைக்குள் இல்லை. திடீரென்று ஒரு மூலையில் கூட்டத்தினரின் ஆரவாரம் அதிகரித்தது. எல்லோரும் அப்பக்கமாக ஓடினார்கள். ஆம்! துக்கத்தை தாங்க முடியாத 21 வயதுடைய ஒரு வாலிபன் உயிரை இழந்துவிட்டான். அவனை தூக்கி இந்த மாளிகைக்கு கொண்டுபோனார்கள். இராணுவத்தினர் கூட்டத்தின் அணி கலைந்துவிடாமல் வெகு ஜாக்கிரதையாக பார்த்துக்கொண்டார்கள்; ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த மாளிகையில் ஏற்கனவேயே ஒரு பிணம் இருந்ததாக சேதி பரவியது, இராணுவ லாரியில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கி அதை ஊர்ஜிதம் செய்தது.

அவ்விடத்தில் மக்களின் துக்கம் எல்லை மீற காரணமுண்டு. 1947-ம் வருஷக் கடைசியில் இந்த இடத்தில்தான் மிகப் பெரும் கலவரம் நடந்தது இந்தியாவிலிருந்து இலட்சக் கணக்கான அகதிகள் இங்கு குடியேறினார்கள். திடீரென்று குடி பெயர்ந்து வந்தவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க சர்க்காரால் முடியவில்லை. அகதிகளை உள்ளூர் வாசிகள் கவனித்துக்கொள்ளும்படி அரசாங்கம் வேண்டுகோள் விட்டது. அது போதிய பலன் தரவில்லை. அகதிகள் கஷ்டத்தை தாங்கமுடியாமல் நம்மவர்கள் மீது போர் தொடுக்க முனைந்துவிட்டார்கள். எதிர்க்க வந்தவர்கள் ஒருவர் இருவர் அல்ல. ஆயிரக் கணக்கானவர்கள் எங்களையும் சர்க்காரையும் எதிர்க்க முனைந்தனர். பயங்கர ஆயுதங்களைக் கொண்டு தாக்கவும் அவர்கள் துணிந்துவிட்டார்கள்; போலீஸ் தலையிட்டும் பயனில்லை. இராணுவத்திற்கு தகவல் அனுப்பப்பட்டது இதற்கிடையே இந்த சேதி காயிதே ஆஜம் பாபாவுக்கு எட்டிவிட்டது. கவர்னர் ஜெனரல் பாதுகாப்பு முஸ்தீப்புகளையெல்லாம் கவனிக்காமல் ஒரு காரில் ஏறி ஸ்தலத்திற்கு வந்தார். நாங்கள் எல்லோரும் பயந்தே போனோம். இவ்வளவு பயங்கரக் கூட்டத்தை அதிலும் அவர் தலைமையில் இயங்கும் ஒரு சர்க்காரை எதிர்த்து நிற்கும் கூட்டத்தை நோக்கி வருகிறாரே என்று பார்த்தபோது நாங்கள் நடுங்கிவிட்டோம். காயிதே ஆஜம் பாபாவின் கார் கூட்டத்தை பிளந்துகொண்டு உள்ளே சென்றது. பாபாவின் முகம் கோபத்தால் சிவந்திருந்தது. அவரது இடது கை விரல்களிடையே சிக்கியிருந்த சுருட்டைத் தவிர வேறு ஆயுதம் அவரிடம் இல்லை. காரை விட்டு இறங்கியதும் கார் பெட்மீது ஏறி உட்கார்ந்து கொண்டார். அது வரையில் வந்தவர் பாபாதான் என்பது கூட்டத்தினருக்குத் தெரியாது அது வரை கலவரத்திற்கு முஸ்தீபு செய்து கொண்டிருந்த கூட்டம் உணர்ச்சி பொங்க 'காயிதே ஆஜம் ஜிந்தாபாத்' என்று கோஷித்தது. பாபா திருப்தி அடையவில்லை. கூட்டத்தினரின் மனோ நிலையை அவர் நன்கறிந்திருந்தார். ஆனால் அவர்களை சமாதானப் படுத்த அவர் விரும்பவில்லை போலும். ஜிந்தாபாத கோஷத்தை எழுப்பிக் கொண்டிருந்த கூட்டத்தை நோக்கி 'யூ ஆல் ஷட் அப்' என்று கர்ஜித்தார். அவர் கர்ஜனையை கேட்ட கூட்டமே நடுங்கிவிட்டது. பின்னர் 'என் மீது நம்பிக்கை இருக்கிறதா?' என்று உரத்த குரலில் கேட்டார். 'இருக்கிறது, இருக்கிறது' என்று நான்கு திசைகளிலிருந்தும் கோஷங்கள் கிளம்பின. 'அப்படியானால் பேசாமல் போய் விடுங்கள்' என்று கூறினார். ஆச்சரியம்தான். மூன்றே நிமிஷங்களில் இந்த இடத்தில் ஒரு ஆளில்லாமல்

எல்லாமே மறைந்து போய்விட்டனர். பாபாவும் போய் விட்டார். எல்லோருமே அப்படியே ஸ்தம்பித்து விட்டோம். அவரது வார்த்தைகளுக்கு பரம விரோதிகள் கூட தலைசாய்த்தார்கள். மரண ஊர்வலம் இங்கு வந்து சேர்ந்ததும் மக்களுக்கு அந்த ஞாபகம் வந்துவிட்டது. அன்று அவ்வளவு துக்கம் பீரிட்டுவிட்டது.'

இப்படி இடையிடையே திக்கி திக்கி, சொல்லி தன் கண்களை துடைத்துக்கொண்டான். அபபொழுதுதான் என் கன்னங்களை நனைத்திருந்த கண்ணீரை துடைக்க வேண்டுமென்ற எண்ணம் உதித்தது; நானும் துடைத்துக் கொண்டேன் இம்மாதிரி பல சம்பவங்களை சொல்ல கேட்டிருக்கிறேன். ஆனால் என் மனம் இவ்வளவு தளர்ந்த தில்லை.

மறுபடியும் காரை ட்ரைவர் ஸ்டார்ட் செய்தான். கார் சற்று நகர ஆரம்பித்தது. மீண்டும் திடீரென்று நிறுத்தினன். அவன் தலையணியை அணிய மறந்து போய் விட்டான் இந்த சிறு மறதிக்கு அங்கு அபராதம் செலுத்தியாகவேண்டும். ஒரு அங்கலாய்ப்போடு தலையணியை மாட்டிக்கொண்டான். இதற்கு இடையில் 'சார் பேப்பர்' என்று ஒரு பையன் காருக்குள் தலையை நீட்டினன். நான் சிறிது நேரத்திற்காவது காயிதே ஆஜம் பாபாவை மறக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். நான் மறக்காவிட்டால் பைத்தியம் பிடித்துவிடும்போல் இருந்தது. அதற்கேற்றது போல காரும் நின்றது; பேப்பர் விற்கும் பையனும் பேப்பர் வேண்டுமா என்று கேட்டான். அவனிடம் சில்லரையைக் கொடுத்துவிட்டு 'பாக்கிஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை ஒன்றை வாங்கிக்கொண்டேன். அதுவரையிலே ட்ரைவர் காரை பொறுமையாக நிறுத்திக்கொண்டிருந்தான். பத்திரிகையில் கவனம் செலுத்தி என் இதயத்தின் ஓயாத வேதனையை அகற்றுவது என்று முடிவுசெய்தேன். ஒரு சிகரெட்டையும் எடுத்து பற்ற வைத்துக்கொண்டேன். மிக உறுதியோடு பேப்பரைப் பிரித்தேன். Miss. Fatima Jinnah's Statement on Kashmir (காஷ்மீர் சம்பந்தமாக மிஸ் பாத்திமா ஜின்னாவின் அறிக்கை) என்ற தலைப்பு இருந்தது. நான் நினைத்தது எப்படி நடக்கும்? நானே பாபாவின் ஞாபகத்தை சிறிது நேரத்திற்கு மறந்திருப்பது என்ற நோக்கத்தில் பத்திரிகையை பிரித்தேன். அங்கும் ஜின்னா சாஹிபின் நாமம்தான் தென்பட்டது. மீண்டும் பிரித்தேன். இரண்டாம் பக்கம் என் கண்ணில் படவில்லை. மூன்றும்

பக்கம்தான் என் கண்களுக்குப்பட்டது. மூன்றும் பக்கத்தில் பாபாவின் ஒரு பெரிய படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அந்த பக்கத்தின் தலைப்பு 'காயிதே ஆஜம் பண்டுக்கு பணத்தைக் கொடுத்துவிட்டீர்களா?' என்ற கேள்விக்குறியில் அமைந்திருந்தது. நான் என்னதான் செய்ய? பேசாமல் மூடிவிட்டேன். கையிலிருந்த சிகரெட்டை வேக வேகமாக புகைத்தேன். என் மனைவியை நினைத்தேன். வீட்டுநினைப்பை ஏற்படுத்திக்கொண்டாலாவது இவரை சிறிது நேரம் மறக்கலாமல்லவா? அதை நோக்கமாகக் கொண்டுதான் நான் என் மனைவியை நினைத்துக்கொண்டேன். அவள் ஞாபகம் வந்ததும் தொடர்ந்து அவள் சொன்னதும் ஞாபகத்திற்கு வந்தது. நான் வீட்டைவிட்டு வெளியே கிளம்பும் நேரத்தில் அவள் சொன்னது என் ஞாபகத்திற்கு வருவது இயற்கையே! 'ஆமாம், நான் சொன்னவைகளையெல்லாம் வாங்கி வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி இதைமட்டும் மறந்துவிடாதீர்கள். நம் காமிராவைக்கொண்டு உங்கள் கைப்பட காயிதே ஆஜம் பிறந்த வீட்டையும், மஜாரையும் (அடக்கமான சமாதி)யையும் மறக்காமல் படம் பிடித்துக்கொண்டு வாருங்கள்' இதுதான் அவள் கடைசியாக என்னிடம் சொன்னது. அவள் கூடவா, இவ்வளவு தூரம் பிரிந்துவந்த பின்பும் என் அமைதியின்மையைப் பெருக்கவேண்டும்.

இதைத் தொடர்ந்து என் நண்பரின் ஞாபகம் எனக்கு வந்தது. என் நண்பர் அபூபக்கர் சாஹிப் அடிக்கடி ஹாஸ்யமாக ஒரு சம்பவத்தைப்பற்றிக் கூறுவார். ஹக்கீம் அஜ்மல்கானிடம் மௌலானு முஹம்மதலி அவர்கள் மருந்து கேட்டாராம். ஹக்கீம் சாஹிப் சில மருந்துக்களை பொட்டலங்களாக கட்டி மௌலானு சாஹிபிடம் கொடுத்து, விபரமாக சாப்பிடும் முறையை விளக்கி சொன்னுர் கடைசியில் விடைபெறும் நேரத்தில் 'ஹக்கீம் சாஹிப் இந்த மருந்துக்கு பத்தியம் ஏதாவது உண்டா? என்று கேட்டார். அதற்கு ஹக்கீம் சாஹிப் என் மருந்துக்கு எப்பொழுதும் ஒரே ஒரு பத்தியம்தான். எதை வேண்டுமானுலும் சாப்பிடலாம். ஆனுல் மருந்து சாப்பிடும்போதுமட்டும் குரங்கை நினைக்காமல் சாப்பிடவேண்டும் என்று ஹாஸ்யமாக பதிலளித்துவிட்டார். மௌலானு சாஹிபும் சிரித்துவிட்டு போய்விட்டார். மருந்தெல்லாம் சாப்பிட்டு முடிந்தபிறகு மீண்டும் மருந்துக்காக ஹக்கீம் சாஹிபிடம் வந்தார் மௌலானு. மௌலானுவை பரிசோதித்துவிட்டு 'என்ன, ஏதாவது குணம் தெரிகிறதா?' என்று வினவினுர் ஹக்கீம் சாஹிப். 'இல்லையே! அப்படித்தான் இருக்கிறது உடம்பு' என்று பதில் அளித்தார் மௌலானு. ஹக்கீம் சாஹிப் 'நீங்கள்

பத்தியத்தைக் கடைபிடிக்கவில்லை. அதனால்தான் குண மடையவில்லை. நான் ஆபெஹயாத் கொடுத்திருக்கும் போது எப்படி குணமாகாமல் இருக்கும்? உண்மையாகச் சொல்லுங்கள் நீங்கள் மருந்து சாப்பிடும்போது நான் சொன்னதுபோல குரங்கை நினைக்காமல் சாப்பிட்டீர்களா?' என்று கேட்டார். 'ஹக்கீம் சாஹிப் இல்லை' என்றில்லாமல் வேறு என்ன பதில் சொல்லமுடியும் மௌலானாவினால்? இதை ஹாஸ்யமாக என் நண்பர் அபூபக்கர் சாஹிப் கூறுவதுண்டு. அந்த நிலைமைதான் அன்று எனக்கும் ஏற்பட்டது

நான் காயிதேஆஜம் பாபாவை சிறிது நேரம் மறந்திருக்க வேண்டுமென்று முயற்சித்தேன். அந்த எண்ணத்திலேயே இருக்கும் நான் அவரை எப்படி மறக்க முடியும்? வேறு எந்த சூழ்நிலையை சிருஷ்டித்துக்கொண்டாலும் அந்த சூழ்நிலையிலும் நான் யாரை மறந்திருக்க விரும்புகிறேனோ அவரின் தொடர்பு இருந்துகொண்டுதான் இருக்கிறது. நானும் ஒரு பைத்தியக்காரன தானே! என் உயிரை நான் சிறிது நேரத்திற்காக பிரிந்திருக்க முடியுமா? அது என்னால் சாத்தியமில்லை என்றால் இது என்னால் சாத்தியமாகுமா என்று நான் யோசனை செய்திருக்கவேண்டும் அல்லவா? ஆனால் ஏனோ அந்த நேரத்தில் என் மனம் அந்த எண்ணத்தில், வழியில் சென்றுகொண்டிருந்தது! மனித சுபாவமே அப்படித்தான்போலும் என் முயற்சியில் நான் அன்று வெற்றி பெற்று பாபாவை நான் மறந்திருந்தால் இன்று என் மனசாட்சி என்ன கூறியிருக்கும்? உன்னை நீயார் என்று எண்ணச்செய்து, தன்மானமுள்ள மனிதனாய் மாற்றி அமைத்து, உன் தலை எவருக்கு முன்பும் சாயவிடாமலிருக்க ஒரு தனி சாம்ராஜ்யத்தை சிருஷ்டித்தளித்த ஒரு வீரத் தலைவனை மறந்த நன்றி கெட்டவனல்லவா நீ என்று என்னை சாகாமல் சாகடித்திருக்குமல்லவா? அந்த வேதனையை நான் பொறுக்கமாட்டேன் என்று அறிந்த ஆண்டவன்தான் என்னை அந்த அபாயத்தினின்று அன்று காப்பாற்றி இருக்கிறான். வேறு யாரால் முடிந்திருக்கும்? இப்படி நான் மனக் குழப்பத்தில் இருந்தேன். கார் போய்க்கொண்டே இருந்தது. சில அடிகள்கூட நான் கடந்ததாக எனக்குத் தோன்றவில்லை. ஆனால் கார் மட்டும் வேகமாகப் போய்க் கொண்டே இருந்தது.

நான் காயிதே ஆஜமை சிறிது நேரத்திற்காவது மறக்க வேண்டுமென்ற எண்ணம் ஈடேறாது என்பது எனக்குத் தெரிந்துவிட்டது. நான் மறக்க முயன்றாலும் நான் ஏறிச்

சென்ற கார் டிரைவர் எதையாவது ஒன்றை ஆரம்பித்து விடுகிறான் அவரைப்பற்றி அகதிகள் கலவரத்தை போலீஸாரால் அடக்க முடியவில்லை. இராணுவத்திற்கு சேதி அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் காயிதே ஆஜம் சில வார்த்தைகளில் அப்பயங்கரக் கூட்டத்தை மூன்றே நிமிஷங்களில் கலைத்துவிட்டார் என்றால், அதிலிருந்து அவர் மீது எவ்வளவு அன்பையும், பக்தியையும் கொண்டிருக்கவேண்டும் அவர்கள்? இந்தச் சம்பவத்தை நான் மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்திக்கொண்டேன். ஏனென்றால், உலகத்திலேயே இவ்வளவு புகழையும், அபிமானத்தையும் கடந்த பத்து நூற்றாண்டுகளில் எவரும் பெற்றிருந்ததாக சரித்திரம் கூறவில்லை.

என் நண்பர் வெய்ஸ்மேன் என்ற ஆங்கிலேயர் ஒருமுறை என்னிடம் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு விஷயத்தை என்னிடம் கூறினார். அவர் சொன்ன கருத்துக்களை இதுவரை எவரும் சொன்னதில்லை. அவருக்கு சரித்திரத்தை ஆராய்வதிலே தனி ஆர்வமிருந்தது. அவர் உலக சரித்திரதை ஆராய்ந்தவண்ணமே இருப்பார். இங்கிலாந்து அரசி எலிஜெபத் பிறந்த தேதி எது என்றால் உடனேயே சொல்லுவார். இந்தியாவில் 1451ல் யார் ஆட்சிசெய்து கொண்டிருந்தார் என்று கேட்டால் உடனேயே சொல்லுவார். உஸ்மானிய சாம்ராஜ்யம் எந்தெந்த வருஷத்தில் எவ்வளவு விஸ்தீரணம் கொண்டதாயிருந்தது என்றால் சொல்லுவார். அதிலும் உலக முஸ்லிம் நாடுகளுடைய சரித்திரம் அவருக்கு நலைகீழ் பாடம். அவர் எங்களுடன் பேசவரும் போதெல்லாம் ஏதாவது ஒரு சரித்திரக் குறிப்பை எழுப்பி விட்டு பேசாமல் இருந்துவிடுவோம். அவர் மிக அழகாக அரும்பெரும் சம்பவங்களை எல்லாம் தொகுத்து ஒழுங்காக சமர்ப்பித்துக்கொண்டிருப்பார். அவர் பேசுவதைக் கேட்டுகொண்டே இருந்தால் போதுமென்று நமக்குத் தோன்றும். நல்ல பல ஆதாரங்களோடுதான் அவர் பேசுவார். எங்களுக்கு சரித்திர சம்பந்தமாக சந்தேகம் எழும்போதெல்லாம் அவரையே நாடுவோம். அவர் மிக அன்பாக, தக்க ஆதாரங்களோடு தெளிவடையச் செய்வார்; அவ்வளவு ஞாபக சக்தி படைத்தவரை நான் பார்க்கவில்லை. அவர்தான் ஒருமுறை பேசிக் கொண்டிருந்தபோது காயிதே ஆஜம் பாபாவைப் பற்றி குறிப்பிட்டார். முஸ்லிம் உலகத்தில் திருத் தூதர் முஹம்மதுக்குப் பின்னால் நான்கு கலிபாக்களுக்குப் பின்னால் காயிதே ஆஜம் போன்ற ஒருவர் பிறக்கவில்லை. இவ்வாறு அவர் கூறினபோது எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. அவர் என் மனோநிலையை உணர்ந்துகொண்டார். உடனேயே

அவர் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக சரித்திரத்தை விளக்க ஆரம்பித்தார்; தான் சொன்ன குறிப்பு சரியானது என்று நிரூபித்துவிட்டார். அவர் கூறிய அபிப்ராயத்தை நானோ, மற்றவர்களோ மறுக்க வில்லை; எப்படி முடியும்? அவர் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மையாகும். உலக சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால், கலீபாக்கள் காலத்திற்குப் பின்னால் முஸ்லிம் களிடையே காயிதே ஆஜம் பாபாவைப் போன்ற ஒரு அரும் பெரும் தலைவர் தோன்றியதில்லை; அவரின் ஒரு விரல் அசைப்புக்கு பத்து கோடி மக்கள் ஏக காலத்தில் சகலவற் றையும் தியாகம் புரிய தயாராயிருந்தது போன்ற அவ்வளவு பெரிய ஆதரவு இதுவரை நண்பர் வெய்ஸ்மேன் சொன்னது போல இருந்ததில்லைதான். முஸ்லிம் உலகத்தில் என்ன, உலகத்திலேயே தோன்றவில்லை என்றாலும் பொருந்தும்; ஆண்டவன் பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறைதான் இப் பேர்ப்பட்ட தலைவரை மனித சமுதாயத்தினிடையே படைக் கிறான்.

காயிதே ஆஜம் பாபா பாக்கிஸ்தான் கோரிக்கையில் வெற்றி பெற்றார் என்ற ஒரு பெருமையைத்தான் நாம் உணர்ந் திருக்கிறோம்; ஆனால் அவர் உலக முஸ்லிம்களின் விடுதலைக்கு வழி வகுத்தளித்து விட்டார்; இதனை நான் சொல்லவில்லை; இந்தோனேஷியாவில் இருந்து இங்கு வந்திருந்த பிரபல எழுத் தாளர் பெரோஜெனோ காயிதே ஆஜமைப் பற்றி குறிப்பிடுகை யில் 'காயிதே ஆஜம் இந்தியாவில் பாக்கிஸ்தான் கோரிக் கையை இஸ்லாமிய அடிப்படையில் சமர்ப்பித்து போராடா மலிருந்தால் உலக முஸ்லிம்களிடையே விழிப்புணர்ச்சியே ஏற் பட்டிராது; இந்தோனேஷிய முஸ்லிம்கள் விழித்திருக்க மாட் டார்கள்; என்று கூறினார்; இது சாதாரண மதிப்புரையல்ல; அதுவே உண்மையுமாகும்; காயிதே ஆஜமின் ஒவ்வொரு அடியும் உலக முஸ்லிம்கள் நடந்து செல்லவேண்டிய பாதை யின் அடையாளங்களாகும்; அதைக் கருதியேதான் பெரோ ஜெனோ இவ்வாறு குறிப்பிட்டிருக்க வேண்டும் அல்லவா?

ஆமாம்! இன்று கூட என் காதுகளிலே அது ஒலித்துக் கொண்டிருக்கிறது. 1943-ம் வருஷம் டெல்லியிலே சர் தேஜ் பஹதூர் சாப்ரு நண்பர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்தார், அவர் உர்தூ மொழி வல்லுனர் என் பதைச் சொல்லித் தானாக வேண்டுமென்பதில்லை. மிக அழ காக கவிகளைப் புனைவார். மூன்றடுக்கு மாளிகையின் மேல் மாடியில் நிலவு சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டு பலர் பேசிக்

கொண்டிருந்தனர். ஒரு ஐக்கிய மாகாணத்தை சேர்ந்த நண்பர் (பெயர் ஞாபகமில்லை) "இந்த வெண்ணிலாவின் அழகைப் பற்றி ஒரு கவி பாடுங்கள்' என்று சர் சாப்ருவைக் கேட்டுக்கொண்டார். சர் சாப்ருவுக்கு கவி புனைவதில் சிரமம் ஒன்றுமில்லை. இருந்தும் அவர் புனைந்து பாடவில்லை. மீண்டும் நண்பர் ஞாபக மூட்டினர். திடீரென்று அவர் 'இக்பாலுக்கு ஜின்னு இருப்பது போல எனக்கும் ஒருவர் இருந்தால் இதுமட்டுமா பாடுவேன்; இன்னும் எத்தனையோ பாடுவேன்' என்று பதில் அளித்தார். எல்லோரும் அவருடைய ஹாஸ்யத்தைப்புரிந்துகொள்ளாமல் விழித்தார்கள். எனவே இந்தப் பிரச்சினை விவாத கட்டத்தை அடைந்து விட்டது. விவாதம் கேட்பதற்கு மிக இனிமையாக இருந்தது; பல மணி நேரம் அந்த விவாதம் தொடர்ந்து நடைபெற்றது; சர் சாப்ருவுடைய வாதம் இதுதான்.—

சர் இக்பால் 'இந்துஸ்தான் ஹமாரா— சாராஜஹான் ஹமாரா (இந்துஸ்தான் எங்களுடையது— இந்த உலகமே எங்களுடையது) என்று பாடிவிட்டார். பாட்டில் கருத்தும் இனிமையும், பொருந்தி இருக்கிறது; இக்பால் அவர்களின் பாட்டுக்களை மற்றவர் எவராலும் புனைய முடியாது; ஆனல் இந்துஸ்தான் — உலகம் நம்முடையது என்று பாடினரே, அது மிஸ்டர் ஜின்னு இல்லாமலிருந்தால் உண்மையாய் விடுமா? அவர் பாடவும், இவர் அதை நிறைவேற்றவும் சரியாய் போய்விட்டது.'

இதுதான் சர் சாப்ருவின் வாதம்; ஆனல் அக்குழுவினரில் ஒருவர் 'ஹிந்துஸ்தான் நம்முடையது' என்று பாடி இருப்பதை நான் பாக்கிஸ்தானைக் கொண்டு ஒப்புக் கொள்ளுகிறேன். உலகம் நம்முடையது என்பதற்கும் காயிதே ஆஜமுக்கும் என்ன சம்பந்தம்? என்று அவர் கேட்டார். அதற்கு சரியாய் போய்விட்டது போங்கள்; மிஸ்டர் ஜின்னுவின் பாக்கிஸ்தானம் உலகமே பாக்கிஸ்தானம் ஆவதற்கு முதல்படிதானே!' என்றுர் ஹாஸ்யமாக. அறிவாளிகளின் ஹாஸ்யத்திலும் அர்த்தம் இருக்கும் என்பதை நான் அன்றுதான் உணர்ந்தேன்; சர் தேஜ் பகதூர் சாப்ரு மிக அர்த்த புஷ்டியோடுதான் அவ்வாறு கூறி இருக்கிறுர்; ஏனென்றுல் அவர் உலக வரலாறுகளை நன்குணர்ந்தவராயிருந்ததால் அந்த அர்த்தபுஷ்டி நிறைந்த ஹாஸ்யத்தைக்கூற முடிந்தது; உலகத்திலேயே முஸ்லிம்களின் சக்திதான் மேலோங்கி நின்றது; சீனவிலிருந்து ஸ்பெயின் தேசம் வரையிலே இஸ்லாமிய ஆட்சி வியாபித்திருந்தது; வீர பராக்கிரமசாலிகளாகக் கருதப்பட்டு வந்த கிரேக்கர்களின் அணிகளெல்லாம் தூள் தூளாக்கப்பட்டு விட்டன; முஸ்லிம்கள், நிமிர்ந்து பார்த்த நிலப்பரப்பெல்லாம் அவர்களின் காலடிகளிலே வந்து சேர்ந்தன;

அவர்கள் நினைத்தது எல்லாம் அவர்களை நோக்கி உருண்டோடி வந்தன; இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது? அதிலும் முஸ்லிம்களின் தற்கால எண்ணிக்கையில் அரைவாசி கூட அன்று இருந்ததில்லை; ஆனால் இவையெல்லாம் சாத்தியமாயிருந்தன; எப்படியெனில் அக்காலத்து முஸ்லிம்கள் இஸ்லாமிய அடிப்படையில் ஆட்சியை செலுத்தினர்; வெற்றி தானகவே கிடைத்துக் கொண்டிருந்தது; இஸ்லாமல்லாதவர்களெல்லாம் இரு கரங்களேந்தி அவர்களை வரவேற்றனர்; நாளடைவில் முஸ்லிம்கள் இஸ்லாத்தை விட்டகன்று ஒரு விஷப் பரீட்சையில் இறங்கினர்; அதனுடைய பலன் சரசரவென்று அவர்களின் சாம்ராஜ்யங்கள் சரிந்தன; அவர்களுடைய சக்தி சிதறுண்டது; அவர்கள் வெறும் ஆட்களாகி விட்டனர். அண்டி பிழைத்தவர்கள் அவர்கள் கட்டியாண்ட மாளிகையிலே கோலேந்தி அமர, முஸ்லிம்கள் தங்கள் தலைவிதியை நொந்துக் கொண்டு குடிசைகளிலே பதுங்கினர்; அந்த பதுங்கிய கூட்டத்தைத் தான் தட்டி எழுப்பினர் காயிதே ஆஜம்; எந்த ஒரு இஸ்லாமிய ஜனநாயக முறை முஸ்லிம்களுக்கு ஈடில்லாத சக்தியையும் பெரும் பெரும் வெற்றிகளையும், சாம்ராஜ்யங்களையும் தேடித் தந்ததோ அதே முறையில் ஒரு சாம்ராஜ்யத்தை சிருஷ்டிக்கவே காயிதே ஆஜம் பாக்கிஸ்தானைக் கேட்டார். அது இஸ்லாமிய முறைப்படி அமைக்கப்பட்டு இயங்க முனையுமானல் மீண்டும் பழைய சக்தி தானகவே ஏற்பட்டுவிடும்; உலகமே பாக்கிஸ்தானகிவிடும்; இதைக் கருத்தில் கொண்டுதான் இக்பாலின் கவிதைகள் முழுவதும் உண்மையாகிக் கொண்டிருக்கிறது என்று விவாதித்தார்; இக்பால் அவர்கள் பாட, காயிதே ஆஜம் பாபா அதை உண்மையாக்க, எல்லாமே நடைபெறுகின்றன என்று அவர் கூறினர் போலும்

இவ்வாறு என் சிந்தனை ஒவ்வொரு சம்பவத்தையும் ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தது. அவருடைய நடை, பேச்சு, அறிக்கைகள் ஒவ்வொன்றும் என் கண் முன்னே தோன்றியது. நான் இடையிடையே பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தேன். எனக்கு மன அமைதி இல்லாதிருந்தால் சிகரெட்டுகளை புகைத்த வண்ணமே இருப்பேன். அப்பொழுது சிகரெட் டப்பாவை திறந்தபோது அது காலியாகயிருந்தது. என்னை யறியாமலேயே அத்தனை சிகரெட்டுகளையும் புகைத்திருக்கிறேன் போலும். இன்னும் சிறிது நேரத்தில் நான் திட்டமிட்ட இடத்தை அடைந்து விடுவேன். அதுவரை அமைதியாக காரிலேயே உட்கார்ந்திருக்கலாம். ஆனல் உறுதியுள்ள தலைவனைப் பின்பற்றி வந்த எனக்கு உறுதி இல்லை. மனித சுபாவமே ஒரு விசித்திரம்தான். இல்லாத பொருள்மீதுதான் மனிதனுக்கு ஆசை அதிகம், உலகமே அப்படித்தான். சிகரெட் டப்பாவில் சிகரெட் இருந்தால் குடிக்காமலேயே இருந்துவிடலாம் போலிருக்கிறது. ஆனல் சிகரெட் டப்பாவில் சிகரெட் இல்லை என்ற ஞாபகமே இருந்து கொண்டிருந்தது. அந்த ஞாபகம் இருந்து தொலைந்

தாலும் பரவாயில்லை. அந்த எண்ணம் மனதை அலக்கழித்தது. சிகரெட் எப்படியும் என் கைக்கு வந்தாக வேண்டும் போலிருந்தது. காலியான டப்பாவை தூக்கி வெளியே எறிந்தேன்.

அந்த கார் டிரைவர் மிகப் பொல்லாதவன்தான். என்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் அவன் கவனித்துக் கொண்டே வருகிறுன் என்பது எனக்கு அப்பொழுதுதான் புரிந்தது. நான் சிகரெட் புகைக்காததையும், டப்பாவை தூக்கி எறிவதையும் கவனித்த அவன் சிகரெட் இல்லை போலிருக்கிறது என்று யூகித்தறிந்துக் கொண்டான், காரின் வேகத்தை குறைத்துக்கொண்டு என் பக்கமாகத் திரும்பி 'சிகரெட் சாப்?' என்று கேட்டான். நான் ஆமாம் என்றேன். அவன் சிறிது தூரத்திலிருந்த ஒரு பெரிய கடையின் முன்னல் காரை நிறுத்தினுன். காரை விட்டு இறங்கி ஓடோடி வந்து பின் கதவு பக்கம் மிக மரியாதையாக நின்ருன்; ஒரு பத்து ரூபாய் நோட்டை கொடுத்து 'ஒரு டின்னுகை வாங்கிக்கொள்' என்று கூறினேன். நான் உண்மையில் ஒரு டின் வாங்க சொல்லி இருக்கக் கூடாது. ஏனென்ருல் எனக்கு இருந்த அமைதியின்மையில் எல்லா சிகரெட்டுகளையும் புகைத்துத் தள்ளிவிடுவேன். பின்னர் டின் ஓசையைப் போல இருமி இருமி உயிரைவிட வேண்டுமென்பது எனக்கு தெரியாததல்ல, இருந்தும் கூட நான் உத்திரவு கொடுத்து விட்டேன். அவனும் போய் விட்டான். நான் இங்கும் அங்குமாக பார்த்துக்கொண்டிருந்தேன்.

எனக்கு நேர் எதிரே ஒரு போர்டில் ''காயிதே ஆஜம் ஞாபகார்த்த நிதிக்கு இங்கு பணம் கட்டலாம்'' என்று எழுதப்பட்டிருந்தது. அதைக் கண்டதும் எனக்கு ஒரு முறை பாக்கிஸ்தான் டைம்ஸ் பத்திரிகையில் பிரசுரமாயிருந்த படத்தைப் பார்க்கவேண்டும் போலிருந்தது. எடுத்துப் பிரித்தேன். என் கண்கள் என்னை அறியாமலேயே அவரின் படத்தையும் எதிரே இருந்த போர்டையும் மாறி மாறி பார்த்தன. என் உள்ளத்தில் ஒரு போராட்டம் துவக்கமாயிற்று. நான் இத்தகைய போர்டுகளை பல இடங்களில் பார்த்திருக்கிறேன். ஆனல் அப்பொழுது ஏனே என்னை அறியாமல் ஒரு உணர்ச்சி என்னை உலுக்கிற்று நான் காயிதே ஆஜம் மீது அளவற்ற மதிப்பையும் பற்றையும் கொண்டவன் என்பது என்னுடைய எண்ணம். ஆனல் அது வரையிலே அவரின் ஞாபகார்த்த நிதிக்கு ஒரு தம்பிடி

கூட அளித்ததில்லை. இவை இரண்டும் எவ்வளவு நேர் மாற்றமான எண்ணங்கள்; செயல்கள்? என்னுள் யாரோ புகுந்து என் இதயத்தைப் பிசைவது போலிருந்தது எனக்கு. எவருடைய வார்த்தைக்காக எல்லாவற்றையும் அர்ப் பணிக்க துணிந்திருந்த நான் இது வரையில் அவரின் ஞாபகார்த்த நிதிக்கு நிதி உதவி செய்யவில்லை என்றால் நான் மனிதருள் மிருகம்தானே!

காயிதே ஆஜம் பாபா பாக்கிஸ்தான் எனும் புது நாட்டை உருவாக்கினவர். அவர் பாக்கிஸ்தான் வாசிகளின், இல்லை உலக முஸ்லிம்களின் தந்தை. அவர் இவ்வுலகத்தில் மனித சமுதாயத்திற்கு செய்திருக்கும் மகத்தான சேவைக்கு நாம் எவ்வித கைம்மாறும் செய்ய முடியாது. நாம் வாழ்நாட்கள் முழுவதும் அவரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தனை புரிந்தாலும் குறைவே. ஏனெனில் அவர் செய்துள்ள சேவை அவ்வளவு ஈடுகட்ட முடியாத அளவு அதிகமானது. பின்னர் ஏன் அவர் ஞாபகார்த்த நிதியை திரட்ட வேண்டும்? ஒரு நிதியை திரட்டி ஒரு சர்வகலாசாலை, மருந்து ஆராய்ச்சி நிலையம் போன்றவைகளை கட்டிவிட்டால் போதுமா? இவைகளை கட்டிமுடித்து செவ்வனே நடைபெறச் செய்துவிட்டால் மட்டும் போதுமா? நாம் அவர் செய்த சேவைக்கு கைம்மாறு செய்துவிட்டதாகுமா? இல்லை; நிச்சயமாக இல்லை. ஏனெனில் அவரின் ஞாபகம் ஒவ்வொரு மனிதாபிமானமுள்ளவருடைய இதயத்திலும் இருக்கிறது. அவர் மக்களின் உள்ளங்களிலே நிரந்தரமாக பதிந்துவிட்டார். இன்றைய மக்களுடைய மட்டுமல்ல, வாழையடி வாழியாக எதிர்கால சந்ததிகளின் உள்ளங்களிலும் பதிந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை; அந்த ஞாபகம் உலகம் இருக்கும் அளவும் இருந்தேதான் தீரும். எனவே அவர் செய்த சேவைக்காக இவ்வாறு நிதி திரட்டுவதில்லை.

உலகத்திலே உண்மையாக உழைத்து மாண்டுபோகக் கூடியவர்கள் இறந்த பின்பும் சமுதாயத்திற்கு உழைக்கிறார்கள் என்று மார்க்கப் பெரியார்கள் கூறுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இதுவரையில் அதன் உண்மையான விளக்கத்தை அறியவில்லை. அன்றுதான் நான் அனுபவப்பூர்வமாக அதற்கான விளக்கத்தை உணர்ந்தேன். காயிதே ஆஜம் ஒருவர் அதற்கு சரியான ஆதாரப் புருஷராகத் தோன்றுகிறார். அவர் வாழ்நாள் முழுவதையும் மக்களுக்காகவே செலவழித்தார். அவர்களுக்காகவே உழைத்து—சொல்லப்போனால்—அவர்களுக்காகவே மரித்

றும் இருக்கிறுர். அவரின் பெயரால் ஒரு நிதியை திரட்டு கிருர்கள். அந்த நிதியைக்கொண்டு ஒரு சர்வகலாசாலை கட்டப்போகிறார்கள்; ஒரு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தை நிர்மாணிக்கப் போகிருர்கள். அந்த நிதியைக்கொண்டு நாடு முழுவதிலும் சிலைகளையோ, அவரின் பெயரால் சத்திரத் திரங்களைக் கட்டி சோம்பேறிகளை வளர்க்கவோ செய்ய வில்லை. சீனு சென்றும் கல்வியைக் கற்றுக்கொள் என்பது நாயக வாக்கியம். கல்வியை கற்பது ஆண்களுக்கும் பெண் களுக்கும் கடமையாக்கப்பட்டுள்ளது என்பது ஆண்டவனின் வாக்கு. எனவே கல்வி என்பது மனித சமுதாயத்திற்கு மிக மிக அத்தியாவசியமானது. அதற்கான ஒரு சர்வகலாசாலை கட்டுவது என்பது பொருத்தமானதுதான். ஏனெனில் காயிதே ஆஜம் தன் வாழ்நாளில் கல்விக்கு அளித்த முக்கியத் துவத்தை வேறு எதற்கும் அளித்ததில்லை. அவர் இவ்வுல கத்தைவிட்டு நீங்கிய பின் அவரின் சொத்துக்கு அவர் எழுதி வைத்த 'வில்' ஒன்றே சாட்சியாக இருக்கிறது. அவர் தம் சொத்து எல்லாவற்றையும் இந்தியா – பாக்கிஸ்தானில் உள்ள சர்வகலாசாலைகளுக்கு எழுதி வைத்திருக்கிருரென்ருல் அவர் கல்வியைப்பற்றி எவ்வளவு கவலை கொண்டிருக்கிருர் என்பது தெள்ளென விளங்கும்.

மனிதன் வியாதியால் பிடிக்கப்பட்டு, கஷ்டப்படும் போது அவனுக்கு ஆறுதல்கூறி தைரியமூட்டுவது மிகவும் புண்ணியமான செயல் என்பது இஸ்லாமியக் கோட்பாடு. ஏனெனில் வியாதி மனிதனின் பரம விரோதி. அதைவிட உலகத்தில் வேறு ஒன்றும் ஒருவனுக்குக் கஷ்டத்தை விளைவித்துவிடாது. எனவே மனித சமுதாயத்திற்கு மிக அவசியமான மருத்துவ சாதனங்களை சிருஷ்டிப்பது மிகமிக அவசியமாகும். இந்த நிதி இந்தத் துறையிலும் பயன்படு கிறது. இவையெல்லாம் காயிதே ஆஜம் பாபாவின் பெய ரால் திரப்பட்ட நிதியினுல் கட்டி முடிக்கப் போகிருர்கள் என்ருல், இது காயிதேஆஜம் பாபாவின் சேவையாகவே கொள்ளலாம் அல்லவா? இத்தகைய சம்பவங்களை வைத்துக் கொண்டுதான் உண்மை ஊழியம் புரிகிறவர்கள் மாண்டு மக்கிப்போன பின்பும் மனித சமுதாயத்திற்கு ஊழியம் புரிகிருர்களென்று மார்க்கப் பெரியார்கள் சொல்லுகிருர்கள் போலும்.

இந்த நிதிக்கு நிறைய பணம் கிடைத்துக்கொண்டிருப்ப தாக என் நண்பர்கள் சொன்னதை நான் கேட்டிருக்கிறேன். அதை மட்டும் நான் கேட்டிருந்தால், நான் பெற்ற மகிழ்ச்சி

குன்றியிருக்காது. ஆனால் நான் கேட்ட இன்னொரு சேதி நான் அடைந்த சந்தோஷத்தை அற்ப சந்தோஷமாக்கி விட்டது. இந்த நிதிக்கு ஏழை, நடுத்தர மக்கள் தொடர்ந்து நிதி உதவி செய்கிறார்கள். அவர்கள் அதனை ஒரு கடமையாகக் கருதி மாதாமாதம், வாராவாரம், தினேதினே நிதி உதவி அளித்து வருகிறார்கள். ஆனால் பணக்காரர்கள், நவாப்கள், பெரும் பண்ணைக்காரர்கள் இந்த நிதிக்கு நிறைய பணம் கொடுக்க முன் வருவதில்லை என்று நான் கேள்விப் பட்டேன். இந்த சேதி என் இதயத்தை இரண்டாகப் பிளந்ததுபோல் இருந்தது. என்ன? மனிதர்களிலேயே எவ்வளவு ஏற்றத்தாழ்வு மனப்பான்மைகள்? இந்த செல்வந்தர்கள் காயிதே ஆஜமை மதித்தது இல்லையா? அவர் செய்த சேவையை உண்மை சேவையாக நினைக்கவில்லையா? அப்படி ஒன்றுமில்லை. இவர்கள் எல்லாம் காயிதே ஆஜத்தின் முன்னால் கைகட்டி வாய்புதைத்து நின்று மரியாதை செலுத்தினவர்கள். அவரை நினைத்தாலேயே அவர்களின் கண்களிலே கண்ணீர் பொங்குகிறது அவர்களுக்கு. அப்படி இருந்தும் ஏன் அவர் ஞாபகார்த்த நிதிக்குப் பணம் கொடுப்பதில்லை? அவரை மதிக்காவிட்டாலும்கூட அந்த நிதியை மக்களின் நன்மைக்காகத்தானே பயன்படுத்தப் போகிறார்கள்? இப்படியெல்லாம் என் மனம் சிந்திக்கத் தொடங்கியது. சிந்தித்தது மட்டுமல்ல, நிந்திக்கவும் செய்தது; என் மனதிற்குள்ளே நான் சபிக்கவும் செய்தேன். ஆனால் அதற்குள்ளாக நானே என்னை நினைத்து வெட்கப்பட்டேன். அதை வெட்கம் என்றுகூட சொல்ல முடியாது. என்னை என் மனசாட்சி கூரிய கத்தியைக்கொண்டு அறுத்துக்கொண்டிருந்தது. அந்த சில நிமிஷங்களில் நான் பட்ட வேதனையை நினைத்தாலே பயமாக இருக்கிறது. ஊரைப்பற்றி சொன்னேன். அவரின் சேவையைப்பற்றி அறிந்திருக்கிற நான் என்ன செய்துவிட்டேன். நானே முதலில் நன்றிகெட்டவனாக இருக்கும்போது இன்னொருவரைப்பற்றிக் குறைகூற, நிந்திக்க, எனக்கு எங்கே உரிமை இருக்கிறது? நானே மனிதருள் ஒரு மிருகமாய்விட்டேன். மற்ற மிருகங்களைக் கேவலமாக நான் நினைக்கலாமா? மதிக்கலாமா? என் உடல் எல்லாம் வியர்த்துவிட்டது. என் உடம்பெல்லாம் நடுக்கம் கொடுத்துவிட்டது. ஆமாம்! என் மனசாட்சி எனக்கான தண்டனையைக் கொடுத்துவிட்டது. ஆண்டவனுடைய படைப்பே படைப்புதான்! மனிதனுக்குள் மனசாட்சி என்ற ஒரு புனித சக்தியை வைத்துப் படைத்து விட்டான் பாருங்கள்! இந்த மனசாட்சி மனிதனுக்கு இல்லாவிட்டால் உலகத்தில் தர்மம், நீதி என்பதெல்லாம் தலைதூக்க முடியுமா? நான் என்னதான் தைரியசாலியாக

இருந்தாலும், எவ்வளவுதான் அநீதிக்காரனாக இருந்தாலும் என்னுள்ளிருக்கும் மனசாட்சி என்னை என் தவறை சுட்டிக் காட்டி தண்டனை அளித்துவிடுகிறது. என்னைப் பொறுத்த வரையில் மனிதனுக்கு சிறை தண்டனை, அபராதம் செலுத்தும் தண்டனை போன்றவைகளைவிட இது மிகக் கொடுமையான தண்டனைதான்! இல்லையா? இதனை நான் விளக்கத் தேவையில்லை. ஏனென்றால் இதைப் படிக்கும் ஒவ்வொருவரும் மனிதர்தான், அவர்களுக்கும் மனசாட்சி என்பது ஒன்று இருந்து வருகிறது. அதனுடைய தண்டனையை என்றைக்காவது ஒருநாள் ஒவ்வொருவரும் அனுபவித்தே இருப்பார்கள் ஏனென்றால் மனிதன் தவறுவது இயற்கை. பெரும் பெரும் மஹான்கள் எவலாம் தவறி இருக்கிறார்கள். உலகத்தில் தோன்றிய முதல் மனிதரும் தீர்க்கதரிசியுமான ஆதம் (அலை) அவர்களே தவறிழைத்துவிட்டதாக கூறப்படுகிறது. ஆதலால் எல்லோருமே இந்த மனசாட்சியின் தண்டனையை அனுபவித்திருப்பார்கள் என்று நான் நம்புவதிலே தவறில்லை. ஆனால் அவர்களுக்கும் எனக்கும் ஒரு வித்தியாசம் இருக்கலாம். நான் அனுபவிப்பதை பகிரங்கமாக சொல்லுகிறேன் — மற்றவர்கள் வெளியே சொல்லாமல் வேண்டுமானால் இருக்கலாம்.

மனிதனுக்கு மனசாட்சி என்ற ஒன்றை சிருஷ்டித்துவிட்டு, மனிதன் தவறு செய்யும்போதெல்லாம் அதைவிட்டு தண்டனையளிக்கச் செய்தபின்பும் ஆண்டவன் நரகலோகம் என்பதொன்றை ஏன் படைத்திருக்கிறான்? மனிதன் செய்யும் ஒரு தவறுக்கு எத்தனை தண்டனைகளைத்தான் அவன் அளிப்பது? ஆமாம்! நரகலோகத்திற்கு போகக்கூடியவர்களும் இருக்கிறார்கள். மனிதருள் சிலர் மனசாட்சியையும் மீறக்கூடியவர்களாக இருக்கத்தான் செய்கிறார்கள். அத்தகைய சம்பவத்தையும் நான் கண்டிருக்கிறேன். எனக்கு வருஷம் ஞாபகத்திற்கு வரவில்லை. ஒரு நிதியை திரட்டுவதற்காக முற்பட்ட குழுவினரில் நானும் ஒருவனாக இருந்தேன். அந்தக் குழுவில் பெரும் பெரும் தலைவர்கள் இருந்தார்கள் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாஹிபும் அக்குழுவில் இருந்தார். நாங்களெல்லாம் தென்னிந்தியாவின் பிரதானதொரு ஒரு நகரத்திற்கு நிதி திரட்ட சென்றிருந்தோம். முன்கூட்டியே தெரிவித்திருந்ததால் அந்த நகரில் எங்களை வரவேற்க விமான நிலையத்திற்கு மக்கள் எல்லாம் திரண்டு வந்திருந்தனர். எங்களை பூமாலைக்குள் புதைத்துவிட்டனர் என்று சொன்னால் மிகையாகாது. ஜிந்தாபாத் கோஷங்கள் வானைப்பிளந்தன. அல்லாஹு அக்பரின் நாதம் விண்ணை

முட்டியது. விமானத்திலிருந்து இறங்கி திரண்டு நின்ற மக்கள் மத்தியிலே புகுந்து சிறிதுநேரம் அளவளாவிக் கொண்டிருந்தோம். அங்கு எங்களை வரவேற்க வந்திருந்தவர் களில் சில பெரும் பணக்காரர்களும் இருந்தார்கள். அவர் களில் ஒருவரின் வீட்டில் தங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந் தன. எங்களை மக்களிடமிருந்து பிரித்து அவர்கள் கார் களிலே ஏற்றி சிட்டாய் பறந்துபோய்விட்டார்கள். மக்கள் எங்களை தவருக நினைப்பதில்லை. ஏனென்ருல் நாங்கள் அங்கே நிதி திரட்ட வந்திருக்கிறோம் என்பது அவர்களுக்கு தெரியும். பணக்காரர்களின் உதவியை நாடிஞல்தான் நிறைய பணம் கிடைக்கும் என்பதுகூடவா அவர்களுக்குத் தெரியாது? எனவே அவர்கள் எங்களை தவருக நினைத்தது இல்லை—நினைப்பதும் இல்லை.

நாங்கள் அந்நகரத்தின் மிகப் பெரும் பணக்காரரின் மாளிகையிலே தங்கினேம். அவர் எங்களுக்கு அறிமுக மாகாதவரல்ல. எனவே எங்களுடன் முழு மனதுடன் அவர் ஒத்துழைத்தார். ஸ்தல முக்கியஸ்தர்கள் பொது மக்களிடம் நிதியை திரட்டிக் கொண்டிருந்தோம். இரவு பகல் என்று பார்க்காது அவர் எங்களுடன் ஒத்துழைத்தார். வெறுமனே நாங்கள் அழைத்த இடத்திற்கு மட்டும் அவர் வருவதில்லை. அவராகவே இன்னின்னவர் இத்தகைய தகுதியுடையவர்; இன்னர் இவ்வளவு கொடுத்தாலொழிய வாங்காதீர்கள் என்று நண்பர்களின் தகுதிகளை யெல்லாம் விவரித்துக் கூறுவார். பலரின் அந்தரங்கத்தை யெல்லாம் எங்களிடம் கூறுவார். இது பேருதவியாக இருந்தது. ஏனென்ருல் சில பணக்காரர்கள் உண்மையில் பணக்காரர் களே அல்ல. பணக்காரர்களைப் போல நடித்துக் கொண் டிருப்பார்கள். சிலரிடம் இலட்சம் இலட்சமாக இருக்கும்; ஆனல் எப்பொழுதும் ஏழையை போலவே நடந்துகொள் வார்கள். இப்படி மனிதர்களிலே பல ரகம் உண்டு. சில ரிடம் போனலேயே தானுக முந்திக்கொண்டு தன்னலான பணத்தை கொடுத்து விடுவார்கள் சிலர் வற்புறுத்தினு லன்றி கொடுக்க மாட்டார்கள். சிலர் நிறைய கொடுப்பார் கள்; ஆனல் அழுதுகொண்டே கொடுப்பார்கள். சிலர் கொஞ்சமாக கொடுப்பார்கள்; ஆனல் சிரித்துக்கொண்டே கொடுப்பார்கள். இப்படி பல ரகங்கள் உண்டு. நிதி திரட்டி அனுபவப்பட்டவர்களுக்குத்தான் இந்த பல ரகங்களைக் காண முடியும். அதற்கெல்லாம் ஏற்ற நண்பராகவே அவர் இருந்தார். அந்த நகரத்தில் நிறைய நிதியையும் திரட்ட முடிந்தது. ஒருவாறு நாங்கள் அந்நகரத்திற்கு சென்றதன் நோக்கம் ஈடேறிவிட்டது. எனவே ஊரைவிட்டு கிளம்பும்

பொழுது கடைசியாக ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டுத்தான் போகவேண்டும் என்று பொது மக்கள் கேட்டுக்கொண்டனர். அன்று இரவு பேசிவிட்டு மறுநாள் காலையில் விமானம் மூலம் சென்னைக்குச் செல்ல திட்டமிட்டிருந்தோம்.

அன்று பிரமாண்டமானதொரு பொதுக்கூட்டம். எவரிடம் தங்கியிருந்தோமோ அந்த நண்பரின் தலைமையிலே நடந்தது. நாங்கள் ஒருவர் பின் ஒருவராக பொதுக்கூட்டத்தில் பேசினேம். எப்பொழுதுமே என்னை கடைசியில் பேச சொல்லுவது வழக்கம். நான் நன்றாக பேசுவதால்தான் கடைசியில் பேசச் செய்கிறார்கள் என்று என் நண்பர்கள் என்னை சமாதானப்படுத்துவதுண்டு. ஆனால் அது எவ்வளவு தூரம் உண்மையோ எனக்குத் தெரியாது. வழக்கம்போல இறுதியில் நான் பிரசங்கம் செய்துகொண்டிருந்தபோது ஒரு கேள்வித்தாளை கூட்டத்திலிருந்த ஒருவர் என்னிடம் கொடுத்தார். நான் அதைப் பிரித்துப் பார்த்ததுமே பிரமித்துப் போய்விட்டேன். அக்கேள்வி என்னைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டது.

அந்தக் கேள்வி அரசியலைப் பற்றியதோ வேறு எந்த சிக்கல் நிறைந்த பிரச்சினையைப் பற்றியதோ அல்ல.

"இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்திருக்கும் தனவந்தர் இந்த நிதிக்குப் பணம் கொடுத்தாரா? கொடுத்திருந்தால் எவ்வளவு கொடுத்தார்? தயவுசெய்து சொல்லுங்கள்."

இதுதான் அந்த வெள்ளைத்தாளில் எழுதப்பட்டிருந்தது. அந்தக் கேள்வி விஷயத்தை தெரிந்துகொள்வதற்குக் கேட்கப்பட்டதாக நான் நினைக்கவில்லை. அந்தக் கேள்வியைக்கொண்டே அந்த தனவந்தரின் உண்மை உருவத்தை என்னால் பார்க்கமுடிந்தது. இந்தக் கேள்வியைப் படித்து பதில் சொல்லுவது என்பது, அதிலும் அந்த பிரம்மாண்டமான கூட்டத்தில் — அவரே தலைமை வகித்திருக்கும் கூட்டத்தில்-பதில் சொல்லுவது என்பது சாதாரண விஷயமல்ல. திடீர் என்று என் பேச்சு நின்றதும், கேள்வித்தாள் என் கைக்கு வந்ததும் அந்தக் கூட்டத்தில் ஒரு பெரும் பரபரப்பை உண்டுபண்ணிவிட்டது. அந்த ஒரு நிமிஷம் எனக்கு நரக வேதனையாக இருந்தது. இருந்தாலும் ஒருவாராக என்னை நானே சமாளித்துக்கொண்டேன். அந்த கேள்வித்தாளை கூட்டத்திற்குத் தலைமை

வகித்த் அந்த தனவந்தரிடமே கொடுத்துவிட்டு என் பேச்சைத் தொடங்கிவிட்டேன். இந்த சம்பவம் நடந்ததும் கூட்டத்தின் ஒரு மூலையில் ஏக கரகோஷம் எழுந்தது. நான் கூட்டத்தின் தலைவரைத் திரும்பிப் பார்த்தேன் அவர் முகம் எப்பொழுதும்போலவே இருந்தது. இடையிடையே ஒரு புன்னகை அவர் முகத்தில் தவழ்ந்து விளையாடியது.

கூட்டம் முடிந்த பின்பு எல்லோருமாக அவர் மாளிகைக்குச் சென்றோம். என் மனதில் ஒரு பெரும் அதிருப்தி அப்பிக்கொண்டிருந்தது. ஆதலால் எல்லோரையும் வைத்துக்கொண்டு தங்கள் கடமையைச் செய்துவிடுங்கள் என்று அந்த தனவந்தரிடம் கேட்டேன். அவர் 'இன்ஷா அல்லாஹ்' என்று பதில் சொன்னார். மறுநாள் வந்தது. விமான நிலையத்திலாவது கொடுப்பார் என்று நான் எதிர் பார்த்தேன். அவர் கொடுப்பதாகத் தோன்றவில்லை. ஆதலால் மீண்டும் ஒருமுறை கேட்டேன். அவர் சுருக்கமாக 'நான் ஹபீப் பாங்கியில் செலுத்திவிடுகிறேன், நீங்கள் கவலையில்லாமல் போய்வாருங்கள்' என்றார், இறுதிவரையிலே ஹபீப் பாங்கியில் அவர் பெயரால் யாதொரு வரவும் வரவில்லை.

இந்த சம்பவம் அன்று என் ஞாபகத்திற்கு வந்துவிட்டது. அன்று நான் அவர்மீது எவ்வளவு ஆத்திரப்பட்டேன்! அவரை நான் ஒரு முஸ்லிமாகக்கூட மதிக்கக் கூசினேன், ஆனால் இன்று, நான், என் தந்தை, உலக முஸ்லிம்களின் தந்தை, பாக்கிஸ்தானின் பிதாவின் ஞாபகார்த்த நிதிக்கு எவ்வளவு கொடுத்துவிட்டேன்! ஆம்! ஒரு தம்பிடியைக்கூட நான் கொடுக்கவில்லை. அன்று அவரை முஸ்லிம் இல்லையென்று நான் கருத முற்பட்டேன். இன்று என்னை அப்படிக்கேட்க, கருத ஆளில்லை; ஆனால் நான் முஸ்லிமல்லாதவனாய் இருக்கிறேன்.

அன்றொரு நாள் காயிதேஆஜம் பாபா, 'எனக்கு வெள்ளித் தோட்டாக்களை கொடுங்கள்; நான் எதிரிகளை முறியடிக்கிறேன்' என்று கூறினர். அவர் அப்படிக் கூறுவதற்கு 'நிதி உதவியை கேட்கிறார்' என்ற பொருள் என்று கூடப் பலர் புரிந்துகொள்ளவில்லை. வெள்ளியிலே, தோட்டாக்களை செய்து காயிதே ஆஜம் பாபாவுக்கு அனுப்பி வைத்தார்கள். பெரும் பெரும் தனவந்தர்கள். நவாப்களெல்லாம் பத்தாயிரம், இருபதினாயிரம் என்று 'செக்'குகளை காயிதே ஆஜம் பாபாவுக்கு நேரிலேயே அனுப்பி

வைத்தார்கள். ஆனால் இன்று அந்த தனவந்தர்கள், நவாப் கள் எங்கள் போனார்கள்? மடிந்து மண்மூடி போய்விட்டார்களா? இவ்வாறு அடுக்கடுக்காக பல சம்பவங்கள், கேள்விகள் என் இதயத்தைத் தாக்கிக்கொண்டே இருந்தன. அதற்கு மேலும் நான் காரிலேயே உட்கார முடியவில்லை; நான் மிருகமாக இருக்க விரும்பவில்லை. கைப்பையை திறந்து 'மணிபர்சை' மட்டும் எடுத்துக்கொண்டு விறுவிறு என்று அந்த காரியாலயத்தை நோக்கி நடந்தேன். அந்தக் காரியாலயத்தில் புகுந்தவுடனேயே எதிரிலே மாட்டப்பட்டிருந்த காயிதே ஆஜம் பாபாவின் உருவப் படத்தைத்தான் என்னால் பார்க்கமுடிந்தது. அது சிரித்த முகத்தோடு என்னை வரவேற்றது. நான் புனிதனாகிறேன் என்ற மகிழ்ச்சியில் அது புன்னகை புரிகிறதோ!

அந்தக் காரியாலயம் படாடோபமாக அமைந்திருக்கவில்லை. இரண்டு மேஜைகள், நான்கு நாற்காலிகள், ஒரு நீண்ட பெஞ்சு இவைகள்தான் அங்கு இருந்தன. மேஜைகளின்மீது கணக்குப் புத்தகங்களும், ரசீது புத்தகங்களும் இருந்தன; ஒரு சிகரெட் ஆஷ்பாக்சும் இருந்தது. அதன் மேல் ஒரு அரை சிகரெட் புகையைவிட்டுக்கொண்டு இருந்தது. அங்கே யாருமில்லை. யோசனையிலாழ்ந்தவனாய் பெஞ்சிலே உட்கார்ந்தேன். எனக்கு நேர் எதிரே ஒரு பெரும் புகைப்படம் தொங்கிக்கொண்டு இருந்தது. அடர்ந்த தாடியும், குழிவிழுந்த கண்களும், வெளுத்துப் போன புருவங்களும், ஒரு வெள்ளைத்துணி தொப்பியும் அந்த உருவத்தை அலங்கரித்ததுபோல இருந்தது. நான் முன்பின் பார்த்த உருவமாக அது காணப்படவில்லை. அரசியலிலோ, மதத்துறையிலோகூட அறிமுகமானவராக தோன்றவில்லை. அவர் யாராக இருக்கமுடியும்? அந்த அறையிலே மூன்று படங்கள்தான் மாட்டப்பட்டிருந்தன. ஒன்று காயிதே ஆஜம் பாபா; இரண்டாவது ஷஹீதே மில்லத் லியாகத் அலிகான்; மூன்றாவது இந்த ஒரு பெரியார்! என் சிந்தனை வேலை செய்யத் தொடங்கியது. இரு மாபெரும் தலைவர்களுக்கு சமமாக வீற்றிருக்கும் அளவிற்கு முக்கியத்துவம் பெறக்கூடியவர் எனக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை. ஏதேதோ எண்ணி அவர் யார் என்பதைப் புரிந்துகொள்ள என் சிந்தனை மும்முரமாக வேலை செய்துகொண்டு இருந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் ''அஸ்ஸலாமு அலைக்கும்'' என்ற ஆசிச் சொல் என் சிந்தனையைக் கலைத்தது. என்னையே அறியாமல் 'வஅலைக்குமுஸ்ஸலாம்' என்று என் வாய் பதில்

அளித்தது. நான் பிறகுதான் திரும்பிப்பார்த்தேன். ஒருவர் அந்த காரியாலயத்தவர்தான் — சாவதானமாகவந்து அவர் இடத்தில் வந்து அமர்ந்தார். என்னை தன் எதிரே இருக்கும் நாற்காலியில்வந்து அமரும்படி வேண்டிக்கொண்டார். அவர் முகத்திலே ஆச்சரியரேகை படர்ந்திருந்தது. தன் இருகரங்களின் விரல்களை கோர்ப்பதும் எடுப்பதுமாக, என்ன பேச வேண்டுமென்று திகைத்தவராக காணப்பட்டார். அவருடைய கூர்மையான கண்கள் ''சிகரெட் ஆஷ் பெட்டியில்'' தானே புகைந்துகொண்டிருக்கும் சிகரெட்டைப் பார்த்தன, அவர் அதை எடுத்து மிக வேகமாக புகைத்தார். எனக்கோ அவரை நான் எங்கேயோ ஒரு முக்கிய இடத்தில் பார்த்திருப்பதுபோலிருந்தது. ஆனால் அவருடைய முகத்தில் ஆச்சரியக் குறிகள் தோன்றுவதற்கான காரணம் எனக்குப் புரியவில்லை. அவரின் வாயிலிருந்து உதிர்ந்த இரண்டொரு வார்த்தைகளிலிருந்து அவர் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற மாதிரி கறார் கண்டிப்பாக பேசக் கூடியவர் என்பதை நான் புரிந்துகொண்டேன்.

ஒரு நிமிஷம் மௌனம் நிலவியது, அதற்குள்ளாக அவர் புகைத்த சிகரெட் அவரின் கையை சுட்டுவிட்டது. அப்பொழுதும் அவர் அதை விடவில்லை. மேலும் ஒரு முறை உறிஞ்சிவிட்டுத்தான் தூக்கி எறிந்தார். நானே மீண்டும் பேச்சை ஆரம்பித்தேன்.

'' நான் தங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே! எங்கே என்று எனக்கு ஞாபகம் வரவில்லை.''

'' ஆமாம்! நானும் அதைத்தான் சிந்தித்துக்கொண்டு இருக்கிறேன்.''

நறுக்குத்தெறிந்தாற்போல அவர் பதில் கிடைத்தது.

'' நீங்கள் கராச்சி லீக் கௌன்சிலில்..........''

'' நாம் இருவரும் அக்கம் பக்கத்தில் உட்கார்ந்திருந்தோம்.''

இருவருக்கும் ஒரே சமயத்தில் ஞாபகம் வந்துவிட்டது.

'' நாம் இருவரும் காயிதே ஆஜம் பாபாவைப் பார்க்க வெளியில்.........''

'' ஆமாம், ஆமாம்'' என்றேன் நான். உணர்ச்சி பொங்கியவராய் எழுந்துவந்து என்னைக் கட்டித் தழுவிக்

கொண்டார். அவர் என்னை நெருக்கி கட்டியணைத்தபோது அவர் இதயத்தில் என் மீதிருந்த அன்பின் ஆழத்தை என்னால் கணித்துக்கொள்ள முடிந்தது. அவர் என்னை உபசரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுவிட்டார். "ஒரு கப் டீ, ஒரு சிகரெட், ஒரு க்ரஷ்" என்று ஓயாமல் ஒன்றன் பின் ஒன்றாக வந்த மயமாகவே இருந்தது. அவருக்கு ஏதோ மாண்டவர் மீண்டும் வந்து சந்திப்பதாக தெரிந்தது போலும்.

அவர் அவ்வளவு ஆனந்தம் கொள்ளுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. நாங்கள் இருவரும் அகில இந்திய முஸ்லிம் லீக் கௌன்சில் உறுப்பினர்களாக இருந்தோம். நாட்டுப் பிரிவினைக்குப் பின் 1947-ம் வருஷம் கராச்சியிலே கூடிய அகில இந்திய முஸ்லிம் லீகின் கடைசிக் கூட்டத்தில் இருவரும் நண்பர்களானோம். அன்று நான் பாக்கிஸ்தான் பிரஜையல்ல. என் தாய் நாட்டிற்கு நான் திரும்புவது மயானத்திற்குப் போவது போல என்று நினைத்தார். ஒருவர் குறித்த நேரத்தில் இறந்துவிடுவார் என்று தெரிந்துவிட்டால் அவரை நாம் எவ்வளவு மதிக்கிறோம். அவர் கேட்பது புலியின் பாலாக இருந்தாலும் நாம் அதனைக் கொடுத்து அவர் ஆசையைப் பூர்த்தி செய்யவே துடிக்கிறோம்; முயற்சிக்கிறோம். அவருடைய ஒவ்வொரு ஆசையையும் நிறைவேற்ற வேண்டும் என்ற துடிப்பு நமக்கு ஏற்படுகிறது அல்லவா? அது போலவே அவர் என்னையும் நினைத்துவிட்டார். நான் தாயகம் திரும்புவது இந்த உலகத்தை விட்டுப் பிரிவது போன்றது என்பது அவரது எண்ணம். அவர் என்ன செய்வார்? அவரது எண்ணம் சரியோ, இல்லையோ அதற்கு அவர் அடிமையாய் விட்டார்.

கராச்சி கௌன்சிலிலே நாங்கள் இருவரும் பக்கத்தில் உட்கார்ந்திருந்தோம். அந்த கௌன்சிலில் காயிதே ஆஜம் பாபாவின் ஒரு உயர்ந்த ஒழுக்கத்தை நாங்கள் இருவரும் கண்டோம்; ஆச்சரியத்திலாழ்ந்தோம். அந்த சம்பவம் இன்று நடந்தது போலவே இருக்கிறது. முஸ்லிம் லீக் கௌன்சில் கூட்டத்தில் நாற்காலிகள் ரிசர்வ் செய்வதில்லை. யார் எங்கே வேண்டுமானாலும் உட்காரலாம். முன்னால் போகிறவர்களுக்கு முதல் வரிசையில் தான் இடம் கிடைக்கும். பின்னால் போகிறவர்களுக்கு பின் வரிசையில்தான் இடம் கிடைக்கும். நாங்கள் இருவரும் போயிருந்த முதல் நாள் கௌன்சில் கூட்டத்தில் ஜனாப் குலாம் ஹுசேன் ஹிதாயத்துல்லா அவர்களுக்கு கடைசி வரிசையில்தான் இடம்

கிடைத்தது. அன்று அவர் கௌன்சில் அங்கத்தினர் மட்டுமல்ல; சிந்து மாகாணத்தின் கவர்னராக இருந்தவர். இது போலவே பல பிரபல தலைவர்களெல்லாம் பின் வரிசையில் உட்கார நேர்ந்தது. முஸ்லிம் லீக் கௌன்சிலுக்குள் ஏற்றத் தாழ்வென்பது கிடையாது. மேடை மீது தலைவர் காயிதே ஆஜம் பாபா உட்கார்ந்திருப்பார். அவருக்கு இடது புறத்திலே முஸ்லிம் லீக் காரியதரிசி ஷஹீதே மில்லத் லியாகத் அலிகான் உட்கார்ந்திருப்பார். தலைவருக்கு வலது புறத்திலே காரியக் கமிட்டி அங்கத்தினர்களுக்காக இடம் ஒதுக்கப்பட்டிருக்கும்; இடது புறத்திலே பெண் அங்கத்தினர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். மற்ற எல்லோருக்கும் நேர் எதிரிலே இருக்கும் நாற்காலிகளிலே தான் உட்கார வேண்டும். அவர் கவர்னராக இருந்தாலும் சரி; மகாண, மத்திய மந்திரிகளாக இருந்தாலும் சரியே! இது முஸ்லிம் லீக் கௌன்சிலின் விசேஷ அம்சமாகும்.

நான் முன்பே கூறியது போல கடைசி அகில இந்திய முஸ்லிம் லீக் கௌன்சில் கூட்டம் அது. அதில்தான் இந்திய யூனியன் முஸ்லிம் லீக், பாக்கிஸ்தான் முஸ்லிம் லீக் என்று அகில இந்திய முஸ்லிம் லீக் பிரிக்கப்பட்டது. அந்த கௌன்சில் கூட்டம் சரித்திரப் பிரசித்திப் பெற்றது என்று சொல்லத் தேவையில்லை. அன்று தான் நாங்கள் தலைவர்களின் கடைசி தரிசனத்தையும் கடைசி புத்திமதிகளையும் பெறப் போகிறோம்: அந்தக் கூட்டத்தில்தான் ஆயிரம் வருஷங்களாக நிலைத்திருந்த ஒரு பிணைப்புக் கயிறு அறுக்கப்படுகிறது. ஆம்! அந்தக் கூட்டத்தில்தான் காயிதே ஆஜம் பாபாவின் மிக உயர்ந்த ஒழுக்கப் பண்பாட்டை எல்லோரும் உணர முடிந்தது.

அந்த முஸ்லிம்லீக் கவுன்சில் கூட்டம் சரியாக 10 மணிக்கு ஆரம்பமாக விருந்தது. நான் முதல் வரிசையில் உட்கார்ந்து நம் அருமைத் தலைவர் காயிதேஆஜம் பாபாவைக் கண்குளிரக் கண்டு என் ஆசையை பூர்த்திசெய்து கொள்ள எண்ணினேன். ஆதலால் நான் 8—30 மணிக்கெல்லாம் நான் அந்த இடத்திற்குப் போய்விட்டேன். அங்கு நான் போவதற்கு முன்பாக நான் முதலாவது கவுன்சில் அங்கத்தினராக இருப்பேன் என்று எண்ணினேன். ஆனல் எனக்கு முன்பாக பல நண்பர்கள் அங்கு கூடியிருந்தனர். நான் ஒருவன்தானு அத்தகைய ஆசைக்கு இலக்காகக் கூடியவன்? நான் எப்படியோ முன் வரிசையில் ஒரு இடத்தை எனக்காகக் கண்டுபிடித்து உட்கார்ந்து

விட்டேன். என் பக்கத்தில்தான் இந்த நண்பர் உட்கார்ந் திருந்தார். அங்கு கூடிய நாங்கள் எதிர்கால இந்திய முஸ்லிம்களின் நிலைமையைப்பற்றி விவாதித்துக்கொண்டு இருந்தோம்

மணி 9–30 ஆய்விட்டது எனது நண்பரிடம் ஒரு சிறு யோசனையையும், உதவியையும் கேட்டேன். காயிதே ஆஜம் வருகிறபோது நான் வெளியில் சென்று பார்க்கவேண்டும் என்ற ஆசை இருப்பதால் என் இடத்தில் வேறுயாரும் உட் கார்ந்து கொள்ளாமல் பார்த்துக்கொள்ளமுடியுமா என்று கேட்டேன். அன்று நான் என் மிக முக்கிய அபிப் பிராயத்தைச் சொல்லவேண்டும் என்றும் எண்ணியிருந்த தால் முதல் வரிசையில் நான் கண்டுபிடித்த இடத்தைவிட நான் விரும்பவில்லை. நண்பர் ஒரு யோசனையைக் கூறினர். நாங்கள் உட்கார்ந்திருந்த நாற்காலிகளில் ஏதாவது ஒரு பொருளை வைத்துவிட்டால் வேறு யாரும் உட்காரமாட்டார் கள் என்று கூறினர். நல்லயோசனைதான் அது என் தொப்பியை எடுத்து நாற்காலியில் வைத்துவிட்டுக் கிளம் பினேன். என் நண்பரும் என்னைப் பின் தொடர்ந்தார்.

கவுன்சில் கூடும் கூட்டம் மிக பிரமாண்டமான கட்டிடம். சென்னையிலுள்ள ராஜாஜி ஹாலைப் போன்ற உயரமான கட்டிடம். நிறைய படிகளைக் கடந்துதான் கட்டிடத்திற்குள் செல்லமுடியும். கட்டிடத்திற்கு முன் பாக சுமார் 10 ஏக்கர் புல்தரை இருக்கும். காம்பவுண்டு வாசற்படிக்கும் கட்டிடத்திற்கும் சுமார் 300 அடிகள் தூரமிருக்கும். காம்பவுண்டு சுவரையொட்டி ஒரு பெரும் சாலை போகிறது. சாலையின் இரு புறங்களிலும் பிரம் மாண்டமான கட்டிடங்கள் அமைந்திருக்கின்றன நாங்கள் ஹாலுக்கு வெளியே வந்தபோது, அது மிக உயரமான இட மாதலால் சுமார் அரை மைலுக்கு மேல் அந்தவீதி நன்றாகத் தெரிந்தது. ஜனக்கூட்டம் என்றால் வர்ணிக்க இயலாது மாடிகளின் பால்கனி, எலக்டிரிக் கம்பங்களிலெல்லாம் மக்கள் ஏறியிருந்தார்கள். ஆம்! அன்று அவர்கள் காயிதே ஆஜம் பாபா, அகில இந்திய முஸ்லிம்லீக் தலைவரைமட்டும் பார்க்கப் போவதில்லை. ஒரு பெரும் சாம்ராஜ்யத்தின் கவர்னர் ஜெனரலைப் பார்க்கப்போகிறார்கள்! அல்லவா? தாம் உருவாக்கிய ஒரு நாட்டின் அதிபதியாக அங்கு வரும்போது மக்கள்கூடி அவரை தரிசிக்காமல் என்ன செய்வார்கள்?

மக்களுடைய ஆரவாரத்திற்கு ஒரு வரம்பில்லை. காயிதே ஆஜம் ஜிந்தாபாத்! அல்லாஹு அக்பர் என்ற கோஷங்கள் எங்களுடைய காதுகளை மட்டும் துளைக்க வில்லை: வானத்தையே பிளந்துகொண்டு இருந்தன. காம்பவுண்டின் வாசற்படியிலே நேஷனல் கார்ட்ஸ் படையினர் வெகு உஷாராக நின்று கூட்டம் உள்ளே வராதபடி தடுத்து நிறுத்திக்கொண்டிருந்தனர் அங்கு நின்றிருப்பது போலவே ஹாலுக்கு உள்ளே நுழையும் வாசற்படியின் இரு புறங்களிலும் இரு நேஷனல் கார்டுகள் இரு கம்புகளை குறுக்கே வைத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தனர், அவர்களிடம் டிக்கட்டை காட்டாதவரையிலே எந்த விதத்திலும் உள்ளே நுழைய முடியாது.

கண்ணுக்கு எட்டிய தூரத்தில் மக்களின் ஆரவாரம் அதிகரித்தது. அது காயிதே ஆஜம் வந்துகொண்டிருக்கிறார் என்று எச்சரிப்பதுபோலிருந்தது. எனவே அவசர அவசரமாக நாங்கள் படிகளைக் கடந்து புல்தரைக்கு வந்து விட்டோம். அதற்குள்ளாக காயிதே ஆஜம் பாபாவின் கார் நெருங்கிவிட்டது. காயிதே ஆஜம் பாபாவும் அவரின் சகோதரி பாத்திமா ஜின்னா அவர்களும் காரில் உட்கார்ந்து கொண்டிருந்தனர் அவரின் காருக்கு முன்னால் போலீஸ் இலாக்காவின் உயர்தர அதிகாரிகளுடைய ஒரு ஜீப்கார் வந்தது. பாபாவின் காரை சுற்றி நான்கு புறங்களிலும் கவர்னர் ஜெனரலின் மெய்க்காப்பாளர்கள் மோட்டார் சைக்கிள்களில் வந்தனர். அவரின் காரைத் தொடர்ந்து இன்னொரு ஜீப்கார் வந்துகொண்டிருந்தது மாடிகளிலே இருந்த மக்கள் மலர்களைத் தூவிக்கொண்டிருந்தனர். அந்த காட்சியை என்னால் மறக்கவே இயலாது. பாக்கிஸ்தான் பிதா கவர்னர் ஜெனரல் என்ற முறையில் அந்த மரியாதைசடங்குகளோடு வந்தார். அவர் உடுத்தியிருந்த தூயவெள்ளை ஆடை, மொஹலாய மன்னர்கள் உடுத்திய பாவனையில் அமைந்திருந்தது. அவர் 208 வருஷங்களுக்குப் பின்னால் ஒரு மொகலாய அரசராக முதல் முதலாக பவனி வந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது என்று சுருக்கமாக சொல்லிவிடலாம்.

எல்லா கார்களும் காம்பவுண்டை நெருங்கவே. அப்படியே ஒதுங்கி நின்றுவிட்டன. அவருடைய மெய்க்காப்பாளர்கள்கூட மோட்டார் சைகிள்களை நிறுத்திக்கொண்டனர். காயிதே ஆஜம் பாபாவின் கார்மட்டும் உள்ளே நுழைந்தது. ஆம்! பாகிஸ்தானின் கவர்னர் ஜெனரல்,

காம்பவுண்டிற்குள் நுழையும்போது முஸ்லிம் லீகின் தலைவராக மட்டும் மாறிவிட்டார். இந்த புதுமையைக் கண்டு, ஒழுங்கு முறையைக் கண்டு மக்கள் ஆச்சரியத்தில் மூழ்கி விட்டனர். அவருடைய கார் கட்டிடத்தின் முன் பாகம் வரையில் வரலாம். தலைவரின் கார் அப்படி வரவில்லை. அங்கே வந்த மற்ற கார்கள் எது வரையில் வர அனுமதிக்கப்பட்டதோ அது வரையில் தான் அவருடைய காரும் வந்தது, கார் டிரைவர் காரை நிறுத்திவிட்டு அவசர அவசரமாக இறங்கி வந்து பின் கதவைத் திறந்தான். பாபா காரை விட்டுக் கீழே இறங்கினார். அவர் வாயில் பெரும் சுருட்டு புகைந்து கொண்டிருந்தது. அவரைத் தொடர்ந்து பாத்திமா ஜின்னாவும் இறங்கினார்கள். இரு ஒல்லிய, உருவங்களும் நடக்கலாயின. நாங்கள் இருக்குமிடத்திற்கு வந்து விட்டனர். நான் 'அஸ்ஸலாமு அலைக்கும்'' என்றேன். எங்கேயோ கவனித்துக் கொண்டுவந்த பாபா என்னைப் பார்த்தார். அவர் வாயில் சுருட்டிருந்ததால் என் சலாமுக்கு பதில் கூறியதை என்னால் கேட்க முடியவில்லை. அவர் சட்டென்று நின்றார் நான் அவரை நெருங்கினேன். அவருடைய கூர்மையான கண்கள் என்னைக் கூர்ந்து கவனித்தன. அவர் என்னைப் புரிந்து கொள்ளாதிருந்தால் ஆச்சரிபப்பட வேண்டியதில்லை, ஏன் என்றால் மூன்று வருஷங்களுக்கு மேலாகிவிட்டது என்னைப் பார்த்து. ஆனால் அவர் என்னைப் புரிந்துகொண்டார். தனது வலது கரத்தை எனது இடது தோற்பட்டையில் வைத்துக்கொண்டு ' வெகு நாள் ஆயிற்று தங்களைப் பார்த்து மற்ற நண்பர்களும் வந்திருக்கிறார்கள் அல்லவா ''? என்று கேட்டார் ஆங்கிலத்தில் '' ஆமாம்'' என்றேன் நான். அதற்குமேல் அவர் ஒன்றும் சொல்லவில்லை '' தட்ஸ் ஆல் ரைட் '' என்று சொல்லிக்கொண்டே நடக்கலானார்.

• அவரைப் பின் தொடர்ந்து நான் நடந்தேன் எனக்குப் பின்னால் பல நண்பர்கள் வந்து கொண்டிருந்தனர். உள்ளே நுழையும் வாசற்படியை நெருங்கி விட்டார் பாபா. நேஷனல் கார்டு வீரர்கள் இராணுவ சிப்பாய்கள் போல நிமிர்ந்து கம்பீரமாக நின்றனர். பாபா நெருங்கியதும் இராணுவ ரீதியிலே சலாம் செய்து மரியாதை செலுத்தினர். ஆனால் குறுக்கே வைத்துக்கொண்டிருந்த குச்சிகளை அகற்றவில்லை. என் மனம் திக் திக்கென்றது. என்ன அநியாயம்? எங்களிடமெல்லாம் அனுமதி டிக்கட் கேட்பது சரிதான். எங்களை கௌன்ஸில் மெம்பர்தானா என்று அடையாளம் கண்டுபிடிப்பது கஷ்டம். ஆனால் காயிதே ஆஜம் பாபாவுக்கும் அது தேவையா? அவரை தெரியாதவர்களும்

உண்டா பாக்கிஸ்தானில். அவரை ஒவ்வொரு பிரஜையும் இதயத்திலே பதிய வைத்திருக்கும்போது முஸ்லிம் லீக் நேஷனல் கார்டுகளுக்கு தெரியாமலா இருக்கும்? அவர் முஸ்லிம் லீக் தலைவர் மட்டுமல்ல; பாக்கிஸ்தானின் பிதா! அந்த நாட்டின் கவர்னர் ஜெனரல்! அந்த நாட்டின் அதிபதி. அவர் நினைத்தால் சட்ட பூர்வமாக அந்த கட்டடத்தையே இடித்து தள்ளிவிட முடியும்! அவர் உத்திரவிட்டால் நடக்காதது எதுவுமில்லை அங்கே. அப்பேர்பட்ட ஒரு தலைவருக்கும் டிக்கட்டை காட்டினால்தான் உள்ளே அனுமதிப்போம் என்ற முறையில் வழி விடாமல் நிற்கிறார்களே!

நான் பரபரப்படைந்தவனாய் பாபாவை நோக்கினேன். அவர் உத்திரவிட்டிருந்தால் இரு நேஷனல் கார்டுகளையும் தூக்கி கட்டடத்தின் படிகளிலிருந்து கீழே உருட்டியும் விட்டிருப்பேன். அவ்வளவு வெறி ஏறியிருந்தது எனக்கு. ஆனால் பாபாவின் முகத்திலே புன்னகை தவழ்ந்தது. சாவதானமாக அவர் பின்னால் நின்றுகொண்டிருந்த தன் அருமை தங்கையை பார்த்தார். அவர் தன், கை தோல் பையிலிருந்து இரு அனுமதி சீட்டுகளை எடுத்துக் காட்டினார். அவர்களுக்காக வழி திறக்கப்பட்டது. அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். என்னை நானே நொந்துக்கொண்டேன். உண்மையில் நான் நேஷனல் கார்டுகளின் கட்டுப்பாட்டைக் கண்டு மகிழ்ந்தேன். காயிதே ஆஜமுக்கு மிகவும் பிடித்தமானவைகளுள் ஒன்று கட்டுப்பாடு! அந்த கட்டுப்பாட்டைக் கண்ட காயிதே ஆஜம் புன்முறுவல் பூத்தது சரிதான் என்று தோன்றியது எனக்கு. ஆனால் இங்கு இவர்கள் காட்டிய கட்டுப்பாட்டை விட காயிதே ஆஜம் பாபாவுடைய கட்டுப்பாட்டை நினைத்து நான் ஆனந்தக் கண்ணீர் வடித்தேன். அவர் முஸ்லிம் லீகின் தலைவராக இருந்தும், பாக்கிஸ்தானின் கவர்னர் ஜெனரலாக இருந்தும் தங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி சீட்டுகளை பாதுகாத்து முன் ஜாக்கிரதையாக கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால்..........!

இந்த சம்பவத்தை நாங்கள் இருவரும் பார்த்தோம். அந்த ஞாபகம் எங்கள் இருவருக்கும் வந்துவிட்டது. எங்கள் தோழமையை புதுப்பித்துக் கொண்டோம். காயிதே ஆஜம் ஞாபகார்த்த நிதி வசூலாகும் விபரத்தை அவர் எனக்கு விளக்கிக் கூறினார். அந்தக் காரியாலயம் திறக்கப்பட்டு 7 மாதங்களே ஆயிருக்கிறதென்றும், ஏழை மக்களால் அளிக்கப்பட்ட சுமார் 45000 ரூபாய்கள் அது வரையிலே வசூலாயிருக்கிறதென்றும் அவர் கூறினார்.

நான் காயிதே ஆஜம் பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த பெரியாரின் படத்தைக் காட்டி 'இவர் யார்' என்று வினவினேன். என் நண்பரின் கண்களிலே கண்ணீர் பொங்கி விட்டது. அவர் தம் துக்கத்தை அடக்க முயலுகிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது. அவர் மிகக் கம்பிய குரலில்.

'அவர் பெயர் ஷுஜாத் அலி. பாபாவின் ட்யூட்டர், என் பெரிய தகப்பனார்' என்றார். நான் பிரமித்துப் போனேன். அவர் சிறிது மௌனத்திற்குப் பின் மீண்டும் பேசலானார். அவர் சொன்ன ருசிகரமான சம்பவத்தை நான் அமைதியோடு கேட்டுக் கொண்டிருந்தேன்.

பல நாட்கள் பிரிந்து சந்திப்பவர்கள் தம் சொந்த சுக க்ஷேம லாபங்களை விசாரித்தறிந்து கொள்வது இயற்கை வழக்கம். என் நண்பர் அதையெல்லாம் முதலில் விசாரிக்க வில்லை. காயிதே ஆஜம் பாபாவைப் பற்றிய பல குறிப்புகளை மடை திறந்தாற்போல சொல்லிக் கொண்டிருந்தார். அவர் சொல்லும்போது சில சமயம் ஆனந்தப்படுவார். சில சமயம் கண் கலங்குவார். ஆனால் எனக்கு இரண்டிலும் ஒரே உணர்ச்சிதான் தென்பட்டது. என் இதயத்தை எதுவோ பிசைவது போலிருந்தது. நான் கல்லாய் சமைந்திருந்தேன்.

அவருடைய கவனத்தை ஏதாவது ஒன்றில் திருப்பி விட வேண்டுமென்று ஏனோ நான் நினைத்தேன்! எனவே நான் மேலே தொங்கிக்கொண்டிருந்த பெரியாரின் படத்தை சுட்டிக் காட்டி 'இவர் யார்?' என்று கேட்டேன். அவர் கண்களில் திடீரென்று கண்ணீர் பொங்கிவிட்டதுதான் அவர் சிறிது நேரம் மௌனம் சாதித்தார். அதன் பின்னர் "அவர் தான் என்னுடைய பெரிய தகப்பனார். அவருடைய பெயர் ஷுஜா அத் அலி" என்று கூறினார். நான் எதிர் பாராதது போல அவருக்கும் காயிதே ஆஜம் பாபாவுக்கும் எவ்வித தொடர்பு இருந்தது என்பதை அவர் விளக்கிக் காட்டினார். அவர் உணர்ச்சி ததும்ப கூறலானார்.

**"இவர் காயிதே ஆஜம் பாபா இறப்பதற்கு 10 மாதங்களுக்கு முன் காலமானார். அவர் காலமாகும்போது அவருக்கு வயது 96. அவர் பாபாவுக்கு இளம் வயதிலே டியூட்டராக இருந்தவர். பாபா ஆரம்பப் பள்ளிக்கூடத்திலே படிக்கவே இல்லை. வீட்டிலேயே ட்யூஷன் சொல்லிக்கொடுக்கப் பட்டு மேல் வகுப்பில் சேர்க்கப்பட்டார்; பாபாவுக்கு இளம்**

வயதிலேயே தினம் மூன்று ட்யூட்டர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பார்களாம். அவர்களில் இவரும் ஒருவர். மொத்தத்தில் 17 மாதங்கள்தானிவர் ட்யூட்டர் வேலை பார்த்தாராம். அதற்குப் பிறகு யாருக்கும் அவர் ட்யூஷன் சொல்லிக் கொடுக்கவில்லையாம்.

பாபாவைப்பற்றி அதிகம் அவருக்கு சொல்லத் தெரியவில்லை. குறித்த நேரத்திலிவர் பாபா வீட்டிற்குப் போகாவிட்டால் மிகச் சிறுவயதுடையவராக இருந்த பாபா ''ஏன் மாஸ்டர் இன்றைக்கு இவ்வளவு தாமதம்?'' என்று கேட்பாராம். எனவே அவர் வீட்டுக்கு தாமதமாக செல்லுவதில்லை! ஒரு சிறு குழந்தை தன் வாத்தியாயரைப் பார்த்து இப்படி கேள்விகள் கேட்பது அவருக்கு வெட்கமாக இருந்தது போலும்.

சிறு பிள்ளையாக இருந்த பாபாவை வீட்டிலே எல்லோருமே அலி என்றுதான் அழைப்பார்கள். சில சமயங்களில் படித்துக்கொண்டு இருக்கும்போது உள்ளே இருந்து அலியைக் கூப்பிட வேலைக்காரி வருவாளாம். அப்பொழுதெல்லாம் பாபா '' நான் படித்துவிட்டு வருகிறேன் என்று சொல்'' என்று சொல்லியனுப்பிவிடுவாரே தவிர படிப்பை விட்டு விட்டுப் போனதை நான் பார்த்ததேயில்லை என்று அவர் கூறியிருக்கிறார். ''இவருக்கு மாத சம்பளம் ஐம்பது ரூபாய். ஆனால் தினம் ஒரு மணிக்குமேல் வேலை கிடையாது. அநேக நாட்களில் அரை மணி நேரம்கூட ஆகாது. முன்னைய நாள் பாடத்தை ஒப்புவிப்பதில் ஒரு முறையும் தவறியது இல்லை. பெரிய வீட்டுப் பிள்ளைகளில் இவ்வளவு கருத்தோடு படித்த பிள்ளையை நான் பார்த்ததில்லையென்று இப்பெரியார் அடிக்கடி சொல்லுவார். ''என்னிடம் படித்த மாணவர் எவ்வளவு பெரிய அறிவாளியாக மாறிவிட்டான் என்று அவர் அடிக்கடி சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வார்.

பாபா கவர்னர் ஜெனரல் பதவி ஏற்றபோதெல்லாம் இவர் நடமாடக்கூட சக்தி அற்றவராக இருந்தார். ஆனால் அடிக்கடி இதனைக் குறிப்பிடுவது எங்களுக்கு பெரும் கஷ்டமாக இருக்கும். அவர் மட்டும் அதை சொல்லாமல் இருக்க மாட்டார். ஒரு நாள் என் தம்பி குறும்பாக பாபாவுக்கு ஒரு கடிதம் எழுதி அவரை கையெழுத்திடக் கூறினர். அக் கடிதத்தில் தான் டியூட்டராக இருந்ததை குறிப்பிட்டு ஆசி கூறுவதாக எழுதப்பட்டிருந்தது. இந்த பெரியார் பூத்துப்

போய்விட்டார். தன் நடுங்கும் கரத்தால் ஒரு கீரல் கையெழுத்தும் போட்டுவிட்டார். குறும்புக்காக எழுதிய கடிதத்தைக் குறும்பாகவே பாபாவுக்கு போஸ்டும் செய்து விட்டான் என் தம்பி! அதன் விளைவு விபரீதமாகப்போய் விட்டது.

கடிதம் போஸ்ட் செய்யப்பட்ட மூன்றாவது நாளே ஒரு போலீஸ் உயர்தர அதிகாரி சில கீழ் உத்தியோகஸ்தர்களுடன் படை எடுத்துவிட்டார். எங்கள் குல கோத்திரத்தை எல்லாம் விசாரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். உயர்தர அதிகாரி எங்கள் வீட்டில் விசாரித்துக்கொண்டு இருந்தபோது, அவருடன் வந்த இதர உத்தியோகஸ்தர்கள் எங்கள் வீதியில் பலரைக் கண்டு விசாரித்துக்கொண்டு இருந்தார்கள். இந்த விபரங்களை எல்லாம் ஏன் விசாரிக்கிறார்கள்? நாங்கள் என்ன குற்றத்தைச் செய்துவிட்டோம்? வந்த அதிகாரிகள் எவருமே சொல்லவில்லை. சாதாரணமாக போலீஸ்காரர்கள் வந்து விசாரிக்கிறார்களென்றால் ஊரில் பலவாறாக பேசிக்கொள்வது வழக்கமல்லவா? பலர் திருட்டுப் பொருள்கள் எங்கள் வீட்டிலிருப்பதாகவும், அதனால்தான் போலீஸ் அதிகாரிகள் வந்து சோதனை செய்கிறார்கள் என்ற சேதியை பரப்பி விட்டார்கள். அதிகாரிகள் வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் எங்கள் வீதியில் பெரும் கூட்டம் கூடிவிட்டது. எங்கள் வீட்டின் ஒவ்வொரு ஜீவனும் விசாரிக்கப்பட்டது. நடமாட முடியாத இந்தப் பெரியாரையும் விடவில்லை அவர்கள்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அவமானம் என்னை பிய்த்துக்கொண்டிருந்தது. கௌரவமாக வாழ்ந்துகொண்டிருந்த இடத்தில் இப்பேர்ப்பட்ட ஒரு அவமானம் ஏற்படுவதென்றால் என் போன்றவர்களுக்கு எப்படி இருக்கும்? நான் இந்த விசாரணைக்கான காரணத்தை வந்த அதிகாரியிடம் கேட்டேன். அவர் பதில் பேசவில்லை. ஆனால் நான் கேட்ட கேள்வியை அவர் ஞாபகத்தில் வைத்து இருந்தார் போலும். இரண்டு மணி நேர விசாரணைக்குப்பின் போகும் போது 'எனக்கு ஒன்றும் தெரியாது. கவர்ன்மெண்ட் ஹவுஸிலிருந்து விசாரணை செய்து தகவல்களை அனுப்ப உத்திரவு வந்தது. அவ்வளவுதான்' என்று என்னைத் தனியாக அழைத்து சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவர் சுமார் 20 பக்கங்கள் எழுதி நிரப்பிக்கொண்டார்.

அவர்கள் விசாரணை செய்துவிட்டுப் போனார்கள்; நான் மாடியில்போய் படுத்தேன், அவ்வளவுதான். நான் மூன்று நாட்கள் வெளியே தலைகாட்டக்கூட இல்லை. எனக்குப்

பேரவமானமாக இருந்தது. அதற்குள்ளாக ஊரில் பலவாராகப் பேசிக்கொண்டார்கள். 'அவன் லைசென்சில்லாமல் அபின் வைத்திருந்தான். அதை சோதனையிட்டுக் கைப்பற்றினார்கள். அவன் வீட்டில் கள்ள நாணயங்களை அச்சடித்துக் கொண்டிருந்தார்கள். அதற்காக சோதனை நடந்தது' இவ்வாறெல்லாம் மக்கள் பேசலாயினர். ஆரம்பத்தில் திருட்டு சாமான் இருந்தது என்ற கற்பனை நாளடைவில் இவ்வாறு பல கற்பனைகளாக மாறிவிட்டன. என் மனம் பட்டபாடு..........சொல்ல முடியாது.

இந்த விசாரணை நடந்த இரண்டு நாட்களுக்கெல்லாம் ஒரு சர்க்கார் உடை தரித்த ஒரு ஆஜானுபாகுவான உருவம் கதவைத் தட்டியது. கதவைத் திறந்துப் பார்த்து பயந்து மாடிக்கு ஓடி வந்தான் என் சிறு பையன். 'அப்பா ஜான் யாரோ போலீஸ்காரர் வந்து கூப்பிடுகிறார்' என்றான். என்னை சர்ப்பம் கொட்டியதுபோலிருந்தது. 'அல்லாஹ்! என்னை ஏன் இப்படி சோதிக்கிறார்?' என்று கூறியவனாய் பரபரப்படைந்தவனாய் ஓடோடி வந்தேன்.

வெளியே நின்றுகொண்டிருந்தவரைப் பார்த்ததும் நான் சிறிது நேரம் ஸ்தம்பித்துவிட்டேன். தூய வெள்ளை ஆடைகள் அணிந்த ஒருவர் இராணுவ முறையில் எனக்கு சலாம் செய்தார். நான் யார் என்று விசாரிக்கும் வரையில் அவர் காத்து இருக்கவில்லை. 'ஹிஸ் எக்ஸலன்ஸி வந்திருக்கிறார்' என்று அவர் கூறினார். நான் ஒன்றும் புரியாதவனாக வாசற்படியைவிட்டு வெளியே காலடி எடுத்து வைத்தேன். காயிதே ஆஜம் பாபா என் வீட்டை நோக்கி வருவதைக் கண்டேன். என் கைகால் ஒன்றும் ஓடவில்லை. அவர் புன்முறுவல் பூத்தவராய் என் வீட்டை நெருங்கிக்கொண்டிருந்தார். என் உடம்பில் இரத்தம் உறைந்துகொண்டிருந்தது. என் சிறு வீட்டிற்கு, எவ்வித முன்னறிவிப்பின்றி, எதிர்பாராத நிலையில், காயிதே ஆஜம் பாபா, பாக்கிஸ்தானின் பிதா கவர்னர் ஜெனரல் வருவதென்றால் நீங்களே சொல்லுங்கள்! புலியை கண்ட மான்போலாய்விட்டேன் நான்.

பாபா வந்ததும் 'என் மாஸ்டர்ஜீ எங்கே!' என்றார். நான் இயந்திரம்போலானேன். நான் உள்ளே போனேன். ஒரு சிறிதும் தயக்கமின்றி பாபா என்னை பின்தொடர்ந்தார். என் பெரிய தகப்பனார் ஒரு கட்டிலில் படுத்திருந்தார். அவருக்காக ஒரு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. நல்ல வேளையாக அந்த அறை அன்று சுத்தமாக இருந்தது. பாபா உள்ளே

நுழைந்ததும் 'மாஸ்டர் ஜீ !' என்று அழைத்தார். என் பெரிய தகப்பனர் பாபாவைக் கூர்ந்து பார்த்தார். அவருடைய கண் பார்வை சற்று மங்கியிருந்தது. அவருக்கு சரிவரப் புரியவில்லை. எப்படிப் புரியும்? ஒரு சிறு பையனக தன்னிடம் கல்வி பயின்ற அலி, ஒரு பெரும் சாம்ராஜ்யத்தை சிருஷ்டித்து அதன் அதிபதியாய். முதுமை யடைந்த இளைஞராய், காயிதே ஆஜமாய் எதிர்பாராத அவரின் முன் வந்து நின்ருல் எப்படிப் புரியும்? நான் 'பெரியப்பா! காயிதே ஆஜம் பாபா என்றேன். 'காயிதே ஆ...ஜம்' என்று சொல்லிக்கொண்டே எழுந்து உட்கார முயன்ருர். ஆனல் பாபா அவரைத் தடுத்துவிட்டார். காயிதே ஆஜம் பாபா என்று அவர் அழைத்தது பிடிக்கவில்லை போலும், 'இல்லை, இல்லை. என்னை அலி என்றே அழையுங்கள் மாஸ்டர் ஜீ !' என்ருர் பாபா. இதைக் கேட்ட என் பெரிய தகப்பனர் அழுதுவிட்டார். அவர் அழுததில் துக்கம் தொக்கி இருந்ததா அல்லது மகிழ்ச்சி தொக்கியிருந்ததா என்று என்னல் புரிந்துகொள்ள இயலவில்லை.

என் பெரிய தகப்பனர் அவரைப்பேசவே விடவில்லை. நீங்கள் நீண்ட நாள் வாழவேண்டும்; சமூகத்திற்கு உழைக்க வேண்டும்; நான் ஒரு ஏழை! என் வீட்டைத் தேடி வந்தீர்களல்லவா? நான் எதிர் பார்க்கவேயில்லை. உங்கள் மீது ஆண்டவன் கருணை சொரியட்டும்; உங்கள் முயற்சி வெற்றி யடையட்டும்'' என்று அடுக்காக விம்மலிடையே ஆசிகளைக் கூறிக்கொண்டிருந்தார். பாபாவின் முகம் உணர்ச்சியால் சிவந்துவிட்டது. அங்கே பத்து நிமிடங்கள் தான் தங்கினர். அதற்குள்ளாக விடை பெற்றுக்கொண்டார். போகும்போது '' துவா செய்யுங்கள் மாஸ்டர் ஜீ !'' என்று சொல்லிவிட்டு சென்ருர். அவர் என்னிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. வீட்டை விட்டுக் கிளம்பி நேரே காரை நோக்கிப் புறப்பட்டார். சில விநாடிகளுக்குள்ளே அந்தக் கார் அவரை தாங்கிக்கொண்டு பறந்து போய்விட்டது. இவையெல்லாம் மின்னல் வேகத்தில் நடந்துவிட்டன. நான் மெய் மறந்து நின்றுவிட்டேன். இதில் ஒரு துரதிர்ஷ்டமென்னவென்ருல் போலீஸ் அதிகாரிகள் என் வீட்டிற்கு வந்தது எவ்வளவு விளம்பரம் ஆனதோ அது போல பாபா வந்தது விளம்பரமாகவில்லை. விளம்பரம் ஆக வேண்டாம் என்பதற்காகத் தான் போலும் கவர்னர் ஜெனரல் சம்பிரதாயங்களையும் விட்டு சாதாரண ஒரு மனிதரைப் போல் மின்னல் வேகத்தில் வந்து மறைந்துவிட்டார். அப்பொழுது தான் போலீஸ் அதிகாரிகள் வந்து செய்த விசாரணையின் உண்மை எனக்குப் புலப்பட்டது. ஆசிக்கடிதம் எழுதி இருந்தவர்

உண்மையான ட்யூட்டர்தாஞ என்ற சந்தேகத்தின் பேரில் அந்தரங்க விசாரணைக்கு உத்திரவிட்டிருக்கக் கூடும், அவர் சந்தேகப்படுவதில் நியாயமிருக்கிறது அல்லவா ?

பாபா பார்த்துச் சென்ற மூன்றாவது நாள் என் பெரிய தகப்பனார் விலாசத்திற்கு ஒரு ரிஜிஸ்தர் தபால் வந்தது. அந்தத் தபாலை என் பெரிய தகப்பனாரே கையெழுத்திட்டுப் பெற்றார் அந்த கவரை பார்க்கும்போதே அது "கவர்னர் ஜெனரலிடம்" இருந்து வந்திருக்கிறது என்று தெரிந்தது. தபாலை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவானேன்? எங்களை நாங்களே கேட்டுக்கொண்டு தபாலைப் பிரித்தோம். ரூ. 500-க்கு ஒரு செக்க் இருந்தது. அத்தோடு அவரின் அந்தரங்க காரியதரிசி கையெழுத்திட்ட ஒரு சிறு கடிதமும் இருந்தது. அதில் "மேன்மை தங்கிய கவர்னர் தங்களுக்கு அனுப்பச் சொல்லி உத்தரவிடப்பட்டிருப்பதின்படி ரூ. 500க்கான ஒரு செக்கை அனுப்பி இருக்கிறேன். தயவு செய்து பெற்றுக்கொள்ளுங்கள்."

இதுதான் அந்த கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. என் பெரிய தகப்பனார் அழுதார். இந்த சமயம் நாங்கள் எல்லோரும் அவருடன் சேர்ந்து அழுதோம். பாபாவின் பெருந்தன்மைக்கு யாரை ஒப்பிடமுடியும்? இவ்வாறு அவர் நடந்ததை சொல்லிக்கொண்டே இருந்தவர் "கடைசியிலே அச்செக்கின் கதி என்ன ஆயிற்று தெரியுமா? என்ற ஒரு கேள்வியைக் கேட்டார். நான் ஆச்சரியத்தில் மூழ்கிய வனாய் என்ன? என்றேன். அன்றிரவே என் பெரிய தகப்பனார் சுய உணர்வை இழந்துவிட்டார். ஸ்மரணையற்ற நிலையில் இரண்டு நாட்கள் கிடந்து இறுதியில் காலமானார். அந்தச் செக்கை அவரால் மாற்றி யனுபவிக்க இயலாமல் போய்விட்டது. ஆனால் அவர் அந்த ஸ்மரணையற்ற நிலைமையிலும் அலி, அலி, என்று பிதற்றிக் கொண்டு இருந்தார். அப்படி பிதற்றியதில் அவருக்கு ஆத்ம திருப்தி ஏற்பட்டுக்கொண்டு இருக்குமோ, என்னவோ?

என்னையறியாமல் சில கண்ணீர்த் துளிகள் மேஜை மீது உதிர்ந்தது. என் நண்பர் வாயடைத்து உட்கார்ந்திருந்தார்.

அந்த இடத்தில் சில நிமிஷ நேரம் அமைதி நிலவியது. இதயத்தைத் தொடும் சம்பவத்தைக் கேட்ட என் மனம் ஒரு நிலைகொள்ளவில்லை. நான் மௌனமாக உட்கார்ந்தேன்.

ஆனால் என் இதயமோ தவியாகத் தவித்தது. நான் பாபாவைக் கடைசியாக சந்தித்தபோது மீண்டும் நாம் சந்திக்க மாட்டோம் என்று நினைக்கவில்லை. நான் மறுமுறை செல்வதற்கு முன்பாக வெகுதூரம் அவர் போய்விட்டார். இந்த உலகத்தில் அவரை எங்குமே காண முடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. எத்தனை பெரிய சோதனைக்கும் தலை சாய்க்காமல் வாழ்ந்த அந்த மாவீரர் பாபா இறுதியில் காலனிடம் பணிந்தே தீர்ந்தாரல்லவா? ஆண்டவன் மீது அளவுகடந்த பக்தியும், நம்பிக்கையும் இருந்ததாலேயே அவர் நெஞ்சிலே அசையாத உறுதியிருந்ததுபோலும் என்று நான் நினைத்தேன்: நினைத்தேன், என்ன நம்பினேன்.

ஆம்! இன்றுகூட அந்த சம்பவத்தை நினைத்துப்பார்த்தால் உடல் புல்லரித்துவிடுகிறது. புது டெல்லியில் அவர் நடந்துகொண்டவிதம் நம்மிலே கோழைகளாக இருந்த பலர் தைரியத்தையும் உறுதியையும் இடையிலே கிடைத்த சொத்தாகப் பெற்றனர். இந்தியா – பாக்கிஸ்தான் பிரிவினை சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கம் சமர்ப்பித்த திட்டத்தை ஆராய்ந்து முடிவுசெய்ய அகில இந்திய முஸ்லிம் லீக் கௌன்ஸில் கூட்டம் 9—6—47ந்தேதி புது டெல்லியிலே கூடியது. டெல்லியில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே மிகப் பெரிய ஹோட்டல்களில் ஒன்றான இம்பீரியல் ஹோட்டலின் மேல் மாடியில் இக்கூட்டம் காலையில் ஆரம்பமாயிற்று. கூடிய இடமோ "பால்ரூம்". அழகழகான வர்ண சித்திரங்கள் அமைந்த கண்ணாடி மாளிகை அது கீழே வழவழப்பான பலகைகள் அமைந்திருந்தன. அந்த அறை ஒரு தனி அழகோடு அன்று காட்சியளித்துக்கொண்டிருந்தது. அந்த கூட்டம் இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய சரித்திரப் பிரசித்திப் பெற்ற கூட்டம். அந்த கூட்டத்தில் என்ன முடிவு செய்யப்போகிறார்களோ என்று உலகம் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருந்தது. எப்படியாவது அரசாங்கம் வகுத்தளித்த திட்டத்தை இந்த முஸ்லிம் லீக் கௌன்ஸில் நிராகரித்துவிட்டால் போதும் என்று பலர் பலவித உபாயங்களை செய்துகொண்டிருந்தனர். அன்று காலை டெல்லியின் முக்கிய பத்திரிகைகளெல்லாம் பொருளாதாரத் துறையில் பாக்கிஸ்தான் பிராந்தியம் தனி நாடாக இயங்க சாத்தியமே இல்லை என்று புள்ளி விபரங்களோடு எழுதப்பட்ட மிஸ்டர் பிர்லாவுடைய அறிக்கையை பிரசுரித்திருந்தன. டெல்லியின் அரசியல் வட்டாரமே அல்லோல கல்லோலப்பட்டது. சிலர் பலாத்காரத்தின் மூலம் இறுதி வெற்றியை பெற்றுவிட வேண்டுமென்று திட்டமிட்டும்கூட நடந்துகொண்டனர்.

அந்த கூட்டத்திற்கு கௌன்ஸில் உறுப்பினர்களை தவிர்த்து பிரோஸ்கான் நூன், பீர்மங்கி ஷரீப், போன்ற பல தலைவர்கள் பாபாவால் விசேஷமாக அழைக்கப்பட்டிருந் தனர். பாபா பேசிக்கொண்டிருந்தபோது முஸ்லிம் லீக் வாலியண்டர்கள் சிலர் அறையின் வெளிப்புறத்தில் நின்று கொண்டிருந்தனர். பாபா பாக்கிஸ்தானின் பொருளா தாரத்தைப்பற்றி விளக்கிக்கொண்டிருந்தார். கூட்டத்தில் இருந்தவர்களெல்லாம் மிக கவனத்தோடு அவரின் விளக் கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தனர். எல்லோருமே அவரின் அபிப்ராயத்தை அறிந்துதான் ஒரு முடிவுக்கு வரக்கூடிய கட்டத்திலிருந்தார்கள். பாபா திட்டத்தின் சாதகங்களை மட்டுமின்றி பாதகங்களையும் வழக்கம்போல் விவரித்துக் கொண்டிருந்தார். திடீரென்று எவருமே எதிர்பாராத ஒரு பயங்கர துப்பாக்கி வேட்டு சப்தம் கேட்டது. அந்த இம்பீரியல் ஹோட்டல் கட்டடமே கிடுகிடுத்து விட்டது. கூட்டத்திலிருந்த எல்லோரும் அதிர்ச்சி அடைந்துவிட்டோம். ஆனால் பாபா ஒரு சிறிதும் அதைப்பற்றி நினைத்ததாகத் தோன்றவில்லை. அவர் தன் பிரசங்கத்தை செய்துகொண்டே இருந்தார்.

சப்தம் கேட்ட சில விநாடிகளுக்குள்ளாக உட்கார்ந் திருந்த அறையின் கண்ணாடிகள் தூள்தூளாக உடைந்து சிதறின. பயங்கர கர்ஜனை புரிந்துகொண்டு ஆறு ஏழு காக்ஸார் படை வீரர்கள எங்களைத் தாக்கி கூட்டத்தை நடத்தவொட்டாமல் தடுக்கவேண்டும் என்று தூண்டப் பட்டு மேலே வந்துவிட்டனர். பாபாவின் உயிருக்கு ஆபத்தை உண்டாக்க முயற்சி செய்யப்படுவதாக முதவி லேயே தகவல் கிடைத்தது. ஆனால் அதை பலர் நமப வில்லை. கையில் மண்வெட்டிகளை எடுத்துக்கொண்டு மேலே ஏறிவந்த காக்ஸார் படையினர் தாக்குதலுக்கு முதல் முத லில் வாலியண்டர்கள் இலக்கானர்கள். அவர்கள் பலத்த காயங்களுடன் மாடிப்படிகளிலிருந்து கீழே உருட்டித் தள்ளப்பட்டனர். காக்ஸார் படை வீரர்கள் ஹாலுக்குள் ளும் நுழைந்து விட்டனர்.

எல்லோரும் பாபாவைப் பார்த்துக்கொண்டிருந்தோம். பாபா கலவர சப்தம் கேட்டவுடன் தனது வலக்கரத்தின் மீது தன் வலது கன்னத்தை வைத்துக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையிலாழ்ந்தவராய் அமர்ந்திருந்தார். அவரை பாது காக்க முஸ்லிம் லீக் நேஷனல் கார்டுகளின் மாகாண தளபதி கள் அவரை சுற்றிநின்று ஒரு பாதுகாப்பு கோட்டையை

எழுப்பியிருந்தனர். தான் கொண்டிருந்த ஆத்திரத்தில் உள்ளே நுழைந்து நிர்தூளிபுரியும் காக்ஸார்களை எதை வேண்டுமானாலும் செய்திருக்க முடியும். ஆனால் கூட்டத்தின் தலைவர் பாபா அனுமதித்தாலொழிய ஒன்றையும் செய்ய முடியாதல்லவா? எல்லோருமே பரபரப்படைந்து விட்டோம்.

இதற்கிடையே போலீஸ் படையினர் வந்துவிட்டனர். அவர்களுக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. உள்ளே வந்தபோலீஸாரால் அவர்களைப் பிடிக்க முடியவில்லை. ஏனென்றால் கையிலே பயங்கர ஆயுதங்கள் இருந்தன. கண்ணீர் புகையை பிரயோகித்ததற்குப் பின் தான் அவர்களைப் பிடிக்க முடிந்தது. அவர்களுக்காக பிரயோகிக்கப்பட்ட கண்ணீர் புகை அந்த அறைக்குள்ளும் வந்துவிட்டது. கௌன்ஸில் அங்கத்தினர்களெல்லாம் கண்ணீர் வடித்தனர். நமக்காக நம் பாபாவும் கண்ணீர் வடித்த கோரத்தை நாங்கள் அன்று பார்க்க நேர்ந்தது.

இவ்வளவும் ஒரு 20, 25 நிமிஷங்களில் நடந்துவிட்டன; பாபா மீண்டும் பேச ஆரம்பித்தார். தன் உயிருக்கே ஆபத்தை விளைவிக்க திட்டமிட்டு நடந்த கலவரத்தைப் பற்றி எதையாவது குறிப்பிடுவார்; அதை நாம் கேட்க வேண்டும் என்று காதுகளை தீட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தோம். பாபாவும் மீண்டும் பேசலானார். ஆனால் ஆரம்ப பேச்சை எந்த இடத்தில் நிறுத்தியிருந்தாரோ சரியாக அதே இடத்திலிருந்து மீண்டும் தம் பிரசங்கத்தை தொடங்கினாரே தவிர, இறுதிவரையிலே அந்த சம்பவத்தைப்பற்றி ஒன்றையுமே குறிப்பிடவில்லை. எங்களுக்கெல்லாம் அது பெரும் ஆச்சரியமாகவே இருந்தது.

அன்றைய நிகழ்ச்சி இரவு முடிவுற்றது. பாபா வழக்கம் போல கம்பீரமாக நடந்து சென்றார். நாங்கள் எல்லோரும் அவரைப் பின்தொடர்ந்தோம். மாடியிலிருந்து கீழே இறங்கி சுமார் கால் பர்லாங்கு கால்நடையாக புல் தரையில் நடந்து சென்று காரில் ஏறவேண்டும். அன்று காலை நடந்த சம்பவத்தைப் பார்த்த நாங்கள் அவர் தனியே நடந்து செல்லுவதை விரும்பவில்லை அவரோ எவரைப்பற்றியும் கவலைப்படாமல் நடந்துகொண்டிருந்தார். எல்லைப்புறத் தலைவர் பீர்மங்கி ஷரீப் ஓடோடிசென்று பாபாவின் குறுக்கே நின்றுகொண்டார். அவரின் கண்கள் கலங்கி இருந்தன பாபாவின் இரு புனிதக் கரங்களையும் அவர் பற்றிப் பிடித்துக் கொண்டார். அவர் உணர்ச்சி மிகுதியால், நடுங்கியவாறே,

62415

"பாபா! ஆண்டவனுக்காக தாங்கள் என் பின்னால் வாருங்கள், நான் முன்னால் போகிறேன். உங்கள் நெஞ்சை குறிபார்த்து வரும் எதுவுமென் நெஞ்சைப் பிளக்கட்டும்" என்றார். நாங்கள் எல்லோரும் ஆரவாரம் செய்து அதை ஆமோதித்தோம். ஆனால் பாபா காயிதே ஆஜம் அவர் சொன்னதை பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர் கைகளை விடுவித்துக்கொண்டு ஒரு புன்னகை புரிந்தார். தன் வலக்கரத்தால் வேண்டாம் என்று சைகை செய்து விட்டு, தன் ஆள் காட்டி விரலை வானத்தை நோக்கி சுட்டிக் காட்டிக்கொண்டே நடக்கலானார். ஆமாம்! ஆண்டவன் துணைகொண்டு நடக்கும் எவரையும் உலகத்திலெந்த சக்தியும் என்ன செய்துவிட முடியும்? அந்த புன்னகையும், சைகையும் ஒரு பெரும் தத்துவத்தை தன்னகத்தே கொண்டிருக்கின்றன அல்லவா?

பாபா நடந்து சென்றார், அவரின் உயிருக்காக காத்து நிற்கும் எதிரிகளின் மத்தியிலே, அதே கம்பீர நடையிலே அவர் போய்க்கொண்டிருந்தார். நாங்கள் எல்லோருமே அவரின் ஆயுளுக்காக இரு கரங்களேந்தி ஆண்டவனிடம் பிரார்த்தித்துக்கொண்டு இருந்தோம்! அவரையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தோம்.. அவர் ஆண்டவனருளால் சுகமே தன் கார்ல் ஏறி உட்கார்ந்தார். கூட்டத்தின் மத்தியிலிருந்து "அல்ஹம்துலில்லாஹ்" என்று யாரோ சொன்னது என் காதுகளில் தெளிவாக கேட்டது.

ஃ ஃ ஃ ஃ

அப்பொழுது அங்கே நான் அதிக நேரம் அவருடன் அளவளாவ விரும்பவில்லை. அவருடன் சாவகாசமாக பேச வேண்டும் என்று நான் அப்பொழுது விரும்பாததற்குக் காரணம், யாரோ வெளியில் காத்துக்கொண்டு இருந்ததுதான். காயிதேஆஜம் ஞாபகார்த்த நிதிக்குப் பணத்தைக் கொடுக்கவேண்டும் என்ற உணர்ச்சியால் உந்தித் தள்ளப்பட்ட நான், அங்கு போவதற்கு முன்பாக எனக்கு அறிமுகமானவர் அங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. மிகவும் சுவாரஸ்யமான தகவலை அவர் எனக்குக் கொடுத்ததால் மீண்டும் அவரைப்பார்ப்பதென்று முடிவு செய்தேன். அவரும் என்னுடன் நீண்ட நேரம் பேச வேண்டுமென்றே விரும்பியிருக்கவேண்டும். இல்லையெனில் நான் தாயகம் திரும்புவதற்கு முன்னால் தன்னுடன் ஒரு வேளையாவது சாப்பிடவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கத் தேவையில்லை அல்லவா?

நான் எதிர்பாராதவிதமாக அந்தக் காரியாலயத்திற்குச் சென்றேன். ஆதலால் நான் பர்ஸில் அதிக பணத்தை எடுத்துச் செல்லவில்லை. அப்பொழுது என்னுல் ஒரு நூறு ரூபாய்தான் கொடுக்க இயலும். என் சக்திக்கு அது மிகவும் குறைந்த தொகைதான். என் அன்பைக்கொண்டு நான் அதை அளந்தால் நான் ஒன்றையும் கொடுக்கவில்லை போலவே எனக்கு சற்று வெட்கமாகத்தானிருந்தது. அறியாத முகமாக இருந்தால் கவலை இல்லை ஓரளவு என் வரலாறு அவருக்குத் தெரியும். அந்தச் சிறுதொகையை நான் எப்படி கொடுப்பது? இருந்தாலும் மனதை சற்று திடப்படுத்திக்கொண்டு ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவரிடம் கொடுத்தேன். அவர் சாவதானமாக அதை வாங்கி மேஜைமீது வைத்து அதன்மேல் ஒரு 'பேப்பர் வெய்ட்'டை எடுத்துவைத்தார். அது என் நெஞ்சில் ஒரு பாறையை எடுத்து வைத்ததுபோலிருந்தது. அவர் பிறகு அன்போடு 'இதற்கு நான் ரசீது கொடுக்கமாட்டேன். என்னுடன் சாப்பிட வரும்போதுதான் கொடுப்பேன்' என்று உரிமையோடு சொன்னபோதுதான் என் நெஞ்சின் படபடப்பு சற்று குறைந்தது.

அவரிடம் விடைபெற்றுக்கொண்டு நான் வெளியே வந்தேன். நண்பர் விடவில்லை. என்னுடனேயே வெளியே வந்தார். இதற்கிடையில் இரண்டு சிறுவர்கள் இழுத்து பறித்துக்கொண்டுவந்து எங்கள்மீது விழுந்தார்கள், ஒருவன் முரடனுக இருந்தான். மற்றொருவன் சாதாரணமாகவே தென்பட்டான். அந்த முரட்டுச் சிறுவன் மற்றொரு பையனின் காலரை பிடித்துக்கொண்டு 'கொடுக்கிருயா, இல்லையா?' என்ருன். அவர்களுக்குள் என்ன தகராறு என்று தெரியாது. ஆனுல் பிடிபட்டவன் 'நான் எடுக்கவே இல்லை. பாபாவின்மீது சத்தியமாக நான் எடுக்கவில்லை' என்ருன். அவ்வளவுதான், உடும்புப் பிடியாகப் பிடித்திருந்த முரட்டுப் பையன் அவனைவிட்டுவிட்டான். ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டு இரு கரங்களையும் உதறிக்கொண்டு, ஒரு தோளை மட்டும் ஆட்டிக்கொண்டு நடக்கலானுன். பாபாவின் நாமத்திற்கு சிறுவர்கள்கூட அளவு கடந்த மரியாதை அளிப்பதை நான் அப்பொழுதுதான் பார்த்தேன். நிச்சயமாக மனிதகுலம் வாழும் வரையில் பாபாவின் நாமம் வாழவேசெய்யும் என்று நான் உறுதி பூண்டதில் என்ன தவறு? இப்படி என் மனம் என்னைக் கேட்டது. நான் காரை நோக்கி நடக்கலானேன்.

கார் ட்ரைவர் தன் ஆசனத்தில் தூங்கி விழுந்து கொண்டிருந்தான். நான் பின் கதவைத் திறந்ததுமே

அவன் விழித்துக்கொண்டான். அவன் அதுவரை தூங்க வில்லை என்பதை நிரூபிக்க அவனுகவே ஏதேதோ சொல்லிக் கொண்டு சிகரெட் டின்னை என்னிடம் நீட்டினுன். நான் மிகவும் லேசாக அதை வாங்கிக்கொண்டு என் நண்பர் நின்றுகொண்டிருந்ததை நான் பார்த்துக்கொண்டிருந் தேன். ட்ரைவர் என் உத்திரவுக்காகக் காத்திருக்கவில்லை. காரைக் கிளப்பிவிட்டான். என் கண்கள் என்னை அறியா மல் சிகரெட் டின்னைப் பார்த்தன. என் உடம்பில் மின்சாரம் பாய்ந்தது போலிருந்தது. அவன் வாங்கி வந்த சிகரெட் 'அப்துல்லா — லார்ட்ஸ்'. ஆம்! நம் அருமை பாபா ஓயாமல் புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டுகள் அவை. நான் முன்பே அவர் இந்த சிகரெட்டைத்தான் புகைப்பார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். 1941-ம் வருடம் சென்னையில் நடந்த அகில இந்திய முஸ்லிம்லீக் மாநாட்டில் அவரின் சிகரெட்டையே புகைத்திருக்கிறேன்.

அந்த முஸ்லிம்லீக் மாநாட்டு மேடையில் யார் ஜங்பஹ தூர், சர்தார் அவுரங்கஜீப்கான் ஆகியவர்களுடன் நான் அளவளாவிக் கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் நான் முஸ்லிம்லீகில் சேர்ந்திருந்தேன் — இல்லை — முஸ்லிமாக மாறினேன். மாநாட்டுத் தலைவர் காயிதேஆஜம் பாபா அதுவரையில் மேடைக்கு வரவில்லை. திடீரென மேடையின் பின் பக்கமாக பாபா வந்தார். மேடையிலிருந்தவர்க ளெல்லாம் கையிலே இருந்த சிகரெட்டுகளை காலடிகளிலே போட்டு நசுக்கிக்கொண்டு எழுந்து நின்றனர். அதுவரையில் தலைவருக்கு இந்த வகையில் மரியாதை செலுத்தவேண்டு மென்பது எனக்குத் தெரியாது அத்தகைய சூழ்நிலையில் நான் இருந்ததில்லை இருந்தாலும் மற்றவர்கள் செய்வது போலவே நானும் செய்ய நேர்ந்தது. அப்பொழுது என் உள்ளத்தில் ஒரு சந்தேகம். தலைவர் வரும்போது எழுந்து நிற்பது என்பது நியாயம்தான். மரியாதையின் காரண மாக அப்படி செய்கிறார்கள். சிகரெட்டுகளை ஏன் தூக்கி எறியவேண்டும்? நாகரீகம் அவரிடம் அடிமையாய் கிடைக் கும்போது அவர் இதை அவமரியாதை என்று கருதுகிறார்? இதுதான் எனக்கு வருத்தத்தை அளித்தது. அப்பொழுது என் கண்களுக்கு பாபா ஒரு சர்வாதிகாரியாக தென்பட் டார். அவர் ஆசனத்தில் உட்கார்ந்ததும் எல்லோருமே உட்கார்ந்தோம். பாபா தன் கரத்தில் இருந்த சிகரெட் டின்னிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டார் பிறகு அந்த சிகரெட் டின்னை திரும்பிக்கூட பார்க்காமல் பின்புறமாக நீட்டினார். ஜனப் பஹதூர்யார் ஜங் எழுந்து மரியாதையோடு அதை இரு கரங்களாலும்

வாங்கினர். அவர் ஒன்றை எடுத்து வாயில் வைத்துக் கொண்டு 'டின்'னை என்னிடம் கொடுத்தார். நானும் ஒன்றை பற்றவைத்துக்கொண்டு பக்கத்தில் கொடுத்தேன். மேடையிலிருந்த அநேகமாக எல்லோரும் எடுத்து எடுத்து பற்றவைக்க ஆரம்பித்தனர். அப்பொழுதுதான் பாபா ஒரு சர்வாதிகாரி இல்லை என்பதும், மேடையிலே இருப்பவர்கள் தலைவர் வரும்போது செலுத்தவேண்டிய மரியாதையைச் செலுத்தினர்கள், என்பதும் எனக்குப் புரிந்தது. அப்பொழுதுதான் அவர் 'அப்துல்லாலார்ட்ஸ்' சிகரெட்டை புகைப்பவர் என்று நான் அறிய முடிந்தது. இந்த சம்பவம் நான் அந்த சிகரெட் டின்னைப் பார்த்ததும் ஞாபகத்திற்கு வந்துவிட்டது.

மன அமைதியைப் பெறுவதில் எவ்வளவு சிரமம் இருக்கிறது என்பதை அனுபவப்பூர்வமாக என்னல் அன்றுதான் புரிந்துகொள்ள முடிந்தது. சாதாரண ஒரு சிகரெட் டின்னை வாங்கினல் கூடவா நம் பாபா ஞாபகத்திற்கு வர வேண்டும்? அவர் ஒருவர்தான அதை புகைத்தார்? எத்தனையோ பேர் அந்த சிகரெட்டுகளைப் புகைக்கின்றனர். ஆனல் அந்த சிகரெட் டின்னைப் பார்த்ததும் பாபாவின் ஞாபகம்மட்டும் ஏன் வரவேண்டும்? ஆம்! அவர் நம்மோடு இணைந்துவிட்டார் என்பதுதான் அதன் பொருள். நம் ஜீவனேடு கலந்துவிட்டார் என்பதுதான் அதன்பொருள்.

இப்படி என்னை நானே கேள்விகள் பலவற்றை எழுப்பிக்கொண்டு நான் பதில்களைத் தேடிக்கொண்டே இருந்தேன். அதற்கிடையில் நான் தேடிச்சென்ற பாபாவின் மஜார் (அடக்கப்பட்ட இடம்) வந்துவிட்டது. ஆமாம்! கோடிக்கணக்கானவர்கள் கதறிக்கதறி அழுதுகொண்டிருக்கும் போதும் துளிக்கூட ஈவிரக்கமின்றி அருமை பாபாவை அணைத்துக்கொண்ட அந்த பூபாகத்தை நான் அடைந்துவிட்டேன்.

ஒரு ஆயிரம் வருஷங்களாக கண்டறியாத மாபெரும் தலைவர் ஒருவரை தன்னகத்தே கொண்ட பெருமையோ என்னவோ அந்த இடம் மரண அமைதியோடு காணப்படுகிறது. கோடிக்கணக்கான மக்கள் சிந்தும் கண்ணீரை அமைதியோடு குடித்துக்கொண்டிருக்கிறது. உலகத் தலைவர்களெல்லாம் அதைத்தேடி வரக்கூடிய ஒரு பெரும் பாக்கியத்தை பெற்றிருக்கிறது. உலகம் அழியும்வரையிலே மங்காப்புகழோடு விளங்கும் பேற்றை அடைந்துவிட்டது.

அந்த இடம் சந்தடி மிகுந்த கராச்சியைவிட்டு ஒதுங்கி இருக்கிறது. இன்று பெரும் பெரும் காலனிகள் அதை சூழ்ந்து கொண்டிருக்கின்றன, அவைகளுக்கு ''பாபா மஜார் காலனி'' என்ற பெயர்கள் சூட்டப்படுகின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் வந்துபோகும் காட்சியை அங்கு நாம் பார்க்கலாம். தாயை இழந்த சிசு பேந்தப் பேந்த விழிப்பதுபோல, மக்கள் அங்கு அமைதியான துக்கத்தைக் காட்டுகிறார்கள். விலையுயர்ந்த ஆடைகளை அணிந்துவரும் மேதாவிகளும் அந்த மண்ணில் சம்மனம்போட்டு உட்கார்ந்திருக்கும் காட்சிகள் அங்கு சர்வ சாதாரணம். மக்கள் கூட்டம் கூட்டமாக வந்துபோனாலும் ஒரு பயங்கர நிசப்தம் அங்கு நிலவுகிறது,

நான் கராச்சியை அடைந்ததும் முதல் முதலில் போன இடம் பாபாவின் மஜார்தான். நான் மட்டுமல்ல; கராச்சியை அடையும் ஒவ்வொருவரும் அந்த உணர்ச்சியால் உந்தப்படுகிறார்கள். வெளிநாட்டு யாத்ரீகர்கள், அயல்நாட்டு ஸ்தானிகர்கள் எல்லாமேதான் என்று மட்டும் சொல்லுவதற்கில்லை. கராச்சியிலே பிறந்து வளர்ந்து வாழக்கூடிய மக்கள்கூட அங்குவந்து போகும் மயமாகவே இருக்கிறார்கள். பாபாவின் மஜாரை நான் முதல் முதலாக அடையவில்லை இதற்குமுன் நான்கு முறை அங்கு போயிருக்கிறேன். என் கார் அங்கு போய்நின்றதும் ட்ரைவர் இறங்கிவந்து பின் கதவை திறந்துவிட்டான், நான் கீழே இறங்கிவிட்டேன், நான் ஒரு இயந்திரம் போலாய்விட்டேன். என்ன கொடுமை! யாருக்கும் அடங்காத ஒரு வீரத்தலைவர் அடங்கிவிட்டார் அந்த இடத்தில். ஆண்டவனைத்தவிர எவருக்கும் தலை சாய்க்காத ஒரு உறுதியின் உருவம் அங்கு தலைசாய்த்துவிட்டது. இன்று அவரின் உடலை விழுங்கிக்கொண்டு மிக அமைதியோடு இருக்கிறது அந்த இடம். அந்த இடம் எப்படித்தான் பிளந்து பாபாவை விழுங்கியதோ! அந்த இடம் பாபாவுக்குப் பதிலாக ஆயிரம் உயிர்களை கேட்டிருந்தால் ஆயிரத்திற்கு இரண்டாயிரம் உயிர்களை கொடுக்க ஒருபெரும் சமுதாயம் காத்துக்கிடந்ததே! பாபாவின் ஒரு விரல் அசைவுக்கு இலட்சக்கணக்கான மக்கள் தம் உயிர்களை பலியிட காத்துக்கிடந்தனரே! அத்தலைவரின்மீது அவ்வளவு பற்றுகொண்டிருந்தார்கள் என்பது அந்த இடத்திற்கு தெரியாமலா போய்விட்டது? கவிகளும், தத்துவார்த்தம் பேசுபவர்களும் பொறுமைக்கு உதாரணமாகக் காட்டும் பூபாகம் தானே அதுவும்? பாபாவை விட்டுவைக்கும் பொறுமை ஏன் அதற்கு இல்லாமல் போய்விட்டது?. ஆமாம்! ஆண்டவனின் ஆணைக்கு குறுக்கே யார்தான் நிற்கமுடியும்? ஆண்

டவன் தன் தீர்க்கதரிசிகளையெல்லாம் விழுங்க உத்திரவிட்டு இருக்கும்போது பாபாவை விழுங்கிக்கொள்ள அப்பூபாகத்திற்கு உத்திரவிட்டிருப்பதில் வியப்பில்லைதான்.

பாபாவை அடக்கம் செய்த இடத்தில் மணல் குவிக்கப் பட்ட ஒரு சமாதி இருக்கிறது. (இன்று சலவைக்கற்களால் கட்டப்பட்டிருப்பதாக அறிகிறேன்) அங்கு கூடும் மக்களுக்கு வசதியாக ஒரு சாதாரண கூடாரம் போடப்பட்டு இருக்கிறது. சமாதியை சுற்றி நூற்றுக்கணக்கான குர்ஆன்ஷரீபுகள் (இறுதி வேத புத்தகப் பிரதிகள்) வைக்கப் பட்டிருக்கின்றன. நூற்றுக்கணக்கானவர்கள் குர்ஆன் ஷரீபை ஓதியவண்ணம் இருக்கிறார்கள்.

நான் காரிலிருந்து இறங்கி மஜாரை நோக்கி நடக்கலானேன். நான் சகல சக்திகளையும் இழந்துவிட்டவனாக ஒரு நடைப்பிணமாக தென்பட்டேன் என் கால்கள் என்னை சுமந்துசென்றன. ஆனால் என் சிந்தனை பம்பாய் 'மலபார் ஹில்ஸ் — மௌண்ட் பிளஸன்ட்'டை நோக்கிச் சென்றது. டிசம்பர் 25ம் தேதியன்று நான் அவர் பிறந்ததின விழாவை ஒட்டி ஒருபெரும் "பார்ட்டி" வைப்பது வழக்கம். எல்லா சமூகத்தாரையும் அந்த பார்ட்டிக்கு நான் அழைப்புகளை அனுப்புவேன். அது ஒரு குதூகலமான நாளாக நான் கொண்டாடுவது வழக்கம்' அதே நாளில்தான் இயேசுகிருஸ்து பிறந்ததினமாக கிருஸ்தவர்கள் கொண்டாடுகிறார்கள். என் பங்களாவுக்கு நேர் எதிரே என் நண்பர் பால்வுடைய பங்களாவில் அன்று கிருஸ்துமஸ் கொண்டாடப்படும். என் வீட்டுக்குவரும் விருந்தாளிகளிடம் வேடிக்கையாக 'நண்பர் பால் காயிதே ஆஜம் பிறந்ததின விழாவை கொண்டாடுகிறார்கள்' என்று சொல்லுவேன். நண்பர் பால் என்னைப் போல வேடிக்கையாக 'நண்பர் கிருஸ்துமஸ் கொண்டாடுகிறார்' என்பார். அநேகமாக எங்களிருவர் வீட்டிற்கும் விருந்துக்கு வரவேண்டியவர்களாகவே நண்பர்கள் இருப்பார்கள். ஆதலால் நானும் என் நண்பர் பாலும் பரஸ்பரம் பேசி வசதியான நேரங்களை நிர்ணயித்துக் கொள்ளுவது வழக்கம்.

இந்த பார்ட்டி நான் இருந்தாலும் இல்லாவிட்டாலும் என் வீட்டில் தொடர்ந்து நடைபெறும். ஆம்! 1944-ம் வருஷம் நான் பம்பாயில் இருந்தேன். என்னுடன் நண்பர் ஹுசேன் இமாம்கூட இருந்தார். எப்படியும் பாபாவின் பிறந்ததின விழாவிற்கு என் ஊருக்குப் போய்விடவேண்டு

மென்று விரும்பினேன். ஆனால் எந்த விமானத்திலும் எனக்கு டிக்கட் கிடைக்கவில்லை என் மனம் சஞ்சலமடைந்தது. ஆனால் நண்பர் ஹுசேன் இமாம் மிக சந்தோஷமாகக் கணப்பட்டார். பிறகுதான் அவர் சந்தோஷப்படுவதற்கு காரணமிருக்கிறது என்று எனக்கு தெரிந்தது. 'பாபா'வின் பிறந்ததின வாழ்த்துக்களை அவரை நேரில் பார்த்து சமர்ப்பிக்கவேண்டும்'' என்று அவர் திட்டமிட்டிருந்தார்போலும்! இந்த சாதாரண விஷயம் என் சிந்தனையில் மோதவில்லை. மோதாதற்கும் காரணமிருக்கிறது. பாபாவை நினைத்தவர்கள், நினைத்த நேரத்தில் பார்க்கமுடியாது அவரிடம் நெருங்கிப் பழகும் நண்பர்களால் முடியுமோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் நண்பர் ஹுசேன் இமாமால் அது சாத்தியம். எனவே என் வீட்டுப் பார்ட்டியில் நான் கலந்துக்கொள்ளமுடியாது என்பதையும், வெற்றிகரமாக 'பார்ட்டி'யை நடத்தும்படியாகவும் என் வீட்டிற்கு ட்ரங்க் டெலிபோன்மூலம் தகவல் கொடுத்துவிட்டேன்.

காலை பத்து மணி இருக்கும். நண்பர் ஹுசேன் இமாம் பாபாவின் பங்களாவிற்கு டெலிபோன் செய்தார். மாலை 4-மணிக்கு பாபாவை சந்திப்பதென நிர்ணயித்துக்கொண்டார். பிறந்ததின விழாவையொட்டி ஏதாவது ஒன்றை கொண்டுபோக வேண்டுமென்று நான் விரும்பினேன். நண்பர் ஹுசேன் இமாமைக் கேட்டேன். அவர் ஒன்றையும் கொண்டுபோக வேண்டாம்; அவர் எதையும் விரும்புபவர் இல்லை என்று சுருக்கமாகக் கூறிவிட்டார். ஆனால் எனக்கென்னவோ போலிருந்தது. ஒரு புதுமையான ஒன்றை கொண்டுபோக வேண்டுமென்ற ஆசை என் மனதிலிருந்து அகலவில்லை. எனவே யோசித்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்தேன். இந்திய தேசத்தில் பாக்கிஸ்தான் பிரதேசத்தை பச்சை நிறத்தால் காட்டப்பட்டிருக்கும் ஒரு படத்தைக் கொண்டுபோவது என்று முடிவுசெய்தேன். ஒரு தேசப் படத்தையும் வாங்கிக்கொண்டேன் அதை நண்பரிடம் காட்டியபோது 'குட்ஐடியா' என்று மட்டும் சொல்லி இருந்துவிட்டார்.

குறிப்பிட்ட நேரத்தில் எங்கள் கார் பாபாவின் மாளிகையையடைந்தது. அவரது காரியதரிசி எங்களை ஓடோடி வந்து வரவேற்றார். அவருக்கேற்றாற்போலவே அவரது காரியதரிசிகளும் இருக்கிறார்கள்! 'பாபாவுக்கு இரவில் சரியான தூக்கம் இல்லை. மிகவும் களைப்படைந்தவர் போல காணப்படுகிறார்' என்று கூறினார். பாபாவிடம்

அதிக நேரம் பேசக்கூடாது என்று கண்டிப்பான உத்திரவு தான் எங்களுக்கு மறைமுகமாக இடப்படுகிறது என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடிந்தது. பாபாவும் அவரது தங்கை பாத்திமா ஜின்னுவும் அறையில் உட்கார்ந்திருந்தார்கள் மிக மரியாதையோடு எழுந்துநின்று கைகுலுக்கி வரவேற்றார் பாபா. அவர் கையில் 'லெம்ஜூஸ்' கிளாஸ் ஒன்று இருந்தது. எங்களைப் பார்த்ததும் பாத்திமா ஜின்னு அவர்கள் இரு கிளாஸ்களில் எங்களுக்கும் கொண்டுவந்து கொடுத்தார்கள். நண்பர் ஹுசேன் இமாம் என்னை அறிமுகப்படுத்தினர் "எனக்கு மிகவும் நன்ருகத் தெரியும்" என்று பாபா கூறியபோது என்னை இந்த உலகத்திற்கே மன்னனுக முடி சூட்டிவிட்ட மகிழ்ச்சியைக் கொண்டேன். ஏனெனில் பாபாவின் உள்ளத்திலே நானும் இடம்பெற்றிருக்கிறேன் அல்லவா ?

பேச்சு வாக்கிலே பாபாவிடம் நான் கொண்டு சென்ற படத்தை நீட்டினேன். அவர் தம் இரு புனிதக் கரங்களால் அதை வாங்கினர். இயந்திரத்தைப்போல அவர் கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த 'மோணக்கல்' தாவி அவர் கண்ணில் குந்திக்கொண்டது. அவர் அந்தப் படச்சுருளை பிரித்தார். ஒரு புன்னகை அவர் முகத்தில் தவழ்ந்தது; என் உள்ளத்தில் மகிழ்ச்சியும் பெருமையும் பொங்கி வழிந்தது. தற்பெருமையோடு பக்கத்திலிருந்த நண்பரைப் பார்த்தேன். அவர் சாவதானமாக பார்த்துச் கொண்டிருந்தார். அடுத்த விநாடியே என் உடல் நடுங்கிடும் ஒரு சம்பவம் நடந்துவிட்டது.

"இந்த படத்தின் பாக்கிஸ்தான் எல்லைகள் சரியானவைதாஞ?"

பாபாவின் தொனியில் சற்று கண்டிப்பு தொனித்தது அவருக்குப் பின்னுல் நின்றுகொண்டிருந்த பாத்திமா ஜின்னு ஏதோ சொன்னர். நான் அடைந்திருந்த பரபரப்பில் அவர் சொன்னது என் செவிகளில் கேட்கவில்லை.

"இல்லை, இத்தகைய படங்கள் வரையப்படுவதை நான் விரும்பவில்லை".

பட்டென்று அடுத்த வார்த்தைகள் என் பதிலை எதிர்பார்க்காமலேயே அவர் திருவாயிலிருந்து உதிர்ந்துவிட்டன படச்சுருள் தானுக சுருண்டுகொண்டது.

"அது விற்பனையாகும் படம், அதன் எல்லை சரிதானு இல்.........."

என்னைப் பேசவிடவில்லை. "தட்ஸ் ஆல்ரைட்" என்று பட்டென்று முடித்துவிட்டார். வேறு விஷயத்திற்கு போய் விட்டார். அதற்குப் பிறகு அவர் என்ன பேசினர் என்றே எனக்குத்தெரியாது. நான் பெரும் குழப்பத்தில் மூழ்கி திணறிக்கொண்டிருந்தேன். அவர் தன் இடது கரத்தால் என் வலது தோளை தட்டிக்கொடுத்து விடைகொடுத்த போதுதான் நான் என் சுய உணர்வு பெற்றேன். நான் கொண்டிருந்த மனக்கஷ்டத்தை துடைக்க அவ்வாறு செய்தாரோ என்னவோ!

ஃ ஃ ஃ ஃ

பாபாவின் சமாதி என் முன் இருந்தது. என் கண்கள் என்னையறியாமல் கண்ணீரை சிந்தின. என் நெஞ்சு அடைத்தது. என்னல் துக்கத்தை அடக்கமுடியவில்லை. கூடாரத்தின் கயிற்றை அணைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தேன்,

எவ்வளவு நேரம் நான் அழுது கொண்டிருந்தேன் என்று என்னல் சொல்ல முடியாது. அழுதுகொண்டிருந்தேன் என்பதற்கு பதிலாக கண்ணீரை சிந்திக்கொண்டிருந்தேன் என்று சொல்லுவதுதான் பொருந்தும் என்று நினைக்கிறேன். ஏனென்ருல் நான் இன்னும் அழுதுகொண்டுதான் இருக்கிறேன்; என் அழுகை என் வாழ் நாட்களில் நிற்கும் என்ற நம்பிக்கையும் இல்லை. என் வாழ்நாளிலேயே ஒரு தலைவரைப் பின்பற்றி, அவர் தலைமையிலேயே ஒரு பெரும் சாம்ராஜ்பத்தை சிருஷ்டித்து. அவரையே அந்த பெரும் சாம்ராஜ்யத்திற்கு தலைவராக்கி, பின் அவரை நான் சமாதியில் படுத்திருக்கக் கண்டேன் என்ருல் அந்த அழுகைக்கு ஓய்வென்பது ஏது?

அங்கே கதறி அழுபவர்கள் விம்மி அழுபவர்கள், மனதுக்குள்ளேயே அழுது அழுது துவண்டு போகிறவர்கள் எல்லாமே இருக்கிருர்கள். அழுபவர்களை சமாதானம் சொல்லவோ, தேற்றவோ யாருமில்லை. அங்கே வைக்கப்பட்டிருக்கும் குர் ஆன் ஷரீபுகளைப் பார்த்து, அதை ஓதும் மக்களின் ஒலிகளைக் கேட்டு தன்னைத் தானே தேற்றிக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அங்கு யாரை யார் தேற்ற முடியும்? எல்லாமே அழுது கொண்டிருக்கிருர்கள். அழுது அழுது தம் நெஞ்சின் பாரத்தைக் குறைத்துக்கொள்ள விரும்புகிருர்கள்.

என்னை நானே சமாதானப்படுத்திக்கொண்டு அதே இடத்தில் நான் உட்கார்ந்துகொண்டேன். அநேகர் அங்கும் இங்குமாக சிதறி உட்கார்ந்திருந்தனர். எல்லாருமே என்னைப்போல களைத்துப்போய் உட்கார்ந்திருந்தார்களோ என்னவோ! என் பக்கத்தில் முணகல் சப்தம் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். சுமார் 55 வயது கொண்ட ஒரு பெரியார் உட்கார்ந்திருந்தார். அவர் மடியில் ஒரு அழகான ஐந்து வயதுடைய பையன் உட்கார்ந்திருந்தான். அவரின் உடைகளிலிருந்து அவர் ஒரு பட்டாணியர் என்று நான் அறிந்துகொண்டேன். அவரின் அடர்ந்த தாடி கண்ணீரால் நனைந்துகொண்டிருந்தது. அவர் மடியிலிருந்த குழந்தையின் இரு கரங்களையும் சேர்ந்து தாங்கி பிடித்துக் கொண்டு பிரார்த்தனை புரிந்து கொண்டிருந்தார். அவர் பேசிய எளிய புஷ்து மொழியை ஓரளவு என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

'ஆண்டவனே! நீ உன் புனிதமான திருமறையில் அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கிறாய். நாங்கள் மனம் தளர்ந்த போதெல்லாம் நீ தெம்பை அளிக்கிறாய். நாங்கள் இருளிலே வழி தெரியாமல் தவிக்கும்போதெல்லாம் எங்களுக்கு நேரான வழியை காட்டுகிறாய். மீண்டும் நாங்கள் உன்னை மறந்து விடுகிறோம். உன் கட்டளைகளை மீறி விடுகிறோம். நீ உன் கோபத்தைக் காட்டுகிறாய். ஆனால் ஆண்டவனே என்று ஒரு முறை கூவும்போதே கருணைக் கடலான நீ நாங்கள் செய்தவைகளை யெல்லாம் மறந்து மன்னித்து உன் கருணையை பொழிகிறாய். இல்லையானால் பாபாவைப் போல பெருந்தகைகளை அவ்வப்போது எங்களிடையே படைத்து உன் நேரான வழியை காட்டியிருப்பாயா?

ஆண்டவனே! நாங்கள் உன்னை மறந்துவிட்டோம் அருளாளனே! நீ எங்களை மறக்கவில்லை. நாங்கள் நீ சொன்ன எல்லாவற்றையும் அறிந்தும் வழி தவறி நடக்கிறோம்; நீ எங்கள் மீது அன்பை காட்டுகிறாய். நாங்கள் செய்யும் பாபங்களுக்கு இவ்வுலகத்தில் தண்டனை அளிப்பது என்று முடிவு செய்தால் நாங்கள் அழிந்து ஒழிந்து போயிருப்போமல்லவா? எங்களை வாழ வைத்தும், தாழ வைத்தும் பார்க்கிறாய் நாங்கள் திருந்தவில்லை. நீ மீண்டும் எங்கள் மீது அநுதாபத்தையே சொரிகிறாய்! எங்களுக்கு பாபாவைப் போன்ற பெரியார்களை கொடுத்துதவி செய்விக்கிறாய். ஆண்டவனே! வேண்டாம். எங்களை நிரந்தரமாக உன் நேரான வழியில் திருப்பிவிடு. உன் அருளுக்கு நிரந்தரமானவர்

களாக எங்களை ஆக்கிவிடு. நாங்கள் இன்னும் இருளிலே மின் ஒளியை நாடுபவர்களாகவே இருக்கிறோம். அதனால் தான் இந்த இடத்தில் அமர்ந்து அழுகிறோம். உதவியை நினைத்து, உன் வழியைத் தேடி இங்கு கூடி அழுகிறோம்.

ஆண்டவனே ! எங்களில் பலரை பலிகொள் ; சிலரை உன் நேரான பாதையில் செலுத்து. அந்த சிலருடைய நன்மைக்காக, அவர்கள் உன் பாதையில் நடப்பதற்காக நீ பலியிடக் கருதினால், ஆண்டவனே என்னையும் உன் இஷ்டத்திற்கு பலிகொண்டுவிடு.''

இப்படி அவர் குழப்பமடைந்தவராய் புலம்பி புலம்பி பிரார்த்தனை புரிந்து கொண்டிருந்தார். என்னை அறியாமலே என் இதயம் ' ஆமீன் ! ஆமீன் ' என்று சொல்லிக் கொண்டே இருந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் நான் ஒரு குர்ஆன் ஷரீப் பிரதியை எடுத்து வைத்துக்கொண்டு ஓத ஆரம்பித்தேன். நான் ஒரு பிரதியை எடுக்கப் போகும்போது என் குறிப்பை அறிந்துகொண்ட ஒருவர் ஒரு பிரதியை எடுத்து என்னிடம் கொடுத்தார். அவரும் ஒரு பிரதியை எடுத்துக் கொண்டு என் பக்கத்திலேயே உட்கார்ந்தார். நான் அவரை எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது. அவரும் என்னை இமை கொட்டாமல் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். நான் ஒருவிதமாக ஓதி முடித்துவிட்டு வெளியே வந்து நின்றேன். எனக்கு மிகவும் களைப்பு தட்டியிருந்தது. ட்ரைவரிடம் ஒரு சோடா வாட்டர்' வாங்கி வரும்படி கூறி நின்றேன். என் பக்கத்திலே உட்கார்ந்து ஓதிக்கொண்டிருந்தவர் நேரே என்னை நோக்கிவந்து மிக மரியாதையோடு எப்பொழுது வந்தீர்கள் ?' என்று கேட்டார்.

நான் பதில் சொல்லிவிட்டு '' தங்களை நான் புரிந்து கொள்ளவில்லையே ! '' என்றேன்.

' நான்தான் பாபாவின் 'சாபர்' (ட்ரைவர்); முஹம்மத் ஹனீப் ஆஜாத். தங்களை '' மௌன்ட் ப்ளஸன் '' டில் பன்முறை பார்த்திருக்கிறேன் ; பேசியும் இருக்கிறேன். டில்லியிலும் பார்த்திருக்கிறேன் என்றார். அவர் சொற்களில் பெருமையும் பணிவும் கலந்து உறவாடின.

நான் கொண்ட மகிழ்ச்சிக்கு ஒரு அளவே இல்லை. நான் யாரை பார்க்க துடியாய் துடித்துக் கொண்டிருந்தேனோ, கடியார முட்களை சபித்துக்கொண்டிருந்தேனோ

அவனே என் முன் எதிர்பாராத விதமாக வந்து நின்று உற வாடினால்.......? என் இரு கரங்களாலும் அவனை அணைத்துக் கொண்டேன். எனக்கு கராச்சியில் இனி வேலை இல்லை யென்றும் அவனைப் பார்ப்பதற்காகவே நாழிகளை எண்ணிக் கொண்டிருக்கிறேன் என்றும் அவனிடம் சொன்னபோது பெரும் வருத்தப்பட்டான். நாங்கள் இருவரும் '' கார் பின் சீட்டி''ல் உட்கார்ந்துகொண்டு பல பிரச்சினைகளைப் பற்றி பேசிக்கொண்டிருந்தோம். ஆனால் பாபாவைப் பற்றிய பிரச்சினைகள் வரும்போதெல்லாம் '' அதுதான் நாளை பேசுவோமே !'' என்று சொல்லிக்கொண்டு வேறு பிரச்சினை களுக்கு தாவிக்கொண்டிருந்தான். அவனுமல்லவா என்னை சோதிக்க ஆரம்பித்துவிட்டான் !

நாங்கள் ஒருவரை ஒருவர் பிரிந்தபோது அவன் சமர்ப் பித்த ஒரு வேண்டுகோளை என்னால் நிராகரிக்க முடியவில்லை. ஜும் ஆ தொழுகைக்குப் பின்னால் சந்திக்க வரும்படி ஏற் கனவே எழுதியிருந்தான். ஆனால் பகல் சாப்பாட்டிற்கு தன் இல்லத்திற்கு வந்துவிடும்படி வற்புறுத்தினான். ஒரு விதத்தில் அது எனக்கு திருப்தியாகவே இருந்தது. ஏனென் றால் அவனிடம் எவ்வளவு அதிக நேரம் தங்க முடியுமோ அவ்வளவு அதிக நேரம் தங்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்தது. எனவே நான் அவனுடைய அன்பான அழைப்பை ஏற்றுக்கொண்டேன்.

இதற்கிடையே நூற்றுக் கணக்கான கார்கள் வந்தன, போயின; அயல் நாட்டவர்கள் பாபாவுக்கு அஞ்சலி செய்ய வந்து போவதும், வெளிநாட்டு அதிகாரிகள் சர்க்கார் பரி வாரங்களோடு வருவதையும் போவதையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது. அந்த இடத்தில் எல்லோரும் சமமாகவே மதிக்கப்படுகின்றனர். பாக்கிஸ் தானின் கவர்னர் ஜெனரலும், சாதாரண ஒரு பிரஜையும் பாபா மஜாருக்கு வரும்போது சமநிலையில் இருக்கிறார்கள். பாபா மஜார் எல்லை வரையிலே சகல மரியாதைகளுடன் வரும் மந்திரிப் பிரதானிகள், உயர்தர அதிகாரிகள் மஜா ரின் எல்லையில் காலடி எடுத்து வைத்துமே சமத்துவ நிலைக்கு வந்து விடுகிறார்கள். ஆம் ! சமத்துவத்தின் அடிப்படை யிலே தன் வாழ்வை அமைத்திருந்த தலைவரின் சமாதி அடி யில் உயர்வையும் தாழ்வையும் கற்பிப்பது கொடுமை தானே ! அவர் வாழ் நாட்களிலே இஸ்லாமிய இனத்திற்கு எவ்வளவு எச்சரிக்கை செய்யக்கூடியவராக இருந்தாரோ அதே போல்தான் இன்று அவர் சமாதியும் எச்சரிக்கை

செய்துகொண்டிருக்கிறது. அதனால்தான் பெரியார்கள் வாழ்ந்தும் இறந்தும் மக்களுக்கு நேர்வழி காட்டக் கூடியவர்களாகவே இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள் போலும்.

நான் மிகவும் களைப்படைந்து விட்டேன். நான் சாப்பிட்ட ''சோடா வாட்டர்'' என் களைப்பை எல்லாம் தீர்த்துவிடுமா? நான் மட்டுமல்ல. அந்த சிக்கிய ட்ரைவரும் சோர்ந்து போயிருந்தான். என்னை 'பாபா மஜாருக்கு'' அழைத்துச் செல்லுவதில் எவ்வளவு சுறு சுறுப்பாக அவன் இருந்தானோ அப்படி என்னை திருப்பி அழைத்துச் செல்வதில் இருக்கவில்லை. நகரபுறத்தின் சந்தடி சப்தங்கள் எங்கள் அமைதியின்மையை மாற்றவில்லை. மஜாரிலிருந்து திரும்பும்போது எந்நிலை இருந்தது என்று விளக்கிக் கூறுவது அசாத்யம். கவலை, ஏக்கம், எது என்று திட்ட வட்டமாக கூற முடியாது. ஏதோ ஒரு புது மாதிரியான வேதனையால் தாக்குண்டிருந்தோம். அதை அநுபவத்திலிருந்துதான் அறிய முடியும் என்பது என் அபிப்ராயம். ஆனால் ஒன்றை மட்டும் கூறிவிடலாம் கை கால்கள் சோர்ந்து போகின்றன மனம் அலக் கழிப்பதில்லை; ஒரே நிலையில் தான் இருக்கிறது. ஆனால் ஒரு நிலையில் அமைதி இருப்பதில்லை.

நான் பிரயாணம் செய்த கார் என்னை பாபா மஜாரிலிருந்து பிரித்துக்கொண்டிருந்தது. மீண்டும் ஒரு முறை ''ஜியாரத்'' செய்ய முடியுமோ? என்னவோ? சந்தர்ப்பம் கிடைக்காது என்றுதான் எனக்கு தோன்றியது ஏனென்றால் நான் ஊர் திரும்பவேண்டிய நாள் நெருங்கிவிட்டது. நான் சந்திக்கத் தீர்மானித்திருந்த முஹம்மத் ஹனீபை வேறு நாளைக்கு சந்தித்தாக வேண்டும். ஹனீபிடம் பாபாவைப் பற்றிய தகவல்களை அறியலாம் என்று வந்த எனக்கு கராச்சியின் ஒவ்வொரு சுவாசமும் பாபாவைப் பற்றிய வரலாறுகளைச் சொல்லிக்கொண்டே இருந்தன. கராச்சி நகரில் நான் விடும் மூச்சு கூடவல்லவா பாபாவின் கதையை சொல்லிக்கொண்டு வெளிவருகிறது!

நான் அமர்ந்திருந்த கார் ஓடிக்கொண்டே இருந்தது.... சுமை இழுத்துச் செல்லும் ஒட்டகைகள், நாகரீகமடைந்தவர்கள் சவாரி செய்யும் குதிரைகள், கார்கள் இவைகளூடே என் கார் நெளிந்து சென்றபோதும் சமாதியடியில் ஒரு பட்டாணியப் பெரியார் கண் கலங்க பிரார்த்தனை புரிந்த வார்த்தைகள் என் சிந்தனையிலிருந்து அகலவில்லை.

வழியிலே எங்கும் நிற்காமல் கார் நேரே ஹோட்டலை வந்தடைந்தது. நான் என் அறையின் படுக்கையில் சாய்ந்து விட்டேன். என் மனம் தனிமையை நாடியது. மனம் தனிமையை நாடும்போது அதைத் தடுக்கவேண்டுவது அவசியம் என்று ஒரு முறை ரவீந்திரநாத் தாகூர் கூறியதை நான் கேட்டிருக்கிறேன், அவர் அப்படி கூறியதில் அர்த்தமுண்டு. தனிமையில் மனிதனுடைய சிந்தனை மிக தீவிரமாக வேலை செய்யும். தனிமையில் இருக்கும்போது தான் அவருக்கு கற்பனை உதிக்குமாம். உண்மையில் அவரை ஒத்தவர்களின் தனிமை உலகத்திற்கு பல அரிய கலைப் பொக்கிஷங்களை அளித்திருக்கிறது. இருந்தும் அவர் தனிமையை நாடுவதை தடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறுகிறார். ஏனென்றால் உலகத்தில் தற்கொலை செய்து கொள்ளுவது எல்லாமே தனிமையில் நீண்ட நேரம் இருநததின் விளைவுதான் என்று கூறுகிறார், உண்மைதான். மனவிரக்தி கொண்டவர்கள் தனிமையில் நீண்ட நேரம் இருந்து சிந்திப்பதினால் விபரீத முடிவுக்கு வர சந்தர்ப்பங்களிருக்கின்றன. எனவே தனிமையை நாடுபவர்களின் அவ்வப்போதைய மன நிலையை ஒத்துத்தான் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

நான் தனிமையை நாடியபோது இந்த எண்ணம் எனக்கு உதித்தது. நான் மனவிரக்தி கொண்டுதான் இருந்தேன். ஆனால் விபரீத முடிவுக்கு வர சந்தர்ப்பமில்லை. நான் என்ன? ஆண்டவன் மீதும், அவனுடைய இறுதி வேதத்தின் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கும் எவருமே இம்முடிவுக்கு வர முடியாது. ஏனென்றால் பாபா மீதுள்ள பக்தியை விட எத்தனையோ மடங்கு அதிகமான பக்தியை அல்லாஹ்வின் மீதும் அவன் இறுதி வேதத்தின் மீது கொண்டிருப்பவர்கள், சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் உலகத்தில் அதைவிட முக்கியம் முஸ்லிம்களுக்கு வேறு இல்லை எனலாம்.

அவ்வேதத்தில் வேதனைகளைப் பற்றியும், தற்கொலையைப் பற்றியும் விரிவாகக்கூறப்பட்டுள்ளது. வாழ்வு வாழ்வதற்கே என்ற அடிப்படையில் அது அமைந்துள்ளது. சோதனைகளை புன்முறுவலோடு சகித்து மீளுபவர்களின் பதவி உயர்ந்து கொண்டே இருக்கிறது என்று அது கூறுகிறது. அவர்களின் வெற்றி சமீபித்துக் கொண்டிருக்கிறது என்று அது கூறுகிறது. எனவே முஸ்லிம்களின் தனிமை தவறான முடிவுக்கு கொண்டு செல்ல முடியாது. அப்படியும் நடக்கிறதே என்றால் அவர்களின் உறுதியும் நம்பிக்கையும் தளர்ந்திருக்கிறது

என்றுதான் சொல்லவேண்டும். அத்தகையவர்கள் இருப்பதை விட இறப்பதே மேலல்லவா? ஆண்டவன் மீதும் அவன் இறுதி வேதத்தின் மீதும் நம்பிக்கையில்லாத முஸ்லிம்கள் வாழ்ந்து தான் என்னவாம்!

நான் எழுந்து கதவுகளை மூட முயன்றேன். ஹோட்டல் பையன் இடைமறித்து மரியாதையாக நின்றான். என்ன என்றேன். ''பகல் சாப்பாடு கொண்டுவரட்டுமா?'' என்று கேட்டான். எனக்கோ ஒன்றும் வேண்டாம் போலிருந்தது. வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். அவன் போகவில்லை. அவன் தன் ''பாக்கெட்டி'' லிருந்து ஒரு விஸிட்டிங் கார்டை கொடுத்துவிட்டு நகர்ந்தான். அந்த கார்டில் ''மாக்ளியாட் பிரெஸ் கரஸ்பாண்டெண்ட்'' என்று மட்டும் இருந்தது. திருப்பிப் பார்த்தேன். ''நான் தங்களைக் காண வந்தேன். தாங்கள் இல்லை. மாலை நாலரை மணிக்கு சந்திக்கலாமென திரும்புகிறேன்'' என்று எழுதப்பட்டிருந்தது. அப்பொழுது மணி மூன்றேமுக்கால் ஆகிவிட்டது. இன்னும் முக்கால் மணி நேரத்தில் அவர் வந்துவிடக் கூடுமாதலால் போய் ஈஸி சேரில் சாய்ந்துவிட்டேன்.

நான் நாலேகாலுக்கெல்லாம் உடைகளை மாற்றிக் கொண்டு தயாராகிவிட்டேன். சரியாக நாலு முப்பது மணிக்கு மிஸ்டர் மாக்ளியாட் வந்துவிட்டார். இருவரும் மாலை டீயை குடித்துக் கொண்டே பேசலானோம். அவர் தாம் சந்திக்க வந்த விபரத்தைக் கூற ஆரம்பித்தார். அவர் அயர்லாந்து தேசத்தை சேர்ந்தவர். ஒரு வாரத்திற்கு முன்பு தான் அவர் கராச்சி வந்திருக்கிறார். பாக்கிஸ்தான் அரசாங்கம் பாபாவின் வாழ்க்கை சரித்திரத்தை எழுத தீர்மானித்திருந்தது. அந்த சேதி மேல் நாடுகளில் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. பாபா மற்ற தலைவர்களைப் போல சுய சரித்திரத்தையோ, வாழ்க்கைக் குறிப்புகளையோ எழுதி வைக்கவில்லை அவருடைய வாழ்க்கை குறிப்புகள் அனைத்தும் அவரின் சொந்த தங்கை பாத்திமா ஜின்னாவுக்கும் கூட தெரியாது. பாபா கடமையாகக் கருதியே வாழ்க்கையை நடத்தியிருக்கிறார்; ஆதலால் அவர்களின் அரிய சாதனைகள் எல்லாமே எல்லோருக்கும் தெரியாமலிருக்கிறது ஒருவருக்கு தெரிந்தது இன்னொருவருக்குத் தெரியவில்லை. தெரியாமலே போன பல சாதனைகள் ஒருபுறமிருக்க, தெரிந்தவைகள் கூட சிதறி கிடக்கின்றன. அவைகளை சேகரிக்கும் பணியில் மேல் நாட்டு நிருபர்கள் பலர் ஈடுபட்டிருக்கின்றனர்; ஆங்காங்கே பலரை சந்தித்து ஆதாரப்

பூர்வமான சேதிகளை திரட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் மாக்ளியாட்டும் ஒருவர். நான் கராச்சிக்கு வந்திருக்கிறேன் என்ற சேதி கிடைத்தவுடன் நான் ஏதாவது பயனுள்ள சில சேதிகளை கொடுத்துதவக் கூடும் என்று எண்ணி என்னிடம் வந்திருக்கிறார்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பாபாவின் வாழ்க்கை சரித்திரத்தை மேல் நாட்டவர் திரட்டுகிறார்களே என்பதால் அல்ல. அவர் உலகத்தலைவர்களுள் ஒரு முக்கியமான தலைவர் என்று அவரை மதிக்கிறார்கள். அம்முறையில் அவர்கள் அவரின் வாழ்க்கை சரித்திரத்தை திரட்டுகிறார்கள். அது ஆச்சரியத்திற்குரியது அல்ல. ஆனால் அவரின் வாழ்க்கை குறிப்புகளை நானே தெரிந்துகொள்ள ஒவ்வொருவரையும் சந்தித்துக் கொண்டிருக்கும்போது என்னைத் தேடி ஒருவர் வந்தாரே என்பதுதான். இருந்தாலும் சிறு துளி பெரு வெள்ளம் போல நான் அறிந்துள்ள சில குறிப்புகளையும், சாதனைகளையும் கொடுத்துதவுவதென தீர்மானித்தேன். நான் பாபாவின் ட்ரைவராக இருந்த முஹம்மத் ஹனீப் ஆஜாதை சந்திக்கவிருக்கும் சேதியையும் சொன்னேன்.

அவர் துடியாக துடித்தார். எப்படியாவது தன்னையும் அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். என் நிலை தர்ம சங்கடமாகிவிட்டது அவன் சந்திப்புக்காக நான் பட்டபாடே பெரும்பாடாகி விட்டது. இவரையும் அழைத்துக்கொண்டு போவது சரிதானா என்ற யோசனையில் நான் ஆழ்ந்துவிட்டேன். வெறும் பேட்டியாக இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் அன்றுதான் பாபா மஜாரில் எதிர்பாராமல் சந்தித்த அவன் பகல் சாப்பாட்டிற்கு அழைத்துவிட்டான். இருந்தாலும் அவருக்கு உதவி புரிய வேண்டுமென்று எனக்கு தோன்றியது. ''காலை 9 மணிக்கு டெலிபோன் செய்கிறேன்'' என்று அவரிடம் வாக்களித்து விட்டேன்.

மிஸ்டர் மாக்ளியாட் வெறும் பத்திரிகை நிருபர் மட்டுமல்ல. ஒரு பெரும் கல்விமானும் கூட. நல்ல அழகான ஆங்கிலத்தில் அவர் பேசினார். சாதாரண வெள்ளையர்களைப் போலல்லாமல் உச்சரிப்பு மிக அழகாக இருந்தது. பேச்சுவாக்கிலேயே ''ஜின்னா ஆங்கிலம் பேசுவதில் தனி அழகு உண்டு. ஏனென்றால் அவர் ஆங்கில மொழியை இயற்றுகிறார்'' என்றார். அவருடைய கருத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ''ஹிமேக்ஸ் இங்கிலிஷ்'' என்று

அவர் சொன்னது எனக்கு புரியாததில் வியப்பில்லை. என் நிலையை அவர் புரிந்துக்கொண்டார். அவர் அதை விரிவாக விளக்கி வைத்தார்.

''மற்றவர்களைப் போலெல்லாம் மிஸ்டர் ஜின்னு ஆங்கிலத்தில் பல புதிய வார்த்தைகளை சேர்த்திருக்கிருர். அவர் கேள்விகளுக்கு பதில் சொல்லும் முறையே அலாதியான தன்மை வாய்ந்தது. அவர் நா பேசுவதில்லை. சிந்தனை தான் பேசியது. எப்படி என்ருல் அவர் கேட்கும் கேள்விகளுக்கு கேள்வி முடியும் முன்பாகவே பதில் சொல்லுவார். நாம் எல்லாம் யோசிக்க ஒரு சில விநாடிகளாவது ஆகும். ஆனுல் அவரிடம் அப்படி இல்லை. மின்னல் வேகத்தில் பதில்கள் வரும்.

உதாரணமாக ஒரு திட்டத்தை தகர்த்தெறிவது என்பதற்கு புதுமையான ஒரு வார்த்தையை அவர்தான் பிரயோகித்தார் '' டார்பிடோ '' என்ற வார்த்தையை அவர்தான் சாதாரண வழக்கில் கொண்டுவந்தார். எதிரிக்கு விரோதமாக நிதியை திரட்டுவதற்கு ''சில்வர் புல்லெட்ஸ்'' (வெள்ளித் தோட்டாக்கள்) என்ற பதத்தை பிரயோகித்தார். இதுபோல 'வயர்புல்லர்' 'பொலிடிகல் ஆர்பன்' 'ஷோபாய்' 'டைரக்ட்ஆக்ஷன்' இதுபோன்ற பல புதிய வார்த்தைகளை அமைத்து ஆங்கில மொழிக்கு கொடுத்திருக்கிருர். இவ்வார்த்தைகள் இன்று மேல் நாடுகளில் பிரபல்யமாக பிரயோகிக்கப்படுகின்றன.

கேள்விகளுக்கு பதில் அளிப்பதும் இப்படித்தான். ஒரு முறை லண்டனில் நடந்த நிருபர்கள் மாநாட்டில் நான் ஒரு கேள்வியை கேட்டேன். 'நீங்கள் பாக்கிஸ்தான் கோரிக்கையை விளக்கி வைக்கவில்லை என்கிருர்களே, இன்று விளக்குங்களேன்' என்றேன். அவர் திடீரென்று அழகான வார்த்தைகளில் முட்டாளாக்கிவிட்டார். 'நீங்கள் வாத்தின் முதுகில் தண்ணீரை ஊற்றிக்கொண்டிருக்கக் கூறுதீர்கள்'' என்று பதிலளித்தார். வாத்தின் முதுகில் எவ்வளவுதான் தண்ணீர் ஊற்றினுலும் அது வழுக்கி வழியுமே தவிர தங்காது. அதுபோன்றே வேண்டுமென்றே பாவனைசெய்வோருக்கு நான் எவ்வளவுதான் விளக்கினுலும் புரியாது என்பதை வெகு அழகான வாக்கியத்தில் கூறிவிட்டார்.''

இப்படி வெகுநேரம்வரை பாபாவை தானும் மற்றவர்களும் எப்படி புரிந்து போற்றுகிருர்கள் என்பதை விளக்கிக்

கொண்டிருந்தார். இவைகளையெல்லாம் விளக்கிவிட்டதுடன் அவர் சும்மா இருக்கவில்லை. '' ஆதலால்தான் அவருடைய சரித்திரத்தை ஒரு இங்கிலீஷ்காரர் எழுதவேண்டும் என்று நான் அபிப்ராயப்படுகிறேன் '' என்று கூறினர். மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த நான் '' அந்த பெருமையை நீங்களே எடுத்துக் கொள்ளாதீர்கள். இங்கிலீஷ் காரர்களுக்குத்தான் இங்கிலீஷ் சொந்தமல்ல என்பதற்கு பாபாவே ஒரு உதாரணமிருக்கும்போது அவரைப் போன்ற ஒரு மொழி வல்லுனர் இங்கேயே எழுதினல் அழகாக அமையத்தான் செய்யும் '' என்றேன். ஒரு பெரும் சிரிப்போடு அவர் 'அது சரி' என்று பதிலளித்தது எங்களை அத்தியந்த நண்பர்களாக்கிவிட்டது. நான் கராச்சியைவிட்டு கிளம்பும்வரையில் அவர் என்னுடனேயே இருந்தார்.

மிஸ்டர் மாக்ளியாடின் பேச்சுகளை ரசித்ததிலிருந்து அவர் இந்தியத் தலைவர்களைப்பற்றி நிறைய அறிந்திருக்கிறார் என்ற உண்மை புலனாயிற்று. அதிலும் குறிப்பாக நேரு, பாபா, வல்லபாய் பட்டேல், லியாகத் அலிகான் இவர்களைப்பற்றிய பல குறிப்புகளை அவரிடமிருந்து என்னல் தெரிந்துகொள்ளமுடிந்தது. அநேகமாக மேல்நாட்டு நிரூபர்கள் இந்தியத் தலைவர்களை பிரபல்யப்படுத்துவதில்லை. இந்தியன் என்றாலேயே தாழ்வாகக் கருதும் மனோபாவம் அவர்களிடமிருக்கிறது. தங்களுக்கு சாதகமாக உலக அரசியல் சம்பந்தமாக எதையாவது சொல்லியிருந்தாலொழிய அவர்களுக்கு முக்கியத்துவமளிப்பதில்லை இந்தியா சுதந்திரமடைந்த பிறகு இந்நிலை மாறிவிட்டது. சுதந்திரம் கிடைத்த பிறகும் சுமார் இரண்டு மூன்று வருஷகாலம், இந்த நிலை அவ்வளவு அதிகமாக இல்லாதிருந்தது என்று சொல்லலாமே தவிர அறவே அப்படி இருந்ததில்லை என்று சொல்லமுடியாது.

ஆனல் தோழர் மாக்ளியாட் இதற்கு நேர்மாற்றமானவர். இந்திய உபகண்டத்தின்மீதும், மக்கள்மீதும், நல்ல மதிப்புக்கொண்டிருப்பவர். இந்திய அரசியல் சர்வசாதாரணமாக சொந்த நாட்டு அரசியலைப்போல அவருக்குதெரிந்திருந்தது எனக்கு. 1916-ல் லக்னேவில் காங்கிரசுக்கும்—லீகுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது; அந்த ஒப்பந்தத்தில் காங்கிரஸ் முஸ்லிம்லீகை முஸ்லிம்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனம் என்று ஒப்புக்கொண்டது என்றுமட்டும்தான் தெரிந்திருந்தது. ஆனல் மிஸ்டர் மாக்ளியாட் அந்த ஒப்பந்தத்தின் ஒவ்வொரு ஷரத்தையும் தம் விவாதத்திற்கு

ஆதரவாக பயன்படுத்திக்கொண்டார். ஆதலால் அவர்மீது எனக்கு ஒருவித அன்பும் அநுதாபமும் பிறந்தது.

ஆனால் அவரிடம் எனக்குப் பிடிக்காத ஒரு குணம், அமைந்திருந்தது. இடையிடையே அவர் என் தேசபக்தியை சோதித்தவண்ணமே இருந்தார். அவர் சோதிப்பதில் எனக்கு ஆட்சேபனை இருந்ததில்லை. ஆனால் அவர் அது சம்பந்தமாக கேட்கும் முறை எனக்குப் பிடிக்கவில்லை. உதாரணமாக அவர் பேச்சுவாக்கிலே 'எப்படி இருந்தாலென்ன?' உங்கள் சர்க்காருக்கு மிஸ்டர் ஜின்னா என்றால் உள்ளூர பயம்தான். மிஸ்டர் ஜின்னா உயிரோடு இருக்கும்வரையிலே ஹைதராபாத் சமஸ்தானத்திலே போலீஸ் நடவடிக்கை எடுக்க துணிவு ஏற்படவில்லையே!' என்றார். என் வாழ்நாளிலேயே எனக்கு அவ்வளவு ஆத்திரம் பொங்கியதா என்று எனக்கு ஞாபகமில்லை; எனக்கு அவ்வளவு ஆத்திரம் பொங்கிவிட்டது. எனக்கு பாபாமீது அளவுகடந்த பக்தியும் அபிமானமும் இருக்கிறது என்பதைக்கொண்டு நான், தாய் நாட்டுப்பற்றில்லாதவன் என்று யாரும் முடிவுசெய்ய முடியுமா? அவர் அப்படி நினைத்தாரோ என்னவோ அந்த சமயத்தில் எனக்குப் புரியவில்லை. நானும் என் ஆத்திரத்தை அடக்கத்தான் முயன்றேன். ஆனால் என்னால் முடியாமல் போய்விட்டது.

"இதோ பாருங்கள் மிஸ்டர் மாக்ளியாட், நீங்கள் இப்படி நினைத்திருந்தால் இப்பொழுதே அந்த தப்பபிப்ராயத்தை மாற்றிக்கொள்ளுங்கள். பாபாவுக்கும் ஹைதராபாத் சமஸ்தானத்திற்கும் என்ன சம்பந்தம்? ஹைதராபாத் சமஸ்தானம் இந்தியா — பாக் — பிரிட்டிஷ் முக்கூட்டு மாநாட்டுத் தீர்மானத்தின் பிரகாரம் பாக்கிஸ்தானோடு இணைந்துவிட அபிப்ராயம் அறிவித்திருந்தால் தாங்கள் சொல்லுவதிலே ஏதாவது தொடர்பு இருக்கலாம். ஆனால் ஹைதராபாத் சமஸ்தானம் இந்தியாவுடனும், பாக்கிஸ்தானுடனும் இணையாமல் தனி சுதந்திர ஆதிபத்திய நாடாக இருக்க அபிப்ராயத்தை தெரிவித்தது. இதற்கும் பாக்கிஸ்தானுக்கும் என்ன சம்பந்தம்? பாபாவுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் சொல்லுவதைபோல நடந்திருக்குமானால் பாபா இறக்கும் நேரமும், தேதியும் முன்கூட்டியே இந்திய சர்க்காருக்கு தெரிந்திருக்கவேண்டும் இல்லையானால் அதே இரவில் நாட்டிலே சிதறியிருந்த பட்டாளத்தை ஹைதராபாத் எல்லையில் செலுத்த எப்படி இயலும்? ஆதலால் முன்கூட்டியே இந்திய சர்க்கார் ஆயத்தமாயிருந்தது.

**அன்று பாபா இறக்காமலிருந்தாலும் போலீஸ் நடவடிக்கை எடுக்க தீர்மானம் ஆயிருந்தது என்று உங்களுக்குப் புரியவில்லையா? இப்படிப்பட்ட கற்பனைக் கதைகள் எனக்கு அறவே பிடிக்கவில்லை 'நான் ஒரு இந்தியப் பிரஜை என்பதை மறந்திருப்பது துரதிர்ஷ்டம் மிஸ்டர் மாக்ளியாட்'.**

இவ்வாறு ஒரு குட்டி பிரசங்கமே செய்துவிட்டேன். உண்மையிலேயே மிஸ்டர் மாக்ளியாட்டிற்கு என் சொற்கள் உறுத்திவிட்டன. அவர் வெட்கத்தால் சிவந்துபோய்விட்டார். அவர் முகமாற்றத்தைக் கண்டதும் எனக்கே எப்படியோ ஆய்விட்டது. மிஸ்டர் மாக்ளியாட் அளித்த பதில் என் ஆத்திரத்தை ஒரே அடியில் அடக்கிவிட்டது. அவர் வேறு ஒன்றும் சொல்லவில்லை. 'சார் தயவுசெய்து மன்னியுங்கள் சார்.'

அதற்குப் பிறகு என்னிடம் விவாதித்தபோது, அவர் விவாதத்தில் மிகவும் நேர்மை காணப்பட்டது. அவருடைய விவாதம் தவறான முறையில் அமைந்துவிட்டது. அதாவது ஒரு இந்திய முஸ்லிம், பாக்கிஸ்தான் பிதாவான பாபாவின்மீது அன்பு செலுத்திக்கொண்டு தாய் நாட்டின்மீது பற்றுக்கொண்டிருப்பது சாத்தியமா" என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டதாக அவர் விவாதத்திலிருந்து தெரியவந்தது. நேரிடையே அவர் அப்படி கேட்கவில்லை என்றாலும் அவருடைய உள்நோக்கம் எனக்குப் புரிந்துவிட்டதால் நானும் அவருடைய சந்தேகங்களை தெளிவாக்குவதில் கவனமாகவே இருந்தேன். அவர் கேட்டார் — நானும் தெளிவாக பதில்களை சொன்னேன்.

"இந்தியாமீது பாக்கிஸ்தான் படையெடுத்தால் இந்திய முஸ்லிம்கள் என்ன செய்வார்கள்?"

"பாக்கிஸ்தானை எதிர்த்துப் போராடுவோம்."

"நீங்கள் சிருஷ்டித்த பாக்கிஸ்தானையா?"

"நிச்சயமாக நாங்கள் சிருஷ்டித்த பாக்கிஸ்தானையேதான்."

"பின் ஏன் பாக்கிஸ்தானை சிருஷ்டித்தீர்கள் ?"

"பெருவாரியாக முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் அவர்களின் கலை, நாகரிக, ஜனநாயக பண்பாடுகளை அடிப்படையாகக்கொண்ட சட்டரீதியான ஆட்சி நடை பெற; இந்தியாவை ஆக்ரமிக்க அல்ல."

"பாக்கிஸ்தான் ஆப்கானிஸ்தானை ஆக்ரமித் தால்.........?"

"எங்களுக்கு சட்டம் இடங்கொடுத்தால் அதை யும் எதிர்ப்போம். எங்கள் நோக்கம் உலகத்தில் எங்கு ஆக்ரமிப்பு நடந்தாலும் எதிர்க்கவேண்டும் என்பது தான்."

"பின் ஏன் இந்தியா ஹைதராபாதை ஆக்ரமித்த போது இந்திய சர்க்காரை ஆதரித்தீர்கள் ?"

"ஹைதராபாத் சமஸ்தானம் இந்தியாவின் ஒரு பாகம். அங்குள்ள மக்களின் அபிலாஷைகளுக்கு விரோதமாக சிலர் இருந்தார்கள். அந்த சிலர் இந்திய பாகமான ஹைதராபாதை ஆக்ரமித்திருந்தார்கள். அதிலிருந்து தன் எல்லையை விடுவித்துக்கொள்ளவே இந்தியா நடவடிக்கை எடுத்தது — ஆக்ரமிக்கவில்லை."

'அப்பொழுது நீங்கள் பாபாவை மதிக்கவில்லை.'

'மதிக்கவில்லையா ? அவரையே பின்பற்றுகிறோம். அவர் காட்டிய வழியிலேதான் நாங்கள் செல்ல முடிவு செய்திருக்கிறோம். அவர் எங்களுக்கு சரியான வழியை காட்டியிருக்கிறார். நீங்கள் மேல்நாட்டுப் பத்திரிகை களில் இருட்டடிப்பு செய்திருக்கலாம்.'

'என்ன சொல்லியிருக்கிறார் ?'

'அவர் கடைசியாக புதுடில்லியைவிட்டுக் கிளம்பும் போது இந்திய முஸ்லிம்களுக்கு அவர் செய்த உப தேசத்தை படித்துப்பாருங்கள். இந்திய முஸ்லிம்களே! நீங்கள் இதுவரையில் பாக்கிஸ்தானை சிருஷ்டிப்பதில் என்னுடன் தோளோடு தோள் நின்று போராடியிருக்

கிறீர்கள். நான் உண்மையை சொல்லவேண்டு மானுல் நீங்களே இந்த பாக்கிஸ்தான் வெற்றிக்கு காரணமாக இருந்திருக்கிறீர்கள். இன்று உங்களை விட்டு நான் 7 கோடி முஸ்லிம் சகோதரர்களையும் பிரித்துக்கொண்டு போகிறேன். நீங்கள் இங்கேயே வாழப்போகிறீர்கள். இந்நாட்டின் விசுவாசமுள்ள பிரஜைகளாய் வாழ்ந்து, இதே நாட்டிற்காக மடியவும் துணிந்து வாழுங்கள். நீங்கள் வெற்றியடைவீர்கள்." இதைத்தான் அவர் கூறினுர். அவர் காட்டிய வழி யிலேதான் இன்று நடக்கிறேம்.'

இதைத் தொடர்ந்து பல கேள்விகளைக் கேட்டார். இறுதியில் சிறிது தாழ்ந்த குரலில் இப்பொழுதுதான் முஸ் லிம்களை நான் புரிந்துக்கொண்டேன். ரஷ்யாவிலும் அமெ ரிக்காவிலும், எகிப்திலும், இங்கிலாந்திலும் உலக முஸ்லிம் களின் ஐக்யத்தை வளர்த்துக்கொண்டே எப்படி நாட்டின் விசுவாசிகளாய் வாழ முடிகிறது என்ற என் சந்தேகம் இன்றுஎனக்கு நிவர்த்தியாகயிருக்கிறது. நிச்சயமாக நீங்கள் உலகைவெல்லக் கூடியவர்களே!' என்ருர். அவர் இதைக் கூறிக்கொண்டே எதிரே தொங்கிக்கொண்டிருந்த பாபாவின் படத்தை மிகப்பரிவுடன பார்த்தார். அவருடைய பார்வை யில் சோகமும் பக்தியும் கலந்திருந்தன. பாபாவை பன் முறை பார்த்திருந்த அவரின் அந்த பார்வையில் ஒரு புது மஹானை பார்ப்பதுபோன்ற பாவம் தெரிந்தது. ஆம்! அன்று அவர் ஒரு புது தெளிவோடல்லவா பாபாவை பார்க்கிருர்!

மிஸ்டர் மாக்ளியாட் மட்டுமென்ன, பாபாவின் புகைப் படத்தைப் பார்க்கும் ஒவ்வொருவர் முகத்திலும் பரிவும் அன்பும் கலந்து உறவாடத்தான் செய்கிறது. அவருடைய பரம விரோதிகளிடம்கூட இந்த உயரிய பண்பை நாம் காண முடியும். மற்ற எதிரிகளைப்பற்றி கூறுவானேன்? நானே ஒரு காலத்தில் அவருடைய விரோதியாயிருந்தேன். அவ ருக்கு விரோதமான கருத்துக்களை நான் வெளியிட்டதினு லேயே காங்கிரஸ் வட்டாரத்தில் முக்கியஸ்தனுனேன். அப் பொழுதெல்லாம் பாபாவின் கருத்துக்களை நான் எதிர்ப்பதி லேயே கண்ணும் கருத்துமாக இருப்பேன். நான் காங்கிரஸ் தலைவர்களிடம் பாபாவைப்பற்றி குறிப்பிட நேர்ந்தபோ தெல்லாம் அவரை சிறிது நாசூக்காக இகழ்ந்து பேசுவது உண்டு. அப்படிப் பேசும்போது அவர்கள் மகிழ்வார்கள்

என்ற அற்ப புத்தியும் கொண்டதுண்டு. ஆனால் அச்சொற்கள் நான் எதிர்பார்த்ததற்கு விரோதமான பலன்களையே சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றன. என்னைப் பொறுத்த வரையிலே நான் காங்கிரஸ் தலைவர்களிடம் நெருங்கிப் பழகியதுண்டு. ஆனால் அவர்களில் எவரேனும் ஒருவர் பாபா தேசத்துரோகி, வெள்ளை ஏகாதிபத்தியத்தின் தாசர் என்று அங்கீகரித்ததில்லை. மற்றவர்கள் அச்சொற்களை பிரயோகிக்கும்போது அவர்களின் உள்ளத்திலே ஊற்றெடுக்கும் அருவருப்பு அவர்களின் முகங்களிலே பிரதிபலிப்பதையே நான் கண்டிருக்கிறேன்.

இன்றுகூட பலருக்கு ஞாபகமிருக்கும். அக்காலத்தில் லார்டு அமெரி கலோனியல் செக்ரட்டரியாக இருந்தார். அவருக்கும் பாபாவுக்கும் இடையே இரகசிய கடிதத் தொடர்பு இருந்ததாக பம்பாயின் ஒரு பிரபலப் பத்திரிகை ஒரு பயங்கரமான செய்தியை வெளியிட்டது. வெறும் செய்தியை மட்டும் பிரசுரித்திருந்தால் பரவாயில்லை. லார்டு அமெரி பாபாவுக்கு எழுதியதுபோலவும், பாபா லார்டு அமெரிக்கு கடிதம் எழுதியதுபோலவும், அக்கடிதங்களின் போட்டோ நகல்களை தயாரித்துப் பிரசுரித்திருந்தது. நாடு அல்லோலகல்லோலப்பட்டது. அரசியலிலே பால பாடம் படித்திருந்தவர்களெல்லாம் அக்கடிதங்களைப் பார்த்து தம் பிரச்சார பாணியை மாற்றிக்கொண்டிருந்தனர். உலகமே பம்பாய், மலபார் ஹில்ஸ், மௌண்ட் ப்ளஸன்ட் மாளிகையின் வாசற்படிகளை நோக்கிக்கொண்டிருந்தது. இதற்கு பாபா என்ன அறிக்கை வெளியிடப் போகிறார் என்று எல்லோருமே எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். பத்திரிகை நிருபர்கள் அவரின் மாளிகையின் முன்னால் கூடிநின்று காத்துக்கிடந்தனர். ஆனால் அந்த மௌண்ட் பிளஸன்ட் உறுதியான கட்டடத்திலிருந்த பாபாவும் உறுதி தளராதவாறே இருந்தார். ஆனால் அவர் மாளிகையின் முன்கூடி நின்றது அவருக்கு அருவருப்பாக இருந்ததுபோலும். தன் காரியதரிசியை விட்டு கூடி இருப்பவர்களில் எவரையாவது வரச் சொன்னார். எல்லோரும் முண்டினார்கள். ஆனால் ஒரே ஒரு அதிர்ஷ்டசாலி நிருபர் மட்டும் உள்ளே நுழைய முடிந்தது. அவரை வழக்கம்போல "என்ன விசேஷம்? ஏன் கூடி நிற்கிறீர்கள்?" என்று கேட்டார் பாபா! நிருபர் பயந்தவாறே விஷயத்தைக் கூறினார். உலகத்தையே அதிரச் செய்த அந்த சேதி அவரை ஆச்சரியத்தில்கூட ஆழ்த்தவில்லை. 'அவை எல்லாம் நான்சென்ஸ்' என்று ஒரே வரியில் பதில் கூறிவிட்டு, கையில் இருந்த சுருட்டை வாயிலே

வைத்துக்கொண்டு உள்ளே நடக்கலானார் பாபா! அவ்வளவு தான் அவர் சொன்னது. அதற்குமேல் அவர் சொல்லவும் விரும்பவில்லை போலும்;

அந்த சேதி பத்திரிகைகளிலே முதல் பக்கத்திலே பிரசுரமாயின. அந்த சேதியைக் கேட்ட வார்தா நிருபர் காந்திஜீயிடம் ஓடோடி வந்தார். 'மிஸ்டர் ஜின்னா இப்படி சொல்லி விட்டாரே! தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்' என்று கேட்டார் நிருபர். காந்திஜி தன் பொக்கை வாயைத் திறந்து குலுங்கக் குலுங்கச் சிரித்தார். பைத்தியக்கார உலகத்தைக் கண்டு எள்ளி நகையாடுவதுபோலிருந்தது அந்த சிரிப்பு. அச்சிரிப்புனூடே ஒரு சில வார்த்தைகளே வெளியாயின. "காயிதே ஆஜம் தேசபக்தியில் யாருக்கும் சளைத்தவரல்ல. அவர் மீது இத்தகைய குற்றச்சாட்டுகளை சுமத்துவது அபத்தம்".

அன்று நினைத்திருந்தால் காங்கிரஸ் தலைவர்கள் அதை வேறு ரூபத்தில் மாற்றி அமைத்திருக்கலாம். நானும் அப்படித்தான். ஆனால் தூய்மையான எண்ணத்தையும், உறுதியும் கொண்ட பாபா மீது அவர்கள்கூட அபத்தமாகக் கூறுவதை விரும்பவில்லை அப்படி கூறுபவர்கள் மீது வெறுப்பு கொண்டார்கள். பாபாவை நினைக்கும்போதெல்லாம் காங்கிரஸ் தலைவர்கள் ஒரு பெருமூச்சு விடுவார்கள். அந்த பெருமூச்சு வார்த்தையளவில் பிரதிபலித்திருந்தால் அது இதுவாகத்தான் இருக்க முடியும் 'ஒரு தலைசிறந்த தேசபக்தர், கர்ம வீரர், தியாகப் புருஷர் எங்கள் எல்லையைவிட்டு வெளியே போய்விட்டாரே!"

ஆம்! அதிக நாட்கள்தான் ஆய்விட்டன. ஆனால் இதயத்தைத் தொடும் அந்த சம்பவம் என் கண் முன்னே இன்று நடந்ததுபோலவே இருக்கிறது. பாபாவின் அரசியல் விரோதிகள் தள்ளாத வயதில் அவருடைய உயிரைக் குறிவைத்தார்கள், அதன் காரணமாக ஒரு முரடன் காத்திலே கத்தி ஏந்தி பாபாவின் தொண்டையைக் குறிவைத்தான். கத்தி பாய்ந்துவிட்டது. ஆனால் பாபாவின் உறுதியை அதனால் பிளக்க முடியவில்லை. உயிரைக் குறிவைத்த கத்தி அவர் இரத்தத்தை ருசி பார்க்க முடிந்ததே தவிர உயிரை பலியிட முடியவில்லை. ஆனால் அவரின் உடலிலிருந்து சில துளி இரத்தத்தை இந்த பாரதத் திருநாடுகூட குடித்து தன் தாகத்தை தணித்துக்கொண்டது. இந்த சம்பவம் நடந்த போது தேசத் தலைவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறைகளுக்கு இரையாகி இருந்தார்கள்.

காலமாறுதலினால் காங்கிரஸ், முஸ்லிம் லீக் தலைவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்த கவர்னர் ஜெனரலின் அழைப்பின் பேரில் சிம்லாவுக்கு சென்றார்கள். பாபா சிம்லாவில் ஸிஸில் ஹோட்டலில் தங்கி இருந்தார். அங்குதான் நேருஜீ போன்ற தலைவர்களும் தங்கியிருந்தார்கள். உலகம் அன்று காங்கிரசும், லீகும் இரு துருவங்கள் என்று நினைத்திருந்தது. அன்றைய சூழ்நிலையில் அது மிக உண்மைதான். ஆனால் அவை எல்லாம் கொள்கை அளவிலே அன்றி வேறல்ல என்பதை அறியாமல் இருந்தது. அன்று இந்தியாவின் இரு குரல்களுக்குத்தான் அளவற்ற மதிப்பிருந்தது. ஒன்று பாபா! மற்றொன்று நேருஜி! இவ்விருவரையும்தான் உலகத்தின் இரு துருவங்கள் என அன்று உலகங் கூறிக்கொண்டு இருந்தது.

பாபா தன் அறையில் ஏதோ ஒரு புத்தகத்தைப் புரட்டி கொண்டிருந்தார் ஹோட்டல் பாய் ஏதோ வேலையாக வந்தவன் அறைக் கதவுகளை சரியாக மூடவில்லை. அவன் உலகத்திற்கு ஒரு பெரும் உண்மையை எடுத்துக்காட்டவே அப்படி செய்தானோ என்னவோ யார் கண்டார்கள்? கதவு ஒரு சிறிது திறந்திருந்தது. வெளியிலிருந்து பார்க்கும்போது பாபாவின் முழு உருவம் தெரிந்துகொண்டிருந்தது. அவர் புகைத்துக்கொண்டிருந்த சிகரெட் புகை அவரது எண்ணங்களை கண்டறிய மேலே சுருண்டு சுருண்டு போய்க்கொண்டு இருந்தது. எதிர்பாராதவிதமாக நேருஜி அவ்வழியே சென்றார். எதிர்பாராதவிதமாக சென்றதே போல அவருடைய பார்வையும் எதிர்பாராதவிதமாக பாபாவின் அறை பக்கம் சென்றது. பாபாவின் தோற்றத்திற்கும் நேருஜீயின் இதயத்திற்கும் என்ன தொடர்போ யார் கண்டார்கள். நடையிலே நேருஜி எவ்வளவு சுறுசுறுப்பாக காணப்படுகிறாரோ அதேபோல நடையை நிறுத்துவதிலும் சுறுசுறுப்பாக இருந்தார். பால்போலிருந்த அவர் முகம் இரத்த சிவப்பேறிவிட்டது. அவர் நெற்றியிலே வியர்வை முத்துபோல் படர்ந்து நின்றது. எதையோ புரட்டிக்கொண்டிருந்த பாபாவும் நிமிர்ந்து பார்த்தார். அவருடைய வாயிலிருந்த சிகரெட் மின்னல் வேகத்தில் கைக்கு வந்துவிட்டது. இவையெல்லாம் சில விநாடிகளில் நடந்துவிட்டன.

நேருஜீ விடுவிடுவென்று உள்ளே நுழைந்தார். குஷன் நாற்காலியிலே வீற்றிருந்த பாபாவைக்கட்டி அணைத்துக்கொண்டு அவர் எழுந்திருக்க முயன்றதை தடுத்துவிட்டார். பாபா நேருஜீயின் முதுகை தட்டிக்கொடுத்தபோது பல நாள் பிரிந்திருந்த தந்தையும் மகனும் சந்திப்பதுபோன்ற ஒரு உணர்ச்சி பாவம் தொனித்தது. பாபா நேரு

ஜீயை கட்டி அணைத்து தன் பக்கத்திலே உட்கார வைத்தார். நேருஜீ பாபாவின் கழுத்தைத் தடவிப் பார்த்தபோது அவரின் கண்கள் கலங்கி இருந்தன. பாபாவும் கழுத்திலே இருந்த டையை பிரித்து கத்திக் காயத்தைக் காட்டியபோது கூடிப்பார்த்தவர்களின் உயிரைப் பிரிப்பது போலிருந்தது. பல நிமிஷ நேரம் அவர்கள் பேசினர்; பிரிந்தனர். அதன் மூலம் ஒரு உண்மையை அவர்கள் உலகத்திற்கு காட்டினர். கொள்கையில் வேறுபட்டாலும், மனிதாபிமானத்தில், அன்பில், ஒன்றுயிருக்கிறோம் என்பதை நிரூபித்துவிட்டார்கள்.

இதுபோல பாபாவின்மீது எல்லோருமே தனி அன்பும் மரியாதையும் செலுத்திக் கொண்டுதானிருக்கிறார்கள். அன்றுமட்டுமல்ல; இன்று கூட செலுத்துகிறார்கள். அவர் இவ்வுலகை விட்டுப்பிரிந்த பின்பும் அந்த அன்பு இதுவரைமாறியதாக நான் கொள்ளமுடியாது. ஏனெனில் அந்த அன்பு ஒரு புனித இணைப்பாக இருக்கிறது. எனவேதான் அவரின் திருஉருவப்படத்தைப் பார்த்ததும் அது தானாகவே சுடர்விட்டு எரிகிறது. மிஸ்டர் மாக்ளியாட் மட்டும் எப்படி அதற்கு விதிவிலக்காக இருக்கமுடியும்? ஆதலால்தான் அவர் பாபாவின் படத்தைப் பார்த்த போது அவர் பார்வையில் சோகமும் பக்தியும் கலந்திருந்தன. சிறிது நேரம் பார்த்தவாறே இருந்த அவர் துவண்டவர்போல நாற்காலியில் அமர்ந்தார். நானும் சாப்பாட்டிற்கு உத்திரவிட்டு விட்டுவந்து அமர்ந்தேன். ஏனெனில் அவருடன் இருப்பது நல்ல பயனுள்ள பொழுது போக்காக எனக்குத் தோன்றியது.

*மிஸ்டர் மாக்ளியாட் மிகவும் களைத்தவராய்தான் காணப்பட்டார் என்றாலும் அவர் தன் காரியத்தில் மட்டும் கண்ணாயிருந்தார். இடையிடையே தன் டைரியை எடுத்து குறிப்புகளை எழுதிக்கொண்டே இருந்தார். அதே வேலையாகத்தானே அவர் பாக்கிஸ்தானுக்கு வந்திருக்கிறார். ஆதலால் அவர் தான் பல ஆயிரம் மைல்கள் எதற்காக கடந்து வந்திருக்கிறாரோ அந்த வேலையில் அவர் ஈடுபட்டு தானே ஆகவேண்டும்? அப்படிப் பார்த்தாலும் இதர பத்திரிகை நிருபர்களை அவருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவர் மிக சுறுசுறுப்பாகவே காணப்பட்டார். அவர் டைரியில் எதையோ குறித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன்.*

*'என்ன மிஸ்டர் மாக்ளியாட் பாபாவின் வாழ்க்கை குறிப்புகளை நிறைய சேகரித்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே!' என்றேன். நான் கேட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை, ஒரு பெரும் டைரியின் கடைசி சில பக்கங்களில் அவர் குறிப்பெழுதிக்கொண்டு இருந்தார். ஆனால் அவரோ மிகவும் சலிப்படைந்தவராய்.*

'இது நிறைய எழுதியிருக்கிறேன். ஆனுல் அதனுல் பயன்?' என்ருர். ஒரு பெரிய டைரி நிறைப குறிப்பெழுதி வைத்துக் கொண்டிருந்தும் அவருக்குத் திருப்தி ஏற்பட வில்லே. ஏனென்று கேட்டபோது அவர் விளக்கம் கொடுத் தார். அந்தக் குறிப்புகளெல்லாம் வெறும் அரசியல் குறிப்பு களாகவே இருக்கின்றனவே யன்றி அவரின் தனிப்பட்ட வாழ்க்கை குறிப்புகளில்லே. அவரது அரசியல் நடவடிக்கை களே சேகரிக்க இவ்வளவு தூரம் அவர் வரவேண்டியதில்லே. லண்டன் நகரத்திலிருக்கும் டௌனிங் தெரு 10-ம் நெ கட்டடத்தில் எல்லா குறிப்புகளும் இருக்கின்றன. அவை களே எளிதாகத் திரட்டிவிட முடியும். ஆனுல் அவரோ அவரின் தனிப்பட்ட வாழ்க்கைக் குறிப்புகளுக்காக இவ் வளவு தூரம் வந்திருக்கிருர். அவருக்கு அக்குறிப்புகள் சரிவர கிடைக்கவில்லே.

இதை விளக்கும் முறையில் அவர் 'இதோ பாருங்கள் இந்த குறிப்பு, ஹானரபிள் லியாகத் அலிகான் கொடுத்த வைகளுள் ஒன்று. ஜின்னுவுடைய 14 அம்ச திட்டம்— காந்திஜி—அம்பேத்கார்.'

எனக்கு ஒன்றும் புரியவில்லே, பாபாவுடைய 14 அம்ச திட்டத்தையும், காந்திஜியையும். டாக்டர் அம்பேத் காரையும் ஒன்ருக இணைத்த குறிப்பு எனக்கு ஆச்சரி யத்தை அளித்தது. அவரிடம் நான் விளக்கிக் கூறுமாறு கேட்டேன். அவர் ஒரு சிகரெட்டை பற்றவைத்துக் கொண்டே சொல்லலானுர்.

'நான் ஹானரபிள் பிரதமரை சந்தித்தேன். நான் பாக்கிஸ்தானுக்கு வந்த காரணத்தை அவரிடம் சொன் னேன். அவர் பெரு மகிழ்ச்சியில் ஆழ்ந்தார். தன்னுலான எல்லா உதவிகளேயும் செய்வதாக உறுதி யளித்தார் அவர். பாபாவுடன் மிகவும் நெருங்கிப் பழகியவராதலால் அவ ரிடம் நிறைய குறிப்புகள் இருக்கக்கூடுமல்லவா? ஆதலால் அவைகளே கொடுத்து உதவும்படி நான் கேட்டுக்கொண் டேன். ஆனுல் துரதிர்ஷ்ட வசமாக அவராலும் என் தேவை களே பூர்த்தி செய்து கொடுக்க முடியவில்லே. அவரும் பாபாவின் அரசியல் கொள்கைகளேயும், நேர்மையையுமே விளக்கிக் கூற முற்பட்டுவிட்டார். அவர் குறிப்பிட்ட பல குறிப்புகளில் இது ஒன்று, பாபாவுடைய 14 அம்ச திட்டம். லண்டனிலே கூடிய வட்டமேஜை மாநாட்டிலே சமர்ப்பிக் கப்பட்டதுதான் உங்களுக்குத் தெரியுமே! அந்த சமயத்

தில் இந்தியாவின் சூழ்நிலையே வேறு விதமாக இருந்தது பாபா நினைத்திருந்தால் அந்த சூழ்நிலையில் இந்தியாவே தன் காலடியிலே கிடைப்பதைப் பார்த்திருக்கலாம்.

லண்டன் வட்டமேஜை மாநாடு கூடியபோது, இந்தியா வில் வாழ்ந்த தாழ்த்தப்பட்டவர்களிடையே டாக்டர் அம் பேத்காருக்கு அபரிமிதமான செல்வாக்கு இருந்தது, அந் நேரத்தை தன் சமூகத்தவர்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளுவதில் திவிரமாக முனைந்திருந்தார் டாக்டர் அம் பேத்கார். காந்திஜிக்கும் பாபாவுக்குமிடையே நிலவி யிருந்த கொள்கை வேறுபாடுகளை தன் சமூகத்திற்கு சாதக மாகப் பயன்படுத்திக்கொள்வதில் வியப்பில்லை என்ருலும் அன்று பாபா ராஜதந்திரத்தின் பெயரால் அரசியல் சூதாட் டத்தில் இறங்கி இருந்தாரானல் நாட்டின் நிலைமையே வேறு விதமாக இருந்திருக்கும். ஆனல் பாபாவுக்கு நேர் மையான, பட்டவர்த்தனமான அரசியல்தான் தெரியுமே தவிர சமயசந்தர்ப்பங்களில் நாணயக் குறைவாக நடந்து கொண்டு தன் காரியத்தை சாதித்துக்கொள்ள தெரியவே தெரியாது. அதற்கு உதாரணமாகத்தான் ஹானரபிள் பிரதம மந்திரி இக்குறிப்பைக் கொடுத்திருக்கிருர்.

பாபா 14 அம்ச திட்டத்தை சமர்ப்பித்துவிட்டார். அதே சமயத்தில் டாக்டர் அம்பேத்கார் தாழ்த்கப்பட்ட வர்களுக்கு தனித் தொகுதி தேவை என்ற கோரிக்கையை சமர்ப்பித்துவிட்டார். காங்கிரஸ் கட்சியின் நிலை தர்மசங் கடமாகிவிட்டது. இருவருக்கும் விரோதமாக காங்கிரசால் ஒன்றையும் சாதிக்க முடியாத சூழ்நிலை அன்று. முஸ்லிம் களுடைய 14 அம்ச திட்டத்தையும் டாக்டர் அம்பேத் காருடைய தனித் தொகுதியையும் ஏககாலத்தில் ஒப்புக் கொண்டு தன் செல்வாக்கை இழந்துவிட காந்திஜி தயாரா யில்லை. டாக்டர் அம்பேத்காருடைய தனித் தொகுதி கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாயிருந்தால் காந்திஜியின் ஹிந்து மதத்திற்கு அது ஒரு அபாய அறிகுறியாகிவிடக் கூடும். தனித் தொகுதியின் பெயரால் இந்து மதத்திலி ருந்து 8 கோடி தாழ்த்தப்பட்டவர்கள் துண்டித்துக் கொள் வதையோ அல்லது வெளியேறுவதையோ காந்திஜி அனு மதிக்க முடியாது. ஆனல் அதே சமயத்தில் இந்திய உப கண்டத்தில் வாழ்ந்து வந்த 9 கோடி முஸ்லிம்களின் ஒத் துழைப்பையும் இழந்துவிட முடியாது. காந்திஜியின் நிலை இருதலைக் கொள்ளி போன்றதாகிவிட்டது. எவருடைய ஆதரவைப் பெற்று எவருடைய எதிர்ப்பைப் பெறுவது

என்று விளங்கவில்லை. அன்று ஒரு இந்து சனாதனியாக இருந்த காந்திஜிக்கு இந்துமத பாதுகாப்பைத் தவிர வேறு ஒன்றும் முக்கியமாகத் தோன்றவில்லை. ஆதலால் டாக்டர் அம்பேத்காரின் தனித் தொகுதி கோரிக்கையை எதிர்த்து முஸ்லிம்களை ஆதரிப்பது என்று முடிவுக்கு வந்துவிட்டார்.

அவர் பாபாவை சந்தித்தார். அரசியல் பேரம்பேச ஆரம்பித்தார். அதாவது அன்று பாபாவின் 14 அம்ச திட்டத்தை ஒரு சிறிது மாற்றமும் இல்லாமல் அப்படியே எழுத்துக்கு எழுத்து ஒப்புக்கொள்ள அவர் சம்மதம் தெரிவித்தார். ஆனால் இதற்கு நிபந்தனையும் விதித்தார். பாபா டாக்டர் அம்பேத்காரின் தனித் தொகுதி கோரிக்கையை ஆதரிக்கக்கூடாது என்பதுதான் அந்த நிபந்தனை. இவ்விதமாக வட்டமேஜை மாநாட்டின் துருப்புச் சீட்டு பாபாவின் கைக்கு வந்துவிட்டது. அவர் நினைப்பதைப் போல ஆட்டி வைக்கும் சந்தர்ப்பம் சூழ்நிலை தானாகவே அவரிடம் வந்து விட்டது ; வலிய கொடுக்கப்பட்டது, பாபாவோ அரசியலை அறியாதவரல்ல. அவர் சமயம் போல நடந்துகொள்வது தான் ராஜதந்திரம் என்று கொண்டிருக்கவில்லை. மாறாக அது நாணயமற்ற போக்கு என்று அவர் கருதியிருந்தார். அந்த உறுதியான கொள்கையால் எதை வேண்டுமானாலும் தன் சமுதாயத்திற்காக பெற முடிகிற சந்தர்ப்பத்தை தெரிந்தே ஒன்றும் பெறாமல் உதறித் தள்ளிவிட்டார். அன்று அவர் காந்திஜியிடம் ஒளிவுமறைவின்றி பட்டவர்த்தனமாக சொல்லிவிட்டார். என்ன தெரியுமா? 'என்னுடைய 14 அம்ச திட்டத்தை நீங்கள் ஏற்றாலும் சரி ஏற்காவிட்டாலும் சரி. இவை நியாயமான கோரிக்கைகள், என் இனத்தவர்களுக்கு கிடைத்தே தீரவேண்டிய உரிமைகள், இவைகளை இன்றில்லாவிட்டாலும் நாளை, நாளை இல்லாவிட்டாலும் ஏதோ ஓர் நாளில் நீங்கள் ஒப்புக்கொண்டுத் தானாக வேண்டும். ஆனால் அந்த சலுகைகளைப் பெறுவதற்காக நான் இன்னொரு பெரும் சமுதாயத்தின் கோரிக்கையைப் பலியிட முடியாது'. வட்டமேஜை மாநாடும் பலன் இன்றி கலைந்தது.

இத்தகைய நேர்மையான ஒரு கொள்கையை அரசியலில் கடைபிடித்த தலைவர்கள் உலகத்திலேயே இருந்ததில்லை என்று நான் சொல்லவில்லை. நிறைய இத்தகைய தலைவர்கள் இருந்திருக்கிறார்கள் என்று சரித்திரங்கள் கூறத்தான் செய்கின்றன. ஆனால் இத்தகையோர் இஸ்லாமிய இனத்தவரிடையே யன்றி வேறு எந்த இனத்தவரிலும் இருந்த

தாகவோ இருப்பதாகவோ சொல்லுவதற்கில்லை. இவர்களிலும் இருபதாவது நூற்றுண்டில் ஒரு மனிதராக பாபா இருந்திருக்கிறார்.

இதுதான் ஹானரபிள் லியாகத் அலிகான் கூறிய குறிப்புகளில் ஒன்று. இது போன்ற குறிப்புகள் தேவையற்றவை என்று நான் கூறவில்லை ஆனுல் இவைகளையெல்லாம் எளிதில் திரட்டலாம். ஆனுல் தனிப்பட்ட வாழ்வில் நடந்த சம்பவங்களைத் திரட்டுவதில்தான் சிரமமிருக்கிறது. அதிலும் பாபாவின் வாழ்க்கை ஒரு பெரும் புதிராகவே இருக்கிறது. அதனுல்தான் தங்களை நாளைக்கு அந்த ட்ரைவரிடம் அழைத்துப்போக வற்புறுத்துகிறேன்.

இவர் வார்த்தைகளை முழுவதையும் பிரயோகிக்க வில்லை, அதற்குள்ளாக ஹோட்டல் சர்வர் சாப்பாட்டிற்கு அழைத்தான். நாங்கள் இருவரும் 'டைனிங் ஹாலுக்கு சென்றோம். எங்களுக்கேற்றாற்போல சந்தடி இல்லாத ஒரு மூலையில் ஜன்னலோரத்தில் ஒரு சிறிய, ஆனுல் நீண்ட மேஜையில் சாப்பாடு வைக்கப்பட்டிருந்தது, எவருக்கும் தொந்திரவில்லாமல் அங்கு நாங்கள் பேச முடியுமல்லவா?

சாப்பிடும்போது பேசாமல் சாப்பிட வேண்டும் என்று நான் சிறுவனுக இருக்கும்போது என் அருமைத் தாயார் எத்தனையோ முறை சொல்லியிருக்கிறார்கள் அதற்காக பன்முறை அடித்தும் இருக்கிறார்கள். ஆனுல் அவையெல்லாம் இன்று என் ஞாபகத்திலிருக்கின்றனவே யன்றி செயல் முறையில் இல்லை. அதே போலத்தான் மிஸ்டர் மாக்ளியாட்கதையும் இருக்குமோ என்னமோ! நாங்களிருவரும் பேசிக்கொண்டே இருந்தோம். நான் சற்று வேறு விஷயத்திற்குப் போனுலும் மிஸ்டர் மாக்ளியாட் மிக ஜாக்கிரதையாக என்னை பாபாவின் விஷயத்திற்கு இழுத்து வந்து கொண்டிருந்தார்.

பேச்சு வாக்கிலேயே "தாங்கள் மிஸ்டர் இக்பால் சிங்கை அறிவீரோ" என்றார் மிஸ்டர் மாக்ளியாட். உண்மையில் தோழர் இக்பால்சிங் ஒரு நல்ல எழுத்தாளர் என்பதை மட்டுமே நான் அறிந்திருந்தேன். அவரின் ஆங்கில எழுத்து நடையை நான் பெரிதும் விரும்பி, அவரின் கருத்தோவியங்களை படிப்பேன். ஆனுல் அவர் யார்? எத்தகையவர் என்பது எனக்கும் தெரியாது. எனவே "ஆம்! சிறந்த எழுத்தாளர் ஆயிற்றே அவர்." என்றேன் நான்.

" அவர் பாபாவிடம் நெருங்கிப் பழகியவராதலால் அவருடைய வாழ்க்கைக் குறிப்புகளை கொடுத்துதவ நான் கேட்டுக்கொண்டேன். அவர் சரி என்று ஒப்புக்கொண்டு ஒரு நீண்ட கட்டுரையை எழுதி அனுப்பியிருக்கிருர். இங்கு தானிருக்கிறது. சாப்பிட்டானதும் எடுத்துக்கொடுக்கிறேன். பாருங்கள் " என்ருர் மிஸ்டர் மாக்ளியாட். இவ்வார்த்தைகளைக் கேட்டதுமே அதனை நான் படித்தாகவேண்டும் என்று ஆசை தோன்றிவிட்டது. சற்று விரைவாகவே சாப்பாட்டை முடித்துக்கொண்டு அறைக்குள் நுழைந்தோம். மிஸ்டர் மாக்ளியாட் மறந்துவிட்டாரோ என்னவோ, பொறுத்துப் பார்க்கக்கூட என்ஞல் முடியவில்லை. நானே ஞாபகமூட்டி தோழர் இக்பால் சிங்கின் கட்டுரையை கேட்டு வாங்கி ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்துக்கொண்டு படிக்க ஆரம்பித்தேன். அந்த கட்டுரையை முழுவதையும் நான் படித்த பின்புதான் என் கண்கள் வேறு பக்கம் பார்க்க என்னை அனுமதித்தன. அந்த கட்டுரையின் சாரம்தான் இது – தோழர் இக்பால் சிங் அவர்களின் அனுபவ ரீதியான எழுத்துக்கள் இவை.

" உலக சூழ்நிலையில் 19-வது நூற்ருண்டின் இறுதியில் எவரும் தீர்க்க தரிசனம் கூருத ஒரு புதுமை இந்தியாவில் நடக்கும் என்று யார் எண்ணிப் பார்த்திருக்க முடியும்? இருட்டறையிலே, மிக கெட்டியான சுவர்களை துளைத்துக் கொணடு ஒரு ஒளிக் கதிர் பாயும் என்று நம்பியவர்களாக எவர்தான் இருக்க முடியும்? இந்தியாவின் தலைவிதி அன்று பாபாவின் பிறப்பால் மாறிவிடும் என்ற நம்பிக்கையும், எண்ணமும் இமயத்திலிருந்து கன்னியாகுமரிமுனை வரையிலே பரவி வாழும் மனித கோடிகளில் எவராவது ஒருவர் எண்ணியாவது இருக்க முடியுமா? இல்லை. ஆனல் அந்த காலத்தில் தான் இந்தியாவின் விதவைகளாக, அவர்களுக்கு வழி தவறிய முறையில் பிறந்த அருமைக் குழந்தைகளாக இங்கிலாந்து தீவில். இந்தியர்கள் வந்து வந்து போவதாக இருந்தார்கள். ஆனல் 19-வது நூற்ருண்டின் அந்திய காலத்தில் தான் இந்தியாவின் பலமான கரங்கள், பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் கதவுகளை சற்று வேகமாக, உறுதியாக தட்டி, உள்ளே இருப்பவர்களை வெளியே நிற்பவர்கள் யார் என்பதை உணர செய்து கொண்டிருந்தது. இந்தியாவை இந்தியாவாக, இருட்டறை போன்ற நாடாக அதுவரை பார்த்துக் கொண்டிருந்தவர்களைப் போலில்லாமல் உலக நாடுகளுடன் அதனை ஒப்பிட்டுப் பார்த்து உண்மை இந்தியாவை உணரத்தலைப்பட்டவர்கள் 19-வது நூற்ருண்டின் இறுதியிலே லண்டன் மாநகரிலே காலடி எடுத்து வைத்தார்

கள். மோகன்தாஸ் கரம்சந்த் காந்திஜி லண்டனிலே 1887—1891ம் ஆண்டு வரையிலே இருந்தார். அடுத்தபடியாக கோகலே சில வருஷங்களுக்குப் பின் இங்கு வந்தார். அவர் வரும்போதே இந்தியாவின் பொருளாதார வறுமை பொக்கிஷத்தின் உண்மை புகைப் படத்தோடு அங்கு வந்து சேர்ந்தார். அங்கு ஏற்கனவேயே மக்கள் சபையினரிடையே செல்வாக்கு பெற்றவராக தாதாபாய் நெளரோஜி இருந்து வந்தார். சி ஆர். தாஸ் கூட சட்டம் பயில, இந்திய மாணவர்களிடையே ஒரு அரசியல் விழிப்பை ஏற்படுத்த அங்கு வந்திருந்தார். ஆமாம்! 1892ம் வருஷம்தான் அது. இங்கிலாந்தின் கப்பல் கம்பெனியின் ஒரு பெரும் கப்பல் 16 வயது உடைய ஒரு சிறுவனை, ஏற்றிக்கொண்டு ஆடி ஆடி இத்தீவின் கரையோரத்திலே வந்து நின்றது. அந்த கப்பலிலிருந்து, இந்திய தையல்காரன் தைத்துக் கொடுத்த ஒரு மஞ்சள் நிற நீண்ட கோட்டை அணிந்துகொண்டு, ஒரு ஒல்லிய உருவத்தில், குழந்தைப் பருவத்தின் தேஜஸ் முகத்தில் மிளிர ஒரு 16 வயது பையன், தன்னைத்தானே ஜின்னு என்று அறிமுகப்படுத்திக்கொண்டு கப்பலைவிட்டு இறங்கினுன் அவன் பெரியவனுகி, காயிதே ஆஜம் ஆகி, உலக படத்திலே ஒரு புது நாட்டை தோற்றுவித்து விடுவான் என்று தெரிந்திருந்தால் அந்த பையன் வந்து இறங்கிய போது பிரிட்டிஷ்காரர்கள் பெரு மகிழ்ச்சியோடா வரவேற்றிருப்பார்கள்? ஆனுல் அன்றைய சிறு பையன் ஒரு புது இனத்தை, ஒரு புது நாட்டை சிருஷ்டித்தே விட்டான்.

மனிதன் நடந்தால் அவனுடைய நிழல் தொடர்ந்து நடக்கிறது. அது போல மனிதனுடைய எதிர் காலம் நிழலாக தெரிவதாயிருந்தால் இந்த உலகத்தில் என்னென்னவோ நடந்துவிடுமல்லவா? அதனுல்தான் புரட்சிவீரரான காயிதே ஆஜம் அன்று அவரின் பரம விரோதிகளின் மத்தியிலேயே தன்னைத்தானே தயார் செய்துகொண்டிருக்க முடிந்தது. அவர் சட்டம் பயில லிங்கன்ஸ் இன்னில் சேர்ந்தபோது அவரின் எதிர் காலத்தை எவருமே புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் சந்தேகமில்லாமல் ஒரு சிறந்த அறிவுள்ள மாணவராக அங்கு எல்லோராலும் காணப்பட்டார். அவர் குடும்ப சிநேகிதர் அவரின் தகப்பனுர் ஜின்னு பூஞ்சாவை, தன் குழந்தையை அலைமோதும் கடல்களை கடக்கச் செய்து, சட்டம் பயில அனுப்பும்படி தூண்டினுர். அக் காலத்தில் இங்கிலாந்திலே சட்டம் பயின்று வந்தவர்களுக்கு நிறைய வருமானம் கிடைத்து வந்தது. தன் குழந்தை எதிர் காலத்திலே ஒரு சிறந்த வக்கிலாகி, நிறைய பணம் சம்பாதித்து, சுகமே வாழ வேண்டுமென்று ஒரே ஆசையில் அவரின் தகப்பனுர் அவரை

இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தார். ஆனல் அவரோ பொருள் ஈட்டும் சாதனமாக மட்டுமில்லாமல், கோடி கோடியாக பொருள்களை அள்ளி அள்ளி வீசினலும், கிடைக்க முடியாத சுதந்திர வேட்கையை கக்கும் ஒரு சாதனமாக மாறி இங்கு வந்திறங்கினர்.

இங்கிலாந்திலே அவர் விடா முயற்சியையும், அறிவு நுட்பமும் கொண்ட ஒரு மாணவராகவே இருந்தார். ஆனல் இவை இரண்டு மட்டும் எதிர் காலத்திலே நம்பிக்கை ஊட்டக் கூடிய அறிகுறியாகிவிடாது.

நான் பார்த்த வரையிலே அச் சிறுவன் தன்னடக்க முடைய பையனகவே இருந்தான். அவன் அங்கிருந்த நான்கு ஆண்டுகளில் தேம்ஸ் நதிக்கரையிலே அவனைக் கண்டிருப்பது மிக சில நேரங்களில்தான். இங்கு வந்த காரியத்திலேயே, சட்டம் பயிலுவதிலேயே முழு கருத்தையும் செலுத்திக் கொண்டிருந்தான். மற்றவர்களைப்போல ஏராளமான நண்பர்களை தேடிக்கொள்வதிலே அவன் முனையவில்லை. மிக சொற்ப எண்ணிக்கையுடைய நண்பர்களையே அவன் பெற்றிருந்தான். ஆனல் அவர்களும் அநேகமாக அவனுடைய சிநேகத்தை நாடிய புத்திசாலிகளாக இருந்திருக்கிருர்கள். இங்கிலாந்தின் லார்டுகள் வீட்டுக் குழந்தைகளுக்குள்ள உரிமைகள், சாதனங்கள் யாவும் தேடி வந்து தனக்கு கிடைக்கும்படியாக அவன் நடந்துகொண்டான்; மற்றவர்களைப் போல அவைகளை தேடி அவன் சென்றதே இல்லை. சட்டம் பயிலுவதுதான் அவன் நோக்கமாக இருந்தது என்ருலும், மேல் நாட்டு நாகரீக சின்னமாக தன்னைத்தானே உருவாக்கிக் கொள்வதிலும் அவன் பின் தங்கவில்லை. ஆங்கில கலாச்சாரத்திற்கு அவனும் ஒரு தூணக விளங்குவதில் வெள்ளைக்காரர்கள் பெருமைப்பட்டார்கள். ஜின்னவை காண வேண்டுமானல் அவனுடைய ஹாஸ்டல், கல்லூரி, தவறினல் ஷேக்ஸ்பியர் நாடக சபையில் காண முடியும். தேம்ஸ் நதி தீரத்திலோ, ஒய்யார ஹோட்டல்களிலோ அவனைக் காண முடியும் என்ருல் அது கனவில்தானே ஒழிய நேரிலே காண இயலாது. தன்னைத்தானே மனித குலத்தின் இரத்தினமாக உருவாக்கிக் கொண்ட சிறுவன் ஜின்ன. ஷேக்ஸ்பியர் நாடகங்களிலே, நாடக மேடைகளிலே தோன்றவும் செய்தான் என்ற உண்மை இன்று பலருக்குத் தெரியாது. இந்த உண்மையை அறியாத மக்களுக்கு இங்கிலாந்து நாட்டிலே நாடக மேடையிலே ஆங்கிலேயர்களுடன் தோன்றிய முதல் இந்தியன் ஜின்ஞதான் என்பது எப்படி தெரிந்திருக்கப் போகிறது? அந்த நாடகங்களில் தான்

கொண்ட கதா பாத்திரத்தை மிகத் திறமையோடும் வெற்றியோடும், ஒழுங்காகவும் நடித்தான் என்பதை எப்படி அறிந்திருக்க முடியும் ?

ஜின்னு லண்டன் வந்து இறங்கிய போது சிறுவனுக வந்து இறங்கினுன் என்று கூறுவதுகூட பொருந்தாது. அவன் மிகச் சிறு பையனுக வந்துசேர்ந்தான். அந்த சிறுவன் இங்கிலாந்தின் வீதிகளிலே ஆழ்ந்த சிந்தனை செய்து கொண்டு நடந்தபோது அவன் உள்ளத்தில் அரசியல் உணர்ச்சி இருந்ததில்லை. தன் தாய் நாட்டை அடிமைப் படுத்தி வைத்திருக்கும் ஏகாதிபத்திய வாதிகளின் நாட்டின் வீதிகளிலே நடமாடுகிறேம் என்ற எண்ணமும் எழுந்ததில்லை. அந்த இளைஞன் தன் நாட்டின் எஜமானர்களிடையே வாழ்வதாகக்கூட சிந்தித்ததில்லை. ஆங்கிலேயர்களின் கூட்டத்திலே ஒரு ஆங்கிலேயனுக, லார்டுகள் கூட்டத்திலே ஒரு லார்டாக, இந்திய மாணவர்கள் கூட்டத்திலே ஒரு இந்திய மாணவனுக சர்வ சாதாரணமாக காணப்பட்டான். அவன் லார்டுகளின் மத்தியிலே ஒரு லார்டாக, விசேஷ விழாக்களிலே முன் வரிசையில் கால் மேல் காலை போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த சமயங்களிலெல்லாம் ஓரத்திலே ஒதுங்கி நின்று கொண்டிருந்த இந்திய மாணவர்கள் பயந்தவர்களாக அவனை ஜாடை காட்டி கூப்பிடும் போதெல்லாம் அதனுடைய அர்த்தம் விளங்காமல், பக்கத்திலே வீற்றுக் கொண்டிருந்த லார்டுகளை பார்த்து புன்னகை பூத்தவனுய் தன் காலரையும் டையையும் சரிபடுத்திக்கொண்டிருந்த புதுமையை அந்த சிறு பையனிடம் காண முடிந்தது. அவன் அவர்கள் மத்தியிலே சரி சமமாக, கப்பீரத் தோற்றத்தோடு வீற்றிருந்ததைப் பார்த்த லார்டுகளுக்குக்கூட பெருமையாக இருக்குமோ என்னவோ, அவனை நெருங்கிப் பேச, உபசரிக்க அவர்கள் தவறியதும் கிடையாது. அவனது இளமை உள்ளம் எஜமானன், அடிமை, வெள்ளையன், கருப்பன், பணக்காரன், ஏழை என்ற வித்தியாசத்தை அறியாததாய் மனிதக் கூட்டம் ஒன்றே என்ற உறுதியையும், நம்பிக்கையையும் கொண்டிருந்தது போலும். 1300 ஆண்டுகளுக்கு முன்பாக பயங்கரப் புயல் காற்றின் மத்தியிலும் அணையாமல் மெக்காவில் சுடரை விட்டுப் பிரகாசித்த இறுதித் தூதர் முஹம்மதுவின் ஒளியின் கதிர் அவன் நெஞ்சிலே நேரடியாகத் தாக்கியிருக்குமோ என்னவோ !

அச்சிறுவனுல் அரசியல் உலகில் நுழையாமல் வெகுநாட்கள் இருக்க முடியவில்லை ஏனென்றல் அக்காலத்தில் அரசியலை தெரிந்துகொண்டுத்தானுக வேண்டும் என்ற சூழ்நிலை

இங்கிலாந்திலே இருந்தது. அரசியலில் அவனை காந்தம் போல ஈர்த்துக்கொள்ளக் கூடிய பிரச்சினைகள் அங்கு எழுந்திருந்தன. பார்லிமெண்டுக்குள்ளும், வெளியிலும் அயர்லாந்துப் பிரச்சினை மிகத் தீவிரமாக விவாதிக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு சங்கக் கட்டிடத்திலும் இது சம்பந்தமான சர்ச்சைகள நடந்து வந்தன. பார்லிமெண்டிலே பலம் வாய்ந்த ஸ்தாபனமாக லிபரல்கள் இல்லாவிட்டாலும் அவர்களின் கொள்கைகளுக்கு பொது மக்களிடையே நம்பிக்கையும், நன்மதிப்பும் இருந்து வந்தது. ஏனென்றால் பிரிட்டிஷ் ஆட்சி முறை அயர்லாந்து பிரச்சினைக்கு எவ்வளவு பாதகமாயிருக்கிறது என்று கூறி வந்தார்களோ அதே போல அது அயர்லாந்து மக்களுக்கு எவ்வளவு பாதகமாக இருந்தது என்பதையும் கூறி வந்தார்கள். அக்காலத்தில்தான் தொழிலாளர்களின் நடவடிக்கைகளும் இங்கிலாந்து அரசியலிலே தலை தூக்க ஆரம்பித்திருந்தது. ஹைன்ட்மான், வில்லியம் மாரிஸ், கியர் ஹார்டி போன்றவர்கள் தொழிலாளர் பிரச்சினைக்குக்கு உயிரூட்டிக் கொண்டிருந்த காலம் அது.

சிந்தனை சக்திக்கு சிகரம் வைத்தாற் போல இருந்த சிறுவன் ஜின்னாவின் சிந்தனை தேம்ஸ் நதி தீரத்திற்கு செலுத்தவில்லை. பாட புத்தகத்தை மூடி வைத்ததும் நெருப்புப் போல பற்றி எரிந்து கொண்டிருந்த இங்கிலாந்து அரசியல் சிக்கலுக்கு நிவாரணம் என்ன என்று அவன் சிந்திப்பான். அச்சிறுவன் அக்காலத்துத் தலைவர்களிடம் தன் சந்தேகங்கள் தெளிவடைய கேட்ட கேள்விகளுக்கு விடையளிப்பதிலேயே திக்கு முக்காடினார்கள். கேட்பான்—சிந்திப்பான், சிந்திப்பான்—கேட்பான். இந்த சிந்தனை அயர்லாந்தோடு நின்று விடவில்லை. அவன் சிந்தனையில் அதிர்ஷ்டவசமாக இந்தியா சிக்குண்டு விட்டது. தன் தாய் நாடு அவன் சிந்தனையிலே இடம்பெற்று விட்டது. அவன் சிந்தித்தான்' அயர்லாந்துப் பிரச்சினை ஒரு பயங்கரப் பிரச்சினையாக இருக்கிறது. வீதிகளிலே, கிளப்களிலே, பொதுக்கூட்டங்களிலே, பார்லிமெண்டிலே விவாதிக்கப்படுமளவிற்கு முக்கியத்வமடைந்திருக்கிறது; ஆனால் இந்தியப் பிரச்சினை, தாய் நாட்டின் பிரச்சினை ஏன் அவ்வளவு முக்கியத்வம் அடையவில்லை. பலருக்கு உலகப் படத்திலே இந்தியா எங்கிருக்கிறது என்பதுகூட தெரியவில்லை. பலர் இந்தியா என்றால் லார்டு வீட்டு நாயின் பெயர் என்றுகூட எண்ணியிருந்தார்கள். சாதாரண பிரிட்டிஷ் மக்கள் ஒருபுறமிருக்க, பழுத்த அரசியல் வாதிகளுக்குக்கூட சரிவர இந்தியாவைப் பற்றித் தெரியவில்லை. ஏதோ மிக சாதாரணமாக இதர அஞ்ஞான விஷயங்களுக்கு மேற்கோளாக காட்டும் வகையில் இந்தியா

என்று கூறும் நிலை அங்கு இருந்தது. அதிலும் இந்திய அரசியல் நிபுணர்கள் எனப்படும் சிலர் கூடுவதும் கிளப், ட்ராயிங் ரூம் அறைகளிலே! இதை சிந்தித்தது இளைஞனின் உள்ளம். இதை எண்ணி எண்ணி அவன் விட்ட பெருமூச்சு அவன் பெற்று வந்த அனுபவத்திற்கு அளவுகோலாக அமைந்திருந்தது.

அந்த சிந்தனையின் பயனாகத்தான், அவன் கூரிய பார்வை இந்திய மாணவர்களிடையே ஊடுருவிச் சென்றது. தாதா பாய் நௌரோஜீயின் பல நாட்களின் பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக்கொண்டான் போலும். ஏனென்றால் இருண்ட உப கண்டமாக பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை நினைத்து வந்ததை மாற்றி அமைக்க அரை நூற்றாண்டாக பாடுபட்டுக் கொண்டிருந்தார். அவ்வளவு பாடுபட்ட பிறகும்கூட அவரால் இந்தியாவின் உண்மை நிலவரத்தை அறிந்துகொள்ளக் கூடிய ஒரு சில பிரிட்டிஷ்காரர்களையே சிருஷ்டிக்க முடிந்தது. இந்தியப் பிரச்சினையை சிந்திக்கத் தூண்டக்கூடிய மிக உறுதியான ஒரு இந்தியனுடைய உதவி அவருக்கு தேவைப்பட்டது. அதற்கு அவர் சித்த ரஞ்சன தாஸை தேர்ந்தெடுத்தார். ஆனால் சித்தரஞ்சன தாசுடைய எண்ணமும், நடவடிக்கைகளும் வேறு முறையில் அமைந்திருந்தன. இங்கிலாந்துக்கு வரும் இந்திய மாணவர்களுக்கு தேச பக்தியை ஊட்டி, உறுதியான தேச பக்தர்களாக தாய் நாட்டிற்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்ற உறுதியில் அவர் செயலாற்றிக் கொண்டிருந்தார். ஆனால் தாதா பாய் நௌரோஜியோ, வெள்ளையர்களுக்கு இந்தியாவின் உண்மைப் படத்தைக் காட்டி, அதன் மீது அவர்களுக்கு அன்பும், அநுதாபமும் ஏற்படும் வகையில் உழைத்து வந்தார். சித்த ரஞ்சன தாஸ் தம் வழியில் மிகத் தீவிரமாகவும், உறுதியாகவுமே பணியாற்றி வந்தார். ஆனால் தாய் நாடு திரும்பும் இந்திய மாணவர்களில் பலர் இங்கிலாந்து ஹோட்டல் சர்வர் பெண்களுடன் கப்பலேறும் கண்றாவிக் காட்சிகளையும் அவர் பார்த்தும் பார்க்காததுபோல இருக்க வேண்டியதாகத்தானிருந்தது. இந்தியாவில் வந்து இறங்கியதும் ஹிஸ் எக்ஸலன்ஸியின் காரியாலயத்திலிருந்து ஏதாவது ஒரு கடிதம் வராதா என்று தவம் செய்துகொண்டிருந்ததையும் அவர் பார்த்து சகித்துக்கொள்ள வேண்டித்தான் இருந்தது. பலன் சொற்பமாக இருந்தாலும் இவ்விருவரின் சேவை ஓரளவு பயன்பட்டது என்பதோடல்லாமல், இந்தியா தன் தவப் புதல்வர்களில் இவ்விருவரையும் பதிவு செய்து கொள்ளவும் செய்தது.

அன்று இந்திய மாணவர்கள் லிபரல்களுக்குத் துணையாக நின்றார்கள். அவர்களுக்கு பெரும் உதவியாக சித்தரஞ்சன தாஸின் நாவன்மை அமைந்திருந்தது. தாதாபாய் நௌரோஜின் நிதானமான நடவடிக்கைகள் பிரிட்டிஷ் அரசியல் தலைவர்களின் நன்மதிப்பை சிறுகச் சிறுக பெற்றுக் கொண்டு வந்தன. தாதாபாய் நௌரோஜியின் அறைக்குள் மின்னலைப் போல திடீரென்று ஒரு இந்தியச் சிறுவன் தோன்றுவான். பல நாட்கள் சிந்தனைக்குப் பின் உருவாக வேண்டிய கேள்விகள் பலவற்றை திடீர் திடீரென்று கேட்பான். அவன் லாங்க் கோட் பாக்கெட்களிலுள்ள சின்னஞ் சிறு கரங்கள் இடை இடையே வெளியே வருவதும் போவதுமாக இருக்கும். அவன் நெற்றி சுருங்கும்போது அவன் மழலையை அப்பொழுதுதான் மறைந்து இளம் வாயில் இருந்து சரமாரியாக கேள்விகள் உதிரும் பிரிட்டிஷ் அரசியல் தலைவர்களை திருப்தி செய்வதைவிட இவனை திருப்தி செய்வதில் அவருக்கு சிறிது சிரமமாகத்தானிருந்தது. கேள்விகளுக்கு பதில்களைப் பெற்ற பிறகு மிக சுறு சுறுப்பாக அவன் வெளியேறும் பொழுது அவர் பின்னாலிருந்து அச் சிறுவனையே பார்த்துக் கொண்டிருப்பார். பல சமயங்களில் ஜன்னல் கதவுகளைத் திறந்துகொண்டோ, அல்லது வெளியே வந்து நின்றுக்கொண்டோ அவன் கண்ணுக்கு மறையும் வரையிலே அவனையே பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார். அவனுடைய பூட்ஸ் கால் நடையின் ''டக், டக்'' என்ற சப்தங்களிலே இந்தியாவின் சுதந்திர தின விழா வாத்தியங்களின் கான ஒலிகள் அவர் ஆழ்ந்த அரசியல் அறிவுக்குக் கேட்கும். அவர் அன்று விட்ட ஒவ்வொரு பெருமூச்சும் அப்பையனின், ஜின்னாவின், காயிதே ஆஜம் பாபாவின் இந்தியாவின் அதிர்ஷ்ட வசத்தை அழைக்கும் ஒரு அழைப்பாகவே இருந்தது.

நாட்கள் அதிகமாக கடந்து போய்விடவில்லை. தாதாபாய் நௌரோஜிக்கும், சித்த ரஞ்சன தாசுக்குமிடையே அன்றைய சிறுவன் ஜின்னா, பிற்கால காயிதே ஆஜம் பாபா வந்து நின்றார். ஜின்னாவின் அறிவு நுட்பம் தாதாபாய் நௌரோஜியின் உணர்ச்சிக்கும் உத்வேகத்திற்கும் ஒரு பெரும் தூண்டுகோலாக இருந்தது. அவருக்கு மட்டும் என்று கூற முடியுமா என்ன? இந்தியாவின் உணர்ச்சிக்கும், விடுதலைக்கும் தூண்டுகோலாக மட்டுமின்றி ஒரு சிறந்த வழி காட்டியுமாகவல்லவா இருந்திருக்கிறது! அரசியலில் தலையிட்ட பிறகாவது தன் இங்கிலாந்து நடவடிக்கைகளிலே மாற்றத்தை செய்து கொண்டாரா? இல்லை. எப்பொழுதும் போலவே அவர் லார்டுகளுக்குசமமாக அவர்கள்

சபையிலே காலின்மேல் காலைப் போட்டுக்கொண்டு வீற்றிருக்கத்தான் செய்தார். ஆனால் ஒரு சிறு மாற்றம் ஒன்றுதான் ஏற்பட்டிருந்தது. காயிதே ஆஜம் மாலை வேளைகளிலே ஷேக்ஸ்பியர் நாடக சபைக்குச் செல்லும்போது பிரிட்டிஷ் அரசியலில் தீவிர பங்கு கொள்பவர் அவருடன் விவாதிப்பதற்கான சந்தர்ப்பத்தை சிருஷ்டித்துக்கொள்ள அங்கே வரத் தொடங்கினார்கள். சிரிப்பொலிக்கிடையே அவர் கூறிய அபிப்ராயங்களுக்கு பெரும் மரியாதை அளித்தார்கள். தனக்கே உரித்தான முறையில் அவர் விஷயங்களை விவாதிக்கும்பொது பெரும் பெரும் சட்ட நிபுணர்கள் கூட கருத்தோடும் கவலையோடும் கவனமாக கேட்பார்கள். ஆனால் இவ்வளவுக்கும் இந்திய மாணவனாக இருந்த அவர் 16 வயது கடந்த ஒரு சிறுவராகவே இருந்தார். சட்டம் பயில இந்தியாவிலிருந்து வந்து இறங்கிய ஒரு சிறு பையனாகவே இருந்தார். தாங்கள் கட்டி ஆளும் ஒரு நாட்டின் அடிமைப் பிரஜைகளின் குழந்தையாகவே அவர் இருந்தார். அவர்கள் நினைத்திருந்தபடி இருண்ட இந்தியாவிலிருந்து வந்த ஒரு சிறுவராகவே அவர் இருந்தார். அந்த இருட்டறையிலிருந்து எவ்வளவுப் பெரிய சிந்தனை ஒளிக் கதிர் பிரிட்டிஷ் அரசியல் வாதிகளின் அஞ்ஞான இருளைப் போக்க இவ்வளவு பேருதவியாக இருக்கும் என்று எவருமே, அவர் சிறுவராக, 16 வயதுடையவராக, லண்டன் கடற் கரையில் வந்து இறங்கும்போது அறிந்திருந்ததில்லை—இல்லை, இல்லவே இல்லை.

இன்றைய காயிதே ஆஜம், அன்றைய சின்னஞ்சிறு பையன் தன்னை அரசியல்வாதியாகவே நினைத்துக்கொள்ளவில்லை. தான் அரசியலை கற்றுக்கொள்கிறோம் என்ற எண்ணம்தான் அவருக்கு இருக்கமுடியும். ஏனென்றால் அயர்லாந்து பிரச்சினை மிக முக்கியத்துவமடைந்திருந்ததால் அடிக்கடி பொதுக்கூட்டங்கள் நடைபெறும். அந்த பொதுக் கூட்டங்களில் கூடும், மக்கள் கூட்டத்தின் வலதுகோடி கடைசியில் ஒரு சிறுவர், அண்ணாந்து பார்த்துக்கொண்டிருப்பார். அந்தசிறுவர் அடிக்கடி தன்கைகுட்டையை எடுத்து விரித்து தன் நெற்றியை துடைத்துக்கொள்வார். அவரின் கூறிய பார்வை பேச்சாளிகளை ஒட்டியே நிற்கும். இடைஇடையே அவரின் நெற்றி சுருங்கும். அவர் உதடுகளிலே ஒரு புன்னகை தவழ்ந்து மறையும். அந்த நெற்றி சுருக்கத்திற்கும், புன்னகைக்கும் என்ன அர்த்தம் என்று அறிந்தவர்கள் மிகச் சிலரே. சட்டத்திற்கும், தர்மத்திற்கும் புறம்பாக பேச்சாளி பேசும்போது தானாகவே ''ஆடோமேடிக் மிஷின்''ப் போல அவருடைய நெற்றி சுருங்கும்.

அநேகமாக மேடைப்பேச்சாளிகள் மேடை ஏறுவதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்பாக அந்த சிறுவனிடம் விவாதித்து செல்வர். அவர் அளித்த அபிப்ராயங்களை அவர்கள் மேடையிலே பிரதிபலிக்கச் செய்யும் போதுதான் அவருடைய உதடுகளிலே புன்னகை தவழ்ந்து மறைந்துவிடும். அந்த நேரங்களிலெல்லாம் தான்சொன்ன கருத்தைத்தான் அவர்கள் கூறுகிறார்கள் என்று அவர் நினைத்ததே இல்லை. அவருடைய கருத்தும் தம்முடைய கருத்தும் ஒன்றாக இருக்கிறதே என்ற எண்ணம்தான் அந்த களங்கமில்லாத உள்ளத்திலே உதித்திருக்கின்றது. அது தனது அடையாளமாக ஒரு புன்னகையை விட்டு சென்றிருக்கமுடியும்.

தாதாபாய் நௌரோஜியும், சித்தரஞ்சனதாசும் வெவ்வேறு துறையில் செயலாற்றிக்கொண்டிருந்தாலும் இளைஞர் ஜின்னா மிக ஆர்வத்தோடு அவைகளை கவனித்துக்கொண்டிருந்தார். தாதாபாய் நௌரோஜியின் ஆழ்ந்த அனுபவரீதியான அறிவு நுட்பமும், உத்வேகமும் காயிதே ஆஜமின் உள்ளத்தைத் தொட்டுவிட்டன. அந்த உணர்ச்சியால் தாக்குண்ட காயிதே ஆஜம் திடீரென்று அரசியலில் குதித்துவிடவில்லை. தாதாபாய் நௌரோஜி, சித்தரஞ்சனதாஸ் இவ்விருவருடைய எந்த வழியில் செல்வது, சேருவது என்ற குழப்பத்தால் அவர் தயங்கவில்லை. பல்லாயிரக்கணக்கான மைல்களை கடந்துவந்த நோக்கத்தை ஈடேற்றிக்கொள்ள வேண்டும் என்ற தலையான கடமை உணர்ச்சியால் உந்தப்பட்ட காயிதே ஆஜம், சட்டம்பயில்வதில் மட்டும் ஈடுபட்டிருக்கவில்லை. இந்திய மாணவர்களின் நடவடிக்கைகளிலே, ஒரு இந்திய மாணவன் என்ற முறையில் பூர்ண பங்கெடுக்கத் தொடங்கினார். அவர் இந்திய மாணவர்களின் நடவடிக்கைகளிலே கலந்துகொள்ள முனைந்த நாளே தாதாபாய் நௌரோஜி, சித்தரஞ்சனதாஸ் இவ்விருவர்களின் உள்ளங்களிலும் ஒரு புத்துணர்ச்சி இடம் பெற்றுவிட்டது. இந்தியமாணவர்களை அவர்கள் மறைமுகமாகவும், பகிரங்கமாகவும் காயிதே ஆஜம் கூறும் ஆலோசனைகளை கண்களை மூடிக்கொண்டு ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தி கூறிவந்தனர். ஏனென்றால் அவர்காட்டும் எந்த வழியும் இந்திய மாணவர்களின் உண்மை அபிலாஷைகளுக்கு கேடு விளைவிப்பனவாக இருக்காது என்பதில் அவர்கள் மிக உறுதியாக இருந்தனர்.

இந்திய மாணவர்களின் நடவடிக்கைகளிலே ஈடுபட்ட அவர் ஒரு சிறந்த அரசியல் பார்வையாளராக இருந்தார் என்பதில் சந்தேகம் தேவையில்லை. அப்படி அவர் இல்லா

திருந்தால், அயர்லாந்து அரசியலைப்பற்றி தெளிவைப்பெற காயிதே ஆஜத்தின் இருப்பிடத்தைத்தேடி அரசியல் வாதிகளெனப்படுவோரே வந்திருக்க முடியாது. விளையாட்டுப் பிள்ளைபோன்று காட்சி தரும் பையனின் அறிவுநுட்பத்தை சோதித்திருக்கத் தேவையில்லை அவர் இந்திய மாணவர் ஸ்தாபனத்திலே புகுந்த உடனேயே பழைய சம்பிரதாயங்களையும். கொள்கை இலட்சியங்களையும் அறவே நீக்கிவிட்டு, தலைகீழாக மாற்றியமைத்துவிட்டார் பல நாட்களாக மாணவ உலகத்திலேயே இருந்து அரும் தொண்டாற்றிக் கொண்டிருந்த சித்தரஞ்சனதாசுக்கு கூட அது ஒரு பேராச்சரியமாயிருந்தது. கருத்துக்கும், காலத்திற்கும், நாட்டிற்கும் உகந்தாற்போன்ற புதுப்புது இலட்சியக் கருத்துக்களை மாணவர்களிடையே பரப்பிவிட்டார். அவைகளின் பலன் இந்திய மாணவர்களுக்கு பிரத்தியட்சமாக கிடைத்துவிட்டது. இந்திய மாணவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையையும் இங்கிலாந்து ஆளும்வர்க்கம் மிக கண்ணியத்தோடும் மரியாதையோடும் கவனித்துப் பார்க்கும் அளவுக்கு மட்டுமின்றி, போதிய மதிப்பும் அளிக்க ஆரம்பித்தது. அந்தக்காலத்தில் அது ஒரு சாதாரண வெற்றி என்று கூற முடியாது. அந்நாளில் ஆளப்பிறந்தவர்கள் என்று கருதப்பட்டவர்களின் சுதந்திர தாய்நாட்டிலே, அடிமைகள் என்று கருதப்பட்ட இந்தியர்கள். அதிலும் இளம் மாணவர்கள், பெருமதிப்பும், செல்வாக்கும் அடைவது என்பது அவ்வளவு சாதாரணமல்ல. அது குறித்து அகில இந்தியாவே ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்தது.

இந்த தனி வெற்றிக்குக் காரணம் யார்? இந்திய மாணவர்களின் ஸ்தாபனம் தானே! ஆம் என்று இன்று நாம் சொல்லிவிடலாம். அது மிக எளிது: ஆனால் அதை அனுபவ ரீதியாக உணர்ந்தவர்களின்பதில் அப்படி இருக்கமுடியாது; இருக்கவும் இல்லை. “இன்று இந்திய மாணவர்கள் ஸ்தாபனம் தனிமதிப்பையும், செல்வாக்கையும் பெற்றிருக்கிறது என்று அவையெல்லாம் மிஸ்டர் ஜின்னாவுக்கே சாரும். நான் எதை சாதிக்க இங்கிலாந்திற்கு வந்து அரும்பாடுபட்டு முடியாமல் தவித்தேனோ அதையே மிஸ்டர் ஜின்னா போகிறபோக்கில் மிக சாதாரணமாக செய்துவிட்டார்.” என்று தாதாபாய் நௌரோஜி கூறியிருக்கிறார். “நான் இந்திய மாணவர்களுக்கு வழிகாட்டவேண்டுமென்பதற்காகவே இந்த நாகரீகம் மலிந்த தீவில் வந்திருக்கிறேன். ஆனால் என்னையும் சேர்த்து வழிகாட்டக்கூடிய ஒரு சிறு பையனை மிஸ்டர் ஜின்னாவை என் தாய்நாடு அனுப்பி வைத்திருக்

கிறது'' என்று சித்தரஞ்சனதாஸ் கூறியிருக்கிறார். இவ்விரு கருத்துக்கள் சிறுவனாக இருந்த ஜின்னாவை மதிப்பதென நமக்கு வழிகாட்டுகின்றன.

உலகத்தில் வாழப் பிறந்தவர்கள் இங்கிலீஷ்காரர்கள் என்று அக்காலத்தில் ஒரு பழமொழி வழங்கப்பட்டுவந்தது. இன்று தென், தென்மேற்கு ஆப்ரிக்காப்பகுதிகளில் இந்த பழமொழி சர்வசாதாரணமாக உபயோகத்திலிருக்கிறது. அந்த பழமொழி மிகவும் உண்மையானதுதான் என்பதில் எனக்கென்னவோ சந்தேகமே இல்லை. காயிதே ஆஜத்தின் அறிவு நுட்பமும், நடவடிக்கைகளும் சட்டம், தர்மம், நடை முறைக்கு ஏற்றவனவாக இருந்ததால் அவர்களே அவருக்கு அபரிதமான செல்வாக்கை அளிக்க ஆரம்பித்து விட்டனர். செல்வாக்கு அதிகரிக்க அதிகரிக்க அவரின் நடவடிக்கைகளை கண்காணிக்க ஆரம்பித்தனர். இவை எல்லாம் அவரின் உதாரகுணப் பண்பு இங்கிலாந்திலே கூடியமட்டில் பரவி நிற்க வேண்டுமென்பது அவர்களின் ஒரேநோக்கம். பெரும் பெரும் லார்டுகள், தங்கள் குழந்தைகளுக்கு சிநேகிதர்களைத் தேடித்தருவதில் மிகவும் அக்கரையாகவும் இருப்பார்கள். ஏனெனில் சிநேகிதத் தொடர்பு குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கை அமைப்புக்கு முழு பொறுப்பாக இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஆதிலால் அவர்களில் பெரும்பாலோர் சிறுவராகஇருந்த மிஸ்டர் ஜின்னாவை தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். அவர் போகும் கிளப்புகளிலே லார்டு வீட்டு சிறுவர்கள் நிறைந்திருப்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. இது ஒரு விஷயத்தில் மிக அனுகூலமாகவே இருந்தது. ஏனென்றால் இதன் மூலம் லார்டுகளிடையே இந்தியத் தலைவர்களான தாதாபாய் நௌரோஜி, சித்தரஞ்சனதாஸ் இவர்களுக்கு செல்வாக்கைப்பெறவும், இந்தியாவின் அபிலாஷைகளை எளிதாக அவர்களிடம் எடுத்துக்கூறவும் நிறைய சந்தர்ப்பங்கள் கிடைத்துவந்தன. பழுத்த அரசியல் ஞானமும், ஆழ்ந்த அனுபவமும் கொண்ட தாதாபாய் நௌரோஜி வெகு ராஜதந்திரத்தோடு இந்த சந்தர்ப்பங்களை பயன் படுத்திக்கொண்டிராவிட்டால் இந்த நூற்றுண்டில் இந்தியாவில் ஜோதியை பார்த்திருக்கமுடியுமா என்பதற்கு பதிலைப்பெறுவது சாதாரணமானதல்ல. அவர்கள் விதைத்த விதையின் பலனையே இன்று நாம் அநுபவிக்கிறோம் என்பதையும், அவருக்கு மிஸ்டர் ஜின்னாவே மூலகாரணமாக இருந்தார் என்பதையும் அறிந்துகொள்வதற்கு சரித்திரத்தை மட்டும் படித்தால் போதாது. ஆழ்ந்த அரசியல் அறிவும் தேவையாக இருக்கிறது.

சென்ற நூற்றாண்டின் கடைசி தலைமுறையின் மிக முக்கியத் தலைவர்களைப் போலவே காயிதே ஆஜம் கூட லிபரல் தலைவர்கள் எழுதிய புத்தகங்களை கருத்தோடு படித்து வந்தார். குறிப்பாக ப்ரைட்டின் மீதும் மார்லியின் மீதும் காயிதே ஆஜம் தனி மதிப்பு வைத்திருந்தார். அக்காலத்தில் லிபரல் கொள்கைகள், இரு நேர் விரோதமான கருத்துக்களுடே ஒரு தனியான வழியில் சென்றுகொண்டிருந்தது. அப்போது லிபரல் கொள்கைகளை இந்தியத் தலைவர்கள் பலமாக ஆதரித்து நின்றனர். இக்கருத்துக்களையும், கொள்கைகளையும் வகுத்தவர்களையும் விட இந்தியர்கள் உறுதியாக பின்பற்றி வந்தார்கள் என்றால் பொருந்தும்.

மிஸ்டர் ஜின்னா தன் சட்டப் பரீட்சையில் தேறினார்—முதல் தரமாக தேறினார். ஆனால் அவரோ இதை ஒரு வெற்றியாக நினைத்ததாகத் தெரியவில்லை. இவர் பரீட்சையில் முதல் தரமாக தேறியதை அறிந்த பலர் அவரை நேரில் சந்தித்து வாழ்த்துக்களை சமர்ப்பித்தபோது ஏதோ நடக்க வேண்டியது ஒன்று நடந்தது என்றுதான் கருதியிருந்தாரே யன்றி, அதற்காக ஒரு பெரு மகிழ்ச்சி கொண்டதாகவே தோன்றவில்லை அவர் பரீட்சையில் தேறினதும் இந்தியாவிற்கு திரும்பிவிட அவர் விரும்பவில்லை. ஏனென்றால் இங்கிலாந்திலேயே தேறவேண்டிய பல அரசியல் பரீட்சைகள் இருப்பதாகவே அவர் கருதியிருந்தார். குறைந்தது மேலும் 10 வருஷ காலம் அங்கு தங்கி இருந்தால் அதனால் தன் வாழ்க்கையில் பெரும் நன்மை ஏற்படக்கூடும் என்று கருதினார். அவர் பரீட்சையில் தேறியதும் லாஹூரிலிருந்த தன் நண்பர் தயாப்ஜி என்பவருக்கு எழுதிய கடிதத்தில் கீழ் கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

“நான் பரீட்சையிலே தேறிவிட்டேன். இதனால் எனக்கு மகிழ்ச்சி ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. நான் முதல் தரமாக தேறினேன் என நினைக்கும்போது எனக்கு திருப்தி ஏற்படுகிறது. நான் இந்த வரும் போது சட்டக்தை பயிலவேதான் வந்தேன். அந்த நோக்கம்தான் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் இருந்தது. இன்று கூட அதே எண்ணத்தில்தான் என் குடும்பமும் இருக்க முடியும். ஆனால் இங்கே வந்த பிறகு தான் நான் தேறவேண்டிய பல விசேஷ அம்ச பரீட்சைகளும் இருக்கின்றன என்று தெரியவந்தது. நான் குறைந்தது 10 வருஷ காலத்திற்கு இங்கிருந்தால், எனக்கு மட்டுமின்றி என் தாய் நாட்டிற்கும் பலனேற்படும் என்று நம்புகிறேன். ஆனால் என் எண்ணம் நிறைவேறுமோ இல்லையோ என்பது தெரியவில்லை. இதற்கு கராச்சியிலிருந்து வரும் ஒரு துண்டுக் கடிதம் முடிவு கூறிவிடும். அதைதான் நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.”

பரீட்சையை எழுதிவிட்டு, அதன் முடிவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பது இந்திய மாணவர்களின் வழக்கம். முடிவு தெரிந்ததோ இல்லையோ கிடைக்கும் முதல் கப்பலில் ஏறி தாய் நாட்டை நோக்கி பிரயாணம் செய்வார்கள். ஆனுல் அதற்கு நேர் மாருக காயிதே ஆஜம் லண்டன் ஷேக்ஸ்பியர் நாடக சபையில் சாவதானமாக உட்கார்ந்திருந்தார். வெள்ளையர்களுடன் ஒன்றித்து அந்த சபையில் சில மணி நேரத்தை கழித்து வந்தார்.

காயிதே ஆஜம் வெள்ளைக்காரர்களால் விரும்பப்படுவதற்கும், அவர்களை இவர் விரும்புவதற்கும் என்ன காரணம் என்று இது வரையிலே பலர் புரிந்து கொள்ளவில்லை. அவரின் உடைகளை பார்த்து, நடை உடை பாவனைகளை கண்டு தவருக கணித்துக் கொண்டவர்களும் உண்டு. அவர் இங்கிலாந்திலிருந்து தன் நண்பருக்கு எழுதிய கடிதத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிருர்.

பிரிட்டிஷ்காரர்கள் மிகவும் நல்லவர்கள் விடாமுயற்சியுடையவர்கள். அவர்கள் நம் நாட்டை ஆளுகிருர்களே என்பதற்காக அவர்களிடமுள்ள உயர்ந்த பண்பாடுகளை தள்ளிவிடக் கூடாதல்லவா? இன்று அவர்கள் உலகத்தில் மிக உயர்ந்த சமூகமாக வாழ்கிருர்கள். இதற்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. அவர்கள் எதையும் உள்ளன்போடும், உற்சாகத்தோடும் செய்கிருர்கள். விடாமுயற்சி அவர்களின் மதிப்பில்லாத சொத்தாக இருக்கிறது.

இந்திய மாணவர்கள் இங்கு சரிவர, நடத்தப்படுவதில்லையாம் என்று நீ குறிப்பிட்டிருக்கிருய். இதில் நூற்றுக்கு நூறு உண்மையும் இருக்கிறது. இந்திய மாணவர்களுக்காக அன்பும், அநுதாபமும் கொண்டவர்களும் இங்கு உண்டு. அநேகமாக அதிகாரத்திலிருப்பவர்களிடம் உயர்வு தாழ்வு காணப்படுகிறது. சாதாரண மக்கள் மிக சௌஜன்யமாக பழகுகிருர்கள்.

என்னைப் பொறுத்த வரையில் யாரும் தாழ்வு மனப்பான்மையோடு என்னிடம் பழகவில்லை இது ஏன் என்று நான் சிந்திக்கும்போது நம்மவர்களிடம் ஒரு சில குறைகள் இருப்பதாகவே தெரிகிறது. இந்தியர்கள் கப்பலை விட்டு இறங்கும்போதே தாழ்வு மனப்பான்மையோடு இறங்குகிருர்கள். எஜமானர்களிடம் பழகுவதைப் போல பழகுகிருர்கள். அவர்களுடைய உடை, நாகரீகம் இவைகளைத்தான் கற்றுக்கொண்டு போகிருர்களே தவிர அவர்களிடமிருந்து உண்மையாகவே கற்றுக்கொள்ள வேண்டியவைகளை கற்றுக்கொள்ளவில்லை. ஆதலால் அடிப்படைத் தவறு இரு புறங்களிலும் இருக்கின்றன; ஒரு புறத்தில் மட்டும் இல்லை.''

இப்படியே தான் அவருடைய தீர்ப்பு பாரபட்சமற்ற முறையில் இருந்திருக்கின்றன. ஆதலால் அவர் மேலும் சில காலம் அங்கேயே தங்க வேண்டுமென்று விரும்புவதற்கு ஒரு பாரபட்சமற்ற காரணமாகவே இருக்க முடியும் என்பது இந்திய நண்பர்களின் நம்பிக்கை. ஆனால் அவர் எதிர்பார்த்த கராச்சி கடிதம் எதிர்பாாத்த முறையில் வரவில்லை. அவர் தன் இஷ்டத்திற்கு மாறாக இங்கிலாந்தை விட்டு புறப்பட வேண்டியதாயிற்று. அவர் விரும்பாதபோது ஒரு கப்பல் அவரை சுமந்துகொண்டு வந்து அவரின் தாய்நாட்டிடம் ஒப்படைத்துவிட்டது.

காயிதே ஆஜம் 1897-ம் ஆண்டில் வக்கீல் தொழிலில் ஈடுபட்டார். அந்த தொழில் அவருக்கு 'இவ்வளவு ஏமாற்றத்தை அளிக்கும் என்று அவர் எதிர்பார்க்கவே இல்லை. தன் குடும்பத்தார் எந்த கருத்தோடு அவரை இங்கிலாந்திற்கு அனுப்பி சட்டம் பயில வைத்தார்களோ அந்த நோக்கம் ஈடேறவில்லை. அக்காலத்திலெல்லாம் காயிதே ஆஜமின் கண்ணெளிகளில் கூர்மை மிகுந்திருந்தது. அவருடைய நெற்றி சதா சுருக்கங்கொண்டே தானிருக்கும். அப்பொழுது தான் அவர் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறார் என்று காட்டும் அடையாளம் அவை என்று மற்றவர்களுக்கு புரிந்தது.

ஜின்னா ஒரு லட்சாதிபதி, ஆடம்பரப் பிரியர், நாகரீகத்தின் சின்னம், படோடோபத்தின் உருவம் என்று நினைத்திருப்பவர்கள் தான் அதிகம் இங்கே. ஆனால் அதே ஜின்னா 12 தம்பிடிகள் கொண்ட ஒரு அணா இல்லாமல் மனவேதனையடைந்திருக்கிறார் என்பது எவருக்குத் தெரியும்? ரோல்ஸ் ராய்ஸ் காரில் கம்பீரமாக, உல்லாசப் பிரயாணம் செய்த ஜின்னா டிராம் காரில் செல்ல கையில் காசில்லாமல் சாலை ஓரத்திலே, பன்முறை நடந்து சென்றிருக்கிறார் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? அந்த சமயங்களிலெல்லாம் இன்று தவறாக கருதிக் கொண்டிருப்பவர்கள். அவர்களின் மூதாதையர்கள், சாலை ஓரத்தில் நடந்து சென்ற ஜின்னா, ரோல்ஸ் ராய்ஸ் காரில் பிரயாணம் செய்வார். ஒரு வக்கீலாக இருந்த ஜின்னா ஒரு கவர்னர் ஜெனரலாக உயருவார் என்று நினைத்ததில்லை. ஆதலால் ஜின்னாவின் கடந்த காலத்தையோ, நிகழ் காலத்தையோ, வருங்காலத்தையோ கணித்துக் கூற இயலாத ஒரு தலைமுறையில் ஜின்னா பிறந்து வளர்ந்து இறந்து விட்டார் எனும்போது. அவருடைய வாழ்க்கையே ஒரு புரியாத புதிராக அமைந்திருப்பதில் ஆச்

சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது? அவர் மரித்த பிறகு இந்த புரியாத புதிரை இன்று புரிந்துகொள்ள உலகம் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறது.

காயிதே ஆஜம் பாபா வெகு காலத்திற்கு பின்புதான் அரசியலில் ஈடுபட்டார் என்று பலர் நினைக்கின்றனர். அத்தகையவர்கள் பாபாவை சரியாக புரிந்துகொள்ளவில்லை என்றுதான் நான் கூறுவேன். பாபாவின் சிந்தனை சட்டக் கல்லூரி மாணவராக இருக்கும்போது சட்ட புத்தகங்களில் எவ்வளவு தீவிரமாக பிரவேசித்திருந்ததோ அதே போல அரசியல் உலகிலும் பிரவேசித்திருந்தது. அவர் இங்கிலாந்தில் கண்ட ஒவ்வொன்றிலும் இந்தியாவை கண்டுக்கொண்டு தானிருந்தார்.

அவர் இந்தியா திரும்பிய பிறகு அவரை கண்டு பேசிய நண்பர்கள் அந்த ஒரு உண்மையை உலகமறிய சொல்லாமல் போனது ஒரு பெரும் துரோகம் என்று கூட கூறுவேன். அவர் இங்கிலாந்து அநுபவத்தைப் பற்றி கூறும்போது இப்படித்தான் கூறினார்.

''இந்தியாவில் இல்லாத அதிசயம் இங்கிலாந்தில் ஒன்றுமில்லை. வானளாவ நிமிர்ந்து நிற்கும் கட்டடங்களை பார்க்கும்போது அதில் செங்கோட்டையின் வீரச் சரித்திரத்தை காண முடியவில்லை. அழகிய மணி மண்டபங்களை பார்க்கும்போது தாஜ்மஹாலின் ஜீவன் அதில் எதிரொலிக்கவில்லை. விண்ணை முட்டும் கோபுரங்களை பார்க்கும்போது அவைகளில் குதுப்மினாரின் உயிர் இல்லை. இந்தியாவை ஒரு முறை வந்து பார்த்து திரும்பும் இங்கிலீஷ்காரர்கள் தங்களை நாகரீகத்திலே சிறந்தவர்கள் என்று நினைப்பதில்லை. மாறாக இவ்வளவு நாகரீகமுள்ள இந்தியர்களை சகல துறைகளிலும் ஒடுக்கி பிற்போக்காளர்களாக மாற்றுகிறார்களே என்று தம் மக்களையேதான் சபிக்கிறார்கள். நம் நாகரீக பண்பாடுகளிலிருந்து நழுவிக்கொண்டே இருக்கிறோம். ஆனால் அவர்கள் முன்னேறிக் கொண்டே இருக்கிறார்கள். இந்த சரிவிலிருந்து மக்களை தடுக்கவேண்டும். அதுதான் நம் முதல் கடமையாக இருக்க முடியும், இதைவிட வேறு என்ன நல்ல சேதியை உங்களுக்கு அளிக்க முடியும்?''

பாபாவின் அன்றைய வார்த்தைகள் இது வரையிலே ஒலித்துக் கொண்டிருக்கின்றன. துரதிர்ஷ்ட வசமாக நாடெங்கிலும் ஒலித்துக்கொண்டிருக்க வேண்டிய இவ்வார்த்தைகள் இன்று ஒலிக்கவில்லை. அத்தகைய ஜீவன்

ததும்பும் வார்த்தைகளை பிரயோகித்தவர்கள் அன்று மட்டுமென்ன, இன்று கூட இல்லை இங்கிலாந்திலிருக்கும்போது அவர் அங்கே இந்தியாவை பார்த்தார். இவை இரண்டிற்குமிடையே இருந்த ஏற்றத்தாழ்வை சரிப்படுத்துவது எப்படி என்ற ஒரு பெரும் ஆராய்ச்சி அவர் சிந்தனையில் தேங்கியே நின்றிருந்தது.

பாபா இந்தியாவுக்கு வந்த பிறகு இங்கிலாந்திலே கண்ணீர் விட்டவர்களும் உண்டு. அப்பொழுதெல்லாம் சித்தரஞ்சனதாஸ் மட்டும் அங்கு இல்லாமலிருந்தால் இந்திய மாணவர்களின் ஐக்யம் எல்லாம் குலைந்தே போயிருக்கும் எனலாம். இருந்தும் கூட பாபா அதை பொருட்படுத்தவில்லை. பாபா இந்தியாவுக்கு திரும்பிய பிறகு ஸ்தாபனத்தின் நிலைமையை விளக்கி முஜப்பர் அலி என்ற நண்பர் அவருக்கு கடிதம் எழுதி இருந்தார். அவருக்கு கிடைத்த பதிலில் இந்த வார்த்தைகள் இடம் பெறும் என்று அவரோ மற்றவர்களோ நம்பவே இல்லை.

"நான் இந்தியா திரும்பிய பிறகு நமது ஸ்தாபனம் பலவீனம், அடைந்து வருகிறது; முக்கியத்துவத்தை இழந்து வருகிறது என்று எழுதி இருக்கிறீர்கள். அதற்காக நான் வருத்தப்பட்டாலும் அதை வரவேற்கிறேன். ஏனென்ருல் அந்த ஸ்தாபனம் எனக்காகவோ உங்களுக்காகவோ அமைக்கப்பட்டதில்லை. இந்திய மாணவர்களின் நன்மையை உத்தேசித்து ஸ்தாபிக்கப்பட்டது யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்த ஸ்தாபனம் தொடர்ந்து பணியாற்றித் தாஞக வேண்டும். ஒருவருடைய உழைப்பால், அல்லது திறமையால், அல்லது செல்வாக்கால் தான் நடக்கமுடியும் என்ருல் அத்தகைய ஸ்த்தாபனம் அழிவதே மேல். நீங்கள் உங்கள் கடமையை திறமையோடு செய்யுங்கள். தாஞக வெற்றி கிடைக்கும். அதுதான் என் வெற்றியின் இரகசியமுமாகும்."

அவரின் நண்பர்களும் இதரரும் தற்புகழ்ச்சியான பதிலை எதிர்பார்த்தார்கள். ஆனுல் நேர்மாற்றமான ஒரு பதில்தான் கிடைத்தது. இது போலவே அவர் வாழ்நாள் முழுவதுமே எது சரி என்று படுகிறதோ ஒளிவு மறைவின்றி அப்பட்டமாக கூறி வந்தார்; எழுதி வந்தார்.

1941-ம் வருடம் சென்னை நகரிலே அகில இந்திய முஸ்லிம் லீக் மாநாடு நடந்தது. அங்கு அவர் அடுத்த ஆண்டிற்காக தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த சமயத்தில் மக்கள் ஒரு புது முறை தீர்மானத்தை கொண்டுவந்தனர். அந்த

தீர்மானத்தின் கருத்து எப்படி என்பது பிரச்சினை அல்ல, மக்கள் அவர் மீது எத்தகைய அன்பும். மதிப்பும் வைத்திருந்தார்கள் என்பதுதான் பிரச்சினை. காயிதே ஆஜம் பாபா அகில இந்திய முஸ்லிம் லீக்கின் நிரந்தர தலைவராக தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்ற ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. நான் அந்த இடத்தில் இருந்தால் ஆனந்தக் கண்ணீர் வடித்திருப்பேன். ஜன நாயகத்திற்கும் சட்டத்திற்கும் புறம்பானதென கருதினால் அன்பாக நெளிந்து நிமிர்ந்து மறுத்திருப்பேன். ஆனால் பாபாவின் பால் போன்ற முகம் திடீரென்று சிவந்துவிட்டது. நெற்றியில் சுருக்கங்கள் தென்பட்டன. அவரது கூர்மையான பார்வை காரியதரிசி மிஸ்டர் லியாகத் அலிகானை துளைத்துவிட்டன. அவரும் மற்றவரும் பதறி போனார்கள். ''இது என்ன அர்த்தமில்லாமல்............................'' என்ற வார்த்தைகளோடு நின்றுவிட்டார் பாபா. தீர்மானம் போன இடம் தெரியவில்லை. இப்படித் தான் அப்பொழுதும் இருந்தார்—எப்பொழுதும் இருந்திருக்கிறார்.

இவ்வளவு வைராக்கியம் கொண்ட பாபாவுக்கு வக்கீல் தொழிலில் ஆரம்பத்தில் வெற்றி கிடைக்கவில்லை. அவர் 1897-ம் ஆண்டு வக்கீல் தொழிலில் ஈடுபட்டார். இந்த தோல்வி சில ஆண்டுகள் தான் நீடித்தது. ஆனால் இந்த அநுபவம் அவர் ஆயுள் முழுவதிலுமே ஒரு பெரும் துணையாக நின்றிருந்தது. பாபாவின் ஒவ்வொரு அடியிலும் தோல்வி தான் இருந்தது. ஆனால் அவர் வெற்றியின் பக்கம் போகிறோம் என்ற நம்பிக்கையை மட்டும் தளரவிடவில்லை. அக்காலத்தில் ரூ 100 வருமானம் கிடைக்கும் வழக்குகள் கிடைத்தால் பெரும் பெரும் வக்கீல்கள் எல்லாம் நான், நீ என்று அடித்துக்கொள்வார்கள். ஆனால் பாபாவோ மிக சாவதானமாகவே தன் அறையில் படித்துக்கொண்டிருப்பார். வருகிற கேஸ் கட்டுகளை வைத்துவிட்டு மறு நாள் வரும்படி சொல்லி அனுப்புவார். மறுநாள் வாதியோ, பிரதிவாதியோ வரும்போது ''இது மிகவும் சிறிய வழக்கு வேறு ஒரு வக்கீலை பாருங்கள்'' என்று அவர் கூறும்போது சக வக்கீல்கள் எல்லாம் அவருக்குப் பின்னல் சிரித்ததுமுண்டு. அவருடைய தகுதிக்கு அவை எல்லாம் மிக சிறிய வழக்குகளாகவே தென்பட்டன.

வறுமையால் வாடும்போது கூட இப்படி பாபா செய்வது என்பது அவருடைய நண்பர் தயாப்ஜிக்கு கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. அவர் பொறுத்து பொறுத்துப் பார்த்தார். ஒரு நாள் மாலை அந்தி வேளையிலே அவரை காணச் சென்றார் தயாப்ஜி. அப்பொழுது பாபா ஒரு ஷேக்ஸ்பியர்

நாடகத்தை படித்துக் கொண்டிருந்தார். அநுதாபத்தாலும், அன்பாலும் எழுந்த தயாப்ஜியின் கோபம் உச்ச நிலையை அடைந்துவிட்டது. அதனால் அவருடைய குரலும் உயர்ந்துவிட்டது.

"ஏன் முஹம்மதலி? இதென்ன புதுமை. இந்நேரத்தில் வக்கீல்களெல்லாம் சட்டங்களை புரட்டிக் கொண்டிருக்கிறார்கள். நீ ஷேக்ஸ்பியர் நாடக புத்தகத்தை புரட்டிக்கொண்டிருக்கிறாய்? நன்றாயிருக்கிறதப்பா நன்றாயிருக்கிறது."

இந்த பேச்சை கேட்ட பாபா உரத்த குரலில் சிரித்தார். பக்கத்திலிருந்த நாற்காலியை முன்னால் தள்ளிய வண்ணமே.

"என்ன தயாப்! உட்கார். இன்று என்ன உன் தலையில் வானம் இடிந்து விழுந்துவிட்டதா என்ன?" என்றார்.

"வருகிற கேஸ் கட்டுகளை எல்லாம் ஏன் நிராகரிக்கிறாய்?"

"நான் முதல்தர வக்கீலாவதற்காக" பளிச்சென்று வந்த பதிலுக்கு தயாப்ஜியினால் பதில் சொல்ல முடியவில்லை. பாவம் பாபா மணிக்கு ஆயிரம் ரூபாய் வாங்கும் ஒரு மிகப் பெரிய வக்கீலாக இருந்ததை பார்க்க முடியாமல் இந்த உலகத்தை விட்டு விரைவிலே சென்றுவிட்டார் தயாப்ஜீ. ஆனால் தயாப்ஜீயின் புகைப்படம் ஒன்று மட்டும் எப்பொழுதுமே பிரபல லாயர் ஜின்னாவினுடைய மேஜையின் இடது புற அறைக்குள் நிரந்தரமாக இடம் பெற்றிருந்தது.

பாபாவின் சட்டஞானம் எத்தகையது என்று விவரிக்கக்கூடிய ஆற்றல் அவர்காலத்து சட்டவல்லுனர்களுக்குகூட இருந்ததில்லை. இன்றைக்கு யார் இருக்கப் போகிறார்கள். அவைகளை விவரித்துக்கூற பாபா வக்கீல் தொழிலில் ஈடுபடுவதற்கு முன்பாக, வக்கீல் தொழிலில் ஈடுவடுவதா அல்லது அரசியலில் ஈடுபடுவதா என்ற குழப்பம் அவருக்கு ஏற்பட்டிருந்தது. அந்த குழப்பத்திலிருந்து விடுபட அவர் மிகவும் கஷ்டப்படத்தான் செய்தார். பாபா சட்டம் பயின்று இங்கிலாந்திலிருந்து கப்பல் ஏறியபோதே சித்தரஞ்சன தாசும் தாதாபாய் நௌரோஜியும் அவர்களின் நண்பர்களுக்கு எழுதிய பல கடிதங்களும் அக்கப்பலிலேயே ஏறி விட்டன, ஒரு சிறந்த தேசபக்தன், இளைஞன் முஹம்மதலி ஜின்னா இந்தியாவுக்கு வருகிறான் என்று அவைகளில் தீட்டப்பட்டிருந்தன. எனவே அவர் இந்தியாவுக்கு வந்ததும் அரசியலில் ஈடுபட பலர் அவரை வற்புறுத்தினர். பாபா

வுக்கு குழப்பம் ஏற்பட்டுவிட்டது. இறுதியில் ஒரு உறுதியான முடிவுக்கு வந்தார்: தலைசிறந்த ஒரு லாயராக மாறிய பின்பே அரசியலில் பூர்ணமாக ஈடுபடுவது என்று அவர் முடிவு செய்தார்.

பாபா இந்த முடிவுக்கு வருவதற்கு பல்வேறு காரணங்களிருந்தன. அவருடைய பொருளாதார நிலை மிகவும் கஷ்டமான நிலையிலிருந்தது அவர் பொருளாதாரத் துறையில் எவரையும் சாரமுடியாதபடி உயராதவரையில் அரசியலில் நாணயமாக, கௌரவமாக, நேர்மையாக இருக்கமுடியாது என்று அவர் அபிப்ராயப்பட்டார். இந்த அபிப்ராயத்தை அவர் பன்முறை கூறியிருக்கிறார். அவர் பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரலாக ஆனபிறகு, கராச்சியில் ஊழியர்கள் மாநாட்டில் பேசும்போது அவர் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"அரசியல் என்பது எனக்கு தெரியாததல்ல, அதில் நாணயம், நேர்மை இருக்கவேண்டும். இவை இரண்டும் நிலைத்திருக்க ஒன்றே ஒன்றுதான் வகைசெய்ய முடியும். அதுதான் உங்கள் பொருளாதார நிலையாகும். உங்களுக்கு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளும் வகையில் பொருளாதார நிலை இல்லையானால் உங்களுக்கு அரசியலில் இடம் கிடையாது. அரசியல், வாழ்க்கையை நடத்தும் வருமானம் பெறும் இடம் என்று யார் கருதுகிறார்களோ அவர்கள் இன்றே அரசியலிலிருந்து வெளியேறிவிடலாம்.

அரசியலில் இறங்குவதற்கு முன்பாக என் பொருளாதார நிலை விவரிக்க இயலாத முறையில் சரிந்திருந்தது. என் தேவையை பூர்த்தி செய்துகொள்ளாத வரையிலே நான் அரசியலில் ஈடுபடுவதில்லை என்று சபதம் செய்துகொண்டேன். உண்மையை சொல்லவேண்டுமானால் என் வெற்றிக்கு அதுவே அடிப்படை காரணமாக இருக்கிறது. நீங்கள் வாழ்க்கைக்கு இன்னொருவர் கையை எதிர்பார்ப்பவர்களாக இருப்பீர்களானால் நிச்சயமாக நீங்கள் மக்களுக்காக எதையும் எதிர்பார்க்கமுடியாது. அதனால் உங்களுக்கு மட்டுமின்றி உங்கள் மக்களுக்கும் அவமானம் ஏற்பட்டுவிடும்."

இந்த வார்த்தைகள் அவர் கொள்கையை தெளிவுபட விவரிக்கின்றன; பாபாவின் கருத்தை தவறு என எவரும் கூறமுடியாது.

NNEMARA PUBLIC LIBR

எனவே வக்கீல் தொழிலில் அவர் ஈடுபட்டுவிட்டார். அவரின் வக்கீல் தொழிலைப்பற்றி விவரித்தால் இக்கட்டுரை முடிவடைவது மிகக் கஷ்டமாகும். ஏனெனில் அவர் தொழிலில் ஈடுபட்ட ஒவ்வொருவினாடியும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதாகும். நான் இதை குறிப்பிட்டால் நீதிமன்றங்களையும் நீதிபதிகளையும் அவமதித்ததாகாது. அதனால் உண்மையையே கூறுகிறேன் என்ற தைரியமும், திருப்தியும் ஏற்படுகிறது எனக்கு. அவர் நீதி மன்றத்திலே சுறு சுறுப்பும் கண்டிப்பும் அதிகமாக இருக்கும். சரியான நேரத்திலே நீதிபதிகள் தங்கள் ஆசனங்களிலே வந்து அமர்ந்திருப்பார்கள்.

ஒரு நாள் டில்லி உயர்நீதி மன்றத்திலே பாபா ஒரு வழக்கில் வாதாடிக்கொண்டிருந்தார். நீதிபதி ஒரு இங்கிலீஷ்காரர். பாபா விவாதித்துக் கொண்டிருக்கையில் பகல் ஒரு மணி அடித்துவிட்டது. கோர்ட் கடியாரம் 'டாங்' என்று அடித்ததும் நீதிபதி ஒன்றையும் சொல்லாமல் எழுந்துவிட்டார். பாபாவுக்கு ஒன்றும் புரியவில்லை. நீதிபதியும் புதியவர் தன் சக தோழர்கள் சொன்னபோதுதான் அவர் பகல் சாப்பாட்டு நேரமாய் விட்டதால் நீதிபதி எழுந்து போய்விட்டார் என்று தெரியவந்தது. அவர் ஒன்றையும் கூறாமல் எழுந்துபோனது பாபா தன்னை அவமரியாதை செய்துவிட்டதாகவே நினைத்துக்கொண்டார்.

இந்த செய்தி வக்கீல்களின் வட்டாரங்களிலே காட்டுத்தீபோல் பரவி விட்டது. மாலையில் நீதிமன்றமே வக்கீல்கள் மயமாகவே இருந்தது. ஏனென்றால் ''ஜின்னா இதற்கு பழி வாங்காமல் இருக்கமாட்டார்'' என்ற உறுதி ஒவ்வொருவருக்கும் இருந்தது நீதி மன்றம் சரியாக மீண்டும் மூன்று மணிக்கு கூடியது. மீண்டும் பாபா தன் வழக்கை தொடர்ந்து விவாதித்தார். ஜின்னாவின் வாதத்தை அன்றோடு முடித்துக்கொண்டுதான் போவது என்ற முடிவோடு நீதிபதி வீற்றிருந்தார். பாபாவும் ஒன்றும் நடக்காததுபோலவும், மனம் புண்படாதவர் போலவும் விவாதித்துக் கொண்டிருந்தார்.

கோர்ட் கடியாரத்தில் மணி ஐந்தடித்தது. பாபா பேசிக்கொண்டிருந்தவர் வாக்கியத்தையும் முடிக்காமல் கட்டை சுற்றிக்கொண்டு நடக்கலானார். நீதிபதியின் முகம் கோபத்தால் சிவந்துவிட்டது. கூடியிருந்த வக்கீல்களெல்லாம் சிரித்தார்கள். ஆனால் ஜின்னாவோ எதையும் பொருட்படுத்தாமல் போய்விட்டார். நீதிபதி ஆத்திரம் பொங்கிய

வராய் "என்ன இது? ஏன் வக்கீல் போய்விட்டர்?" என்றார். பிரதிவாதியின் வக்கீல் சாவதானமாக தன் கண்ணாடியை சரிபடுத்திக் கொண்டே "மிஸ்டர் ஜின்னாவுக்கு டீ நேரம் ஆய்விட்டது; கோர்ட் நேரமும் முடிந்துவிட்டது யுவர் லார்டு ஷிப்" என்றார். அப்பொழுதுதான் மற்றவர்களைப் போல ஜின்னாவையும் நடத்தமுடியாது என்று அவருக்கு புரிந்தது.

இப்பேர்பட்ட சம்பவங்கள் அவர்வாழ்நாட்களில் ஆயிரமாயிரம் இருக்கின்றன. தன் வாழ்க்கையில் எவ்வளவு நாணயமாகவும், நேர்மையாகவும் இருக்கிறாரோ அதேபோல மற்றவர்களும் இருக்கவேண்டுமென்ற சூழ்நிலையை சிருஷ்டித்துக்கொண்டே இருந்தார். அப்பொழுதுதான ஒரு முதல்வகுப்பு மாஜிஸ்டிரேட்டாக பதவி ஏற்றார் பம்பாயிலே ஒரு வெள்ளைக்காரர். பம்பாய் வக்கீல்களெல்லாம் அவரைப் பார்த்து நடுங்கிக்கொண்டிருந்தனர். அவ்வளவு கண்டிப்பாகவும், விசித்திரமாகவும் நடந்துகொண்டார் அந்த மாஜிஸ்டிரேட். "மிஸ்டர் ஜின்னாவிடம் இந்த மாஜிஸ்டிரேட் சிக்கமாட்டாரா?" என்று எண்ணாத, வேண்டாத வக்கில் எவரும் அன்று பம்பாயில் இருந்ததில்லை தெய்வாதீனமாக மிஸ்டர் ஜின்னா பாரட்லா நீதி மன்றத்திற்கு ஒரு வழக்கில் போக நேர்ந்துவிட்டது. அவர் நேரே உள்ளே போகாமல் வராண்டாவிலேயே சிகிரெட்டைப் புகைத்துக்கொண்டு ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தார். இதற்கிடையில் மாஜிஸ்டிரேட் தன் ஆஸனத்கில் வந்து அமர்ந்தார். இதைக் கண்ட மிஸ்டர் ஜின்னா சிகிரெட்டைத் தூக்கி எறிந்துவிட்டு உள்ளே நுழைந்தார். இதைக்கண்ட மாஜிஸ்டிரேட்டுக்கு காரணமில்லாமல் கோபம்வந்துவிட்டது. எல்லோரையும் மிரட்டிவைத்திருப்பது போலவே மிஸ்டர் ஜின்னாவையும் மிரட்டிவைக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றிவிட்டது போலும். உடனே நீதிபதி கடுகடுத்த முகத்தினராயாய் "மிஸ்டர் ஜின்னா! இது கௌரவ மாஜிஸ்டிரேட் கோர்ட் அல்ல. முதல்வகுப்பு மாஜிஸ்டிரேட் நான். ஞாபகத்தில் வையுங்கள்" என்றார்.

மிஸ்டர் ஜின்னா ஒருவினாடியும் பொறுக்கவில்லை. நீதிபதியின் சொற்கள்நின்றதும் திடீரென்று பதில்கூறிவிட்டார்.

"ஆமாம் நீதிபதி அவர்களே! நான் அதை நன்றாக தெரிந்துகொண்டுதான் இங்கு வந்திருக்கிறேன். நானும் ஒரு முதல் வகுப்பு வக்கீல் என்பதையும் ஞாபகத்தில் வையுங்

கள்'' மாஜிஸ்டிரேட்டிற்கு இன்னதுதான் பதில் சொல்ல வேண்டும் என்று புரியவில்லை, அப்படியே பிரமிப்புதட்டி உட்கார்ந்திருந்தார்.

பாபாவின் வக்கீல் தொழில் ஆரம்பமே இப்படியாகத் தான் துடிப்பாக இருந்தது. இந்த துடிப்பு இறுதி காலம் வரையிலே நீடித்திருந்தது. என்றாலும் ஆரம்ப காலத்தில் அவருக்கு போதிய வருமானம் கிடைக்கவில்லை. ஆனால் அவருக்கோ ஒரு கார் வாங்கவேண்டுமென்ற ஆசை ஏற் பட்டிருந்தது. எப்படியாவது ஒரு கார் வாங்கவேண்டு மென்று அவர் உறுதி பூண்டிருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் பம்பாய் ஹைகோர்ட் தலைமை நீதிபதியிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது பாபா வுக்கு. அதில் பம்பாயிலிருந்து விடுமுறையில் போகும் ஒரு மாஜிஸ்டிரேட்டின் இடத்தில் சில மாதங்களுக்கு தற் காலிகமாக உத்தியோகம் பார்க்கும்படி அவர் கேட்டிருந் தார். பாபாவும் இதற்குச் சம்மதித்துவிட்டார். அவருக்கு ஏற்பட்ட பதவி ஆசையல்ல அது. மாதம் ரூ. 500 சம்பளம் கிடைத்தால் அதிலே மீதம்பிடித்து ஒரு கார் வாங்கலாம் என்ற எண்ணம்தான் அவருக்கு.

மிஸ்டர் ஜின்னு பாரட்லா மாஜிஸ்டிரேட் ஆகி விட்டார். குறித்த காலம் கடந்தபிறகு மீண்டும் இரண்டு மாதங்களுக்கு நீடித்திருக்க பிரதம நீதிபதி கேட்டுக்கொண்டார். இக் காலத்தில் அவர் அளித்த தீர்ப்புகளைப்பார்த்த பிரதம நீதி பதி ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டார். இவ்வளவு சட்ட ஞானமும், அனுபவரீதியான முறையும் அவரிடம் இருக்கு என்று அவர் நினைக்கவில்லை. மிஸ்டர் ஜின்னுவின் தீர்ப்புக் களை மேற்கோள் காட்டும் அளவிற்கு அவர் அவருக்கு மரி யாதை செலுத்தினர்.

ஒரு நாள் இரவு மணி 8 இருக்கும். பாபாவின் வேலைக் காரன் அவசர அவசரமாக பாபாவிடம் ஓடிவந்தான். அவ னுகவே பேசக்கூடியவன் அன்று பாபா ''என்ன'' என்று கேட் டும் கூட அவனல் பதில் சொல்ல முடியவில்லை.

அவன் மிக கலவரமடைந்தவனுய் காணப்பட்டான். வெகு கஷ்டத்தோடு அவனுடைய உணர்ச்சியை அடக்கிக் கொண்டு ''பிரதம நீதிபதி வந்திருக்கிருர்'' என்றுன். அவன் வார்த்தைகளைக்கேட்ட பாபா லேசான புன்சிரிப்போடு ''அவரை அழைத்துவா'' என்று கூறிக்கொண்டே பிரதம நீதிபதியை வரவேற்க எழுந்து நடக்கலானர்.

அவருடைய வேலைக்காரன் கலவரமடைந்ததில் வியப்பில்லை. அக்காலத்து பிரதம நீதிபதிகள் ஒருவருடைய வீட்டிற்கு வந்துபார்ப்பது என்பது மிக அசாதாரணமாகும். பாபாவின் வீட்டிற்கு அவர் வந்ததைக்கண்ட வேலைக்காரன் ஆச்சரியத்தால், உணர்ச்சியால் கலவரமடைந்துவிட்டான். அதிலும் பாபா அன்று ஒரு மாஜிஸ்ட்ரேட்; அவரின்கீழ் வேலை செய்யக்கூடியவர். அவருடைய வீட்டைத்தேடி உயர்தர அதிகாரி வருவதென்றால்..........! இத்தகைய சம்பவங்கள் நடக்கும்போது எவர் உபசரிக்கவேண்டியவரோ அவர்கூட கலவரமடைந்துவிடுவது சகஜம். ஆனால் பாபாவோ சர்வ சாதாரணமாக மற்ற விருந்தினரை வரவேற்பது போலவே வரவேற்றார். நீதிபதியும், பாபாவும் வெகுநேரம் வரையிலே தனி அறையில் பேசிக்கொண்டிருந்தனர்.

அடுத்த நாள் காலையில் தபால் கட்டில் இருந்த ஒரு கடிதம்தான் அவர் பாபாவின் வீட்டைத்தேடி வருவதற்கான காரணத்தை விவரித்தது. பாபா தற்காலிக மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தபோது அளித்த தீர்ப்புகள் மிகவும் பாராட்டத் தக்கனவாக இருந்ததைக்கண்ட நீதிபதி அவரை தொடர்ந்து பதவியிலிருக்கும்படி வற்புறுத்தி கேட்டுக்கொண்டிருந்தார் அக்கடிதத்தில். அவர் தொடர்ந்து சேவை செய்ய தூண்டிவிடுவதற்காக, அவருக்கு மட்டும் விசேஷமாக ரூ. 1000 மாத சம்பளம் கொடுக்க தயாராக இருப்பதாக அதில் விவரிக்கப்பட்டிருந்தது. உண்மையில் அக்காலத்தில் எந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கும் 1000 ரூபாய் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டதில்லை அக்காலத்தில் மாதம் 1000 ரூபாய் சம்பளம் என்பது சாதாரண வருமானமுமல்ல. இருந்தாலும் பாபா ஒரு சிறிதும் அந்த கடிதத்தின் விளைவை சிந்தித்ததாக தெரியவில்லை அவர் அந்த நிமிஷமே கீழ்கண்டவாறு பதில் எழுதி அனுப்பிவிட்டார்.

"தங்கள் அன்புக்கு என் நன்றி. தாங்கள் மாதம் 1000 ரூபாய் சம்பளத்தில் தொடர்ந்து உத்தியோகம் வகிக்க வேண்டியிருக்கிறீர்கள். நான் என் இயலாமையை குறித்து வருந்துகிறேன். எனது இலட்சியம் நாள் ஒன்றுக்கு 1000 ரூபாய் சம்பாதிக்க வேண்டுமென்றிருக்கிறது."

இதைக்கேட்ட வக்கீல்களெல்லாம் ஆச்சரியப்பட்டு போயினர்: ஆனால் பாபாவோ தன் பதவியிலிருந்து விலகிவிட்டார். தேடிவந்த ஒரு பெரும் அதிர்ஷ்டத்தை உதறித்தள்ளிவிட்டதாகவே பலர் நினைத்தனர். ஆனால் இறுதியில் பாபாவின் இலட்சியம் வெற்றியை கண்டது. நாள் ஒன்றுக்கு

ரூ. 1000 சம்பாதிப்பதுதான் இலட்சியம்என்று அவர் அன்று கூறினர், ஆனல் அவரோ ஒரு மணி நேரத்திற்கு 1000 ரூபாய் வருமானமுடைய ஒரு பிரபல வக்கீலாக காட்சி தந்தார். அவர் கடைசியாக வாதித்த வழக்கு போப்பால் அரசருடைய வழக்காகும். அந்த வழக்கில் அவர் பெற்ற வக்கில் பீஸ் நான்கு இலட்சம் ரூபாய்களாகும்.

அன்று மட்டும் அவர் உயர் நீதிபதியின் வேண்டுகோலுக்கு இணங்கி இருப்பாராளுல் அவர் என்னவாக இருந்திருப்பார் என்று கூறுவது கடினமாகும். ஆனல் ஒன்று மட்டும் நிச்சயம், அவர் ஒரு மிஸ்டர் ஜின்னுவாகவே இருந்திருக்க முடியும். இந்நாட்டின் ஒரு பிரதான அதிகாரியாக உயர்ந்திருக்க முடியும். அவர் காயிதே ஆஜமாக உலக மக்களின் நன்மதிப்பை பெற்றிருக்க முடிந்திருக்குமா? உலக முஸ்லிம்களின் தந்தையாக திகழ்ந்திருக்க முடியுமா? அவர் ஒரு தனி நாட்டை சிருஷ்டிக்க முடியுமா? முடிந்திருக்காது என்பதில் என்ன சந்தேகம்.?

ஆண்டவன் தன் இறுதி தூதரை மக்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்க ஏவினுன். இம் மார்க்கத்தை நான் சம்பூர்ணமாக்கிவிட்டேன் என்ருன். அது மட்டுமா சொன்னுன்? தான் கருணையாளன் என்றும் கூறினன். யார் மீது கருணை? சதா அவன் காட்டிய வழிகளிலிருந்து வெகுதூரம் விலகி நிற்கும் மக்களிடமா கருணை காட்டுவது! ஆம்! அவனே நாம் மறந்தாலும் நம்மை அவன் மறப்பதில்லை. நாம் எவ்வளவுதான் அநீதிகளை புரிந்தாலும் நம்மை தண்டித்து மீண்டும் சந்தோஷத்திலாழ்த்துகிருன். நாம் சின்னுபின்னப்பட்டு சீரழிகிரும். இருந்தாலும் அவன் நிகரற்றக் கருணையாளனல்லவா? மீண்டும் நம்மை ஒன்றுபடச் செய்து உயர்த்துகிருன்; வெற்றியை அளிக்கிருன்.

இப்படி வெற்றியை கொடுக்கும்போது ஒருவரின் மூலமாகவே அதை அவன் தேடித்தரச் செய்கிருன். அம்முறையிலே தான் வறுமையிலே வாடிக்கொண்டிருந்த பாபாவை ஆயிரம் ரூபாய் வருமானத்தை உதறித்தள்ளும் வைராக்ய உள்ளத்தை கொடுத்து நம்மை தலைமை தாங்கி வெற்றிப் பாதையில் செலுத்தச் செய்திருக்கிருன். அவன் சந்தேகமில்லாமல் நிகரற்ற கருணையாளனுகவே இருக்கிருன்.

பாபா வக்கீலாக இருந்தபோதிலும் அவர் நாணயத்தையும், நேர்மையையும் கடைபிடித்து வந்தார். இதை கூறுவதற்காக வக்கீல்கள் என்மீது கோபம்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். வக்கில்கள் நீதிக்கும் நேர்

மைக்கும் மாறு செய்வதுபோல வேறு யாரும் செய்வதில்லை என்று காந்திஜீ கூறியிருக்கிறார். எல்லா வக்கீல்களும் அத்தகையவர்தான் என்று நான் கூறவில்லை. எதிலும் விதிவிலக்கு என்பது ஒன்று இருக்கிறது என்று நான் கூறிவிட விரும்புகிறேன். வக்கீல் தொழிலை காந்திஜீ கைவிடுவதற்கு ஒரு காரணம் அத்தொழில் அவருக்கு வெற்றியளிக்கவில்லை என்பதுமட்டுமல்ல, அத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர் நியாயமாகவும், நேர்மையாகவும் இருக்கமுடியாது என்பதுமாகும், இது அவருடைய பகிரங்க குற்றச்சாட்டு,

ஆனல் பாபாவோ அதற்கு நேர் மாற்றமானவர். அவர் தொழிலில் ஈடுபட்டிருந்தபோதும், இல்லாதபோதும் நீதியையும், நேர்மையையும் அவர் கடைபிடித்தே வந்திருக்கிறார். சோதனை மிகுந்த காலத்திலெல்லாம், அந்தநேரத்தில் தவறுதலாக நடப்பது இயற்கை என்ற நிலை இருந்தபோதெல்லாம், நேர்மையை நாடி துன்பத்தை அனுபவிக்க துணிந்தாரே யன்றி நேர்மைக்கு புறம்பாக சென்று இலாபத்தை அடைந்ததில்லை. அத்தகைய தொரு சம்பவம் அவர் வாழ்நாள் சரித்திரத்தை துருவித் துருவி ஆராய்ந்தாலும் கிடைக்கப் பெறுது.

இன்றுகூட அவர் உயிரோடு இருக்கிறார்; ஒரு பெரும் பதவி வகிக்கிறார். அவருடைய பெயரை கூறுவது உசிதமில்லை என்று கருதுகிறேன். அக்காலத்தில் அவர் ஒரு பெரிய வக்கீல். அவர் ஒரு வழக்கில் வக்காலத்து வாங்கியிருந்தார். வழக்கு முழுமையும் படித்துவிட்டு வாதியை பாபாவிடம் அனுப்பிவைத்தார். தன்னல் வழக்கில் வெற்றிபெறச் செய்யமுடியும் என்ருலும் பாபாவின் அபிப்ராயத்தை தெரிந்துகொள்வது நல்லதென அவர் கருதினர். தாஞகவே வாதியை பாபாவிடம் அனுப்பிவைத்தார்

வாதி பாபாவை சந்தித்தார். தான் கொண்டுவந்திருந்த தஸ்தாவேஜுகளை பரிசீலனைசெய்து அபிப்ராயத்தை அறிவிக்கும்படி வேண்டிகொண்டார். பாபா எப்பொழுதும் போலவே அவரிடமும் வழக்குகளில் தான் வாங்கும் பீஸ் எவ்வளவு என்பதை கூறினர். தான் ஏற்றுக்கொள்ளும் வழக்குகளில் கட்டைப் படிப்பதற்கு மட்டும் மணி ஒன்றுக்கு 1000 ரூபாய் பெறுவது வழக்கமென்றும், இக்கட்டைப் படித்து அபிப்ராயத்தை அறிவிக்க எத்தனை மணி நேரமாகுமென்று முன்கூட்டியே சொல்லமுடியாது என்றும் திட்டவட்டமாக கூறிவிட்டார். வாதிக்கு வேறு வழி இல்லை.

எனவே பத்தாயிரம் ரூபாயையும், தஸ்தாவேஜுகளையும் கொடுத்து 10 மணி நேரத்தில் எவ்வளவு அபிப்ராயம் சொல்லமுடியுமோ அதை மட்டும் கூறிவிடும்படி வேண்டிக் கொண்டு போய்விட்டார்.

பாபாவிடம் பணத்தையும், தஸ்தாவேஜுகளையும் ஒப்படைத்துவிட்டு வீடு சென்ற அவருக்கு மன நிம்மதியே ஏற்படவில்லை. பாபாவிடம், பத்துமணிநேரம் பரிசீலனைக்குபபின் எவ்வளவு அறிவிக்கமுடியுமோ அதை அறிவித்தால் போதும் என்று கூறிவந்தது அவருக்கு எப்படியோ இருந்தது. ஆதலால் அதனால் எவ்வளவு ரூபாய் செலவானாலும் பரவாயில்லை. அவரை முழுவதையும் படிக்க செய்து அபிப்ராயத்தை பெற்று, சாதகமாயிருந்தால் வழக்கு தொடருவது. இல்லையென்றால் சும்மா இருந்து விடுவது என்று தீர்மானித்துக்கொண்டார்.

குறித்த தேதியில் மேலும் பத்தாயிர ரூபாய்களை எடுத்துக்கொண்டு பாபாவிடம் சென்றார். பாபாவின் முன்னால் போய் உட்கார்ந்ததும் தஸ்தாவேஜுகளுடன் 6500 ரூபாய்க்கு ஒரு பாங்க் செக்கையும் சேர்த்து முன்னால் வைத்தார் பாபா. இவருக்கு ஒன்றும் புரியவில்லை. பாபா பேசலானார்.

"என் அபிப்ராயத்தை நான் எழுதி இத்துடன் இணைத்திருக்கிறேன். நான் தங்கள் வேலையை மூன்றரைமணி நேரத்தில் முடித்துவிட்டேன். அதற்காக 3500 ரூபாயை எடுத்துக்கொண்டேன்; பாக்கி ரூபாய் 6500-க்கு இந்த செக்கை கொடுத்திருக்கிறேன்."

நான் 10 மணி நேரம் தஸ்தாவேஜுகளை பரிசீலித்தேன்; ஆதலால் பாக்கி ஒன்றுமில்லை என்று அவர் கூறியிருந்தால் அவர் ஒன்றும் கேட்டிருக்க மாட்டார். பணத்தைப்பற்றி ஒன்றையும் கூறாமல் வெறும் தஸ்தாவேஜு கட்டை கொடுத்திருந்தாலும் அவர் மௌனமாகவே போயிருப்பார். ஆனால் பாபாவின் நாணயமும், நேர்மையையும் பல ஆயிர வெள்ளி நாணயங்களும் ஆட்டவில்லை; அசைக்கவில்லை இத்தகைய ஒருசம்பவம் எந்த வக்கீல் காரியாலயத்திலாவது நடந்திருக்கிறதா? கேட்டதுண்டா? அல்லது எந்த வக்கீலாவது நான் அப்படி செய்திருக்கிறேன் என்று ஆதாரப் பூர்வமாகவும் வேண்டாம். மனசாட்சியுடன் கூற முடியுமா? கூறிவிட்டு அவர்கள் என்மீது கோபப்பட்டால் நான் அதற்கு மன்னிப்பை பெற கடமைபட்டவன்தான் — அதை கேட்கவும்

செய்வேன். ஏனெனில் நான் கண்ட ஒரு பெரும் நாணயஸ்தர், நேர்மையாளரைப்பற்றி எழுத துணிந்த எனக்கு அதில் ஆயிரத்தில் ஒரு பங்காவது இருக்கவேண்டுமல்லவா?

காயிதே ஆஜம் பாபா இங்கிலாந்திலே சட்டக் கல்வி பயின்ற பின்பும், குறைந்தது 10 வருட காலத்திற்கு அங்கேயே தங்கியிருக்க வேண்டுமென்றே விரும்பினர் என்பதை நான் முன்னமேயே கூறியுள்ளேன். அவர் அங்கு சட்டங்களை மட்டும் கற்க வேண்டியதோடல்லாமல், இங்கிலாந்திலே இன்னும் அநேகவற்றை கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பியதேயாகும். ஆனல் அவர் தன் குடும்பத்தாரிடமிருந்து அனுமதி கிடைக்காததால் திரும்பிவிட நேர்ந்தது. ஆனல் அந்த வைராக்ய மனிதருடைய உள்ளத்தில் உதித்த அந்த எண்ணம் அழிந்துவிடுமா என்ன? அவரின் உள்ளத்தில் மட்டும் இங்கிலாந்தில் சில காலம் தங்கியிருக்கவேண்டுமென்ற எண்ணம் ஒரு சிறிதும் தளராமல் தேங்கியே கிடந்தது.

அவர் ஆரம்பத்தில் வக்கீல் தொழிலில் படுதோல்வி அடைந்து வந்த நேரத்திலும் கூட அந்த எண்ணம் அகலவில்லை. அந்த எண்ணத்தை நிறைவேற்றிவிட முடியும் என்ற உறுதி கூட அசைந்து கொடுக்கவில்லை. அக்காரணத்தால்தான் அந்த உலகப் பெருமேதை ஒவ்வொரு கோடை காலத்திலும் இங்கிலாந்தை தன் இருப்பிடமாகக் கொண்டார்; இந்திய தவப்புதல்வரை வருஷத்துக்கு ஒரு தடவையாவது வரவேற்று பெருமையடைந்து கொண்டிருந்தது இங்கிலாந்து தீவு. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் தலைநகரம் அந்தப் பேரறிஞரை மாலையிட்டு வரவேற்க ஒருக்காலும் தயங்கியதில்லை.

இங்கிலாந்தில் எதைத்தான் அவர் கற்றுக்கொண்டார்? இக்கேள்வியை எழுப்புவது நமக்கு சர்வ சாதாரணம்தான். ஏனென்றல், நாம் கங்கை நதி தீரத்தையும், இமாலயப் பனிமலைகளையும் கன்னியகுமரியையுமே பார்த்து பார்த்து பெருமைப் படக்கூடியவர்கள்; பிரிட்டிஷ்காரர்கள் கட்டிய ''வைஸ்ரிகல் லாட்ஜை''யும் ''செயின்ட் ஜார்ஜ கோட்டை'' யையுமே பார்த்துக் கொண்டிருப்பவர்கள். ஒரு வெள்ளைக்காரனை எங்கேயாவது பார்க்க நேர்ந்தால் அதிசயப் பிறவியைப்போல கூடி நின்று முறைத்து முறைத்துப் பார்க்கக் கூடியவர்கள். அவர்களின் கார் ஜன்னலிலே நாக்கை தொங்க விட்டுக்கொண்டு தலையை நீட்டிக்கொண்டிருக்கும்

நாய்களை மிக கண்ணிபத்தோடும் பய பக்தியோடும் பார்ப்பவர்கள். இந்திய உப கண்டத்தையே உலகமாக, கடவுள்கள், அவர்களின் படைப்புகள் ஆகியவற்றின் ஏக இருப்பிடமாக நினைத்து அனுதினமும் பேசிப் பெருமைப் படக்கூடியவர்கள் ஆதலால் இந்த கேள்வி சாதாரணமாக நம் உள்ளங்களிலே உதிக்கிறது. ஆனால், பாபாவோ அத்தகையவரல்ல. அவர் இங்கிலாந்தை நினைக்கும்போது, ஆறாயிரம் மைல்கள் அலைகடல்களைக் கடந்து எப்படி, ஏன் வந்தார்கள்? அவர்களால் நம்மை அடிமைப்படுத்த எப்படி முடிந்தது? அவர்களையும் அவர்கள் நாய்களையும் பெருமைபடுத்த நம்மை எப்படி மாற்றியமைத்தார்கள்? என்ற கேள்விகளை தன்னைத்தானே எழுப்பிக்கொள்வார். அதற்கு பதிலை டெல்லியிலிருக்கும் வைஸ்ரிகல் லாட்ஜிலும், பம்பாய் கடற்கரையிலும் தேடுவார். அதே போலத்தான் அவர்களின் பிறப்பிடமான இங்கிலாந்திலும் சென்று தேடினர்.

நிச்சயமாக பிரிட்டிஷ்காரர்களிடம் சில வியக்கத்தக்க குணப்பண்பாடுகள் இருக்கவேண்டும். அவைதான் அவர்களை உலகத்தில் உயர்த்திபிருக்க வேண்டும். அவைகள் இருப்பதினால்தான் '' சூரியன் அஸ்தமனமாகாத பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் '' என்ற புகழத் தக்க ஒரு சாம்ராஜ்யத்தை உலகெங்கிலும் அமைக்க முடிந்தது. இதுதான் அவரின் அபிப்ராயம். இந்த அபிப்ராயம் அவர் இங்கிலாந்திலே சட்டக் கல்வி பயிலும்போது ஊர்ஜிதமாகி இருந்தது. எனவே ஒவ்வொரு கோடையிலும் காயிதே ஆஜம் பாபா தன் கேள்விகளுக்கு விடைகளைப் பெற இங்கிலாந்திற்கு சென்றிருக்கிறார்.

உண்மையில் அவர் இங்கிலாந்தில் பலவற்றை கற்றிருக்க வேண்டும், இல்லையானால் இந்திய உபகண்டத்திலே அவருக்கு நிகரான இன்னொரு தலைவனை நாம் ஏன் பார்க்க முடியவில்லை? அவருக்கு அவரே உதாரணமாய் எப்படி இருந்திருக்க முடியும்? இந்த கோணத்திலிருந்து நாம் இந்த விஷயத்தை பார்த்தால் நிச்சயமாக பாபா பலவற்றை கற்று வந்திருக்கக்கூடும். அதிலும் எவருக்குமே புரியாத பலவற்றை, பலர் பல்லாண்டுகள் அங்கு தங்கியிருந்தும் கற்காத பலவற்றை அவர் கற்று வந்திருக்க வேண்டும்.

அவர் உண்மையிலேயே இங்கிலாந்தில் பலவற்றை கற்ருர் எனபதோடல்லாமல் பிரிட்டிஷ்காரர்களுக்கு பலவற்றை கற்று கொடுக்கவும் செய்திருக்கிருர். அவருடைய

நடை. உடை, பாவனை அனைத்துமே ஒரு வெள்ளைக்கார ரைப் போலவே அமைந்திருந்தன. ஆனால் அவர் உள்ளத்தில் இந்தியப் படத்தில் பூசப்பட்டிருந்த சிகப்பு சாயம் அப்படியே பதிந்திருந்தது; நாட்டு விடுதலை எண்ணம் மட்டும் அவரை விட்டு ஒரு வினாடி கூட விலகி இருக்கவில்லை என்பதை மட்டும் துணிந்து சொல்லலாம்.

இப்படிக் கூறும்போது சிலர் என் மீது கோபப்படலாம். அப்படி கோபப்படுவதற்கு ஒரே ஒரு காரணமுண்டு. அவர் நினைத்ததை தயவு தாட்சண்யமின்றி கூறக் கூடியவர். இயற்கையாகவே சில இந்தியர்களுக்கு இது பிடிக்காது. அதன் எதிரொலிதான் அந்த கேள்வி. எல்லோரையும் போல அவரும் சிறைக்குள் சென்று சில தினங்களாவது ஓய்வு பெற்றிருந்தாரானால் இந்த கேள்வியே எழுந்திராது. அவர் ஆரம்ப காலத்திலிருந்தே சிறைக்கு செல்லுவது பொறுப்புடையவர்களின் செயலாகாது என்று கூறியே வந்திருக்கிறார்.

பாபா இங்கிலாந்திலே இருந்தபோது அயர்லாந்து மக்கள் தலைவர்களிடையே மன வேற்றுமை ஏற்பட்டு விட்டது. அன்று மிஸ்டர் டிவேலரா சாத்வீகமாக, சட்ட பூர்வமாக விடுதலை போராட்டத்தை நடத்த வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார். ஆனால் இளம் புரட்சியாளர்களின் தலைவராக இருந்த மிஸ்டர் மைக்கேல் காலின்ஸ் ஒரு பெரும் புரட்சியை தோற்றுவித்து அயர்லாந்தை சுதந்திர நாடாக்க வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார். சுதந்திரம் பெற வேண்டுமென்ற ஒரே நோக்கம் படைத்த இரு பெரும் தலைவர்களிடையே ஏற்பட்ட இந்த பிளவு மக்களிடையேயும் நிலவி விட்டது. இங்கிலாந்தில் எங்கு பார்த்தாலும் இதே பேச்சு. ஒவ்வொரு 'டீ மேஜை' யிலும் இந்த விவாதந் தான். மிஸ்டர் மைக்கேல் காலின்சின் கட்சியை ஆதரிக்கக் கூடியவர்களின் குழு லண்டன் நகருக்கு வந்திருந்தது. அக் குழுவினர் பிரபல அரசியல் தலைவர்களுடன் விவாதித்துக் கொண்டிருந்தனர். அயர்லாந்தில் ஏற்பட்டிருந்த குழப்ப நிலையைப் பற்றிய இங்கிலாந்து அரசியல் தலைவர்களின் அபிப்ராயத்தை திரட்டவே அந்த குழு வந்திருந்தது.

பாபாவிடம் விவாதிக்க வேண்டிய நேரம் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் சந்திப்பு ஏற்பட்டது. குழுவினர் சரமாரியான கேள்விகளை பொழிந்தனர். பாபா தன் அபிப்ராயத்தை ஒளிவு மறை

வின்றி கூறிக்கொண்டிருந்தார். அந்நேரத்தில்தான் குழுவினரில் ஒருவர் பாபாவிடம் ஒரு நேரிடையான கேள்வியை போட்டார்.

"புரட்சி செய்து, அதன் காரணமாக சிறை புகுவதைப் பற்றி தங்கள் அபிப்ராயமென்ன?"

பாபா பலமாக சிரித்தார். தன்னுடைய பதில் குழுவினரால் எப்படி கருதப்படும் என்பதைப் பற்றி கவலை சிறிதும் படவில்லை. தன் அபிப்ராயத்தை மிகத் தெளிவாக, நேரிடையாகக கூறும் சுபாவமுடைய பாபா பளிச்சென்று பதில் சொல்லிவிட்டார்.

"ஆமாம்! தம்மை தற்காத்துக் கொள்ள தலைவர்களுக்கு சிறைகளைவிட சிறந்த இடம் வேறு இல்லைதான்."

அந்த வைராக்ய மனிதருடைய திருவாயிலிருந்து அம்பை போல் வார்த்தைகள் வெளி வந்தன. வந்தவர்கள் திக்குமுக்காடிவிட்டார்கள். அன்று இங்கிலாந்தில் வேறு எவரும் இவ்வளவு துணிந்து அபிப்ராயம் கூறியதில்லை ஏன்? இந்த திட்டத்தை எதிர்த்து வந்த மிஸ்டர் டிவேலராவினுல் கூட சொல்ல முடியவில்லை. ஆனுல் பாபா துணிந்து கூறினுர். அன்று அவருக்கு ஏற்பட்ட அபிப்ராயம் இறுதி நாள் வரை மாறவில்லை. அதற்கு விரோதமாக அவர் செயலாற்றவும் இல்லை.

அரசியலிலே சட்ட பூர்வமாக நடந்து காரியத்தை சாதிக்கலாம் என்பது பாபாவின் திட நம்பிக்கை. இதை சாதிக்க மக்களின் ஆதரவு இருந்தால் போதும் என்பது அவரின் எண்ணம். எனவே மக்களின் ஆதரவைக் கொண்டு சாதிக்க வேண்டியதை சாதிக்க புரட்சிகளை ஏன் தூண்ட வேண்டும்? அதற்காக சிறைச்சாலைகளுக்குள் ஏன் நுழைய வேண்டும்? மக்கள் ஆதரவைப் பெருதவர்கள்தான் இப்படியெல்லாம் செய்யவேண்டியிருக்கும் என்பது அவரின் அபிப்ராயம். இந்த அபிப்ராயத்திலிருந்து எழுந்ததுதான் அவரின் பதில். இப்பதில் அயர்லாந்தில் பரபரப்பை மூட்டிவிட்டது. இவரின் அபிப்ராயத்தை ஒரு தீர்க்கதிருஷ்டியுடைய அரசியல் வாதியின் அபிப்ராயமாகக் கொள்ளவில்லை அவர்கள். ஒரு அடிமை நாட்டு பிரஜையின் அபிப்ராயம்தான் அது என்று கருதினுர்கள்.

புரட்சியும் நடந்தது. தொடர்ந்து ஒரு வருஷ காலம் கூட நடக்கவில்லை. அதற்குள்ளாக சிறை புகுந்தவர்களுக்கு சிறையிலிருந்து வெளியேறினுலன்றி இப்புரட்சியின் பயனை

அடைய முடியாது என்று புரிந்துவிட்டது. எனவே அது வரையிலே எதிரியாகக் கருதப்பட்ட டிவேலராவுக்கு புரட்சியாளர்கள் விடுதலேக்கு வகை செய்யவேண்டிக் கொண்டு எழுதினர். பழுத்த அரசியல் வாதியான டிவேலராவால் தான் அவர்களே விடுவிக்க முடிந்தது. அதன் பின்னர் பாபாவின் கருத்து எவ்வளவு தெளிவானது என்று அவர்களுக்கு புரிந்தது. அயர்லாந்து பத்திரிகைகளெல்லாம் முதல் பக்கத்தில் பாபாவின் கருத்தை முக்கியத்துவமளித்து பிரசுரித்து அதற்கு செவி சாய்க்காததற்காக வருத்தத்தை அறிவித்துக்கொண்டன.

இது போலத்தான் அவருடைய கருத்து முதலில் எவ்வளவு கசப்பாக இருந்தாலும் நடைமுறைக்கு சாத்தியமானது என்று நிரூபிக்கப்பட்டு வந்தது. என் ஞாபக சக்தி எட்டும் வரையில் அவரின் ஆழ்ந்த சிந்தனேயின் பயனுக வெளியான கருத்து தவருக இருந்ததை நான் கண்டதே இல்லே. இவை எல்லாவற்றையும் நன்கு தெரிந்ததுதான் பிவர்லி நிக்கோலாஸ் "ஜின்னு ஸ்பெய்ன் தேசத்தின் பிரபு, ஒரு தலேசிறந்த தீர்க்கதிருஷ்டியுடைய ராஜதந்திரி" என்று அவரை குறிப்பிட்டிருக்கிருர் போலும்.

அவர் தொடர்ந்து இங்கிலாந்திற்கு சென்று வந்தார் என்ருல் வெறும் உல்லாசப் பிரயாணத்திற்காக மட்டும் சென்று வரவில்லே. அவரின் தொழிலின் நுட்பத்தை இங்கிலாந்து அறிந்துகொள்ள துடியாகத் துடித்துக்கொண்டிருந்தது. ஆதலால் பல வழக்குகளே நடத்த இங்கிலாந்து பிரபுக்கள் அவரை அடிக்கடி அழைத்த வண்ணமாகவும் இருந்தனர். அவர் இங்கிலாந்திலே கழித்த நாட்களில் அவரிடம் அதிக சுறு சுறுப்பு காணப்பட்டது. அந்த சுறு சுறுப்பான நேரத்திலும் தன் தாய் நாட்டிலிருந்து வந்து படிக்கும் மாணவர்களின் நன்மைகளே கவனிக்காமலிருக்கவில்லே. பாபா சட்டக் கல்வியை கற்று தாய்நாடு திரும்பிய பின் இங்கிலாந்திலிருந்த இந்திய மாணவர்கள் ஸ்தாபனம் நிலே பெயர்ந்துவிட்டது ஆதலால் அவர்களின் குறைகள் அதிகமாய்விட்டன. இவைகளே நிவர்த்திக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு தக்க வழிகளே ஆராய்ந்துகொண்டிருந்தார்.

ஒரு நாள் இரவு 8-30 மணி இருக்கும் லண்டன்மா நகரின் இதய பாகமாக இருக்கும் "லார்டு ஹோட்டலி"ன் நான்காவது மாடியின் வராந்தாவில் அவர் உலாவிக்கொண்டிருந்தார். அவரின் இரு கரங்களும் பின்னல் பிணைந்து

அவரின் கம்பீர நடைக்கு துணை புரிந்து வந்தன. அன்று பனி சற்று கடுமையாகவே இருந்தது. மிகவும் பலஹீனமுள்ள பாபா அதையும் பொருட்படுத்தாமல் உலவிக் கொண்டிருந்தார்.

'என்ன மிஸ்டர் ஜின்னுஹ்'!

என்ற ஒரு குரல் அவரின் சிந்தனையை குலைத்தது. திரும்பிப் பார்த்தார். வழக்கமான புன்னகை முகத்திலே தவழ திரு. கோகலே பாபாவின் இரு கரங்களையும் பிடித்துக் குலுக்கிக்கொண்டு அவரின் அறைக்குள் அழைத்துச் சென்றார். பாபாவுக்கு கோகலே என்றாலே ஒரு தனி மதிப்பு. அவர் மீது அவருக்கு நிறைய அபிமானமுண்டு. ஆதலால் பாபா மிக மரியாதையோடு அவரை அழைத்துச் சென்று ஆசனத்தில் அமரச் செய்தார்.

"என்ன மிஸ்டர் ஜின்னு? இந்திய மாணவர்களுக்கிருக்கும் கஷ்டங்களைப் பற்றி ஏதாவது சிந்தித்தீர்களா? இந்த காரியம் உங்களால்தான் முடியும்" என்றார் கோகலே.

"நான் அதைப் பற்றி சிந்தித்துக்கொண்டுதான் இருக்கிறேன். தாங்கள் அது பற்றி கவலைப்படாதீர்கள். நான் தாய் நாடு திரும்புவதறகு முன்பாக ஏற்பாடு செய்கிறேன்" என்றார் பாபா.

இந்த உரையாடல் நடந்த ஒரு மாதத்திற்குள்ளாக இந்திய மாணவர்களின் நிலை எவ்வளவோ உயர்ந்துவிட்டது. மாணவர்களின் ஸ்தாபனம் புதுப்பிக்கப்பட்டது. அவர்களின் குறைகள் அனைவற்றையும் பிரிட்டிஷ் சர்க்கார் நிவர்த்தித்ததோடல்லாமல் மேற்கொண்டும் என்னென்ன முன்னேற்றங்களை செய்யலாம் என்று ஆராய ஒரு குழுவையும் அமைத்தது; அக்காலத்தில் அதாவது 1913-ம் வருஷத்தில் இந்த சாதனை சாதாரணமானதல்ல. அதனுல் தான் பாபாவைப் பற்றி அன்றே திருமதி சரோஜினி நாயுடு கீழ் கண்டவாறு குறிப்பிட்டார்.

"நான் மிஸ்டர் ஜின்னுவைப் போல வைராக்ய மனிதரை பார்த்ததில்லை. இன்று இங்கிலாந்தின் ஒவ்வொரு அறிவாளியும் இந்த அறிவு பொக்கிஷத்திற்கு அடிமையாய் கிடக்கிறார். இதை எல்லாம் நான் பார்க்கும்போது என் தாய் நாட்டின் பிரகாசம் என் கண்களுக்குத் தெரிகிறது. நான் அடிமை என்ற எண்ணத்திலிருந்து வெகு தூரம் போய்விட்டேன்."

1913-ம் வருஷத்தில்தான் இங்கிலாந்து சர்வ கலா சாலைகளில் இந்தியர்கள் சேர்ந்து கல்வி பயிலுவதற்கு பல முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. அவைகளை நீக்கவேண்டுமென்று கோகலே பலமாக போராடிக் கொண்டிருந்தார். ஆனல் ஒரு பலனும் கிடைக்கவில்லை. ஆனல் பாபா வெஸ்ட் மினிஸ்டரிலுள்ள, காக்ஸ்டன் ஹாலில்'' ஆற்றிய ஒரே ஒரு சொற்பொழிவு 48 மணி நேரத்தில் அந்த தடைகளை எல்லாம் நீக்கிவிடச் செய்துவிட்டது அந்த கூட்டத்திலும் அவர் ஒரு மித வாதியாகவே பேசினர். ஆனல் மிதமான அவரது பேச்சில் எவ்வளவு தீவிர அர்த்தங்களை கற்பிக்க முடியும் என்று ஆராய்வது இன்றைய அறிவாளிகளினலும் சாத்தியமானதல்ல.

"என் தாய் நாட்டிலிருந்து அலை கடல்களை கடந்து உங்கள் நாட்டிலிருக்கும் சர்வ கலாசாலைகளின் படிக்க வரும் மாணவர்களுக்கு இடையூறுகளை செய்து வருகிறீர்கள். அவர்கள் அறிவைத் தேடிக்கொண்டு அலை கடல்களைத் தாண்டி வருகிருர்கள் என்பதை புரிந்து கொள்ள இயலாத ஏகாதிபத்திய வாதிகளின் தாய் நாட்டில் சர்வ கலாசாலைகள்தான் இருக்கின்றன; ஆனல் அறிவைக் காணேம்; எங்கள் நாட்டை நீங்கள் ஆளலாம். எங்கள் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தலாம். ஆனல் எங்கள் அறிவு வளர்ச்சியை உங்களால் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் இந்தியனுடைய சராசரி அறிவை விட உங்கள் அறிவு அதிகமானதல்ல என்று நான் கருதும்படியான சூழ் நிலையை சிருஷ்டித்து விட்டார்கள். நிச்சயமாக உங்கள் பெருமை கண்ணுடி மாளிகை போன்றிருக்கிறது. அதை பாதுகாத்துக் கொள்வது எளிதல்ல. அதிலும் அக்கம் பக்கத்தாரை பகைத்துக்கொண்டு அதை பாதுகாக்கவே இயலாது."

இரண்டு மணி பிரசங்கத்தின் மூன்று விஞடிகளில் அவர் வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தைகள் இவை. இவைகளை மட்டும் நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்ருல் இவ்வார்த்தைகளின் ஆழ்ந்த கருத்துக்களை இந்தியா ஆபீஸ் முதல் காரிய தரிசி மிஸ்டர் கெம்ப்பெல் என்னிடம் ஒரு முறை கூறி பேராச்சரியப்பட்டுப் போனர். 1913-ம் ஆண்டின் ஆரம்பத்தில் புரட்சிக் கருத்துக்கள் மித வாதியின் வாயிலிருந்து உதிர்ந்தன என்ருல் அவரின் நெஞ்சு உரம், அவரின் உறுதி

எத்தகையது என்பதை விவரிக்கத் தேவை இல்லை. ஆனால் இதில் ஒரே ஒரு ஹாஸ்யப் பகுதி இருக்கிறது. அந்த பிரசங்கத்திலேயே இந்திய மாணவர்களை நோக்கி "நீங்கள் நிதானமாக பேச வேண்டும்; உணர்ச்சிக்கு அடிமைகளாகி உங்கள் வார்த்தைகளை கடுமையாக்கிக் கொள்ளாதீர்கள்" என்று உபதேசித்ததாகும். இந்த மிதவாத புரட்சிப் பேச்சு இந்தியா ஆபீசின் காரியாலயம் இரவு 8 மணி வரையிலே திறந்திருந்து வேலை நடைபெறச் செய்துவிட்டது என்று எண்ணும்போது அன்றைக்கே அவர்கள் இந்தியாவுக்கு சுதந்திரமளிக்க வேண்டிய தேதியை நிர்ணயித்திருக்கவே வேண்டும் என்று கருதுகிறேன்.

அவர் இங்கிலாந்திலே இருக்கும் போதெல்லாம் அவர் சாதித்தவைகள் அவருக்கு புகழேணியாக அமைந்துவிட்டன. அவருடைய புகழ் உச்சநிலையடைந்துவிட்டது. இந்தியா என்று எண்ணும்போதெல்லாம் அன்றைய ஜின்னாவை எண்ணாமலிருக்க முடியவில்லை. அவர் பார்லிமெண்ட் வட்டாரத்தில் மட்டுமின்றி, சாதாரண மக்களிடையேயும் முக்கியத்துவத்தைப் பெற்றுவிட்டார். பிரிட்டிஷ் சர்க்கார் உலக விவகாரங்களில் சம்பந்தப்படும்போது பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் பெரும்பாலோர் அவரை சந்தித்து அவரின் அபிப்ராயத்தை அறிந்து கொள்வது சாதாரணமாகிவிட்டது. அன்று மிஸ்டர் ஜின்னா கூறிய அபிப்ராயங்கள் மிகத் தெளிவானதாகவும், நடைமுறைக்கு ஒத்ததாகவும் இருந்தன என்பதை இதுவரையில் யாரும் மறுத்து கூறியதில்லை.

இத்தடவை அதாவது 1913ம் வருஷத்தில் பாபா இங்கிலாந்திலிருக்கும் போது, அவருடைய எதிர்காலம் மிகவும் மாறுபட்டதாக இருக்கும் என்று எவருமே அறிந்துகொள்ள முடியாதவாறு இருந்தது. இங்கு ஆண்டுதான் பாபாவின் அதிர்ஷ்டம் வேறு திசையை நோக்கி செல்ல திட்டமிட்டிருந்தது போலும். அவருக்கு ஆரம்ப காலத்தில் இருந்து அரசியலில் ஈடுபடவேண்டுமென்ற ஆர்வம் எதனால் தடைபட்டுப் போனது என்பதை நான் ஏற்கனவேயே குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் இந்த ஆண்டில் அவர் இந்த திட்டத்திற்கு அஸ்திவாரமிட்டுவிட்டார்.

பாபா இந்திய முஸ்லிம் லீகின் செயல் முறை திட்டங்களை மிக கவனத்தோடும் கவலையோடும் கவனித்து வந்தார். ஆனால் அவர் முஸ்லிம் லீக் எல்லையில் தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொள்ளவில்லை. இரு ஜனங்கள் தனித்தனியே முன்னேற முனைவதைக் கண்ட பாபாவின் கண்களுக்கு எதிர்கால சிக்கல்கள் மிகத் தெளிவாக தெரிய வந்தன. ஆனால் முஸ்லிம் லீக் கட்சிக்கு சாதகமாகவோ, பாதகமாகவோ அவர் ஒரு அபிப்ராயத்தையும் வேண்டுமென்றே வெளியிடாமல் இருந்துவந்தார். இதற்கு சில காரணங்களுண்டு. அவர் ஏதாவது ஒரு அபிப்ராயத்தை வெளியிட்டால் அது இரு பெரும் இனத்தவர்களிடையே நிரந்தரமான

பிளவை ஏற்படுத்திவிடக்கூடும். மேலும் அகில இந்திய காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கும், அகில இந்திய முஸ்லிம் லீக் ஸ்தாபனத்திற்கும் அடிப்படைக் கொள்கைகளிலே பெரும்பாலும் ஒற்றுமை இருந்து வந்தது. எனவே இரு பெரும் இனத்தவர்களும் ஒன்றுபடுவதற்கான வேலையில் ஈடுபடுவதுதான் தாய் நாட்டிற்கு தான் செய்யக்கூடிய பெரிய சேவை என்று அவர் கருதி இருந்தார். இக்காரணங்களைக் கொண்டு, தாய் நாட்டின் பரந்த எல்லைமீதும், அதில் வாழும் மக்கள்மீதும் அபார பற்று கொண்டிருந்த பாபா இரு பெரும் ஸ்தாபனங்களிடையே பிளவு நீடிப்பதை தவிர்க்க முனைந்ததில் ஆச்சரியமில்லை.

இந்த கொள்கைக்காக அவர் எடுத்துக்கொண்ட சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. ஏதாவது ஒரு ஸ்தாபனத்திற்காக சேவை செய்வதை விட இவ்விரு ஸ்தாபனங்களை ஒன்றுபடுத்தச் செய்வதுதான் மிகப்பெரும் சேவை என்ற உறுதி அவர் நெஞ்சில் இருந்துகொண்டிருந்தது. எனவே பிளவுபட்ட இரு ஸ்தாபனங்களை இணைக்கும் ஒரு சமரசத் தூதராக அவர் பொறுப்புடன் பணியாற்ற முனைந்தார். இந்த கருத்தை மிக அழகாக அவர் எடுத்துக்காட்டியிருக்கிறார். அவர் பிரயோகித்த வாக்கியங்கள் இன்றுகூட என் நெஞ்சில் பதிந்து கிடக்கின்றன: 'நான் ஒரு முஸ்லிம் கோகலேயாக விரும்புகிறேன். அதுதான் என் வாழ்க்கை இலட்சியம்'. இவ்வார்த்தைகளில் ஆழங் காண முடியாத கருத்து வெளிப்படுகிறது. அவர் கோகலேமீது எவ்வளவு நன்மதிப்பை வைத்திருந்தார் என்ற உண்மையை மட்டும் இவை வெளிப்படுத்தவில்லை. இந்துக்களுக்கு சேவை செய்ய ஒரு கோகலே எவ்வளவு தேவைப்படுகிறாரோ அதேபோல முஸ்லிம்களுக்கு சேவை செய்ய நான் தேவைப்படுபவனாக ஆகவேண்டும் என்பதும் அவைகளின் கருத்தாகும். சில சொற்ப வார்த்தைகளைக்கொண்டு நீளமான வியாக்யானங்களை பெறக்கூடிய கருத்தை அவர் தெரிவித்துவிட்டார்.

சில இந்துத் தலைவர்களின் குறுகிய மனப்பான்மை தான் முஸ்லிம்களை காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து துண்டித்துக்கொள்ள தூண்டுகிறது என்ற உண்மையை அவரால் வெகு எளிதில் புரிந்துகொள்ள முடிந்தது. இருந்துங்கூட காங்கிரஸ் ஸ்தாபனத்தில் இருந்து ஒதுங்கிவிட அவர் துணிவுகொள்ளவில்லை. ஓரிருவர் தவருக நடந்துக்கொள்வதற்காக பல இன, ஜாதி மக்கள் வாழும் தாய் நாடு நஷ்டமடைவதா? அத்தகையோரின் நடவடிக்கைகளுக்காக தாய் நாடு தன் இலட்சியத்தை பலியிடுவதா? இந்த கேள்விகள் அவர் இதயத்தில் இடம்பெற்றுவிட்டன. எனவே காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து கொண்டே அத்தகையோரின்

குறுகிய மனப்பான்மையை ஒழித்துக்கட்டிவிட முடியும் என்று அவர் நம்பினார். அவர் அவ்வாறு நம்புவதற்கு சாதகமான சூழ்நிலை இருந்து வந்தது. அதுவரையில் குறுகிய மனப்பான்மை சாதாரண பாமர மக்களிடையே புகாமலிருந்தது. தலைவர்களிடையே இந்த வேற்றுமை மனப்பான்மை இடம் பெற்றிருந்ததே தவிர பாமர மக்களிடையே அன்பும், சௌஜன்யமும் நிலவி இருந்தது. பொதுமக்கள் மீதிருந்த பாசமும் நம்பிக்கையும் பாபாவின் எண்ணத்திற்கு உறுதுணையாக நின்றன.

இக்காலத்தில்தான் மௌலானா முஹம்மதலியும் சைபத் வஜீர் ஹூசேனும் இங்கிலாந்திற்கு வந்திருந்தார்கள். அவர்கள் இந்திய முஸ்லிம் லீகின் செல்வாக்கை பிரிட்டிஷ் சர்க்கார் வட்டாரத்தில் நிலைநாட்டவும் பிரிட்டிஷ் மக்களிடையே தங்கள் கொள்கைகளின் உண்மைத் தன்மைகளை விளக்கி வைக்கவுமே இங்கு வந்திருந்தார்கள். அவர்கள் எதிர்பாராதவிதமாக நீண்ட நாட்கள் இங்கிலாந்தில் தங்கவேண்டியதாய் இருந்தது. அந்த நாட்களின் பெரும்பாலான இரவுகள் அன்றைய மிஸ்டர் ஜின்னாவுடன் விவாதம் செய்வதிலேயே கழிந்தன என்றால் மிகையாகாது. அவர்கள் பன்முறை மிஸ்டர் ஜின்னாவை சந்தித்து முஸ்லிம் லீக் கட்சியில் சேர்ந்துகொள்ளும்படி வற்புறுத்தினர். பாபாவுடைய நிலை தர்மசங்கடமாகி விட்டது. இந்த சந்திப்பும், விவாதமும் எதை சாதிக்காவிட்டாலும் ஒன்றை சாதித்து விட்டது. அதாவது பாபாவை, காங்கிரஸ் — லீக் இரு ஸ்தாபனங்களிடையேயும் ஒரு சமரசத்தை ஏற்டுத்துவதில் தீவிரமாக ஈடுபடும்படி தூண்டி விட்டது.

அக்காலத்தில் இந்தியத் தலைவர்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர் மௌலானா முஹம்மதலி. அவரை பார்த்த மாத்திரத்திலே விசேஷ பக்தியும் மரியாதையும் பார்ப்பவர்களின் உள்ளங்களிலே எழும். அவர் சந்தித்து விவாதம் செய்த இடங்களிலெல்லாம் வெற்றி அவரிடமே சார்ந்து நிற்கும். அவர் முதல் முதலாக தோல்வியை கண்டார் என்றால் அது பாபாவிடம்தான் என்று கூறவேண்டும். இந்த சந்திப்புகளையும், விவாதங்களையும் குறித்து காலஞ் சென்ற சரோஜினி நாயுடு வெளியிட்ட அபிப்ராயம் மிஸ்டர் ஜின்னாவின் உறுதியையும், உள்ளக்கிடக்கையையும் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

“மௌலானா முஹம்மதலியிடம் பழகுவது மிக எளிது. ஆனால் விவாதிப்பது மிகக் கஷ்டமானது. அவரை சந்திக்க செல்பவர்களெல்லாம் தம்மை விவாதிப்பதிலிருந்து தப்புவித்துக்கொள்வார்கள். ஏனென்றால் மௌலானா முஹம்மதலியின் விவாதம் என்றுமே

வெற்றியுடனேயே இணைந்திருக்கக்கூடியது. பொங்கும் சமுத்திரமும் அதனுடைய பயங்கர ஓசையும் எப்படி இணைபிரியாதோ அதேபோல மௌலானா முஹம்மதலியின் விவாதமும் வெற்றியும் இணைபிரியாதது. அவருடைய தர்க்கவாதத்தில் குயிலின் இனிமை இருக்கும்; வாளின் கூர்மை இருக்கும்; வீணையின் நாதத்திலிருக்கும் ரம்மியமும் இருக்கும்; கோடை இடியின் வேகமுமிருக்கும். விவாதத்தில் இறங்குவோர் ஏதாவது ஒன்ருல் வசீகரிக்கப்பட்டுப் போவர். இவைகளை எல்லாம்விட இன்னெரு பெரும் ஆயுதம் ஒன்று இருக்கிறது. அதிலிருந்து தப்புவோரை காண்பதரிது. அவருடைய ஆஜானுபாகு தோற்றமும், வசீகரமான கண் பார்வையும் அவருக்குக்கிடைத்த அபூர்வ ஆயுதங்களாகும். அவைகளின் வீச்சிலிருந்து தப்புவது எளிதா என்ன? ஆனல் மிஸ்டர் ஜின்னு, மிகவும் பலஹீனமுள்ள ஜின்னு அவைகளிடமிருந்தெல்லாம் தப்பினர் என்ருல் அவர் கொண்டிருந்த இலட்சிய உறுதிப்பாட்டையே காட்டுகிறது. மிஸ்டர் ஜின்னுவின் உள்ளத்திலே தேசீய எண்ணம் வேரூன்றியிருக்கிறது. அந்த உள்ளத்தில்தான் நம் தாய் நாடு தன் எதிர்காலத்தைப் பார்க்கிறது; தன் உண்மைத் தோற்றத்தைக் காண்கிறது" இதுதான் சரோஜினி நாயுடு வெளியிட்ட அபிப்ராயமாகும்.

காலஞ்சென்ற சரோஜினி நாயுடு வெளியிட்ட கருத்துக்கள் மிதமிஞ்சியவை அல்ல மௌலானா முகம்மதலி இங்கிலாந்திற்கு வந்த நோக்கமே வேறு. பிரிட்டிஷ் அரசியல் வட்டாரங்களில் இந்திய முஸ்லிம் லீகின் கொள்கைகள் சரிவர புரிந்துகொள்ளப்படாமலிருந்தன. அவைகளை புரியவைப்பதற்காகவே நீண்ட பிரயாணத்தை அவர் மேற்கொண்டு இங்கிலாந்திற்குவந்தார். ஆனல் அவர் இங்கு வந்ததுமே மிஸ்டர் ஜின்னு இங்கிலாந்திலேயே இருப்பதை அறிந்ததும் தன் திட்டத்தில் சில மாறுதல்களை செய்து கொண்டார். எப்படியும் காயிதே ஆஜம் ஜின்னு பாபாவை முஸ்லிம்லீகில் சேர்த்துக்கொண்டால் அதுவே ஒரு பெரிய வெற்றியாகும் என்று அவர் நினைத்தார். அதன் பலனுகத்தான் இவ்விருவரிடையே ஏராளமான சந்திப்புகளும் விவாதங்களும் ஏற்பட்டன.

இந்த விவாதங்களிலெல்லாம் மிஸ்டர் ஜின்னு ஒன்றை மட்டும் மறுக்கவில்லை. முஸ்லிம்லீகின் நியாயமான வளர்ச்சி இந்திய தேசிய உணர்ச்சியின் வளர்ச்சிக்கு குந்தகம் விளை வித்துவிடக் கூடாது என்பது அவருடைய அபிப்ராயமாக இருந்தது அதனுல் முஸ்லிம்லீகை கலைத்துவிட வேண்டு மென்று அவர் கூறவில்லை. இரு ஸ்தாபனங்களின் போக்கு களிலும் சில மாறுதல்கள் ஏற்படவேண்டும்; அவைகளினுல் இரு கட்சிகளுக்கிடையேயும் ஒத்துழைப்பு ஏற்படவேண்டும் என்றே அவர் விரும்பினுர். அவைகளை வெளிப்படையாக மௌலானு முஹம்மதலியிடம் அவர் மனம்விட்டு கூறினுர். இரு கட்சி தலைவர்களிடமும் பேச்சு வார்த்தைகளை நடத்தி நல்லதொரு உடன்பாட்டிற்கு கொண்டுவர தாம் முயற் சிக்கப் போவதாகவும், அதற்கு மௌலானுவின் ஒத் துழைப்பு தேவை என்றும் அவர் கேட்டுக்கொண்டார், மிஸ்டர் ஜின்னுவின் உதார குணத்தைப்பாராட்டி மௌலானு முகம்மதலி ஒத்துழைப்பதாக வாக்களித்தார். அவர் இதைப்பற்றி இங்கிலாந்திலே கீழ்க்கண்டவாறு கூறியிருக் கிறுர்.

"மிஸ்டர் ஜின்னு இந்திய முஸ்லிம்களின் நலன் களிலே கருத்தையும் கவலையும் கொண்டிருக்கிறுர். ஆனுல் அதே சமயத்தில் இக்கருத்தும் கவலையும் தேசிய நன்மை களைக் குலைத்துவிடக் கூடாது என்று அவர் விரும்புகிறுர். அவர் பொதுவாக தாய் நாட்டின் பரந்த இலட்சியங்களின் மீது கவலை மிகுந்தவராய் காணப்படுகிறுர். முஸ்லிம்களின் நலன்கள் எப்படியும் பெருவாரியானவர்களின் நலன்களை பாதிக்காமலிருக்க வேண்டுமென்ற விருப்பமும் இருக்கிறது. ஆதலால் இரு சக்திகளுக்கு இடையே ஒரு புது வழியை சிருஷ்டிப்பதில் அவர் முனைந்துள்ளார். இது சாத்தியமில்லை என்பது எனக்குத் தெரியும் ஆனுல் அவர் அனுபவரீதியாக புரிந்துகொள்ளாத வரையிலே எவரும் அவரை சமாதானப் படுத்தமுடியாது. அவருடைய இந்த முயற்சியே அவரை முஸ்லிம்லீக் கட்சியில் கொண்டுவந்து சேர்ந்துவிடும்."

மௌலானு முகம்மதலியின் இந்த முடிவு வெகு விரை விலேயே பிரத்தியட்சமாகிவிட்டது. அவரது கனவு நன வாகிவிட்டது 1914-ம் வருஷத்தின் இங்கிலாந்தின் மாரி காலம் வழக்கம்போல மிஸ்டர் ஜின்னுவை வரவேற்றது. இச்சமயம் தம் காரியங்களில் அவர் மிக தீவிரமாக ஈடுபட்டு இருந்தார். உலக யுத்தம் மூளப்போகிறது என்ற வதந்தி கள் இங்கிலாந்தில் பலமாக உலவின. இந்திய அரசியலில்

சீர்திருத்தங்கள் செய்யப் போவதாக இங்கிலாந்து பார்லிமெண்ட் வட்டாரங்களிலே கூறப்பட்டுவந்தது. இது ராஜ தந்திரிகளான பிரிட்டிஷ்காரர்களின் வழக்கமாகும். தம் நாடு நெருக்கடிக்குள்ளாகும்போது காலனி பிரதேசங்களிலிருந்தும் நெருக்கடிகள் ஏற்படாமல் இருக்கவேண்டுமென்பதற்காக அவர்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்பிவிடுவது அவர்களின் வழக்கமல்லவா? அதுபோலவே இந்திய ஆட்சி முறையில் பல மாறுதல்களை செய்யப் போவதாக அறிவித்தனர்.

இச்சீர்திருத்தங்களைப்பற்றி விவாதிக்கவும், உடனடியாக அமுலாக்கவேண்டுமென்று வற்புறுத்தவும் காங்கிரஸ் கட்சி ஒரு தூது கோஷ்டியை இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தது. அந்த தூது கோஷ்டிக்கு தலைமை வகிக்கவும், காங்கிரஸ் கட்சியின் சார்பாக பிரிட்டிஷ் சர்க்காருடன் பேசவும் காயிதே ஆஜம் பாபாவுக்கு உரிமையளித்து ஒரு தீர்மானத்தை அனுப்பிவைத்தது காங்கிரஸ். பாபாவுக்கு இதில் நம்பிக்கை இல்லை. பிரிட்டிஷ்காரர்களின் ராஜ தந்திரம் இது என்று அவருக்கு நன்கு தெரிந்திருந்தது; இருந்தாலும் அவைகள் நடைபெறுதற்கு இந்தியர்கள் முன்வராததுதான் காரணம் என்ற பழிச்சொல் ஏற்படாதிருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். ஆதலால் காங்கிரஸ் கட்சி தனக்களித்த பொறுப்பை மிக சாமர்த்தியமாகவும் பொறுப்புடனும் செய்துமுடித்தார். அக்காலத்தில் இந்திய காங்கிரஸ் அவர்மீது எவ்வளவு நன்மதிப்பையும், நம்பிக்கையையும் வைத்திருந்தது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

இந்திய காங்கிரஸ் தூது கோஷ்டியை கௌரவிக்க இங்கிலாந்து வெஸ்ட் மினிஸ்டர் பாலேஸ் ஹோட்டலில் ஒரு வரவேற்பு நடந்தது. இச்சரித்திரப் பிரசித்தி பெற்ற வரவேற்புக்கு தாதாபாய் நௌரோஜியின் உயிர் தோழரான சர். வில்லியம் வெட்டர்பான் ஏற்பாடு செய்திருந்தார். இவர் இந்திய சுயாட்சிப் போராட்டத்தில் இறுதி நாள் வரையில் தாதாபாய் நௌரோஜியின் பக்க பலமாக இருந்த பெரும் மேதை. இவ்வரவேற்பில் அதுவரை எந்த இந்தியரும் கூறியிராத முறையில் விவேகம் நிறைந்த சொற்பொழிவு ஒன்றை மிஸ்டர் ஜின்னா ஆற்றினார். உலகத்தில் இந்தியாவைத் தவிர வேறு எந்த நாகரீக நாடும் சுயாட்சியை பெறுமல் இருக்கவில்லை என்று அவர் கர்ஜித்தபோது அவரின் கூர்மையான கண்களிலிருந்து தீப்பொறிகள் பறந்தன.

"அந்தப் பிரசங்கத்தில் அவர் கேட்டதெல்லாம் இவைதான். இந்தியர்கள் தங்கள் உண்மையான பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு ஆட்சியை விரும்புகிறார்கள். தமக்கு விருப்பமில்லாத ஆட்சி முறையை அவர்கள் உடைத்தெறிய வேண்டுமென்று விரும்புகிறார்கள்." அதுவரைக்கும் எதிர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்த பிரிட்டிஷார் இந்த சொற்பொழிவுக்குப் பின் வாயடைத்து உட்கார்ந்துவிட்டார்கள். அந்த தூதுகோஷ்டியில் மிஸ்டர் ஜின்னா இருப்பது தங்களுக்கு மிகப் பெரும் பாதகம் என அவர் நினைத்தார்கள்.

மிஸ்டர் ஜின்னா - காயிதே ஆஜம் ஜின்னா - ஏற்கனவே நினைத்தது போலவே இத்தூது கோஷ்டி தன் கோரிக்கைகளை பெறுவதில் தோல்வியுற்றது. பல தெய்வாதீனங்கள் தூது கோஷ்டியின் வெற்றிக்கு குறுக்கே நின்றுவிட்டன. பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருக்கும்போதே முதலாவது உலகப்போர் மூண்டுவிட்டது. இது பிரிட்டிஷ்காரர்களுக்கு மிஸ்டர் ஜின்னாவின் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள வசதியாகப் போய்விட்டது. இப்பேச்சு வார்த்தைகளை ஒத்திப் போடுவதைவிட வேறு வழி இல்லையென பிரிட்டிஷ் சர்க்கார் தூதுகோஷ்டியிடம் அறிவித்தது.

அன்று தெய்வாதீனமாக நடந்துபோன பேச்சுவார்த்தை முறிவுதான் இந்திய சுயராஜ்யத்தை நீண்ட காலத்திற்கு ஒத்திப் போடும்படியான துர்அதிர்ஷ்ட நிலைக்கு வந்தது என்று சொல்லலாம். இந்நிலைமையை குறித்து சர் வில்லியம் வெட்டர்பர்ன், ஹஸன் அலிக்கு எழுதியதொரு கடிதத்தில் கீழ்கண்டவாறு எழுதியிருக்கிறார்.

"பிரிட்டிஷ்காரர்கள்தான் ஆளப்பிறந்த இனத்தவர் என்ற இறுமாப்பை முறியடிக்க வேண்டுமென்று தாதாபாய் நௌரோஜி இங்கிருக்கும்வரை முயற்சித்துக் கொண்டிருந்தார். அவருக்கேற்ற ஆயுதத்தை தேடுவதில் இந்தியாவில் தோல்வியுற்ற அவருக்கு இங்கிலாந்தில் வெற்றி கிடைத்தது. அவருக்கு மிஸ்டர் ஜின்னா சரியான ஆயுதமாகக் கிடைத்தார். மிஸ்டர் ஜின்னாவின் பக்க பலம் கிடைத்ததொன்றே தனது வாழ்நாளின் வெற்றியாகும் என்பது அவரின் அபிப்ராயமாகும்.

அந்த ஆயுதம் இப்பேச்சு வார்த்தைகளில் பிரதானமாக பிரயோகிக்கப்பட்டது. மிஸ்டர் ஜின்னாவின் உறுதியான வார்த்தைகள் பிரிட்டிஷ்காரர்களை நிராயுதபாணிகளாக்கி விட்டன. இத்தூதுகோஷ்டி வெறுங் கைகளோடுதான்

இந்தியாவுக்கு திரும்புகிறது. ஆனால் பிரிட்டிஷ்காரர்களைப் பொறுத்தமட்டில் அத்தூதுகோஷ்டி ஒரு பெரும் வெற்றியோடு திரும்புகிறது. எப்படியெனில், அவர்கள் அவர்களின் சரித்திரத்திலேயே முதல் முதலாக தம் தோல்வியை ஒப்புக் கொண்டு விட்டார்கள். இதற்கு மூலகாரணம் மிஸ்டர் ஜின்னாவின் பொறுப்பு நிறைந்த பணிகள்தாம் என்பதை பிரிட்டிஷ் சரித்திரம் எழுதி வைத்துவிட்டது. இதற்காக நான் மிஸ்டர் ஜின்னாவை பாராட்டுவதைவிட தாதாபாய் நௌரோஜியை பாராட்டுகிறேன். ஏனெனில் அவர் மிஸ்டர் ஜின்னா மீது கொண்டிருந்த குறி ஒரு சிறிதும் தவறவே இல்லை. அவருடைய ஒவ்வொரு திட்டமும் இன்று வெற்றி பெற்ற வண்ணமே இருக்கிறது.''

உண்மையில் 1913-ம் வருஷம் வரையிலே பிரிட்டிஷ்காரர்களுக்கு எதிர்பேச்சு இந்தியாவில் எழுந்ததில்லை. முதல் முதலாக மிஸ்டர் ஜின்னாஹ்தான் 1914-ம் வருஷத்தில், இங்கிலாந்திலேயே எதிர்க்குரலை எழுப்பினார். அந்த முதல் குரல்தான் 1947-ம் வருஷம் ஆகஸ்ட் 15-ந் தேதி டெல்லியிலும் கராச்சியிலும் ஏக காலத்தில் சுதந்திர வெற்றி முரசொலியாக எதிரொலித்திருக்கிறது. இதை மறுக்க இந்தியாவிலோ, பாக்கிஸ்தானிலோ, பிரிட்டனிலோ எவருமே இல்லை. ஏனெனில் இது உண்மையின் பிரத்தியட்சமாயிருக்கிறது.

முதல் உலக யுத்தத்தின் கொந்தளிப்பு அடங்கியது. போர் ஓய்ந்ததும் மக்களிடையே ஒரு மகிழ்ச்சி ஏற்படுவது சகஜம். வெற்றிபெற்ற நாடுகளில் பல மாறுதல்கள் ஏற்படுவது சகஜம். ஆனால் இந்தியாவை பொறுத்தவரையில் எவ்வித மகிழ்ச்சியும் மாறுதலும் ஏற்படவில்லை. இரு உலகப் போர்களின் இடையிலுள்ள காலத்திலே மிஸ்டர் ஜின்னா பன்முறை இங்கிலாந்திற்கு வந்திருக்கிறார். ஆனால் அவர் அதற்கு முன்பு இங்கிலாந்திற்கு வந்ததற்கும் இச்சமயங்களில் வந்ததற்கும் நிறைய மாறுதல்கள் இருந்தன. அவருடைய மாறுதல்கள் அவர் எவ்வளவு அநுபவத்தை பெற்றிருந்தார் என்பதற்கு எடுத்துக்காட்டாய் இருந்தன.

அவருக்கு மீண்டும் 1919-ம் வருஷம் இங்கிலாந்து குதூகலமான ஒரு வரவேற்பு அளித்தது. அவர் இச்சமயம் முஸ்லிம் லீக் கட்சி தூதுகோஷ்டியில் ஒரு உறுப்பினராய் வந்து சேர்ந்தார். இச்சமயம் அவர் பார்லிமெண்டரி ஜாய்ண்ட் செலக்ட் கமிட்டி முன்பு சாட்சி சொல்ல வந்திருந்

தார். இந்த கமிட்டி லார்டு ஸெல்போர்ன் தலைமையில் மான்டேகு இந்திய மாசோதாவை ஆராய்வதற்காக அமைக்கப் பட்டிருந்தது. காயிதே ஆஜம் பாபா இச்சமயமும், மற்ற இந்தியத் தலைவர்களைப் போலவே லிபரல் கொள்கைகளை யுடையவராகவே இருந்தார். அவர் பிரிட்டிஷ் சர்க்கார் அரசியலமைப்பு சட்டங்களின் கீழ் இந்தியாவை ஜனநாயக முறைப்படியான ஒரு ஆட்சி அந்தஸ்துள்ள நாடாக அமைக்கவே விருப்பமுடையவராக இருந்தார். அக்காலத்து இந்திய தலைவர்களின் அபிப்ராயத்தில் இது மிகத் தீவிரமான, புரட்சிகரமான மாறுதலேவேண்டும் ஒரு கோரிக்கையாகும். இவ்வெண்ணம் 1933-ம் வருஷம் வரையிலே, அதாவது இரண்டாவது வட்ட மேஜை மாநாடு பலனற்றுப் போன வரையிலே நீடித்திருந்தது. இரண்டாது வட்ட மேஜை மாநாட்டு நடவடிக்கைகளை இங்கிலாந்தில் இருந்து நெருங்கி கவனித்தவர்கள் மிஸ்டர் ஜின்னாவின் தீர்க்க தரிசனம் எவ்வளவு பலித்தது என்று எளிதில் புரிந்துகொள்ள முடியும். அதன் தோல்வி, இந்தியாவின் இரு பெரும் இனத்தவர்களிடையே ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்திவிடும் என்பதில் அவருக்கு சந்தேகமில்லாமலிருந்தது.

இந்த வட்டமேஜை மாநாடு முடிவடைந்த பிறகு மிஸ்டர் ஜின்னா இரண்டு வருஷ காலம் இங்கிலாந்திலேயே தங்கி இருந்தார். இக்காலத்தில் அவர் தம் தொழிலில் இவ்வளவு பெரிய ஆர்வத்தை காட்டிக் கொண்டிருந்ததின் தாத்பரியம் வேறு எவராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் ஒரு பெரும் போரை துவக்க தம்மை தாமே தயார் செய்து கொண்டிருந்தார் என்பதை இந்தியர்களில் பெரும்பாலோருக்குப் புரியாமலிருந்தது.

1933-ம் வருஷ கோடையில் நான் அவரை நீதிமன்றத்தின் ஒரு தனி அறையிலே சந்தித்தேன். எவரையுமே எழுந்து எதிர்நோக்கி சென்று வரவேற்பது அவரின் பல உதார குணங்களில் ஒன்று. அவர் ஏதோ ஒரு சட்ட புஸ்தகத்தை புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் அவரை தொந்திரவு செய்துவிட்டதாகவே கருதனேன். ஆனால் அவர் தன வாயிலிருந்து சிகரெட்டை எடுத்துக்கொண்டு என்னை எதிர்கொண்டு வரவேற்று ஆசனத்தில் அமரச் செய்தார். அக்குறுகிய காலப் பேட்டியில் நான் ஒரு பெரும் கேள்வியை எழுப்பினேன்.

'இந்திய அரசியலில் துறவறம்பூண்டு இங்கு தொழிலில் தீவிரமாக மூழ்கி இருக்கிறீர்கள். தாய் நாடு உங்கள் சேவையை எதிர்பார்க்கிறது.'

இதை நான் மிக மரியாதையோடும் பக்தியோடும் அவரிடம் சொன்னேன். ஏனென்ருல் அவருடைய உணர்ச்சி மிக சுறுசுறுப்பானது. அவருடைய சுயமரியாதையை உறுத்திவிடக் கூடாது என்பதற்காகவே தயங்கித் தயங்கி நான் அவரிடம் இதை சொன்னேன். அவருடைய மெலிந்த நீண்ட காலே நீட்டி தன் பூட்சை ஒரு சிறிது நேரம் கூர்ந்து பார்த்தார். அவருடைய நெற்றியில் சுருக்கங்கள் ஏற்பட்டன. அந்த 'ஸ்டைல்' ஒரு நிமிஷ நேரம் நீடித்திருந்தது. அந்த காட்சி இதுவரையிலே என்னைவிட்டு அகலவில்லை.

அவர் எந்த கேள்விக்கும் பதிலளிக்க இவ்வளவு நீண்ட நேரம், அதாவது ஒரு நிமிஷம் எடுத்துக் கொண்டதில்லை. அவர் ஏதோ திட்டமிட்டிருந்தார். அந்த திட்டத்தை நேரிடையாக சொல்லிவிடலாமா அல்லது மறைமுகமாக சொல்லலாமா என்று யோசிப்பதில்தான் அந்த நிமிஷம் கழிந்ததுபோலும். பிறகு ஒரு புன்சிரிப்பு அவர் முகத்தில் தவழ்ந்தது. அவர் பேசினுர், வார்த்தைகள் பல தயக்கங்களோடு வெளிவந்தன. அவர் சொன்னுர் :

'ஆமாம்! நான் எதையாவது செய்தாகவேண்டும்........ நிச்சயமாக செய்தாகவேண்டும். ஆனுல் இனி எதை செய்தாலும் நான் தொடர்ந்து செய்யவேண்டும். ஆமாம்....... அதற்காகத்தான் நான் இங்கிருக்கிறேன்.'

ஆம்! அவர் இந்திய அரசியலில் தொடர்ந்து பணிபுரிய தம்மை பக்குவப்படுத்திக் கொள்வதற்காகவே இரண்டு வருஷ காலம் இங்கிலாந்திலேயே தங்க நேரிட்டது. அவர் பொருளாதாரத்துறையில் ஆழமான அஸ்திவாரமிட்டிருந்தார். போர்களத்திற்கு செல்லுமுன் ஒரு போர் வீரன் பல அவசியப் பொருள்களே கவனத்தோடும், ஞாபகத்தோடும் எடுத்துவைத்துக்கொள்ள வேண்டும். களத்திலே புகுந்தபின் அத்தியாவசியப் பொருள் இல்லாதிருந்தால்........? அதே போல இந்திய அரசியலில் மிகத் தீவிரமாக இறங்க திட்டமிட்டிருந்த மிஸ்டர் ஜின்னு தனக்கு பாதுகாப்பாக ஒரு பலமான அரணை அமைத்துக்கொள்ளுவதில் தீவிரமாக முனைந்திருந்தார்.

இங்கிலாந்தில் அவர் இருந்த போதிலும் இந்திய அரசியலை வெகு கவனமாக பரிசிலித்துக் கொண்டுதான் இருந்தார். இங்கிலாந்திலே இந்திய அரசியல் பிரச்சினைகள் எழும்போதெல்லாம் தாம் முன்நின்று ஆராயவும், அபிப்ராயத்தை அறிவிக்கவும் செய்வார். 1933-ம் வருஷம்தான்

அது. ஒட்டாவா ஒப்பந்தம்பற்றி அவர் தம் அபிப்ராயத்தை கூறினர்; இந்த ஒப்பந்தம் இந்தியாவின் பொருளாதார சீர்குலைவுக்கு மூலகாரணமாக அமையும்என்று அவர் கூறிய போது, பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர்கள் எல்லாம் அதிர்ச்சியுற்றுப் பேசினர்கள். இனி எதையும், எந்த சதித் திட்டத்தையும் ராஜதந்திரப் போர்வையில் நிறைவேற்ற முடியாது என்பதை உணர்ந்துகொண்டார்கள். இவ்வடிப் படையிலேயே காங்கிரஸ் தலைவர்கள் கேட்ட பார்லிமெண்டரி மாறுதல்கள் பல இன ஜாதி மக்கள் வாழும் இந்தியாவுக்குப் பொருந்தாது என்று அவர் கூறிய அந்நாளே அவர் 'பாக்கிஸ்தான்' என்ற தனி நாட்டிற்கான வித்தை ஊன்றி விட்டார் என்பதை 1941-ம் வருஷம் வரையில் எவருக்கும் புரியவே இல்லை. இதைத்தான் இன்றளவும் ஒவ்வொரு பிரிட்டிஷ்காரரும் நினைத்து நினைத்து வியக்கின்றனர். அவரை நினைக்கும்போதெல்லாம் இவ்விங்கிலாந்துத் தீவில், மிஸ்டர் ஜின்னு – காயிதே ஆஜம் ஜின்னு – பாபா இருந்த போது நடந்த சம்பவங்கள் அனைத்தும் என் ஞாபகத்திற்கு வருகின்றன. இஸ்லாத்தின் வெற்றிக்கு அடிகோலிய அந்த வீரச் சம்பவங்கள் என் ஞாபகத்திலிருக்கும்போதே என் உயிர் பிரிந்துவிடவேண்டும் என்று இன்று நான் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்''.

இந்த நீண்ட கட்டுரையை நான் படிக்காமல் கீழே வைக்கவில்லை. ஏனெனில் தோழர் இக்பால்சிங் இங்கிலாந்திலேயே வசித்தவர். பாபாவுடன் இங்கிலாந்தில் தொடர்பு கொண்டு இருந்தவர். அவர் ஆங்கிலத்தில் ஜீவன் ததும்ப எழுதியிருந்தது எனக்கு எப்படி தெவிட்டும்? பாபாவின் அரசியல் சரித்திரத்தில் விவரிக்க தவறிப்போன இச்சம்பவங்கள் அவரால் அக்கட்டுரையில் விவரிக்கப்பட்டிருந்தன. ஆனால் இக்கட்டுரை மிஸ்டர் மாக்ளியாடுக்கு பிடிக்காது. ஏனெனில் அவர் விரும்புவது இவை போன்ற குறிப்புகளல்ல. பாபாவின் தனிப்பட்ட வாழ்க்கை சம்பவங்களையே வேண்டி நிற்கிறார். அவைகளை கஷ்டப்பட்டு தேடினலும் கிடைக்க முடியாத அளவுக்கு அவ்வளவு புதிர் நிறைந்தவைகளாய் அம்மாபெரும் தலைவரால் மறைக்கப்பட்டிருக்கின்றன.

இக்கட்டுரையை நான் படித்து முடித்தபோது மிஸ்டர் மாக்ளியாட் அங்கு இல்லை. இடையிடையே அவர் வெளியே போவதும் வருவதுமாக இருந்தார். என் எதிரில் இருந்த போது அவர் டைரியில் எதையோ குறித்துக்கொண்டே இருந்தார். பழைய சம்பவங்களை அந்த கட்டுரை எனக்கு ஞாபகமூட்டிக் கொண்டிருந்தன. அவரின் திரு உருவப் படம் என் முன்னே தொங்கிக் கொண்டிருந்தது. அந்த வீர

உருவத்தைக்கண்டு நான் பன்முறை பெருமூச்சுகளைவிட்டேன். சுமார் 50 கோடி முஸ்லிம்களை தகப்பனற்ற குழந்தைகளைப் போல விட்டுவிட்டு அவர் நம்மை பிரிந்துவிட்டார் என்று நினைத்தபோது என்னை அறியாமலேயே என் கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது.

மிஸ்டர் மாக்ளியாட், 'என்ன சார், முடித்துவிட்டீர்களா?' என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தார். நான் கைக்குட்டையால் முகத்தை துடைத்துக்கொண்ட பாவனையில் கண்களை துடைத்துக்கொண்டேன். மிஸ்டர் மாக்ளியாட் 'ஒரு விஷயம்! நீங்கள் உதவினால் எனக்கு பேருதவியாக இருக்கும்' என்றார். என்ன என்று நான் கேட்டேன். அவர் கூறினார்:

'பாபாவிடம் தோட்டக்காரனாக இருந்த ஒரு நபர் இங்கு இருக்கிறாராம். நாளை மாலை சந்திப்புக்கு சிந்து சர்க்கார் காரியதரிசி ஏற்பாடு செய்திருக்கிறாராம். நான் அங்கு போகிறேன். தாங்கள் நாளைக்கு ஹனீப் ஆஸாதை பார்த்து எனக்கு விபரம் கொடுங்கள்; முடிந்தால் என் சந்திப்புக்கும் ஒரு ஏற்பாடு செய்யுங்கள்' என்றார்.

எனக்கு அவர் அபிப்ராயம் மிகவும் திருப்தியாக இருந்தது; பாபாவின் ட்ரைவர் முஹம்மத் ஹனீப் ஆஜாதை நான் மட்டும்தான் சந்திப்பதாகக் கூறியிருந்தேன். மிஸ்டர் மாக்ளியாட் உடன் வருவதாக இருந்தால் அதை எப்படி அறிவிப்பது என்ற குழப்பம் எனக்கு இருந்தது. எப்படியும் ஏற்பாடு செய்யலாம் என்ற தைரியம் இருந்தது. தற்போது அதற்கு அவசியமில்லை. மேலும் மிஸ்டர் மாக்ளியாட் பல புது விஷயங்களை தோட்டக்காரனிடமிருந்து சேகரிக்க முடியும்; அவைகளை நானும் அறிந்துகொள்ள முடியும். எனவே சரி என்று அவரிடம் கூறினேன். அவரும் மறுநாள் இரவு சாப்பாட்டிற்கு என்னை சந்திப்பதாக கூறி விடைபெற்றுக் கொண்டார்.

நான் அமைதியிழந்தவனாக படுக்கையில் சாய்ந்தேன். என் எண்ணமெல்லாம் பம்பாய் மலபார் ஹில்ஸ் மௌண்ட் பிளஸன்ட் மாளிகையையும், புது டில்லி அவுரங்கஜீப் ரோட் பத்தாம்நம்பர் மாளிகையையும் சுற்றிசுற்றி வந்தது. ஏனெனில் அந்த மாளிகைகளிலிருந்துதான் பத்து கோடி முஸ்லிம்களின் ஏகக்குரல் ஒலிபரப்பப்பட்டு வந்தது; எதிர்காலத்தை நிர்ணயித்தது. அக்கட்டடங்கள் இந்த நாகரீக உலகத்தாரால் பாதுகாக்கப்பட வேண்டியவைகள் அல்லவா? இப்படி நான் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கி கொண்டு படுக்கையில் புரண்டுக் கொண்டிருந்தேன். அப்

பொழுது என் இதயம் தேறுதலை எனக்களித்தது. ' அட பைத்தியமே! நீதான் இப்படி நிம்மதியற்று தவிக்கிறாய் என்று நினைக்கிறாய் போலும். இந்நேரத்தில் எத்தனை முஸ்லிம்கள் அவ்ரை நினைத்து புலம்பி அழுகிறார்கள் உனக்குத் தெரியுமா? எத்தனை பேர் தம் கண்ணீரால் தலையணைகளை நனைக்கிறார்கள் தெரியுமா? பைத்தியக்காரனே! பேசாமல் படு; அவர் காட்டிய வழியில் நட. உறுதியின் உச்சநிலை அடைந்திருந்த தலைவரை பின்பற்றக்கூடிய நீ உறுதி இழந்து அழுதால் அவருக்கு மரியாதை செய்வதாகுமா? தலை நிமிர்ந்து வாழ். அதுதானே அவர் காட்டிய வழி!' இப்படி என் எண்ணங்கள் உருவாயின. அவை எனக்கு எவ்வளவு பலனுள்ளதாக இருந்தன என்பதை வர்ணிப்பது இயலாது. ஏனெனில் மனிதன் வருத்தப்படும்போது தேறுதல் அடைய ஒரு சக்தியையும் அவனோடு! இணைத்திருக்கிறானல்லவா தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொள்ளும் வகையில் அவன் மனிதனை படைத்திருக்கிறானல்லவா? அந்த உணர்ச்சி பாவத்திலேயே நான் கண்களை மூடிக்கொண்டேன் – உறங்கி விட்டேன்.

★ ★ ★ ★

முதல் பாகம்



★ ★ ★ ★

முடிவுற்றது

★ ★ ★ ★

★ ★ ★ ★

# என் உரை

'மறுமலர்ச்சி' வாரப்பத்திரிகையை திருச்சிராப்பள்ளி யிலிருந்து வெளியிட்டுவரும் எனது நண்பர்கள், காயிதே ஆஜம் பாபா (மர்ஹூம்) அவர்களின் அகவாழ்வில் நிகழ்ந்த ருசிகரமான சம்பவங்களையும், பாபாவின் குணப்பண்புகளை யும் பற்றியும் எழுதித்தரக் கேட்டுக்கொண்டார்கள். நான் அரசியல் வாழ்வில் பாபாவின் காலடியில் நின்றவன். அவர் கள் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகளை அப்படியே ஏற்று கண்ணை மூடிக்கொண்டு அதன்படி நடக்கும் ஒரு தொண்டனாக இருந்தேனே தவிர, அவர்களோடு பல காலம் நெருங்கிப் பழகியிருந்தாலும் "ஏன்? எதற்கு?" என்ற கேள்விகளை அவர்களின் எந்த உத்தரவின்போதும், என் உள்ளத்தால்கூட நினைத்துப் பார்த்ததில்லை. அத் தகைய நான் பாபாவின் அந்தரங்க வாழ்வைப்பற்றித் தெரிந்துகொள்ள கனவிலும் கருதியதில்லை.

"மறுமலர்ச்சி" நண்பர்கள் கேட்டுக்கொண்டபோது முதலில் நான் பிரமித்தேன்; பயந்தேன். அவர்கள் கூறிய சமாதானம் என்னை திருப்திபடுத்தியது; எனக்கு ஒரு ஆர் வத்தையும் உண்டாக்கியது. எப்படியோ ஒப்புக்கொண்டு விட்டேன். நமக்குத் தெரிந்த ஏதோ சிலவற்றை எழுதி அனுப்பலாம் என்றுதான் ஆரம்பத்தில் நினைத்து சம்மதித் தேன். அவர்கள் விடைபெற்றுச் சென்றவுடன்தான் நான் ஏற்றுக்கொண்ட பொறுப்பின் பயங்கரம் என்னைத்தாக்கியது. உலகமே அஞ்சலி செய்யும் என் பாபாவைப்பற்றி அரை குறையாகச் சொல்வது என் மனதை உறுத்தியது. ஆதலால் இப்போதுள்ள ஓய்வைப் பயன்படுத்திக்கொண்டு, ஓரளவு ஆழமாக இறங்கி அத்துறையில் வேலைசெய்து நம்மால் இயன்றவரை தகவல்கள் சேகரம்செய்து கடமையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்.

முதன் முதல் எங்கிருந்து வேலையைத் தொடங்குவது? எந்த கோணத்திலிருந்து செய்திகளை சேகரித்து எழுதுவது என்பதை யோசிக்கவே மூன்றுநாட்களாகிவிட்டன. இறுதி யில் பாக்கிஸ்தான் தலைநகரான கராச்சி சென்றுதான் வேலை யைத் தொடங்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். என் சொந்த அலுவல்கள்காரணமாக கராச்சி செல்ல நேர்ந்ததும் மறுமலர்ச்சி நண்பர்களுக்கு ஒரு நல்ல அதிர்ஷ்டம்தான். அப்போது அதற்காக ஏராளமாக செலவழித்தேன். பல முறை கராச்சிக்கும் பம்பாயிக்குமிடையே பறந்தேன். 'மறு

மலர்ச்சி' நண்பர்கள் அந்த செலவுத் தொகையைக் கேட்டாலே பிரமித்துவிடுவார்கள். பாவம்! அதை அவர்களால் எப்படிக் கொடுக்கமுடியும்? நான்தான் எப்படிவாங்க முடியும்? அவர்கள் தங்கள் வாரப்பத்திரிகையின் மூலம் செய்து வரும் சேவை ஒன்றுக்கு ஈடாக, நான் எவ்வளவு சிரமத்துக்கும் செலவுக்கும் உள்ளானாலும் சமமாகாது என்பது என் எண்ணம்

வாரப் பத்திரிகையில் என் கட்டுரைத் தொகுப்பை அப்போதைக் கப்போது வெளியிட்டுவந்தவர்கள், புத்தகமாகப் போடப்போகிறோம்; ஆதலால் தொடர்வாகப் பிரசுரித்ததை நிறுத்திவிட்டோம். முன்னுரை அனுப்புங்கள் என்று எழுதினார்கள்.

நான் 'மறுமலர்ச்சி' நண்பர்களின் இப்முயற்சியை வரவேற்கிறேன். என்னுடன் இங்கே நெருங்கிப்பழகும் சில நண்பர்கள் நான் எழுதும் ரகசியத்தைத் தெரிந்துகொண்டு, இதை ஆங்கிலத்திலும் உர்துவிலும் வெளியிட அனுமதி கேட்டு ஓயாமல் தொந்தரவு செய்தார்கள். இன்னும் அவ்விதம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

"நான் ஒரு புத்தக வியாபாரியோ, எழுத்தாளனோ அல்ல. மறுமலர்ச்சி நண்பர்கள்தான் என்னை எழுதத் தூண்டினார்கள். அவர்களுக்காகவே எழுதினேன்; எழுதுகிறேன். என் எழுத்தினால் ஏதாவது பலன் விளையுமானால் அது மறுமலர்ச்சிக்கே ஏற்படவேண்டும் என்பது என் விருப்பம்" எனக் கூறிவிட்டேன். அவ்விதமே இப்போதும் கூறுகிறேன்.

'மறுமலர்ச்சி நண்பர்கள் தமிழில் மாத்திரம் பிரசுரிப்பதோடு நின்றுவிடாமல் ஆங்கிலம், உர்து மொழிகளிலும் வெளியிடுவது நல்லது. அவர்களால் முடியாவிட்டால் ஏதாவது பலனைப்பெற்று மறுமலர்ச்சிக்கு அளித்துவிட்டு, விரும்பும் நண்பர்களுக்கு உரிமை அளிப்பதும் முக்கியம் என அபிப்பிராயப் படுகிறேன்.

உலக வரலாற்றிலே யாரும் காணமுடியாத மகத்தான வெற்றிகண்ட என் பாபாவைப்பற்றி உலகமெல்லாம் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல், இதை எழுத எழுத எனக்கு அதிகமாகிறது.

'மறுமலர்ச்சி' நண்பர்களின் முயற்சிகள் வெற்றியடைய இறைவனிடம் பிரார்த்திக்கிறேன். அவர்களின் சேவை என்றென்றும் நீடிக்க ஆண்டவன் அருள்புரிவானாக.

**"ஹிந்த்லால்"**

# காயிதே ஆஜம் பாபா

*இரண்டாம் பாகத்தைப்பற்றி........!*

—●—

- இப்புத்தகத்தின் ஆசிரியர் 'ஹிந்த்லால்' அவர்கள்' காயிதே ஆஜம் பாபாவைப்பற்றிய அகவாழ்வு விஷயங்களை, முக்கியமாக யாரிடம் தெரிந்து கொள்ள முடியும் என்று நினைத்தாரோ, அந்த நபரான பாபாவின் கார் டிரைவர் முஹம்மது ஹனீப் ஆஜாதை. சந்தித்து அறிந்த அற்புதமான விஷயங்கள் அனைத்தும் இடம்பெறுகின்றன.

- தான் பாபாவுக்கு சேவை செய்ய பாக்கியம் பெற்ற காலத்திலிருந்து, பாபா இறையடி சேரும் வரையிலும், நடந்த முக்கியமான விஷயங்கள் அனைத்தும், கண்கலங்க ஹனீப் ஆஸாத் கூறியுள்ளார்.

- வேலைக்காரர்கள்மீது பாபா காட்டிய அன்பை அழகழகான உண்மைச் சம்பவங்கள் மூலம் ஆஸாத் விளக்குகிறார்.

- பாபாவின் நடை, உடை, உணவு, பாவனை அனைத்தையும் அழகுபடக் கூறுகிறார்.

- பாபாவின் சகோதரியான பாத்திமா ஜின்னாவுக்கும் பாபாவுக்குமுள்ள மனப்பான்மை, குணப்பண்பு, தம் மகளிடம் பாபா நடந்துகொண்ட உறுதி, தம நண்பர்களிடம் பாபா நடந்துகொள்ளும் விதம்,

காயிதே ஆஜத்தின் பொழுதுபோக்கு விளையாட்டு அவர் விளையாடும் விதம், பாபாவும் நவாப் யார் ஜங்கும் பழகிய முறை, மர்ஹூம் லியாகத் அலி கான் அவர்களின் தொடர்பு, பாபாவின் அந்த ரங்க காரியதரிசி மத்லூப் சாஹிப் நிலை உட்பட, சகல விஷயங்களும் விடாமல் ஹனீப் ஆஜாத் கூறுகிறார்.

- கார் டிரைவரான ஹனீப் ஆஸாதைப்போலவே பாபாவின் அன்புக்குப் பாத்திரமான, தோட்டக காரன் தரும் தகவல் படிக்கப் படிக்க இனிமை பயக்கிறது.

- இதுவரை கேட்டறியாத உண்மை வரலாறு!

- ஒரு சாம்ராஜ்யத்தை தன் திறமையினால் சிருஷ்டித்த ஒப்பற்ற மாவீரர் காயிதே ஆஜம் பாபாவின் வாழ்க்கை முறையை, வாழ்வில் முன்னேற விரும்பும் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டியதவசியம்!

- நினைத்ததை சாதித்த செயல்வீரரின் அந்தரங்க வாழ்வு, உலக வரலாற்றிலேயே ஒரு புதுமையானது.

**இரண்டாம் பாகம் தவறாமல் கிடைக்க உங்கள் பெயரை 'மறுமலர்ச்சி' புத்தக சாலையில் பதிவு செய்துகொள்ளுங்கள்.**

## மறுமலர்ச்சி புத்தகசாலை

**பாலக்கரை — திருச்சி.**

'மறுமலர்ச்சி' முதல் வெளியீடு !

மகான்

# ஷாகுல் ஹமீத்

## நாகூர் ஆண்டவர் உண்மை சரித்திரம்

★ நாகூர் ஆண்டவர், காதர்வலி, ஷாகுல் ஹமீத் நாயகம் என்றெல்லாம் நானில மக்கள் கொண்டாடும், ஒப்பற்ற 'மகான் ஷாகுல் ஹமீத்' அவர்களைப் பற்றிய, ஆதாரப் பூர்வமான உண்மை வரலாற்றை, தீர்க்க ஆராய்ந்து வரைந்த சிறந்த அறிவு நூல்.

★ திருக்குர்ஆனின் கருத்துக்களுக்கொப்ப ஆராய்ந்து நேர்மையோடு, நற்கருத்துக்கள் இந்நூலில் தெளிவாக்கப்பட்டுள்ளன.

★ தமிழகத்தின், இலங்கையின், மலாயாவின் பிரபல தமிழ், ஆங்கில பத்திரிகைகளெல்லாம் பாராட்டிய சரித்திர விளக்க நூல்.

எளிய தமிழில் யாவரும் உணரும் வகையில்

'மறுமலர்ச்சி' ஆசிரியர்

**ஏ. எம். யூசுப்**

எழுதியது

**விலை அண 0—12—0.]** **[தபாற் செலவு 0—2—0.**

கிடைக்குமிடம் :—

**'மறுமலர்ச்சி' புத்தகசாலை,**

**பாலக்கரை — திருச்சிராப்பள்ளி.**